# ஸ்ரீகலா SRIKALA




ஸ்ரீகலா SRIKALA
ஸ்ரீகலாவின்
நீயா...?
நானா...?
NEEYAA? NAANAA?


தமிழ் நாவல்கள் இலவசமாக பதிவிறக்க...
தமிழ் நாவல்கள் இலவசமாக பதிவிறக்க...
TAMIL NOVELS ONE CLICK DOWNLOADER


தமிழ் நாவல்கள் இலவசமாக பதிவிறக்க...
TAMIL NOVELS


Download

# ஸ்ரீகலாவின் “நீயா...? நானா...?”

## Contents


களம் : 1
களம் : 2
களம் : 3
களம் : 4
களம் : 5
களம் : 6
களம் : 7
களம் : 8
களம் : 9
களம் : 10
களம் : 11
களம் : 12
களம் : 13
களம் : 14
களம் : 15
களம் : 16
களம் : 17
களம் : 18
களம் : 19
களம் - 20
களம் : 21

PDF தமிழ் .com
WWW.PDFTAMIL.COM

## களம் : 1

சென்னை மாநாகரத்தின் மையத்தில் கம்பீரமாய் இருந்த அந்தப் பங்களா வெளியில் பார்ப்பதற்கு அமைதியாய்த் தெரிந்தாலும் உள்ளே ரணகளமாய் இருந்தது அந்த வீட்டின் சின்ன ராணியின் சண்டித்தனத்தால்…

“திலகா… திலகா…” கணவன் அலறிய அலறலில் வேகமாய் அவர் முன் வந்து நின்றார் திலகவதி…

“என்னங்க…?”

“எங்க உன் செல்ல பொண்ணு…? எழுந்துட்டாளா இல்லை சுப்ரபாதம் பாடி இனிமே தான் அவளைப் பள்ளியெழுச்சி பண்ணனுமா…?” பரந்தாமனின் முகத்தில் கோபம் அப்பட்டமாய்த் தெரிந்தது…

கணவனின் கோபம் புரிந்து என்ன பதில் சொல்வது என்று தெரியாமல் திலகவதி கைகளைப் பிசைந்து கொண்டு நின்று இருந்தார்…

“மணி என்ன ஆச்சு…? பொம்பளை புள்ள தூங்குற நேரமா இது…? இதெல்லாம் எப்படித் தான் அடுத்த வீட்டில் போய்க் குப்பை கொட்ட போகுதோ…?” என்று மகளைக் கடிந்தவர் மனைவிடம்,

“இதுக்கு எல்லாம் காரணம் நீ தான்… செல்லம் கொடுத்து கொடுத்து குட்டிச் சுவராய் அவளை மாத்தி வச்சு இருக்க…?” மகளிடம் காண்பிக்க முடியாத கோபத்தை மனைவியிடம் காண்பித்தார்…

அதில் மேலும் கைகளை இறுக பிசைந்த திலகவதி கணவரை காண முடியாமல் தலையைக் குனிந்து கொண்டார்… அப்போது தான் பிசைந்து கொண்டு இருந்த கைகள் அவரின் கண்ணில் பட்டது…

“அம்மா… வெறுங்கையைப் போட்டு ஏன் இப்படிப் பிசையறீங்க…? இப்படி வெறும் கையைப் பிசையறதுக்குப் பதிலா சப்பாத்தி மாவை பிசைஞ்சீங்கன்னா

PDF தமிழ் .com

சப்பாத்தியாவது சாப்ட்டா வரும்… என் பல்லும் தப்பும்…” கண்களை உருட்டி சின்ன மகள் யமுனா ராணி தன்னைக் கேலியாய் பேசுவது போன்ற காட்சி கண் முன் தோன்ற சட்டென்று கைகளைப் பிரித்துவிட்டார்…

‘எந்த நேரத்தில் இந்தப் பெண்ணைப் பெத்தேனோ தெரியலையே… அவளால இப்படித் தினமும் இவர் வாயில் விழுந்து அவலா கிடந்து அரைப்படுறேன்… அடியேய் மங்கம்மா சீக்கிரம் எந்திரிச்சு வாடி… இல்லை உன் அப்பன் என் காதை பஞ்சராக்கிருவாரு…’ மகளுக்குத் தப்பாத அன்னையாய் அவர் மனதுக்குள் சின்ன மகளிடம் வேண்ட…

அவரது வேண்டுதல் அவள் காதில் விழுந்ததோ என்னமோ அவரின் எண்ணத்தின் நாயகி தரிசனம் கொடுத்தாள்…

அப்போது தான் தூங்கி எழுந்து இரவு உடையோடு வரவேற்பறையில் வந்து அமர்ந்தவள் அங்கிருந்த செய்தித்தாளை கையில் எடுத்து அதைப் புரட்டியபடி,

“ம்மா… காபி…” என்று குரல் கொடுத்தாள்…

அங்குக் கோபமாய் அமர்ந்து இருந்த தந்தை அவள் கண்ணில் விழவே இல்லை… ஆங்கிலத்தில் 'கலர் பிளைன்ட்' என்று சொல்வார்களே அது போல் அவளுக்கு ‘டேடி பிளைன்ட்’ போலும்… அப்படி ஒரு மனிதர் இருப்பதாய் அவள் சட்டை செய்யவே இல்லை…

“ம்மா…” அன்னையைத் திரும்பி பார்த்தவள், “காபி…”

திலகவதியோ அவளின் தந்தை அங்கு இருப்பதைக் கண்களால் ஜாடை செய்து அவளுக்கு உணர்த்தினார்…

“என்னம்மா சொல்றிங்க…? நம்ம வீட்டு ஹிட்லர் இங்கே தான் இருக்காரா…? எங்கே…?” வேண்டும் என்றே சாவகாசமாய்த் திரும்பி தந்தையைப் பார்த்தவள் போலியாய் பயத்தை முகத்தில் காட்டினாள்…

“ப்பா…” அவளின் முகபாவத்தைப் பார்த்துக் கொண்டு இருந்த பரந்தாமனால் மகளை முறைக்க மட்டுமே

முடிந்தது...

ஏனெனில் பெயரில் மட்டும் இல்லாது உருவத்திலும் அன்னையைக் கொண்டு இருக்கும் அவளை அவரால் கடிந்து பேச முடியாது... அவரது ஜம்பம் எல்லாம் மனைவியிடம் மட்டும் தான்...

“அதான் கேட்கிறால்ல காபி கொண்டு வந்து அவள் தலையில் ஊத்து... அப்படியாவது அவளுக்குச் சொரணை வருதான்னு பார்க்கிறேன்...”

அவர் சொன்னதும் தான் தாமதம் திலகவதி வேகமாய்ச் சமையலறைக்குள் சென்று மறைந்தார்...

அன்னை சென்ற வேகம் கண்டு உள்ளுக்குள் கொஞ்சம் உதறல் எடுத்தது யமுனாவுக்கு... தந்தை சொன்னது போல் அன்னை செய்து விடுவாரோ என்று... ஆனாலும் வெளியில் கெத்தை விட்டுக் கொடுக்காமல் செய்தித்தாளில் கண்களை மேய்ந்தாள்...

“போதும் உன் நடிப்பு... பேப்பரை நேரா வச்சு படி...” தந்தையின் வார்த்தையில் கையில் இருந்த செய்தித்தாளை அவசரமாய் உற்று பார்த்தாள் அவள்... அது சரியாகத் தான் இருந்தது... இப்போது முறைப்பது அவளது முறையாயிற்று...

“சும்மா வெட்டி சீன் போடாம உருப்படுற வழியைப் பாரு...”

“அதெல்லாம் நாங்க உருப்பட்டுருவோம்... நீங்க போய் உங்க பட்டறையில வேலையைப் பாருங்க...” நக்கலுடன் சொன்ன மகளைப் பார்த்தவரின் பார்வையில் அனல் பறந்தது...

சென்னை மாநகரத்தில் பல கிளைகளைக் கொண்ட பிரபலமான நகைக் கடையை வைத்து இருக்கும் அவரைப் பார்த்து அவரின் மகள் இப்படிப் பேசினால் அது அவரது கௌரவத்துக்கு அல்லவா பெருத்த அவமானம்...

PDF தமிழ் .com

“பொம்பளை பிள்ளை மாதிரியா இருக்க நீ… தறுதலை தறுதலை…” அவர் திட்டி கொண்டு இருக்கத் திலகவதி மகளின் முன் காபியை நீட்டினார்…

“டிக்காசன் ஸ்ட்ராங்கா இருக்கா…? சுகர் தூக்கலா இருக்கா…? சூடா இருக்கா?” எப்போதும் கேட்கும் கேள்விக் கணைகளை விடாமல் தொடுத்தவள் வழக்கம் போல் அவர் பதில் சொல்லும் முன் காபியை எடுத்து உறிஞ்சினாள்…

“அப்பா… கிளம்பலாமா?” என்றபடி அங்கே வந்த மூத்தமகள் கனிமொழியைக் கண்டதும் பரந்தாமன் முகத்தில் சிடுசிடுப்பு மறைந்து புன்னகை வந்தது…

“போலாம்மா…” என்று அவளைப் பார்த்து சொல்லியவர் சின்னவளிடம் திரும்பி, “உன் அக்காவை பார்த்தாவது நீ திருந்த கூடாதா?” என்று பல்லை கடிக்க…

“ஏய் கனி இங்கே வா…” என்று அக்காவை அழைத்தாள் யமுனா…

“என்னடி…” சிரித்தபடி அவள் முன் வந்து நின்றாள் கனிமொழி… அவளுக்குத் தெரியும் அவளது தங்கை தந்தையின் வார்த்தைக்கு ஏதோ பதிலடி கொடுக்கப் போகிறாள் என்று…

சகோதரியை மேலும் கீழும் ஆராய்ச்சியாய் பார்த்த யமுனா, “ப்பா…” என்று தந்தையைப் பார்த்து கத்தியவள், “அவளுக்கு மட்டும் எப்போ இந்த டைமண்ட் செட் கொடுத்தீங்க… எனக்கு இல்லையா…?” என்றவளின் பார்வை ‘எப்புடி நாங்க திருந்திய விதம்’ என்று கிண்டலாய்ப் பார்த்தது தந்தையை…

“நீயும் அவளை மாதிரி நம்ம கடைக்கு வந்து வேலையைப் பாரு… உனக்கு டைமண்ட் என்ன… கடையில் உள்ள எல்லா நகையையும் உனக்குத் தர்றேன்…”

“நான் வர்றேன்…” என்று இழுத்த மகளைச் சந்தோசத்துடன் பார்த்தார் பரந்தாமன்…

“பாப்பா உண்மையாவா...?” மகளின் இழுவையில் அவருக்குக் கூட நம்பிக்கை வந்தது...

“ஆனா ஒரு கண்டிசன் கடையை என் பெயருக்கு எழுதி கொடுத்துருங்க...” என்றாள் கொஞ்சமும் அலட்டி கொள்ளாமல்...

“அடி கழுதை உன்னை...” என்று அவர் அடிக்க வர...

“விடு ஜூட்...” என்று எழுந்து அவள் தனது அறைக்கு ஓட... அவள் ஓடுவதைப் பார்த்துக் கொண்டு இருந்தவர் முகம் மென்மையுற்றது...

“அவ முன்னாடி திட்டுங்க... அதுக்கு அப்புறம் சிரிங்க...” என்று ஆதங்கப்பட்டுக் கொண்டார் அவரது தர்மபத்தினி...

“விடுடி சின்னப்புள்ள... ஏதோ அவள் இருக்கப் போய்த் தான் வீடு உயிர்ப்புடன் இருக்கு...” என்றவர், “ஆனாலும் அடுத்த வீட்டுக்கு வாழ போற பொண்ணு... அந்தப் பயம் கொஞ்சமாவது இருக்கா பாரு...” என்று மனைவியிடம் குறைப்பட்டுக் கொண்டவர்...

“பாப்பாவுக்குக் கொடுத்த நெக்லசை நீ இன்னமும் காண்பிக்கலையா..?”

“எங்க வீட்டில் இருந்தால் தானே... ராட்டு மாதிரி சுத்திக்கிட்டு இல்ல இருக்கா...”

“இன்னும் ஒரு மாசம் இருக்கு அவ எம்பிஏ ஜாயிண்ட் பண்ண... அது வரைக்கும் என்ஜாய் பண்ணிட்டு போகட்டும் விடு...” என்றவர் மனைவி வாயை திறக்கும் முன்,

“ஆனா காலையில் நேரத்தோடு எந்திருச்சுப் பழகச் சொல்லு...” என்று கண்டிப்புடன் சொல்லியவர் பெரிய மகளுடன் கடைக்குக் கிளம்பினார்...

*******************************************

“ஆத்தா நீ பண்றது கொஞ்சம் கூடச் சரியில்லை சொல்லிட்டேன்...” தனது அன்னை பாக்கியத்தைக்

PDF தமிழ் .com

கண்டித்தார் சக்ரபாணி…

“என்னைக் கண்டிக்கிற வேலை எல்லாம் வச்சுக்காதே… அப்புறம் மரியாதை கெட்டு போயிரும் சொல்லிட்டேன்…” பதில் மகனிடம் சொன்னாலும் அவரது கவனம் தனது செல்ல பேரன் யுவராஜிடம் இருந்தது…

தனது கணவனைப் போன்று இருக்கும் கடைசிப் பேரனிடம் அவருக்கு அலாதி பிரியம்…

“கிழவி எனக்கு அவிச்ச முட்டை பிடிக்காதுன்னு உனக்குத் தெரியும்ல… இப்போ எனக்கு ஆம்லேட் வேணும்…” வாய் நிறையக் கோழி பிரியாணியை அடைத்துக் கொண்டு பாட்டியிடம் குறைப்பட்டுக் கொண்டான் பேரன்…

“இரு ராசா… உனக்கு இல்லாததா…” என்று பேரனை சமாதானப்படுத்திய பாக்கியம், அங்கு வேடிக்கை பார்த்துக் கொண்டு இருந்த மருமகள் சரளாவிடம்,

“என்னடி மசமசன்னு நின்னுக்கிட்டு இருக்க… போய் ராசா கேட்டதைப் போட்டுக் கொண்டு வந்து கொடு… போ போ…” என்று விரட்ட

“க்கும்…” என்று நொடித்துக் கொண்டே அவர் செல்ல… பாக்கியம் அதை எல்லாம் கருத்தில் கொள்ளாமல் பேரனுக்குப் பரிமாறுவதில் கருமமே கண்ணாய் இருந்தார்…

“ஆமாம்டா… அது ஒண்ணு தான் இங்கே குறைச்சல்… ஏண்டா தடிமாடு மாதிரி ஊரை சுத்திட்டு இருக்க… அதுக்குப் பதிலா உன் அண்ணன்ங்க கூடச் சேர்ந்து வேலையைப் பார்க்கலாம்ல… ஒண்ணுக்கு ஆறு கடை இருக்கு நமக்கு… அதுல ஒரு சின்னப் பகுதியையாவது பொறுப்பா பார்த்துக்கக் கூடாதா… இருபத்தியெட்டு வயசாகுது… நாளைக்கே கல்யாணம் பண்ணி வச்சா ரெண்டு புள்ளைக்குத் தகப்பனாகி நிப்ப… இன்னும் ஊரை சுத்துற புத்தி உன்னை விட்டு போக மாட்டேங்குதே…” என்று தந்தை குறைப்பட்டுக் கொள்ள…

அவரது குறைகளை எல்லாம் தூசு போல் ஊதி புறம் தள்ளியவன் அதில் இருந்த ஒரே ஒரு நன்மையான திருமணத்தை மட்டும் கருத்தில் கொண்டு,

"ச்சோ ஸ்வீட் டாட்... எப்போ எனக்கு மேரேஜ் டாட்...? பொண்ணு பார்த்துட்டிங்களா...? பொண்ணு பேரு என்ன...?" என்று வேறு கேட்டு அவரது இரத்த அழுத்தத்தை அதிகரித்தான்...

"ம்... எருமை மாடு..."

அதைக் கேட்டு அவரை முறைத்தவன் அப்போது அங்கே அன்னை கொண்டு வைத்த முட்டை தோசையைப் பிட்டு வாயில் போட்டு அரைத்தபடி,

"ஏம்மா எருமை மாடு கூட வாழ்றது எப்படிம்மா...?" என்றான் தலையும் இல்லாமல் வாலும் இல்லாமல் மொட்டையாக...

"இதை ஏண்டா என் கிட்ட கேட்கிற...?" அதிர்ந்து போய் மகனை பார்த்தார் சரளா...

"ஒரு எருமை மாடு கூட முப்பத்தஞ்சு வருசம் குப்பை கொட்டுன உங்களுக்குத் தானே தெரியும் அதோட எக்ஸ்பீரியன்ஸ்... அதான் கேட்டேன்..." என்றான் தந்தையை ஓரக்கண்ணால் பார்த்தபடி...

மகன் கூறியதை கேட்டு சரளாவிற்குச் சிரிப்பு பீறிட்டது... கணவனின் கோபம் தெரிந்து வாய்க்குள் அடக்கி கொண்டார்...

"டேய்..." என்ற சக்ரபாணியின் பற்கள் அரைப்பட்டது கோபத்தில்...

"தொப்பி... தொப்பி..." என்று அவரைப் பார்த்து வாய்விட்டு சிரித்தவன் பின் கிண்டலாய், "இருக்கிற நாலு நல்ல பல்லையும் உடைச்சிறாதீங்க டேட்... அப்புறம் எல்லாரும் உங்களைப் பொக்கை வாய்ன்னு கூப்பிட போறாங்க..." விடாமல் கவுண்டர் கொடுத்தான் அந்தக் குடும்பத்தின் இளைய வாரிசு...

PDF தமிழ் .com

“அப்படிச் சொல்லுடா என் பேராண்டி...” என்று பேரனுக்கு ஹைபை கொடுத்தார் பாக்கியம்...

அதைக் கண்டு தலையில் அடித்துக் கொண்டார் சக்ரபாணி...

“என்னைப் பெத்ததும் சரியில்லை... நான் பெத்ததும் சரியில்லை...” என்று அவர் முணுமுணுக்க...

“நீ மட்டும் என் பேரனை பார்த்து எப்படி அப்படிச் சொல்லலாம்...? அவன் அழகுக்கு அறிவுக்கு மகாலெட்சுமி மாதிரி பொண்ணு அவனைத் தேடி வரும்டா...” என்று பேரனின் கன்னம் வழித்து நெட்டி முறித்தார் பாக்கியம்...

“மகாலெட்சுமி மாதிரி... யாருக்கு இவனுக்கு...? அவன் போற நைட் கிளப்ல காப்ரே ஆடுறவளுக்குத் தாலி கட்டி பொண்டாட்டின்னு கூட்டிட்டு வராம இருந்தா சரி... எப்ப பாரு தண்ணி அடிக்க வேண்டியது... ஊரை சுத்த வேண்டியது... இது தான் நீ பண்ணுற உருப்படியான காரியம்... அதைத் தவிர்த்து வேற ஏதாவது நல்ல காரியம் பண்ணி இருக்கியாடா நீ...”

அவர் ஆதங்கப்படுவதிலும் அர்த்தம் இருந்தது... அவரது ஜவுளி கடைகளை மற்ற இரு மகன்களும் பொறுப்பாய் கவனித்துக் கொள்ளக் கடைசி மகன் இவன் மட்டும் எதையும் பொறுப்பாய்க் கவனிக்காமல் அவர்கள் கஷ்டப்பட்டுச் சம்பாதிக்கும் பணத்தில் இவன் இஷ்டத்துக்குச் செலவழித்துக் கொண்டு ஊரை சுற்றிக் கொண்டு இருந்தான்...

மூத்தவன் ராகவேந்தர் தந்தை கிழித்த கோட்டை தாண்டாதவன்... அவர் சொல்படி கடையைப் பார்த்து கொண்டவன் அவர் சொல்படி அவர் பார்த்து வைத்த பெண் தீபாவை திருமணம் செய்து இப்போது அவனுக்கு மூன்று வயதில் தியா என்ற குட்டி பெண் இருக்கிறாள்...

இரண்டாமானவன் மனோரஞ்சன் அவனும் தந்தையின் தொழிலை பார்த்து வந்தாலும் தன் வழி தனி வழி என்பது

போல் அதில் பல புதிய உத்திகளைப் புகுத்தி அவரது தொழிலை மேலும் மேலும் பெருக்கி கொண்டு இருந்தான்... அதனால் அவன் என்ன சொன்னாலும் கொஞ்சமும் யோசிக்காமல் உடனே சம்மதமாய்த் தலையை அசைத்து விடுவார் சக்ரபாணி...

மனோரஞ்சன் மிகவும் அமைதியானவன், அழுத்தமானவனும் கூட... கடையில் வேலை செய்பவர்களுக்கு அவன் சிம்ம சொப்பனமாய் விளங்கினாலும் குடும்பத்தாரிடம் மிகுந்த அன்பாய் பற்றுதலோடு இருப்பான்...

“விடுங்கப்பா... அவனாவது லைப்பை அனுபவிக்கட்டுமே... தொழிலை பார்க்க தான் நாங்க இருக்கோமே...” என்றபடி அங்கே வந்தான் ராகவேந்தர்...

“விடுங்கப்பா...” என்ற ஒற்றை வார்த்தையோடு உணவு உண்ண அமர்ந்தான் மனோரஞ்சன்...

அதில் சற்று அமைதியானார் சக்ரபாணி... உணவில் கவனம் வைத்தவர் பின் இரண்டாவது மகனிடம்,

“மனோ உனக்கு ஒரு வரன் வந்திருக்கு... இந்த வரனையாவது பேசி முடிக்கலாமாப்பா...”

“இப்போ கல்யாணத்துக்கு என்ன அவசரம்ப்பா...? கொஞ்ச நாள் போகட்டும்..” என்று மறுத்த அண்ணனை இடைமறித்தவன்,

“அது எப்படி இப்பவே உனக்கு முப்பது வயசாச்சு... இப்ப நீ கல்யாணம் பண்ணினாத் தான் எனக்கு ஒரு மூணு மாசம் கழிச்சுக் கல்யாணம் பண்ணுவாங்க... சரின்னு சொல்லுடா அண்ணா... உன் அருமை தம்பி நான் பாவம்ல...” என்ற யுவராஜை முறைக்க மட்டுமே முடிந்தது சக்ரபாணியால்...

“வேணும்ன்னா நீ கல்யாணம் பண்ணிக்கிறியா...?” தம்பியை பார்த்து கேட்டான் மனோ...

PDF தமிழ் .com

“ஓ… எஸ்… தாராளமாய்…” வாயெல்லாம் பல்லாகக் கூறிய இளையமகனை கண்டு அதற்கு மேல் அவரால் பொறுமை காக்க முடியவில்லை…

“ஒரு பைசா சம்பாதிக்கத் துப்பில்லை… துரைக்குக் கல்யாணம் கேட்குதாக்கும் கல்யாணம்…”

அதுக்கு எல்லாம் அசருவானா நம்ம யுவராஜ்…

“ஏன் மனோ இந்தாளுக்கு நீ மாசம் எவ்வளவு சம்பாதிச்சு கொடுக்கிற…?” அவனது கேள்வியில் மனோ அவனை முறைக்க…

“கோச்சுக்காதேடா…” அவன் தாடை பற்றிக் கொஞ்சியவன்,

“அவருக்கே அவ்வளவு சம்பாதிச்சு கொடுக்கிற நீ… உன் தம்பிக்கும் சேர்த்து சம்பாதிச்சு கொடுக்க மாட்டியா என்ன…?” என்று ராகம் இழுக்க… அதில் மனோவே சிறிது சிரித்து விட்டான்…

“உனக்கு இல்லாததா யுவா… எல்லாம் உனக்குத் தான்டா…” மனோ சொன்னதும் கெத்தாய் எல்லோரையும் பார்த்த யுவாராஜ் கடைசியாய் தந்தையிடம் பார்வையைப் பதித்தவன்,

“இப்போ என்ன சொல்றிங்க…?” என்க…

அவனது பேச்சை கண்டு கொள்ளாமல் சக்ரபாணி, “மனோ… நான் சொல்றதை கவனமா கேளு… பொண்ணு வீட்டுல நகைக் கடை வச்சு இருக்காங்க…” அவர் சொல்லும் போதே,

“நகைக் கடையா…?” என்று வாயை பிளந்த யுவராஜ், “அப்போ நல்ல பசை உள்ள பார்ட்டி தான்… ஏன் டாட் பொண்ணுக்குத் தங்கச்சி ஏதும் இருக்கா…?” அதிமுக்கிய கேள்வியைக் கேட்டு வைத்தான்…

“டேய் அடங்குடா…” மனோ அதட்ட… அதற்கு மேல் யுவராஜ் வாயை திறக்கவில்லை… ஏனோ மனோவின் சொல் பேச்சு மட்டும் அவனிடத்தில் எடுபடும்…

“ரெண்டு பொண்ணுங்க மனோ… மூத்த பொண்ணைத் தான் உனக்குப் பார்த்து இருக்கு… அப்பாவுக்குத் துணையா அந்தப் பொண்ணும் கடையைப் பார்த்துக்குது…” என்று பெண்ணைப் பற்றிய தகவல்களைச் சொல்லியவர் கையைக் கழுவி கொண்டு போய்ப் பெண்ணின் புகைப்படத்தை எடுத்து வந்து மனோவிடம் காண்பித்தார்…

“பேரு கனிமொழி…”

பளிச்சென்ற புன்னகையுடன் அமைதியாய் அடக்கமாய் இருந்த கனிமொழி முதல் பார்வையிலேயே மனோரஞ்சனின் இதயத்தைத் தடம் புரள செய்தாள்…

“பிடிச்சு இருக்குப்பா…” என்றான் மனோ கொஞ்சம் கூட யோசிக்காமல்…

அவனின் சம்மதம் கேட்டு அனைவரும் மகிழ்ந்தனர்…

ஆனால் யுவராஜ் மட்டும் அந்தப் பெண்ணின் தங்கையைப் பற்றி யோசித்துக் கொண்டு இருந்தான் அவள் ஒரு சண்டிக் குதிரை என்று அறியாமல்…

‘அக்கா கனிமொழின்னா… தங்கை தேன்மொழியா இருப்பாளோ…?’ என்று அவளைத் தேனாய் நினைத்து தித்திப்பாய் ஜொள்ளியது அவனது மனம்… ஆனால் அவள் தேனீயாய் மாறி அவனைக் கொட்ட போவது தெரியாமல்…

மோதல் தொடரும்…

PDF தமிழ் .com

## களம் : 2

"என்னங்க...?" நிச்சயத்திற்குக் கிளம்பி கொண்டு இருந்த சக்ரபாணி முன் வந்து நின்றார் சரளா...

"என்ன...?"

"நம்ம யுவா..."

"அவனுக்கு என்ன...?"

"அவன் கிட்ட இந்த நிச்சயத்தைப் பத்தி ஒண்ணும் சொல்லலைங்க... ஒரு வாரமா பிரெண்ட்ஸோட ஊட்டிக்கு போனவன் நேத்துச் சாயங்காலம் தான் திரும்பி வந்தான்... வந்தவன் வீட்டிலேயே இல்லை... நேத்து நைட் எப்போ வீட்டுக்கு வந்தான்னும் தெரியாது... ஃபோன் பண்ணினா ஸ்விட்ச்ட் ஆப்ன்னு வருது... ஒரே வீட்டில் இருந்துட்டு அவனைக் காண்டாக்ட் பண்றது ரொம்பக் கஷ்டமா இருக்கு...?" ஆதங்கமும் வருத்தமும் போட்டி போட சொன்னவரின் முகம் கவலையில் ஆழ்ந்து இருந்தது... என்னத்தான் யுவராஜ் பொறுப்பு இல்லாமல் நடந்து கொண்டாலும் அவன் அவரது செல்ல மகன் அன்றோ...

"ஒரு ஃபோனை கூட ஒழுங்கா வச்சுக்கத் தெரியலை... இப்படிப்பட்டவனுக்கு நீ வக்காலத்து வேற வாங்குற..." என்று மகனை திட்டிவிட்டு,

"உண்மையில் நீ அவன் கிட்ட சொல்லலையா..." என்று மனைவியிடம் கேள்வி கேட்டு தன் சந்தேகத்தை நிவர்த்திச் செய்து கொண்டவர்,

"ரொம்ப நல்லது... இவனை எப்படிடா சம்பந்தி வீட்டுக்காரங்க கிட்ட அறிமுகப்படுத்துறதுன்னு யோசிச்சிட்டு இருந்தேன்... நல்லவேளை நான் தப்பிச்சேன்... பிள்ளையைப் பெத்து கொடுடின்னா ஒரு கருங்குரங்கை பெத்து கொடுத்து அது எனக்கு வித்தை காமிச்சு என் நிம்மதியை கெடுக்குது..."

"உங்கப்பா மாதிரி இருக்கிற அவனை ஏன் கரிச்சு கொட்டிட்டே இருக்கீங்க...? நீங்க பேசுறது உங்கப்பாவையே பேசற மாதிரி இல்லையா...?" என்ற மனைவியை முறைத்து பார்த்த சக்ரபாணி அறையை விட்டு வெளியில் வந்தார்...

"பாட்டி..." என்று சரளாவின் கால்களை ஓடி வந்து கட்டி கொண்டாள் தியா...

மருமகள் தீபா அவளது பெற்றோர் வீட்டிற்குச் சென்று இருந்தவள் கொழுந்தனின் நிச்சயத்தை முன்னிட்டு இரண்டு நாள் முன்பாகத் தான் இங்கு வந்தாள்...

"பட்டுப்பாவடையில் தியா குட்டி அழகா இருக்காங்களே..." என்று பேத்தியை தூக்கி முத்தமிட்டவர் அங்கு வந்த மருமகள் தீபாவிடம்,

"நிச்சயத்துக்குத் தேவையான சாமான் எல்லாம் பூஜை ரூம்ல வச்சிருக்கேன்... கார்ல எடுத்து வச்சிரும்மா..." என்க...

"எல்லாம் எடுத்து வச்சிட்டேன் அத்தை... நாம கிளம்ப வேண்டியது தான் பாக்கி..." மருமகள் பதில் அளித்ததும் திருப்தியுடன் அவர் தனது மாமியார் அறையை நோக்கி சென்றார்...

ஒருவழியாய் எல்லோரும் கிளம்பி வாயிலுக்கு வந்தனர்... சரளாவிற்கு மட்டும் மனதுக்குள் சிறிது வருத்தமாய் இருந்தது சின்ன மகன் உடன் வரவில்லையே என்று... அதைக் கணவனிடம் சொன்னால் திட்டு வாங்க நேரிடும் என்று அமைதி காத்தார்...

"டேய் நீ எங்கடா இங்க...?"

சக்ரபாணியின் அதிர்ந்த குரலில் திரும்பி பார்த்த சரளா அங்கே வாயிலில் இருந்த காரின் மீது ஸ்டைலாகச் சாய்ந்து நின்றபடி போஸ் கொடுத்துக் கொண்டு இருந்த யுவராஜை கண்டதும் மனக்கலக்கம் முற்றிலும் அகல சந்தோசத்துடன் மகனை பார்த்தார்... அவன் எப்படி இருந்தாலும் அவர் மகன் அல்லவா...

தமிழ் நாவல்

"என் அண்ணன் நிச்சயதார்த்தம் நான் இல்லாமலா..." தந்தையைப் பார்க்காமல் வேறுபக்கம் பார்த்துக் கொண்டு சொன்னவனை நோக்கி,

"யுவி சித்து..." என்று அவனிடம் ஓடியது தியா...

"தியா குட்டி..." என்று யுவாவும் மகிழ்ச்சியோடு அவளைத் தூக்கி கொண்டான்...

எப்போதும் தொழில் தொழில் என்று ஓடி கொண்டு இருக்கும் மனோவை விட அவளுடன் ஓடி பிடித்து விளையாடும் அவளது இரண்டாவது சித்தப்பா யுவராஜை மிகவும் பிடிக்கும் அவளுக்கு...

"ராசா மாதிரி இருக்கே... யாரு மாப்பிள்ளைன்னு பொண்ணு வீட்டுக்காரங்களுக்குச் சந்தேகம் வந்திர போகுது ராசா..." பாக்கியம் எப்போதும் போல் பேரினின் அழகை கண்டு பூரிக்க...

"ம்... அப்படியா இருக்கேன்..." காரின் பக்கவாட்டுக் கண்ணாடியில் குனிந்து அவன் தன்னை அழகு பார்த்துக் கொள்ள...

"ஆமாம் பெரிய மன்மத ராசா... இவனை நம்பி பொண்ணு கொடுத்துட்டாலும்..." சக்ரபாணி பல்லை கடிக்க...

"உங்களைத் தேடி வந்து உங்களை நம்பி எங்க தாத்தா பொண்ணு கொடுக்கலையா அது மாதிரி தான் எனக்குன்னு பிறந்தவ என்னைத் தேடி வருவா..." என்றவன், "யார் கண்டா இன்னைக்குப் போற வீட்டில் கூட இருக்கலாம்..." என்று முணுமுணுத்தவனைக் கண்டு பாக்கியம்,

"ராசா..." என்று மகிழ்ந்து போய் அவனைப் பார்க்க அவரைப் பார்த்து குறும்பாய் கண்ணடித்தான் அவரது செல்ல பேரன்...

அவனுடைய இம்சையை அதற்கு மேல் தாங்க இயலாத சக்ரபாணி மனைவியிடம் திரும்பி, "என்ன வேடிக்கை

பார்த்துட்டு இருக்கப் போய்க் காரில் ஏறு..." என்று மகனிடம் காட்ட முடியாத கோபத்தை மனைவியிடம் காண்பித்தார்...

"எம்மா... நீங்க என் காரில் ஏறுங்க... மியூசியத்தில் வைக்க வேண்டிய அவரோட கார்ல அவர் மட்டும் தனியா வரட்டும்..." என்றவனின் பார்வை இளக்காரமாய்ப் பார்த்தது தந்தையின் அம்பாசிடர் காரை... அதே சமயம் திரும்பி பெருமையாகப் பார்த்தது தனது புத்தம் புதிய ஆடி காரை...

"அந்த மியூசியத்துல வைக்க வேண்டிய காரை வாங்க கூடத் துப்பில்லாத நீ... என் காரை பார்த்துக் குறை சொல்லாதே... அது நான் சம்பாதிச்ச காசுல முதன் முதலா வாங்கின கார்டா... உனக்கு எங்கே அதோட அருமை தெரியும்..."

"ப்பூ... இவ்வளவு தான் நீங்க சம்பாதிச்சதா...? நான் கூட என்னமோ உங்களை அம்பானி கணக்கால நினைச்சேன்... இந்த ஓட்டை அம்பாசிடரை வாங்குற அளவுக்குத் தான் உங்களால சம்பாதிக்க முடிஞ்சதா... ஹய்யோ... ஹய்யோ..." என்று அண்ணன் மகளின் கையில் தட்டி அவன் சிரிக்க...

"அதைச் சம்பாதிக்கக் கூட உனக்குத் துப்பு இல்லை... நீ என்னைப் பார்த்து பேசுறியா... இந்தக் காரை மனோ வாங்கிக் கொடுக்கலைன்னா உனக்கு ஏதுடா காரு...?"

அவர் கூறுவதும் உண்மை தான்... அவனின் இந்தப் பிறந்தநாளின் போது மனோ தான் அவனுக்குப் பிடித்த ஆடி காரை அவனுக்குப் பரிசாக அளித்தான்...

"நீ கூடப் பழைய காரை தான் ஓட்டுற மனோ... இந்த ஊர் சுத்தி பயலுக்கு இவ்வளவு விலை கூடுன காரா... சும்மாவே இவனைக் கையில பிடிக்க முடியாது... இப்போ சுத்தம்..." அப்போதே இரண்டாவது மகனை எச்சரித்தார் சக்ரபாணி... மனோ தான் அவரைச் சமாதானப்படுத்தினான்...

"என்னை மாதிரி உங்களுக்கும் அண்ணன் இல்லையேன்னு உங்களுக்குப் பொறாமை..." என்று

தகப்பனுக்குப் பதிலுக்குப் பதில் கொடுத்த யுவா தியாவிடம், "குட்டி நீ சித்துக் கூட வர்றியா இல்லை தாத்தா கூட..." என்று இழுக்க...

"சித்துக் கூட..." என்று அவனது கன்னத்தில் முத்தமிட்டு சொன்ன மகளை அணைத்து கொண்டவன் தந்தையைக் கர்வமாய்ப் பார்த்தபடி காரில் ஏறியவன்,

"ப்யூட்டி உனக்கு வேற தனியா சொல்லணுமா...?" என்று பாக்கியத்தை அழைக்க...

"இதோ ராசா..." என்றபடி பாக்கியம் முன்னால் சென்று பேரனின் அருகில் அமர்ந்தார்...

அடுத்து கணவர் தன்னைத் தான் அழைப்பார் என்று எண்ணிய சரளா மருமகளிடம், "தீபா நீயும் வா... நாம யுவா கூடப் போயிரலாம்..." என்க...

அவளோ தன் கணவன் ராகவின் கையைச் சுரண்டி அவனையும் தன்னோடு அழைக்க அவர்கள் மூவரும் யுவராஜின் காரின் பின்பக்கம் ஏறி அமர்ந்தனர்.

சக்ரபாணி மனைவியை முறைக்க அவரோ இவர் பக்கம் திரும்பி பார்த்தால் அல்லவா இவர் முறைப்பது அவருக்குத் தெரியும்...

"இப்பவாவது புரிஞ்சதா அய்யவோட பவர்..." என்று காலரை தூக்கிவிட்ட யுவராஜ் தந்தை மேலும் திட்டும் முன்,

"ஹூ... ஹூ...." என்று வாயில் கை வைத்து அவரைப் பார்த்து எக்காளமாய்க் கத்தியவன் காரை விருட்டென்று கிளப்பிச் செல்ல...

"பாருடா மனோ... இவன் எல்லாம் எப்போ திருந்த போறான்...? நம்ம வீட்டுக்கு திருஷ்டி பொட்டு மாதிரி இவன்... இவனை என் மகன்னு வெளியில் சொல்லவே வெட்கமா இருக்கு..." என்று ஆத்திரத்தில் இளையவனைக் கடிந்தபடி காரிலேறி அமர... மனோ காரை எடுத்தான்...

"வயசு கோளாறுப்பா... எல்லாம் சரியாகிரும்..."

"இந்த வயசுல நீ எப்படி இருந்த...? நான் எப்படி இருந்தேன்...?" ஆயாசத்துடன் சொன்னவரை பார்த்து ஆறுதலாய் புன்னகைத்தவன்,

"அவனுக்குள்ள நல்ல திறமை இருக்குப்பா... அதை உணராம அவன் இருக்கான்... உணரும் போது பாருங்க என்னை விடத் திறமையா நம்ம கடையை முன்னுக்குக் கொண்டு வருவான்..."

"என்னமோ நீ சொல்றன்னு நம்பறேன்... மத்தபடி அவன் மேல எனக்கு நம்பிக்கை இல்லை..." சலித்தவர் இருக்கையில் சாய்ந்து கொள்ள மனோவும் அதற்கு மேல் பேசாமல் பாதையில் கவனம் செலுத்தினான்...

மனோவின் மனம் தனக்கு மனைவியாய் வரப்போகும் கனிமொழி பற்றிய நினைவில் மூழ்கியது... அவனுக்கு என்று பெரியதாய் கற்பனை இல்லை என்றாலும் கூட அவள் தன்னோடு கருத்து ஒருமித்துக் காதலான வாழ்க்கை வாழ்வாளா என்று அவன் மனதில் சஞ்சலம் தோன்றியது... அந்நேரம் அவளது அடக்கமான புன்னகை அவன் நியாபகத்தில் வர அவனுள் சற்று நிம்மதி ஏற்பட்டது...

****************************

"அம்மா..." என்று தனது அறையில் அலறிக் கொண்டு இருந்தாள் யமுனா...

"ஏண்டி கத்துற...?" என்றபடி வந்த திலகவதியுடன் வந்த பரந்தாமன்,

"பாப்பா எதுக்கு இப்போ கத்துற...? மாப்பிள்ளை வீட்டுக்காரங்க வர்ற நேரமாச்சு... உன் கிட்ட எத்தனை தடவை சொல்லி இருக்கேன்... அவங்க முன்னாடி இப்படிக் கத்த கூடாது... சத்தம் போட கூடாதுன்னு..." என்ற தந்தையைக் கண்டதும் அவள் வாயை மூடி கொண்டாலும் அவள் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்து அவள் கோபமாய் இருக்கிறாள் என்பதைப் பறைச் சாற்றியது...

தமிழ் நாவல்

"சரிப்பா கத்தலை... எனக்கு இப்பவே புது டிசைன் நெக்லஸ் வேணும்... எல்லாம் ஓல்டு மாடலா இருக்கு..." அதையும் கத்தி சொன்ன மகளை என்ன செய்வது என்று தெரியாமல் விழி பிதுங்கியது பரந்தாமனுக்கு...

"கல்யாண பொண்ணு கனியே இருக்கிறதை போட்டுக்கிறா... ஆனா உனக்குப் புதுசு கேட்குதா... உன்னை..." என்று அவர் வார்த்தைகளைக் கடித்துத் துப்ப...

"யமுனா..." என்றபடி அங்கே வந்த கனிமொழி, "உன் வாட்ஸ் அப்புக்கு நியூ மாடல் ஜுவல்ஸ் ஃபோட்டோ எல்லாத்தையும் அனுப்ப சொல்லி இருக்கேன்... உனக்குப் பிடிச்சதை நீ செலக்ட் பண்ணி கொடு... கொண்டு வர சொல்லலாம்..."

அவள் சொல்லி முடிக்கும் முன், "கனின்னா என் கனி தான்..." அக்காவை கட்டி பிடித்து முத்தம் கொடுத்த யமுனா தந்தையைப் பார்த்து,

"நகைக்கடை வச்சு இருக்காருன்னு பெத்த பேரு தான்... பெத்த பொண்ணுக்கு ஒரு கிராம் தங்கம் ஓசில கொடுக்க மாட்டாரு... சரியான கஞ்சூஸ்..." என்று உதட்டை சுழித்துக் கொண்டு சொல்ல...

"இப்படியே சொல்லிட்டு இரு... உன் கல்யாணத்துக்கு ஒண்ணுமே போடாம அனுப்ப போறேன் பாரு..."

அதில் அவள் முகம் வாட... "என்னப்பா நீங்க...? நீங்க சொன்னதைக் கேட்டு யமுனா முகம் வாடி போச்சு பாருங்க..." கனிமொழி தந்தையைக் கடிந்தவள் தங்கையிடம்,

"அப்பா எனக்குக் கொடுக்கிறது எல்லாம் உனக்குத் தந்துடறேன்... என்ன ஓகேவா... எங்கே சிரி பார்க்கலாம்..." என்று அவள் தங்கையை உற்சாகப்படுத்த... சகோதரியின் வார்த்தையில் முகம் மலர்ந்தவள்,

"அவர் கொடுக்கலைன்னா நான் விட்டுருவேனா என்ன... கோர்ட்ல கேஸ் போட்டாவது அவர் கிட்ட இருந்து எல்லாச் சொத்தையும் பிடுங்கிட மாட்டேன்..." என்று கண்களை

உருட்டி சொன்னவள் தந்தையைப் பார்த்து நாக்கை துருத்தி அழகு காட்டினாள்...

அதற்கு மேல் அங்கு இருந்தால் தன்னுடைய மானம் கப்பல் ஏறும் என்று நினைத்த பரந்தாமன் தலையில் அடித்துக் கொண்டு நகர்ந்தார்...

'ம்... வீடு பெருசா தான் இருக்கு... நினைச்ச மாதிரி பசையுள்ள பார்ட்டி தான்...' யமுனாவின் வீட்டின் வெளித்தோற்றத்தை கண்டு எடை போட்டபடி வந்தான் யுவராஜ்...

அவனது வீட்டினர் எல்லோரும் உள்ளே சென்று இருந்தனர்... அவன் மட்டும் காரை நிறுத்துகிறேன் பேர்வழி என்று மெதுவாய் காரை நிறுத்தியவன் ஒரு சிகரெட்டை எடுத்து பற்ற வைத்து சுகமாய் அதை இழுத்து புகைத்தவன் பத்து நிமிடங்கள் கழித்து இப்போது தான் வீட்டின் வாசலில் காலை வைத்தான்...

அதே நேரம் கடைக்குச் சென்று கொண்டு இருந்த கடைப்பயனை அலைப்பேசியில் அழைத்து நெக்லஸின் கொக்கி சரியில்லை என்று அவனை வீட்டிற்குத் திரும்ப வர சொன்ன யமுனா தந்தைக்குத் தெரியாமல் பின்பக்கமாய் வீட்டை சுற்றிக் கொண்டு வந்தவள் பின்னால் திரும்பி பார்த்துக் கொண்டே வந்தாள்...

ஏனெனில் மாப்பிள்ளை வீட்டார் வந்திருக்கும் இந்த வேளையில் அவளின் இந்தக் காரியத்தை அவரால் ஏற்றுக் கொள்ள முடியாது... பின்பு ஹிட்லர் தன் அறிவுரை எனும் பிரங்கி முழக்கத்தைத் தொடுக்க ஆரம்பித்தால் நிறுத்த மாட்டார் என்பது அவளுக்கு நன்கு தெரியும்...

அவன் வீட்டின் தோற்றத்தை நிமிர்ந்து பார்த்துக் கொண்டு வர... அவள் தந்தை தன்னைப் பார்த்துவிடுவாரோ என்று பின்னால் திரும்பி பார்த்துக் கொண்டு வர இரு துருவங்களும் ஒன்றோடு ஒன்று மோதி கொண்டது...

தன் மீது மோதி கீழே விழ போனவரை அவர் ஆணா பெண்ணா என்று கூடப் பார்க்காமல் அவன் அவரைக் கீழே விழுந்துவிடாமல் தன் இரு கரங்களில் தாங்கி பிடித்தான்...

அந்நிய ஆடவனின் கைகள் தன் இடையைத் தழுவி இருந்ததை உணர்ந்த யமுனா என்ன ஏது என்று கூட யோசிக்காமல் அவனின் கன்னத்தில் ஓங்கி ஒரு அறைவிட்டாள்... அதிலும் அவனிடத்தில் இருந்து வந்த சிகரெட் வாடை அவளையும் அறியாமல் முகத்தைச் சுளிக்க வைத்தது...

அவள் அறைந்த உடன் திகைத்து போய் அவளை ஏறிட்டு பார்த்தவன் அடுத்த நொடி அவளைப் பிடித்திருந்த தனது கைகளை வேண்டும் என்றே தளர்த்தினான்... அவனது பிடி தளர்ந்ததில் எந்தவித பிடிமானமும் இல்லாமல் இருந்தவள் அம்போவெனத் தரையில் விழுந்து கிடந்தாள் பரிதாபமாய்...

அதில் அதிர்ந்து அவமானம் அடைந்தவள் தன்னைச் சுதாரித்துக் கொண்டு எழுந்து, "யூ ராஸ்கல் பொறுக்கி..." என்று அவனைத் திட்ட துவங்க...

அவள் அடித்ததில் அவனின் முகம் ஆத்திரத்தை தத்தெடுத்திருந்த போதும் கீழே விழுந்தவளை கண்டு அவனது உதட்டோரம் ஏளனமாய் வளைந்தது...

"எவ்வளவு கொழுப்பு இருந்தா என் மேல வந்து மோதுவ...? ஒரு பொண்ணைக் கண்டா போதுமே ஈன்னு பல்லை இளிச்சிட்டு வந்திர வேண்டியது... இதுக்குன்னே அலையறானுங்க... ச்சே..." என்று அவள் படபடத்தாள்... அவனைக் கண்டதும் அவளின் கோப ஹார்மோன்கள் கண்டபடி சுரக்க ஆரம்பித்தது...

"நீ பொண்ணா...?" என்று அவளை அளவிடுவது போல் மேலிருந்து கீழ் வரை பார்த்தவன், "ம்ஹூம்... பெண்ணுக்குரிய எந்த அம்சமும் இல்லையே..." என்றவனின் பார்வை தேங்கி நின்ற இடத்தை உணர்ந்து

அருவருப்பில் முகம் சுளித்தவள் அவனுக்கு முதுகு காட்டி மறுபுறம் திரும்பி நின்றாள்...

"போடா பொறுக்கி..." சத்தமாகவே அவளது வாய் முணுமுணுத்தது...

"போடி பஜாரி..." என்றபடி உள்ளே செல்ல எத்தனித்தவன், "நான் உன்னைச் சும்மா விட்டுட்டு போறதால ரொம்பச் சந்தோசப்பட்டுக்காதே... எனக்கு ஒரு சந்தர்ப்பம் கிடைக்கும் போது உன்னை வச்சிக்கிறேன்..." அவளின் பதிலை எதிர்பாராமல் அவன் செல்ல...

'வச்சிக்கிறானாமே... ச்சீ பேச்சை பாரு... ஆளும் மூஞ்சியும் உவ்வே... அவனைப் போலவே பேச்சும் உவ்வே...' என்று நினைத்தவளின் கோபம் மட்டும் ஆறவில்லை... தன்னைத் தொட்ட அவனது கைகளை வெட்ட வேண்டும் என்ற அளவுக்கு ஆத்திரம் வந்தது அவளுக்கு...

அந்நேரம் வந்து சேர்ந்த கடைப்பையனிடம், "ஏண்டா சொன்ன நேரத்துக்கு வர மாட்டியா... ஆடி அசைஞ்சு வர்ற நேரமா இது...?" என்று அவனைப் போட்டு வறுத்து எடுத்தவள் அவனிடம் நகையைக் கொடுத்து உடனே சரி செய்து கொண்டு வரும்படி கட்டளையிட்டு விட்டு அதே கோபத்துடன் வீட்டினுள் நுழைந்தாள்...

அதற்குள் கனிமொழியைச் சபையில் அமர வைத்து நலுங்கு ஆரம்பித்து இருக்க யமுனா அக்கா அருகில் போய் நின்றாள்... அவளின் அந்த உரிமையான செய்கையில் யுவாவின் புருவங்கள் உயர்ந்தது... அவள் தான் அண்ணியின் தங்கை என்பதை நொடியில் புரிந்து கொண்டவன் கசப்பை உண்டது போல் முகத்தைச் சுளித்தான்...

அந்நேரம் அவனைப் பார்த்த யமுனா மனோவின் அருகில் அமர்ந்து இருந்தவனைக் கண்டு முதலில் அதிர்ந்தாலும் பின் 'இவன் தன்னை என்ன செய்துவிட முடியும்...?' என்ற எண்ணத்தில் அலட்சியமாய் அவனைப் பார்த்தவள்

உதட்டை சுழித்துக் கொண்டு முகத்தைத் திருப்பிக் கொண்டாள்...

புகைப்படத்தில் இருந்த கனிமொழியை விட நேரில் அமைதியாய் கண்களில் கனிவுடன் இருந்தவளை கண்டு மனோவின் மனம் நிம்மதியுற்றது...

கனிமொழிக்கும் கம்பீரமான மனோவை புகைப்படத்தில் கண்டதுமே பிடித்துப் போய்விட்டது... இன்று அவனது அருகாமையில் அவள் தவித்துக் கொண்டு இருக்க அந்த நேரத்தில் அவன் அவள் கைப்பிடித்து மோதிரம் அணிவித்ததில் அவள் இன்னமும் தவித்துப் போய்க் கொஞ்சம் கொஞ்சமாய்த் தன்னை இழந்து கொண்டிருந்தாள்...

அந்த உணர்வோடு அவனது கையைப் பட்டும் படாமல் பற்றி அவள் மோதிரம் அணிவிக்க, "ஏன் என்னைப் பிடிக்கலையா...?" முணுமுணுப்பாய் ஒலித்த மனோவின் குரலில் நிமிர்ந்து பார்த்தவள் கண்களாலேயே தன் மனத்தவிப்பையும் காதலையும் அவனுக்கு உணர்த்தினாள்...

அதை உணர்ந்தவனாய் அவளின் கையை அழுத்தி கொடுத்தவன், "சும்மா தான் கேட்டேன்... ரிலாக்ஸ்..." என்று அவன் சொன்னதும் தான் அவள் நிம்மதியுற்றாள்...

இந்தக் காட்சியைப் பார்த்த யமுனாவுக்கு வாய் துருதுருவென்று இருந்தது... ஆனால் தந்தைக்குப் பயந்து சபையில் அடக்கி வாசித்தாள்...

நிச்சயம் நல்லபடியாய் முடிந்ததில் இருவீட்டாரும் நிம்மதியுடன் பேசி கொண்டு இருந்தனர்...

யுவாவின் அருகில் வந்து அமர்ந்த பாக்கியம் பேரனின் சுளித்த முகத்தைக் கண்டு, "என்ன ராசா... யார் மேல இந்தக் கோபம்...?"

அதற்குப் பதில் அளிக்க விருப்பம் இல்லாதவனாய், "ப்யூட்டி... யார் அந்தப் பொண்ணு...?" யமுனாவை சுட்டி

காட்டி அவள் யார் என்ற தகவலை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக அவன் கேட்டான்...

"அவ தான் பொண்ணுக்குத் தங்கச்சியாம்... ஆனா அவளைப் பத்தி மட்டும் என் கிட்ட கேட்காதே ராசா..." பேரனுக்குச் சளைக்காமல் முகத்தைச் சுளித்தார் பாக்கியம்...

"ஏனாம்...?"

"அது ஒரு திமிர் பிடிச்ச கழுதை ராசா... நிச்சயத்துக்கு ஒரு நல்ல பட்டுச்சேலையா கட்ட கூடாதா...? இது என்ன பாசிமணி வச்சு தைச்சதை போட்டு இருக்கேன்னு நான் கேட்டதுக்கு அவ சொல்றா... இது உங்க கடையில் வாங்கின புடவை தான்... அதான் நல்லா இல்லை போலன்னு... நான் என்ன கேட்டேன்... அவள் என்ன பதில் சொல்லிட்டுப் போறா பாரு... எனக்கும் எப்படி இருந்திருக்கும்..." பாட்டி சொன்னதில் அவனுக்கும் சிறிது சிரிப்பு வந்துவிட்டது...

"அவ கிடக்கிறா லூசு... நீ விடு ப்யூட்டி..." பேரன் சொன்னதும் முகம் மலர்ந்த பாக்கியம்,

"அவ உனக்கு வேண்டாம் ராசா... இதை விட நல்ல பொண்ணா பார்த்து உனக்கு நான் கட்டி வைக்கிறேன்..."

"அய்யே என்ன கிழவி பேசுற... ஓசில கொடுத்தா கூட எனக்கு அந்தப் பஜாரி வேண்டாம்..." எதையோ நினைத்தவனாய் அவனின் முகம் மாறியது...

பெரியவர்களிடையே பேச்சு அங்கே இங்கே சுற்றி கடைசியில் தங்களின் கடைசி வாரிசு பற்றிய கேள்வியில் வந்து நின்றது...

"உங்க சின்னப் பொண்ணு என்ன பண்றா...?" என்று சக்ரபாணி கேட்கும் போதே...

"உங்க சின்னப் பையன் என்ன பண்றான்...?" என்று பரந்தாமனும் கேட்க...

"எம்பிஏ பண்ண போறா... இப்ப லீவுல கடையைப் பார்த்துக்கிட்டு கூடமாட ஒத்தாசையா இருக்கா..." பரந்தாமன் சின்ன மகளை விட்டுக் கொடுக்காமல் சமாளிக்க...

பெண் பிள்ளையே பொறுப்பாய் இருக்கும் போது தறுதலையாய் இருக்கும் ஆண் பிள்ளையான தன் பிள்ளையைச் சக்ரபாணி முறைத்துக் கொண்டே,

"அவனும் கடையைப் பார்த்துக்கிறான் சம்பந்தி..." என்று அவரும் சமாளிக்க...

"நானாவது கடையைப் பார்த்துக்கிறதாவது... நான் சும்மா தான் இருக்கேன் அங்கிள்..." யுவாவும், யமுனாவும் ஏக காலத்தில் வாய் திறந்து தத்தம் தந்தைமார்க்குச் சபையில் பெருமை சேர்த்தனர்...

இரு தந்தைமாரும் தத்தம் பிள்ளைகளை முறைத்தவர்கள் பின், "ஹி... ஹி... விளையாட்டு பிள்ளைங்க..." என்று அசடு வழிந்தனர்...

"தியா பாப்பா... அக்கா கூட விளையாட வர்றியா..." அதற்கு மேல் அங்கு இருந்தால் தந்தை தன்னை முறைத்தே சாம்பலாக்கி விடுவார் என்று உணர்ந்த யமுனா குட்டிப்பெண்ணைத் துணைக்கு அழைக்க... தியாவும் ஒரே இடத்தில் அமர்ந்து இருப்பது பிடிக்காமல் தலையை ஆட்ட அவளை அழைத்துக் கொண்டு வேகமாய் வெளியேறினாள்...

யுவாவும் அங்கு இருக்கப் பிடிக்காமல் எழுந்தவன் வெளியில் சென்றான்...

'யுவா வாயை வச்சிக்கிட்டு சும்மா இருக்க மாட்டியாடா... நல்ல காலத்திலேயே அந்தாளு சாமியாடுவாரு... இதுல நீ எடுத்து வேற கொடுத்து இருக்க... இன்னைக்கு நீ தொலைஞ்சடா...' என்று மனதுக்குள் சலித்துக் கொண்டவன் சிகரெட்டை எடுத்து பற்ற வைத்தான்...

முழுச் சிகரெட்டையும் ஊதி முடித்தவன் கண்ணில் தியாவுடன் கண்ணாமூச்சி விளையாண்டு கொண்டு இருந்த யமுனா தென்பட்டாள்...

அவனது மூளை வேகமாய் யோசித்தது... நிமிட நேரம் கூடத் தாமதிக்காமல் ஒளிந்து கொண்டு இருந்த அண்ணன் மகளிடம் சென்று, "தியா குட்டி இங்கேயா இருக்க... பாட்டி உனக்குச் சாக்லெட் கொடுக்கத் தேடுனாங்க..." என்றதும்...

"ஐய் சாக்லெட்..." என்று சின்னவள் குதித்துக் கொண்டு வீட்டினுள் ஓட...

அவன் கண்களில் வன்மத்துடன் யமுனாவை நெருங்கினான்...

தியாவை தேடி கொண்டு கண்களை மூடியபடி வந்த யமுனாவின் கைகளில் அவன் விருப்பத்துடன் சிக்கி கொள்ள அவனின் அருகாமை அவனிடம் இருந்த வந்த சிகரெட் வாசம் எல்லாம் அவன் யார் என்று அவளுக்கு எடுத்து கூற திடுக்கிட்டு போனவள் அவசரமாய்க் கண்களைத் திறக்க,

"என்னடி ஆம்பிளைய தேடி அலையறியா...?" என்றவனின் வலது கரம் அவளின் இடது கன்னத்தைப் பலமாய்த் தாக்கியது...

பழிக்கு பழி வாங்கி விட்ட திருப்தியில் அவனது கண்கள் வெற்றி மமதையுடன் அவளை நோக்கியது...

மோதல் தொடரும்...

## களம் : 3

யவராஜ் அடித்த அடியானது உடலில் வலியை கொடுத்தது என்றால் அவன் கூறிய வார்த்தைகள் யமுனாவின் இதயத்தைக் கூறு போட்டுக் கிழித்துச் சொல்லொண்ணா வேதனையை அவளுக்கு அளித்தது... எவ்வளவு கேவலமான, கீழ்த்தரமான வார்த்தைகள் அது... எந்த ஒரு பெண்ணும் கேட்க கூடாத வார்த்தைகள்... சகித்துக் கொள்ள முடியாத வார்த்தைகள்...

என்னத்தான் அவள் கலகலப்பான சற்று வாய்த்துடுக்கு நிறைந்தவள் என்றாலும் அவளும் ஒரு பெண் தானே... அவளுக்கு என்று மனம் இருக்கிறது அல்லவா... அந்த மனதில் அவனது வார்த்தைகள் உண்டாக்கிய தாக்கத்தை அவளால் தாங்கி கொள்ள முடியவில்லை... அவளுக்குக் கண்கள் கரித்துக் கொண்டு வந்தது...

நல்லவேளை அவளது விழிநீரை அவன் காணவில்லை... ஏனெனில் அவன் அடித்ததில் வலது பக்கமாய்த் திரும்பியவளின் முகம் அதிர்ச்சியில் அப்படியே திரும்பி இருந்தது... அதிலும் அவள் விரித்து விட்ட கூந்தல் கற்றைகள் வேறு அவளின் பாதி முகத்தை மூடியிருந்தது...

'யமுனாவாவது அழுவதாவது... யமுனா ஜெயிக்கப் பிறந்தவள்...' எப்போதும் தனக்குத் தானே சொல்லி தேற்றிக் கொள்ளும் அந்த வார்த்தைகளை முயன்று நியாபகத்தில் கொண்டு வந்தவள் ஆழ மூச்செடுத்து கண்ணீரை உள்வாங்கிக் கொண்டு தன்னையும் நிதானப்படுத்திக் கொண்டாள்... பின் அவனைத் தைரியமாய் நிமிர்ந்து பார்த்தவள்,

"ஆம்பிளையா...? யாரு நீயா...?" இளக்காரமாய் அவள் கேட்ட விதத்தில் அவனின் முகம் கன்றிக் கறுத்தது... அதைக் கண்டு அவளது கண்கள் மின்னியது உள்ளம் நிறைந்தது உவகையில்...

"யாரை பார்த்து என்ன வார்த்தை சொன்னடி...?" என்று சொல்லி கொண்டே அவளது கைகள் இரண்டையும்

பின்பக்கமாய் முறுக்கி இறுக்கி பிடித்துக் கொண்டான் அவன்... அதில் கைகள் வலி கொடுத்த போதும் அதை முகத்தில் காட்டி கொள்ளாமல் நின்றவள்,

தனக்கு வெகு அருகில் நின்றவனைக் கண்டு சிறிதும் அச்சப்படாமல், "இங்கே நீ மட்டும் தானே இருக்க அப்போ உன்னைத் தான்டா சொன்னேன்..."

"நான் ஆம்பிள்ளைன்னு நிரூபிக்கவாடி..." என்று அவள் முகம் அருகில் வந்து உறுமியவனைக் கண்டு பயப்படாமல்,

'இந்த டகால்ட்டி வேலை எல்லாம் வேறு யார் கிட்டேயாவது காட்டிக்கோடா மகனே...' அப்போதும் அஞ்சாமல் தைரியமாகப் பார்த்த யமுனாவை கண்டு அவனது கண்கள் வெறுப்பை உமிழ அவளைப் பிடித்திருந்த தனது கைகளைத் தளர்த்தி அவளை விட்டு விலகி நின்றான்...

"இந்த உலகத்தில் கடைசிப் பொண்ணா நீ இருந்தா கூட நான் உன்னைத் தொட மாட்டேன்டி... பொண்ணுக்கு உண்டான எந்த அம்சமாவது உனக்கு இருக்கா...? பொண்ணாடி நீ சரியான பஜாரி..."

"அதைத் தான்டா நானும் சொல்றேன்... நீ எல்லாம் ஆம்பிள்ளைன்னு மீசையை முறுக்கிட்டு திரியாதே... உனக்கு அந்தக் காட்டுல இருக்கிற மிருகம் எவ்வளவோ தேவலை..."

அவளது வார்த்தைகள் அவனது தன்மானத்தைச் சீண்டி விட, "யேய்..." சுட்டு விரல் நீட்டி அவளை எச்சரித்தவன், "வாயாடி இது... சுண்ணாம்பு கால்வாய் மாதிரி... எட்டூருக்கு வாய் கிழிக்க மட்டும் தெரியும்... வேற என்ன தெரியும் உனக்கு..."

"எனக்குத் தெரிஞ்சதை உன் கிட்ட சொல்லணும்ங்கிற அவசியம் எனக்கு இல்லை..." மேலே அவர்கள் சண்டை போடும் முன் தியா அங்கே வந்தாள்...

"அக்கா விளையாடலாமா..."

"தியா குட்டி நீ இந்த அக்கா கூடச் சேர்ந்தா பேட் கேர்ள் ஆகிருவ... அதனால என் கூட விளையாட வா..." என்று அண்ணன் மகளை அவளுடன் சேர விடாமல் அவன் தடுக்க...

"ஆமாம் பாப்பா... உங்க சித்தப்பா கூடச் சேர்ந்தா தான் குட் கேர்ளா இருக்கலாம்..." என்றவள் குட் கேர்ளுக்குக் கொடுத்த அழுத்தத்திலும் அவனைப் பார்த்து சிரித்த நக்கல் சிரிப்பிலும் அவனுக்கு உடல் எல்லாம் பற்றி எரிந்தது...

அண்ணன் மகள் முன் எதுவும் பேச இயலாதவனாய் அவளை முறைத்துக் கொண்டு தியாவை தூக்கி கொண்டு அங்கு இருந்து அகன்றான்...

அவன் செல்வதைப் பார்த்துக் கொண்டு இருந்தவளுக்குக் கண்கள் கலங்கியது அவனின் வார்த்தைகளை எண்ணி...

சக்ரபாணி குடும்பத்தினர் விடைப்பெற்றுச் சென்றதும் பரந்தாமன் சின்ன மகளை அர்ச்சனை செய்ய ஆரம்பித்து விட்டார்...

"உனக்கு எத்தனை தடவை சொல்லி இருக்கேன்... எல்லோர் முன்னாடியும் வாயை திறக்க கூடாதுன்னு... அப்படி இருந்தும் நீ வாயை திறந்து என் மானத்தை வாங்கிட்ட... பொண்ணா அடக்க ஒடுக்கமா இருக்க மாட்டியா...?"

"நான் மட்டுமா வாயை திறந்தேன்... அவங்க வீட்டில இருக்கிற ஒரு ஐந்துவும் தான் வாயை திறந்தது... அதைப் பத்தி நீங்க ஒண்ணும் சொல்ல மாட்டீங்களே... ஊருக்கு இளிச்சவாயி பிள்ளையார் கோவில் ஆண்டியாம்... அது மாதிரி உங்க கோபத்துக்கு நானா கிடைச்சேன்..."

"நீ தான் என் பொண்ணு... உன்னை மட்டும் தான் என்னால கண்டிக்க முடியும்..." என்று மகளைக் கடிந்தவர், "இந்தக் கல்யாணம் முடியறவரை நீ வாயை திறக்க கூடாது..." என்று மகளை எச்சரிக்க...

"அப்பா..." என்று அப்பாவியாய் இமை கொட்டி அழைத்தாள் யமுனா...

"என்ன...?"

"சாப்பிட கூட நான் வாய் திறக்கலைப்பா... ஆனா பேசாம என்னால இருக்க முடியாதுப்பா..." என்றாள் பாவமாக...

"பார்த்தியா திலகா... இவ திருந்த மாட்டா... சாப்பாடு கூட வேண்டாமாம் ஆனா பேசாம இருக்க முடியாதாம்..." என்று மனைவியிடம் கத்தியவர்,

"சொன்ன பேச்சை கேட்டு ஒழுங்கா இரு... உன்னால உன் அக்கா வாழ்க்கை பாழாகிறதை நான் விரும்பலை... வேணும்ன்னா உன் வாழ்க்கையை உன் வாயால பாழாக்கிக்கோ அதுக்கு நான் தடை சொல்லலை..."

தந்தையின் பேச்சில் அவளது முகம் மாறியது... பின் தன்னைச் சமாளித்துக் கொண்டு, "அக்கா வாழ்க்கைக்கு என்னால எந்தப் பிரச்சினையும் வராது..." என்றவள் விருட்டென்று தனது அறைக்குச் சென்றுவிட்டாள்...

கதவை தாள் போட்டுக் கொண்டு படுக்கையில் விழுந்தவளுக்கு எதை எதையோ நினைத்துக் கண்கள் கலங்கியது... அதிலும் யுவராஜ் பேசியது அனைத்தும் அவளது நியாபகத்தில் வலம் வந்து அவள் மனதை மேலும் கலங்க செய்தது...

அதே நேரம் சக்ரபாணி தனது வீட்டில் தாம்தூம் என்று குதித்துக் கொண்டு இருந்தார்... அவர் கோபப்படுவார் என்று யுவாவிற்குத் தெரியுமாதலால் அவன் வீட்டிற்குள் வராமல் வாசலிலேயே எல்லோரையும் இறக்கிவிட்டு விட்டு அப்படியே தப்பித்துச் சென்றுவிட்டான்...

"உன் பையன் கிட்ட சொல்லி வை... மனோ கல்யாணம் வரைக்கும் எந்தப் பிரச்சினையும் பண்ணாம இருக்கச் சொல்லு... முதல்ல அவன் வாயை பெரிய பிளாஸ்திரியா போட்டு மூட சொல்லு... இல்லை என் சொத்துல ஒத்த காசு கூடக் கொடுக்க மாட்டேன்... அப்படியே தண்ணி தெளிச்சு

அனுப்பிடுவேன்..." எப்போதும் போல் மனைவி சரளாவிடம் சக்ரபாணி சத்தம் போட... அதை அப்படியே வார்த்தை மாறாமல் அவர் மகனிடம் சொல்ல,

"அவர் சொல்ற மாதிரி இருக்க ட்ரை பண்றேன்... ஆனா அது சொத்துக்காக இல்லை... என் அண்ணன் மனோவுக்காக... நாங்க எல்லாம் பாசக்கார பயலுங்க... என் அண்ணனுக்கு ஒண்ணுன்னா சும்மா இருப்பேனா..." கீழே விழுந்தாலும் மீசையில் மண் ஒட்டவில்லை என்ற ரீதியில் அவன் ஜம்பமாய்ப் பேச அதைக் கண்டு சின்னக் குட்டி பெண் தியா கூடச் சிரிப்பை அடக்கக் கஷ்டப்பட்டு வாய்க்குள் சிரித்தது என்றால் மற்றவர்களின் நிலையைச் சொல்ல தேவையில்லை...

அதன் பின் திருமண வேலைகள் மளமளவென்று நடைப்பெற்று நாளை திருமணம் என்றளவில் வந்து நின்றது... இதில் என்ன ஆச்சிரியம் என்றால் யுவாவும், யமுனாவும் மறந்தும் கூடச் சந்திக்கவில்லை... அவன் வருவதாக இருந்தால் அந்த இடத்திற்கு இவள் செல்ல மாட்டாள்... அதே போல் அவள் செல்லும் இடத்தின் திசை பக்கம் கூட இவன் தலை வைத்துப் படுக்காமல் துஷ்டனை கண்டால் தூர விலகு என்பது போல் அவளிடம் இருந்து விலகியே இருந்தான்...

திருமண நாள் காலையில் பட்டுப்புடவை சரசரக்க கிளம்பி வந்த யமுனாவை கண்டு மலைத்தார் திலகவதி... எப்போதும் நாகரீக உடையில் வலம் வரும் சின்ன மகளைப் புடவையில் பார்த்ததும் மனம் நெகிழ அவருக்குக் கண்கள் கலங்கியது...

"என் கண்ணே பட்டுடும் யமுனா..." என்று மகளுக்குக் கன்னம் வழித்துத் திருஷ்டி கழிக்க...

"ஹலோ ம்மா... கல்யாணப் பொண்ணு நான் இல்லை... அதோ அங்கே இருக்கா பாருங்க..." என்று அக்காவை சுட்டி காட்டியவள் கண்ணாடியில் தன்னை அழகு பார்த்தாள்...

"அது எங்களுக்குத் தெரியாதாக்கும்... ஒருத்தங்க புகழ்ந்தா அனுபவிக்கணும்... ஆராயக் கூடாது..." மகளுக்குத் தப்பாத அன்னையாய் திலகவதி அவளுக்குப் பதிலடி கொடுக்க...

"முடியலம்மா..." என்ற யமுனா, "வீட்டுக்கு ஒரு யமுனா போதாதா...? நீங்களும் ஏன்...?" என்று வார்த்தைகளை இழுத்தவள் கைகள் கூப்பி மன்றாட...

"போடி அறுந்தவாலு..." என்று அவளது தோளில் விளையாட்டாய் தட்டியவர், "நம்ம வீட்டு சார்பா நீ போய் ரிசப்சன்ல நில்லும்மா..." என்க...

"அது தான் எனக்குப் பிடிச்ச வேலையாச்சே..." என்று குதித்தபடி வெளியில் ஓடினாள்...

அந்நேரம் அங்கு வந்த பரந்தாமன், "நம்ம பாப்பாவா இது...? சேலையில் பார்க்கும் போது பெரிய பொண்ணா தெரியறாளே..." என்றபடி வர...

"ஆமாங்க... பெரியவளுக்கு முடிச்ச கையோட இவளுக்கும் மாப்பிள்ளை பார்த்துட்டா நமக்கும் கடமை முடிஞ்சது..." என்று திலகவதி கூற...

"நம்ம கடமை முடிஞ்சது ஆனா கல்யாணம் பண்ண போற அந்த அப்பாவியோட கவலையில்ல அதிகரிக்கப் போகுது..." என்று விளையாட்டாய் சொல்லி பரந்தாமன் சிரித்தார்...

"நீங்க சொல்றதும் சரி தான்... இந்தப் பொண்ணுக்கு கடவுள் தான் நல்ல புத்தியை கொடுக்கணும்..." என்ற திலகவதி மணப்பெண்ணான மூத்தமகளின் அலங்காரத்தைப் பார்வையிட ஆரம்பித்தார்...

வரவேற்பு பகுதியில் ஏற்கெனவே வந்து நின்று இருந்த யுவராஜை கண்டதும் முகத்தைச் சுளித்த யமுனா அங்கு நின்றிருந்த தீபாவை பார்த்து புன்னகைத்து விட்டு அவளுடன் இணைந்து நின்று கொண்டாள்...

"யுவா பொண்ணு சூப்பரா இருக்காளே... யாருடா மச்சி...?" தீபாவின் அண்ணன் இளமாறன் யுவாவிடம் கேட்டான்... இருவரும் சமவயது என்பதால் எப்போதும் ஒருவித நட்பு அவர்களிடையே இழையோடும்...

"டேய் இளா... அழகை பார்த்து கவுந்துடாதேடா மச்சி... அது ஒரு பொம்பளை ரௌடி... நீ பேசினது அவ காதுல விழுந்துச்சு உன் முதுகுல டின் கட்டாம விட மாட்டா..." இளாவிடம் எச்சரித்த யுவாவின் பார்வை யமுனாவை எரிச்சலுடன் பார்த்தது...

அழகு தேவதையாய் ஜொலித்தவளின் அழகு கூட அவனுக்குக் கசப்பாய் இருந்தது...

'பாம்பு கூட அழகு தான்... அது மாதிரி தான் இவளும்...' என்று எண்ணியவனின் மனச் சிடுசிடுப்பு சற்றும் குறையவில்லை...

"பார்த்தா அப்படித் தெரியலையே மச்சி... அடக்கமா நல்ல பாந்தமா இருக்காளேடா..." என்ற இளாவின் பார்வை யமுனாவை மேலும் கீழும் தென்றலாய் வருடியது...

அவனுக்குப் பார்த்த கணம் அவளை மிகவும் பிடித்துப் போனது...

"யாரு இவ அடக்கமா...? போடா போ... அவ வாயை திறந்து நீ கேட்டு இருக்கணும்... அப்போ தெரியும் சங்கதி..."

"என்னடா அப்போ இருந்து பார்க்கிறேன் அந்தப் பொண்ணை ஒரு மாதிரியா பேசிட்டு இருக்க..." என்று ஒரு மாதிரி குரலில் கேட்டவன் யுவாவை பார்வையால் அளந்தபடி, "சேதாரம் ரொம்ப அதிகமோ..." என்றான் நக்கல் குரலில்...

பதிலுக்கு முறைத்த யுவாவை இளமாறன் கண்டு கொள்ளவில்லை...

அந்நேரம் பசிக்குது என்று வந்த தியாவை தூக்கி கொண்டு தீபா செல்ல சகோதரி நகர்ந்ததும் தைரியம் வரப்

பெற்றவனாய் இளமாறன் யமுனாவை பார்த்துப் புன்னகைத்தான்...

இளமாறனின் புன்னகை முகம் கண்டு புருவம் தூக்கிய யமுனா அதே சமயம் கடுகடு என்று இருந்த யுவாவின் முகத்தையும் பார்த்தவள் மனதுக்குள் இரண்டும் இரண்டும் பத்து என்று வேகமாய்க் கணக்கு போட்டவள் வேண்டும் என்றே தாராளமாய் இளாவை பார்த்து சிரித்து வைத்தாள்...

"டேய் முதல் உரிமை உனக்குத் தான் அதனால நீ ரூட்டு போடுறியா இல்லை நான் ரூட்டு போடவா... பொண்ணு என்னைப் பார்த்து சிரிச்சு என்னை டெம்ப்ட் பண்ணுதுடா..." முணுமுணுப்பாய் இளா யுவாவிடம் கூறினாலும் அது யமுனாவின் காதில் நன்கு விழுந்தது...

"ஹலோ..." என்று சொடக்கு போட்டு இளாவை அழைத்தவள், "உங்களுக்கு என்னைப் பிடிச்சு இருக்கா..." அதிரடியாய் கேட்டு அவனது இரத்த அழுத்தத்தை அதிகரித்தாள்...

"அது... வந்து..." இளாவின் தைரியம் அவளின் அதிரடி முன் சொல்லாமல் கொள்ளாமல் விடைப்பெற்றுச் சென்றது...

"உங்களுக்குப் பிடிச்சு இருந்தா நீங்க என் கிட்ட வந்து பேசுங்க... எதுக்கு அந்தப் பொறுக்கி கிட்ட எல்லாம் அபிப்ராயம் கேட்கிறீங்க... அவன் சொல்லி நீங்க என் கிட்ட வந்து பேசினா இந்த யமுனாவுக்கு அதை விட அவமானம் வேறு எதுவும் இல்லை..."

"யேய் யாருடி பொறுக்கி... நீ தான்டி ரெளடி, பஜாரி..." யுவா ஆத்திரத்தில் எகிற...

"டேய் பப்ளிக்டா..." இளா அவனைச் சமாதானப்படுத்த அதில் சற்று அமைதியான யுவா அவளை முறைக்க மட்டும் தவறவில்லை...

அதை எல்லாம் கண்டு கொள்ளாத யமுனா இளாவிடம், "உங்களை எனக்கு ரொம்பப் பிடிச்சு இருக்குங்க... சில வெட்டி ஆபிசர் மாதிரி இல்லாம ஐடி பீல்ட்ல

லட்சக்கணக்கில் சேலரி வாங்குற உங்களை ரொம்ப ரொம்பப் பிடிச்சு இருக்குங்க..." என்றவள் ஓரக்கண்ணால் யுவாவை அளவிட்டாள்...

யமுனாவின் பேச்சில் இளா யுவாவை மறந்தவனாய் அவள் புறம் திரும்பி, "இஸிட்..." என்று புளங்காகிதம் அடைந்தவனாய் அவளிடம் பேச ஆரம்பிக்க... அதன் பின் யமுனாவுக்குப் பேச சொல்லியா கொடுக்க வேண்டும் அவனுடன் சிரித்துப் பேச ஆரம்பித்து விட்டாள்...

கடைசியில் அம்போவென நின்றிருந்தது யுவா மட்டுமே...

"சரி முகூர்த்தத்துக்கு நேரமாச்சு நான் கனி கிட்ட போய் நிக்கணும்..." என்று அவள் இளமாறனிடம் விடைப்பெற்று செல்ல...

"ஸ்வீட் கேர்ள்டா..." கனவில் மிதந்தபடி இளா சொல்ல... யுவாவின் கண்கள் அவனையும் அறியாமல் சென்று கொண்டு இருக்கும் யமுனாவை பின் தொடர்ந்தது...

அவனின் பார்வையை உணர்ந்தார் போல் திரும்பி பார்த்த யமுனா, யுவா தன்னைப் பார்ப்பதை கண்டு அவனை நோக்கி நாக்கை துருத்தி அழகு காண்பித்து விட்டு செல்ல அவளது அந்தத் திடீர் செய்கையில் திகைத்தவன் அவளை முறைக்கவும் முடியாமல், எதுவும் செய்ய இயலாதவனாய் கையால் தனது தலையைக் கோதி தன் கோபத்தை அடக்கி கொண்டான்...

இந்தக் கண் கொள்ளா காட்சி அங்கு வந்து கொண்டு இருந்த சக்ரபாணி கண்ணில் பட்டது...

தனது இளையமகனின் வீரம் யமுனாவின் கடைக்கண் பார்வையில் தவிடு பொடியாவதை கண்டு உள்ளம் பூரித்துப் போனார்...

'என் கிட்ட தான்டா உன் வறட்டு ஜம்பம் எல்லாம்... அந்தப் பொண்ணு உன்னையவே அடக்கிட்டா பார்த்தியாடா...' என்று நினைத்தவர் மனதில் அப்போதே வேறு ஒரு எண்ணமும் தோன்ற ஆரம்பித்தது...

'முதல்ல மனோ கல்யாணம் நல்லபடியா முடியட்டும்... அதுக்கு அப்புறம் இந்தக் கோவில் மாட்டை அடக்குறதை பத்தி யோசிக்கலாம்...' என்று எண்ணியபடி அவர் மணவறையை நோக்கி நகர்ந்தார்...

திருமணம் நல்லபடியாக முடிந்தது... குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் புகைப்படம் எடுப்பதற்காக அழைக்கப்பட முதல் ஆளாய் ஓடிய யமுனா மற்ற ஜோடிகளால் ஓரம் கட்டப்பட்டாள்...

இரு வீட்டுப் பெரியவர்கள், அடுத்து மூத்தவன் ராகவன் குடும்பம் அதன் பின்னரே யுவா, யமுனாவுக்கு நிற்க இடம் கிடைத்தது... இவர்களோடு இளமாறனும் புகைப்படத்துக்கு வந்து நின்றான்...

யுவா அருகில் நிற்க விருப்பம் இல்லாத யமுனா இளாவின் பக்கம் சென்று நிற்க போக அதற்குள் புகைப்படக்காரர் அவளிடம்,

"மேடம்... சாரோட சேர்ந்து நில்லுங்க..." என்று யுவாவை காட்டி சொல்ல...

"இவன் எல்லாம் சார்ன்னா அந்த வார்த்தைக்கே மரியாதை இல்லை..." என்று அவள் வேண்டும் என்றே முணுமுணுக்க...

"ம்... அந்த மரியாதை இல்லாதவன் கூடத் தான் இப்ப நீ ஃபோட்டோ எடுக்கணும்ங்கிற உன் தலைவிதியை யாராலும் மாத்த முடியாது..." என்று அவன் கிண்டலாய் சொல்ல...

அதில் ஆத்திரம் அடைந்தவள் அங்கிருந்து நகரப் போக அவள் அகல முடியாதபடி அவளின் இடை அவனது கரத்தில் சிக்குண்டு இருந்தது... அவள் அதிர்ந்து போய் அவனை ஏறிட்டு பார்க்க...

"என் மூஞ்சி அழகா இருக்குன்னு எனக்குத் தெரியும்... அங்கே ஃபோட்டோவுக்குப் போஸ் கொடுடி பஜாரி..."

அவனது பேச்சில் அவளையும் அறியாமல் அவள் தலை முன்னால் திரும்பியது...

"இப்போ எங்கேடி போச்சு உன்னோட வாய்...?" அவள் காதில் கிசுகிசுப்பாய் சொன்னவனின் கை அழுத்தமாய் அவளின் இடையில் பதிந்தது...

அவன் வாய்மொழியாய் கூறாத ஒன்றை அவனது உடல்மொழி கூறிக் கொண்டு இருப்பதை அவன் அறியவில்லை... அவன் உணரவில்லை...

ஆனால் அவள் அதை அறிந்தாள்... அவனை உணர்ந்தாள்... அவள் அறிந்ததும் உணர்ந்ததும் அவளுள் பெரும் பூகத்தை ஏற்படுத்தியது...

மோதல் தொடரும்...

## களம் : 4

புகைப்படம் எடுக்கும் வரை பல்லை கடித்துக் கொண்டு நின்றிருந்தாள் யமுனா... அவளுக்குத் தான் யுவராஜின் அருகாமை பெரும் அவஸ்தையாக இருந்தது... ஆனால் அவனுக்கு அந்த மாதிரியான எந்த அவஸ்தையும் இல்லை போலும் மிகவும் கூலாகப் புகைப்படத்துக்கு ஈயென இளித்தபடி போஸ் கொடுத்துக் கொண்டு இருந்தான்...

ஒருவழியாய் புகைப்படம் எடுத்து முடிந்ததும், "கையை எடுறா...?" அவனைப் பார்த்து முறைத்தபடி சொன்னவளை கண்டு என்ன என்பது போல் அவன் புரியாமல் பார்த்தான்...

"என் இடுப்பில் இருந்து கையை எடுன்னு சொன்னேன்..." அவனுக்கு மட்டும் கேட்கும்படி அவள் முணுமுணுக்க...

அப்போது தான் அவனும் கவனித்தான் தனது கை அவளின் இடையைத் தழுவி இருப்பதை... அவசரமாய்த் தனது கையை விலக்கியவன் அதை உற்று பார்த்துவிட்டு,

"முதல்ல என் கையை ஒரு பாட்டில் பினாயில் ஊத்தி கழுவணும்... கண்டவங்களையும் கண்ட இடத்துல தொடுது... தூ... உனக்குக் கொஞ்சம் கூட அறிவே இல்லையாடா..." என்று தன் கையைப் பார்த்து அவன் திட்ட...

அத்தனை பேர் முன்னிலையில் அவனைக் கடியவும் முடியாமல் அதே சமயம் அவனைச் சும்மாவும் விட முடியாமல் அவள் தான் உள்ளுக்குள் இருதலைக் கொல்லி எறும்பாய் தவித்துப் போனாள்...

"இது இடுப்பா... நான் அடுப்புன்னுல நினைச்சேன்..." அவளின் முகத்தைப் பார்க்காமல் அவளின் வெண்ணிற இடையின் மீது கண்ணைப் பதித்தபடி சொன்னவனைக் கொலைவெறியுடன் அவள் பார்க்க...

"ஹா... ஹா... இடுப்பாம்ல இடுப்பு... கரி அடுப்பு..." என்று வேறு கூறி அவளை மேலும் கடுப்பேத்தி விட்டு அவன்

செல்ல அவளோ கொதிக்கும் பாய்லராய் மாறி இருந்தாள்... அவள் காது இரண்டிலும் புகை வராதது தான் குறை...

அப்போது இருந்து இவர்கள் இருவரையும் பரந்தாமன் பார்த்துக் கொண்டு இருந்தார்... சின்ன மகள் வாயை பேசியே அடைத்த யுவாவை கண்டு அவர் ஆச்சிரியப்பட்டார்... எல்லோரையும் பேசியே ஒருவழி பண்ணும் தன் மகள் அவனிடத்தில் அமைதி காப்பதை ஆச்சரியமும் யோசனையும் கலந்து பார்த்தார்... அவர் மனதிலும் ஏதேதோ ஆசைகள் ஓடியது... பின் பெருமூச்சு விட்டபடி கடவுள் மேல் பாரத்தைப் போட்டுவிட்டு வேறு வேலையைப் பார்ப்பதற்காக மேடையை விட்டு கீழே இறங்கினார்...

அனைவரும் மணமக்களை அழைத்துக் கொண்டு யுவாவின் வீட்டிற்குச் சென்றனர்... அங்கு அவர்களுக்கு ஆரத்தி சுற்றி வரவேற்று உள்ளே அழைத்துச் செல்ல யமுனா மட்டும் அப்படியே பின்தங்கி விட்டாள்...

இவ்வளவு நாளில் ஒரு நாள் கூட அவள் யுவாவின் வீட்டிற்கு வந்தது இல்லை... ஏனோ அவளுக்கு அங்கு வர பிடிக்கவில்லை... அதனால் அவளது பெற்றோர் அழைத்த போது எல்லாம் தட்டி கழித்தவள் இன்று வசமாய் மாட்டி கொண்டாள்...

அவன் வீட்டிற்குள் செல்லவே அவளுக்கு விருப்பம் இல்லை... நகத்தைக் கடித்துக் கொண்டு வாசல் முன் அவள் நின்று இருக்க... அந்த நேரம் பார்த்து யுவாவும், இளாவும் அங்கே வந்தனர்...

"என்ன இளா... அம்மணி இங்கே நின்னுக்கிட்டு இருக்காங்க... அவங்க அக்காவுக்கு மாதிரி அவங்களுக்கும் ஆரத்தி கரைச்சுச் சுத்தினா தான் உள்ளே வருவாங்களோ...? இல்லை மணமகளே மணமகளே வலதுகாலை எடுத்து வச்சு உள்ளே வாங்கன்னு ஏதாவது பாட்டு பாடணுமா...?" நக்கலாய் அவளைப் பார்த்து கேட்டான் யுவா...

"ஏண்டா அந்தப் பொண்ணு கிட்டேயே வம்பிழுத்திட்டு இருக்க... பாவம்டா..." இளா அவளுக்காகப் பரிந்து பேசினான்...

"நான் கேட்டேனாடா... இல்லை உன் கிட்ட வந்து சொன்னேனா என்னை ஆரத்தி சுத்தி அழைச்சிட்டு போன்னு... பெருசா பேச வந்திட்டான்... போடா வேலையைப் பார்த்துட்டு..." அவள் கோபத்தில் கத்தினாலும் அவனுக்குக் கேட்கும்படி மெதுவாகத் தான் கத்தினாள்...

இளமாறனே சற்று அசந்துவிட்டான் அவள் கத்தியதை கண்டு...

"என்ன பொண்ணுடா இவ...?" யுவாவின் காதை அவன் கடிக்க...

"நான் தான் சொன்னேன்ல்ல அவ பஜாரின்னு... நீ தான் நம்பலை..." என்று இளாவிடம் சொல்லியவன் அவளிடம்,

"பின்னே உனக்குக் கூஜாவா நான் தூக்குவேன்... என் வேலையைத் தான் பார்க்க போறேன்..." என்று யமுனாவிடம் பதிலடி கொடுத்துவிட்டு யுவா வீட்டினுள் நுழைய போக அந்த நேரம் பார்த்து யமுனா அந்தக் காரியத்தைச் செய்தாள்...

அவன் வாசல்படியை தாண்டி உள்ளே செல்லும் நேரம் பார்த்து அவன் அருகில் வந்தவள் இரு கால்களால் துள்ளி குதித்து வாசல் படியை மிதிக்காமல் தாண்டி கொண்டு வீட்டின் உள்ளே நுழைந்தாள்... அவளது அந்தச் செயலை சற்றும் எதிர்பார்க்காத யுவா அதிர்ந்து போய் அங்கேயே நின்றுவிட்டான்...

அவனைத் திரும்பி பார்த்து 'எப்புடி...?' என்பது போல் ஒரு அலட்சிய பார்வை அவள் பார்க்க அதில் நிதானத்துக்கு வந்தவன்,

"குரங்கு தான்டி நீ..." என்று சொல்லியபடி செல்ல...

"நீ தான்டா கருங்குரங்கு... கரி சட்டி மாதிரி இருந்துட்டு என்னையவா கரி அடுப்புன்னு கிண்டல் அடிக்கிற..." அப்போது அவன் பேசிய வார்த்தைக்கு இப்போது பதிலடி கொடுத்த திருப்தியில் அவள் இரு கைகளையும் கட்டி கொண்டு அவனை மிதப்பாய் பார்க்க...

"நான் கறுப்பு தான்டி... இப்போ யாரு அதை இல்லைன்னு சொன்னது... மறந்தும் கூட என் பக்கத்துல வந்திராதே... அப்புறம் என் கறுப்பு உன் மேல ஒட்டிக்கப் போகுது..." என்றவனின் பார்வை அழுத்தமாய் அவளின் இடை மீது படிந்தது...

அவனின் பார்வை போகும் இடம் தெரிந்து அங்கே தன் பார்வையை ஓட்டியவள் திகைத்து போனாள்... அவள் குதித்துக் கொண்டு வந்ததில் அவளின் இடுப்பு சேலை ஏகத்தும் இறங்கி அவளின் இடை வளைவை அழகாய் அபாயகரமாய் அடுத்தவர்களுக்கு எடுத்து காட்டி கொண்டு இருந்தது... அவசரமாய்த் தனது புடவையைச் சரி செய்தவளால் அவனை முறைத்து மட்டுமே பார்க்க முடிந்தது...

"என்னத்தான் உயர உயர பறந்தாலும் ஊர்க்குருவி பருந்தாகிட முடியாது..." கிண்டல் குரலில் கூறியவன், "அதே மாதிரி தான் நீ ஆம்பளை மாதிரி நடந்துக்கிட்டாலும் நீ ஒரு பொம்பளைங்கிறதை மறந்திறாதே..." முகம் இறுக கூறியவனின் குரலும் இறுகி போய் இருந்தது...

இருவரின் வாய் சண்டையையும் சுவாரசியமாய்ப் பார்த்துக் கொண்டு இருந்த இளமாறன் அவர்கள் பேச்சுத் திசை மாறி வேறு எங்கோ பயணிப்பதை உணர்ந்து அதைத் தடுக்க முயன்றவனாய்,

"யமுனா உள்ளே போம்மா... அவன் கூடப் பதிலுக்குப் பதில் பேசிக்கிட்டு இருந்தா பார்க்கிறவங்க என்ன நினைப்பாங்க..." என்று அவளைச் சமாதானப்படுத்தி உள்ளே செல்ல சொல்ல...

"யார் என்ன நினைச்சாலும் எனக்குக் கவலை இல்லை...?" என்று யுவாவை முறைத்துக் கொண்டு சொன்னவள் இளாவிடம்,

"நீங்க சொல்றதால நான் போறேன்..." என்றவள் யுவாவை மேலும் முறைத்துவிட்டே நகர்ந்தாள்...

"யுவா உனக்கு வேறு தனியா சொல்லணுமா...?" என்று இளா அவனை அழைக்க அவனும் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டு இளாவுடன் இணைந்து நடந்தான்...

கனிமொழியை அவளது புகுந்த வீட்டில் விட்டு விட்டு கிளம்பும் போது பரந்தாமனும், திலகவதியும் கண்கலங்கினர் என்றால் யமுனா ஓவென்று அழுது விட்டாள்...

பெற்றோருக்கு அடுத்தபடியாக அவளைக் கண்ணும் கருத்துமாக அவளது மனம் அறிந்து அது கோணாதபடி நடக்கக் கனிக்கு மட்டுமே தெரியும்... அதே போல் மனதில் உள்ளதை அவள் கனியுடன் தான் அதிகம் பகிர்ந்து கொள்வாள்...

தங்கை அழுவது கண்டு கனிமொழிக்கும் அழுகை வந்தது... மனோ தான் அவளைத் தேற்றினான்...

கனிமொழியிடம் அன்னையாய் திலகவதி சில அறிவுரைகள் கூற மேலும் மேலும் பொங்கிய கண்ணீரை அடக்கி கொண்டு சகோதரியை விட்டு தள்ளி நின்றாள் யமுனா...

அப்போது அவள் அருகில் இயல்பாய் வருவது போல் வந்து நின்ற யுவா, "அடடே... உனக்குக் கூட அழ தெரியுமா...? கண்ணீர் ஆறாய் வழியுது..." அவளைக் கிண்டல் செய்து சீண்ட...

இரு கண்களிலும் கண்ணீர் துளிகள் வைரங்களாய் பளபளக்க அழுததால் முகம் செந்தணலாய் சிவந்து இருக்க அவனை ஏறிட்டு பார்த்தவள்,

"பிரியமானவங்களைப் பிரியும் வலி உனக்கு எங்கே தெரிய போகுது... அந்த மாதிரி வேதனையை நீ வாழ்க்கையில் அனுபவிச்சு இருக்கியா... அப்படி அனுபவிச்சு இருந்தா தானே என்னோட வலி உனக்குப் புரியும்..." என்று பாம்பாய் சீறியவளை ஒரு கணம் உற்று நோக்கியவன் பின்பு அலட்சியமாகத் தோளை குலுக்கி கொண்டு,

"அது சரி அனுபவிச்சவங்க சொன்னா கேட்டுக்க வேண்டியது தான்..." என்றவன் "அதனால நான் என்ன சொல்ல வர்றேன்னா எனக்கு வலியும் தெரியாது... எலியும் தெரியாது... ஹா... ஹா..." என்று சிரித்தபடி அவன் நகர்ந்தான்...

அவனின் முகத்தை வெறித்துப் பார்த்துக் கொண்டு இருந்தவளை திலகவதி அழைக்கக் காரில் ஏறினாள்...

அவர்கள் வீடு இருக்கும் தெரு முனையில் கார் திரும்பும் போது ஏதேச்சையாக யமுனா திரும்பி பார்க்க அங்கு வீட்டின் முன் நின்றிருந்த எல்லோரும் உள்ளே சென்று இருக்க யுவா மட்டும் இவர்கள் காரை பார்த்துக் கொண்டு இருப்பது கண்ணில் பட்டது...

'பெரிய இவன் மாதிரி பேச்சை பாரு... என்னைப் பத்தி இவன் மனசுல என்ன நினைச்சிட்டு இருக்கான்... மவனே அடுத்த முறை பார்க்கும் போது உனக்கு இருக்குடா கச்சேரி...' மனதில் அவனை நினைத்து பொருமி கொண்டே வந்தாள் வழி நெடுக...

அடுத்த மூன்றாவது நாள் மறுவீட்டிற்கு மாப்பிள்ளையையும் பொண்ணையும் அழைத்த போது பரந்தாமன் சகர்பாணி குடும்பத்தினரையும் சேர்த்து அழைக்கச் சக்ரபாணியும் சம்பந்தி சொல் தட்டாமல் கிளம்பி வந்தார்... அவருக்கும் பரந்தாமனிடம் முக்கியமான விசயம் ஒன்று பேச வேண்டி இருந்தது...

இங்கும் மணமக்களுக்கு ஆரத்தி சுற்றி வரவேற்பு கொடுக்கப்பட்டது... சுற்றிய ஆரத்தி கரைசலை வெளியில்

சென்று கொட்டிவிட்டு வரும்படி திலகவதி சின்னமகளைப் பணிக்க அவளும் அந்தத் தட்டை எடுத்துக் கொண்டு வாயிலுக்குச் சென்றாள்...

யுவாவுக்கு அவள் தனியாய் இருப்பது எப்படித்தான் தெரியுமோ மூக்கில் வியர்த்தது போல் அவள் முன் வந்து பிரசன்னமானான்...

"ஏய் ரௌடி... எனக்காகத் தானே ஆரத்தி கொண்டு வர்ற... ம் சீக்கிரம் சுத்து... நான் உள்ளே போகணும்..." யமுனாவின் முன் வழியை மறைத்துக் கொண்டு அவன் நிற்க...

"உனக்கு எல்லாம் ஆரத்தி ஒரு கேடா... போடா..." என்றபடி அவனைச் சுற்றிக் கொண்டு அவள் செல்ல முயல, அவளின் கையைப் பிடித்து இழுத்து நிறுத்தியவன்,

"ஏன் எனக்கு என்னடி குறைச்சல்...?" என்று அவன் கோபமாய் உரும...

அவன் கையைப் பிடித்து இழுத்தில் அவனது கை அவளது வளையல் மீது அழுத்தம் கொடுக்க அது அவளுக்கு மிகுந்த வலியை கொடுக்கப் பல்லை கடித்துப் பொறுத்து கொண்டவள் வெளியில் அதைக் காட்டி கொள்ளாமல் அவனை முறைத்துக் கொண்டு நின்றாள்...

அவளது முகபாவம் கண்டு அவனுக்கு என்ன தோன்றியதோ அவளது கையை விடுவித்தவன் தட்டில் இருந்த செந்தூர கரைசலில் தனது வலதுகை கட்டை விரலை தொய்த்து தனது நெற்றியில் வெற்றி திலகமிட்டு கொண்டவன்,

"இப்ப நீ போகலாம்..." என்று அவளைப் பார்த்து சொல்ல...

"சரியான லூசு..." என்று முணுமுணுத்துக் கொண்டே அவள் நகர்ந்தாள்... அவள் செல்வதைப் பார்த்துக் கொண்டு இருந்தவன் முகத்தில் எள்ளல் புன்னகை வந்தமர்ந்தது...

விருந்து முடிந்து ஓய்வாக எல்லோரும் அமர்ந்த போது சக்ரபாணி தாமாகவே அந்த விசயத்தை ஆரம்பித்தார்...

"சம்பந்தி நான் சுத்தி வளைச்சு பேசாம நேரே விசயத்துக்கு வர்றேன்... உங்க இரண்டாவது பொண்ணை என் சின்னமகனுக்குக் கொடுப்பீங்களா...?"

அதில் பரந்தாமன் உடனே மகிழ்ந்து போய், "எனக்குப் பரிபூரணச் சம்மதம்..." என்றவர் தன் மனைவியைப் பார்க்க திலகவதி சந்தோசமாய்த் தலையைச் சம்மதமாய் ஆட்டினார்...

இந்தச் செய்தி கேட்டு எல்லோரும் மகிழ்ந்தனர்... ஆனால் சம்பந்தப்பட்ட இருவரும் முகத்தை இறுக்கமாய் வைத்துக் கொண்டு அமர்ந்து இருந்தனர்...

"யமுனா... இனி நீ என் கூடவே இருக்கலாம்டி..." கனிமொழி சகோதரியை பாசமாய் அணைத்து கொண்டாள்...

"பேராண்டி... உன் அப்பன் என்ன இப்படி உன்னை ஒரேடியா சாய்ச்சுப்புட்டானே... இப்போ என்ன பண்ண போற...? எனக்கு அந்தப் பொண்ண கண்டாலே பிடிக்கலை ராசா..." பாக்கியம் தனது செல்ல பேரன் யுவராஜிடம் புலம்ப...

"எனக்கு மட்டும் என்ன பிடிக்கவா செய்யுது கிழவி...? அவளைக் கண்டாலே பத்திட்டு வாந்தி வாந்தியா வருது... இதுல அவளைக் கல்யாணம் பண்ணிட்டு ஒரே ரூம்ல... கர்மம் கர்மம் அதுக்கு நான் சந்நியாசம் வாங்கிட்டு இமயமலைக்குப் போயிருவேன்..."

"ராசா அப்படி எல்லாம் சொல்லாதேப்பா... உன் புள்ளையை என் கையால தூக்கி நான் ஆசை தீர கொஞ்சாம என் உயிர் என்னை விட்டு போகாதுப்பா... இவ இல்லைன்னா என்ன உனக்கு வேற பொண்ணா கிடைக்காது..." என்று அவர் பேரனை சமாதானப்படுத்த...

"அது எல்லாம் ஆல்ரெடி கைவசம் பொண்ணு ரெடியா இருக்கு ப்யூட்டி... இப்போ பாரு அய்யாவோட கைவரிசையை..." என்றவன் எழுந்து நின்று,

"அப்பா ஒரு நிமிசம்..." என்றான் தந்தையைப் பார்த்து...

"என்னடா...?"

"எனக்கு இந்தப் பொண்ணு வேணாம்ப்பா..." என்று தன் மனதில் உள்ளதை பளிச்சென்று சபையில் போட்டு உடைத்தான்...

"யுவா..." மகனிடம் கண்ணால் ஜாடை காட்டி பேசாமல் அமர சொன்னார் சக்ரபாணி...

ஆனால் அவனோ அதை எல்லாம் கண்டு கொள்ளவில்லை... அவரைப் பார்க்கவும் இல்லை... அவனது பார்வை எல்லாம் யமுனாவின் மீதே நிலைத்து நின்றது...

தலையைக் குனிந்து இருந்த அவளது தோற்றத்தில் இருந்து அவனால் எதுவும் கண்டுபிடிக்க முடியவில்லை...

"ஆமாம் பா... நான் ஒரு பொண்ணை விரும்பறேன்ப்பா..." அவன் சொல்லி முடிக்கும் முன் யமுனா அவனை நிமிர்ந்து பார்த்தாள்...

'அப்படி வாடி வழிக்கு... பெரிய இவளாட்டம் தலையைக் குனிஞ்சு இருந்தா நாங்க நம்பிருவோமா நீ நல்ல பொண்ணுன்னு... இப்போ உன் சரக்கை கொஞ்சம் எடுத்து விடு பார்ப்போம்...' நக்கலாய் நினைத்தவன்,

"ஐஞ்சு வருசமா லவ் பண்றேன்... அவள் பேரு ஸ்வேதா..." என்றவனின் பார்வை யமுனாவை விட்டு அங்கும் இங்கும் எங்கும் அகலவில்லை...

அவன் சொன்னதைக் கேட்டு இரு வீட்டாரும் திகைத்துப் போனார்கள்...

மகனின் அரை வேக்காடு குணம் அறிந்தும் அவனிடம் சம்மதம் கேட்காமல் தன்னிச்சையாய் முடிவு எடுத்த தன் மடமையை எண்ணி சக்ரபாணி மனதிற்குள் நொந்து போனார்...

"அவன் என்னப்பா என்னை வேண்டாம்ன்னு சொல்றது... நான் சொல்றேன்ப்பா எனக்கு அவனைப் பிடிக்கலை...

பிடிக்கலை... பிடிக்கலை... எனக்கு வேற பையன் பாருங்கப்பா... இவனை விட எல்லாவிதத்திலும் தகுதி அதிகம் உள்ளவனா பாருங்க..." திடீரென்று யமுனா எழுந்து நின்று தன் தந்தையைப் பார்த்து கத்த துவங்க...

இரு வீட்டாரும் விழி பிதுங்கி நின்றனர் தத்தம் வாரிசுகளின் அதிரடி செயல்களைக் கண்டு...

ஆனால் அவர்கள் இருவரோ ஒருத்தரை ஒருத்தர் முறைத்துக் கொண்டு அடுத்தவர்களின் பார்வையைச் சளைக்காமல் எதிர் கொண்டனர்...

மோதல் தொடரும்...

## களம் : 5

"யுவா... உள்ளே வந்துட்டு போ..." சக்ரபாணி யுவராஜை பார்த்து கண்டிப்புடன் சொன்னவர் அவனின் பதிலை எதிர்பார்க்காமல் விருவிருவென வீட்டினுள் சென்றுவிட்டார்...

யமுனா வீட்டில் தான் பேசியது சற்று அதிகப்படி தான் என்று அவன் உணர்ந்ததால் அவர் கண்ணில் படாமல் வாசலிலேயே விடைப்பெற நினைத்தவனை அவனின் எண்ணம் புரிந்த தகப்பனாய் அவனுக்கு முன் வீட்டிற்கு வந்து நின்று அவனின் வருகைக்காக வாசலில் காத்து நின்றார்...

'ஏண்டா யுவா அவரோட குணம் தெரிஞ்சும் நீ கொஞ்சம் கூட அடங்க மாட்டேங்கிற...? எப்பத்தான் உன் வாய் அமைதியா இருக்கப் போகுதோ...? இப்ப என்ன மண்டகப்படி காத்துட்டு இருக்கோ தெரியலையே...' தந்தையை நினைத்து யோசித்துக் கொண்டே உள்ளே சென்றவன் உடனே எதையோ நினைத்து சிலிர்த்துக் கொண்டான்...

'அவர் திட்டுவார்ங்கிறதுக்காக எல்லாம் அந்தப் பஜாரியை கல்யாணம் பண்ணிக்க முடியுமா...? ஐயோ அவள் சங்காத்தமே வேண்டாம்... அதுக்கு இந்தாளோட திட்டு பரவாயில்லை...' என்று மனதுக்குள் புலம்பியவன் பவ்யமாய்த் தந்தை முன் வந்து நின்றான்... காது இரண்டையும் மானசீகமாக மூடி கொண்டவன் அவரின் வாய் வசவுக்காகக் காத்து இருந்தான்...

"அப்போ நீ லவ் பண்ற அப்படித்தானே... அதுவும் ஐஞ்சு வருசமா..." என்றவரின் நக்கல் பார்வையே அவனிடம் சொல்லாமல் சொல்லியது 'ஏற்கெனவே எனக்குக் காது குத்திட்டாங்கடா... நீ வேற குத்தாதே' என்று...

அவரின் முகத்தில் தெரிந்த நம்பிக்கையின்மையைக் கண்டு அவனுக்குக் கோபம் வந்தது...

"ஏன் என்னைப் பார்த்தா உங்களுக்கு எப்படி இருக்கு...? ஏன் என் மூஞ்சியை எல்லாம் யாரும் லவ் பண்ண மாட்டாங்களா...? நீங்க என்னை ரொம்பத்தான் இன்சல்ட் பண்றீங்கப்பா... நான் இதை வன்மையா கண்டிக்கிறேன்..." அவரின் பேச்சிற்கு அவன் கண்டனம் தெரிவிக்க...

"சரி நீ சொல்றதை நான் நம்பறேன்..." என்ற சக்ரபாணி சோபாவில் சாய்ந்து அமர்ந்து கால் மேல் கால் போட்டபடி மகனின் காதல் கதை கேட்பதற்கு ஏதுவாகத் தன்னைத் தயார்படுத்திக் கொண்டு அவனின் முகத்தைப் பார்த்தார்...

வீட்டில் இருந்த அனைவரும் யுவராஜின் முகத்தை ஆர்வத்தோடும் ஆவலோடும் பார்த்தனர்...

"அவ பேரு ஸ்வேதா..."

"அது தான் தெரியுமே... மேலே சொல்லுடா தறுதலை..." ஏனோ அவருக்கு அந்த ஸ்வேதா என்ற பெயர் எரிச்சலை கிளப்பியது...

"இப்படி ஊடால ஊடால நீங்க பேசினா எனக்குக் கன்ட்டினியூட்டி விட்டு போயிரும்... இப்ப நான் சொல்லவா இல்லை போகவா...?" அவன் ஏகத்துக்கும் முறுக்கி கொள்ள...

"உன் காதல் கண்றாவி எல்லாம் கேட்கணும்ன்னு எனக்குத் தலையெழுத்து... சொல்லி தொலை..." என்று அலுத்து கொண்டவரை முறைத்துக் கொண்டு தன் காதலை சொல்ல ஆரம்பித்தான்...

"காலேஜ்ல அவ எனக்கு ஜூனியர்..."

"ஓஹோ... படிக்கும் போதே காதலா..." நக்கலாய் கேட்ட சக்ரபாணி மனைவியின் முறைப்பில் வாயை மூடி கொண்டார்...

"ஆமாம்... ஒரு சின்ன மிஸ் அண்டர்ஸ்டாண்டிங்னால அவளும் நானும் பிரிஞ்சிட்டோம்... அதுக்கு அப்புறம் இப்போ ஆறு மாசத்துக்கு முன்னாடி தான் அவளை

மறுபடியும் சந்திச்சேன்... அப்பவும் அவள் என்னைத் தான் லவ் பண்ணிக்கிட்டு இருக்கேன்னு சொன்னா..."

"சோ உன் காதல் இப்போ தொடருது..." சக்ரபாணி சொல்லவும்,

ஒரு பெருமூச்சை இழுத்து பிடித்து விட்டவன், "ஆமாம்..." என்றான்...

"காதலிக்கிறது எல்லாம் சரி தான்... காதலிக்கிற பொண்ணை எப்படிக் காப்பாத்த போற...? இப்படியே ஊரை சுத்திட்டு என் கிட்ட, உன் அண்ணன் கிட்ட கையேந்தி பிச்சை எடுத்து உன் பொண்டாட்டியை காப்பாத்த போறியா... இல்லை..." அவரது பேச்சில் அவனுக்கு ரோசம் வந்தது...

"அவளை எப்படிக் காப்பாத்தணும்ன்னு எனக்குத் தெரியும்... நீங்க ஒண்ணும் சொல்ல தேவையில்லை..." தந்தையின் வார்த்தைகள் நூறு சதவீதம் இல்லை இருநூறு சதவீதம் உண்மை என்ற போதிலும் அதை ஒத்துக் கொள்ள அவன் தயாராய் இல்லை...

"அதையும் நான் பார்க்கத்தானே போறேன்..." என்று அலட்சியமாகச் சொன்ன சக்ரபாணி, "அந்தப் பொண்ணைக் கூட்டிட்டு வா... நான் பார்க்கணும்..." என்றார்...

அவருக்குமே சற்று ஆர்வமாக இருந்தது அந்த ஸ்வேதாவை பார்ப்பதற்கு... தறுதலையாய் இருக்கும் தன் மகனிடத்தில் அப்படி என்ன இருக்கிறது என்று அந்தப் பெண் இவனை ஐந்து வருடங்களாக விழுந்து விழுந்து காதலிக்கிறாள் என்று...

"இப்போ அவ இங்கே இல்லை..." கேள்வியாய் பார்த்த தகப்பனை கண்டு,

"வேலை விசயமா லண்டன் போயிருக்கா... இன்னும் ஒரு மாசத்துல இங்கே வந்திருவாள்..." அவன் சொன்னதைக் கேட்டு அவரின் புருவங்கள் ஆச்சிரியமாய் உயர்ந்தது...

"ஓஹோ... பொண்ணு வேலை பார்க்கிறாளா... அப்போ புவ்வாவுக்குக் கஷ்டம் இல்லை... அவ சம்பாதிச்சு உன்னைக் காப்பாத்துவாள்ன்னு சொல்லு..."

அதைக் கேட்டதும் அவனுக்கு ஆத்திரம் வந்தது...

"பொண்டாட்டி சம்பாதிச்சு உட்கார்ந்து சாப்பிடணும்ன்னு அவசியம் எனக்கு இல்லை..." என்றான் கோபமாய்...

"அதானே... உனக்குச் சம்பாதிச்சுக் கொடுக்கத்தான் நாங்க மூணு பேரு இருக்கோமே..." என்றவர்,

"அந்தப் பொண்ணைக் கல்யாணம் பண்ணணும்ன்னு எண்ணம் இருந்தா ஒழுங்கா கடையை வந்து பொறுப்பா பார்த்துக்கோ... அப்போ தான் நானும் கொஞ்சம் மரியாதையோட அவங்க வீட்டுல போய்ப் பொண்ணு கேட்க முடியும்..."

"பார்க்கலாம்..." என்று அவன் பட்டும் படாமல் சொல்ல...

"உன்னை எல்லாம் திருத்த முடியாது..." என்ற சக்ரபாணி கடைக்குக் கிளம்பினார்...

அவர் சென்றதும் அம்மாவும், பாட்டியும் ஸ்வேதாவை பற்றி அறிந்து கொள்வதற்காக அவனைச் சூழ்ந்து கொண்டனர்...

கனிமொழி யோசனையுடன் தங்கள் அறைக்குச் செல்ல அவளின் முகத்தில் இருந்த குழப்பத்தைப் படித்தவனாய் அவளின் பின்னே சென்றான் மனோ...

மறுவீடு சென்றவர்கள் தங்களது உடன்பிறப்புக்கள் செய்த குளறுபடியில் மனோவின் வீட்டிற்கே திரும்ப வந்துவிட்டனர்...

அறைக்குள் வந்ததும் தன் பின்னால் வந்த கணவனை ஏறிட்டு பார்த்தவள் அடுத்த நொடி தலையைக் குனிந்து கொண்டாள்...

தங்கை செய்த காரியத்தால் அவளால் மனோவை எதிர் கொள்ளச் சற்று அச்சமாக இருந்தது... திருமணம் முடிந்து

மூன்று நாட்களே ஆன கணவன் இடத்தில் தன்னைப் பற்றி எந்த மாதிரியான புரிதல் இருக்கும் என்று அவளுக்குத் தெரியாத போது... அவளது தங்கையைப் பற்றி என்ன மாதிரியான புரிதல் இருக்கும் என்று அவளுக்குப் பயமாக இருந்தது... அதனால் தங்களுக்கு இடையில் பிரச்சினை வருமோ என்று குழப்பமாய் இருந்தாள்...

அவள் அருகே வந்தவன் அவளின் முகத்தை நிமிர்த்தி, "என்னடா...?" அவளின் கலங்கிய விழிகளைக் கேள்வியாய் பார்த்தபடி கேட்க...

"அது... யமுனா அப்படிப் பேசியிருக்கக் கூடாது தான்... அவள் கொஞ்சம் வாயடிப்பாள் தான்... ஆனா ரொம்ப நல்லவ... அவ சார்பா உங்க கிட்ட நான்..." அவள் மேலே பேசும் முன் அவளின் வாயை கை கொண்டு மூடியவன்,

"இதை நீ சொல்லி எனக்குத் தெரியணுமா என்ன...? எனக்கு யமுனாவையும் தெரியும்... அதை விட என் தம்பியையும் நல்லாவே தெரியும்... அவன் பேசியதும் தப்பு தான்... அவங்களுக்கு யார் வாழ்க்கை துணையா வந்தா நல்லா இருக்கும்ன்னு அவங்க தான் தீர்மானிக்கணும்... அதுக்கான வயசும் அவங்களுக்கு வந்தாச்சு... சரி அவங்க ரெண்டு பேர் கதையை விடு... அவங்களால நம்ம ரெண்டு பேருக்கும் இடையில் எந்தப் பிரச்சினையும் வேண்டாம்..." புரிதலுடன் பேசிய கணவனைக் கண்டு அவளது மனம் நிம்மதி அடைந்தது...

"நான் பயந்து போயிட்டேன்... நீங்க ரொம்ப நல்லவங்க..."

"நான் நல்லவன்னு யார்ம்மா சொன்னது... உன் கிட்ட நான் எப்பவுமே கெட்டவன் தான்..." என்றவனின் பார்வை புதுக் கணவனாய் தாபத்தோடு அவளை நோக்கியது...

அதில் செங்கொழுந்தாய் மாறிய கனி அவன் முகம் காண நாணி தலையைக் குனிய, அவனோ விடாமல் அவளின் முகத்தை நிமிர்த்தியவன் தனது தாபத்தை அவளின் இதழில் காட்ட துவங்கினான்...

*****************************

தனது அறையில் ஜன்னல் அருகே நின்று இருந்த யமுனாவின் கண்கள் வெளியில் இலக்கற்று வெறித்துப் பார்த்துக் கொண்டு இருந்தது...

அவளது அறைக்கு வந்தனர் பரந்தாமனும், திலகவதியும்...

"பாப்பா..." என்று பரந்தாமன் அழைக்க...

அவரின் அழைப்பில் திரும்பி பார்த்தவள் கண்களில் இருந்த வெறுமை இதுவரை அவளது பெற்றோர் காணாதது... பதறி போய் அவள் அருகில் அவர்கள் வர...

"அப்பா... சாரிப்பா... நான் அந்த மாதிரி பேசியிருக்கக் கூடாது தான்... இதனால அக்காவுக்கு ஏதும் பிரச்சினை வந்திர கூடாது..." என்று மருகியவளை அணைத்துக் கொண்டார் பரந்தாமன்...

என்றுமே பேசிய வார்த்தைக்கு மகள் வருத்தப்பட்டது கிடையாது... ஆனால் இன்று இந்தளவுக்கு வருத்தப்படுகிறாள் என்றால் அவளின் மனம் எந்தளவுக்குக் காயப்பட்டு இருக்கும்...

"நீ எதுக்குப் பாப்பா வருத்தப்படுற... நீ பேசியதுக்கும் கனி வாழ்க்கைக்கும் என்ன சம்பந்தம்...? நீ இப்படிப் பேசியதுக்குக் காரணம் அந்தப் பையன் தேவையில்லாம பேசியதால தானே... அவன் எதுக்கு எல்லோர் முன்னாடியும் அப்படிச் சொல்லணும்...? அப்பாவுக்கு உன் மேல எந்தக் கோபமும் இல்லை... நீ பேசியது ரொம்பச் சரி பாப்பா... நீ இதை நினைச்சு கவலைப்படாதே... அப்பா உனக்கு இவனை விட நல்ல மாப்பிள்ளையா பார்க்கிறேன்..." என்று மகளை அவர் சமாதானப்படுத்தினார்...

திலகவதியும் யுவராஜ் மேல் சற்றுக் கோபமாய்த் தான் இருந்தார்... தன் பெண்ணுக்கு என்ன குறைச்சல் என்று அவன் வேண்டாம் என்று சொன்னான்... அவன் காதலித்தால் அதை அவனின் பெற்றோரை தனியே அழைத்துச் சொல்ல வேண்டும்... அதை விட்டு விட்டு

எல்லோர் முன்பும் யமுனாவை அவமானப்படுத்துவது போல் பேசியது தவறு என்றே அவரும் நினைத்தார்... அதனால் தன் மகள் பேசியது மிகச் சரியே என்று எண்ணினார்...

இந்தப் பிரச்சினைக்குப் பின் இரு வீட்டாரும் தொலைப்பேசியில் பேசி கொண்டாலும் ஒருவரின் வீட்டிற்கு ஒருவர் செல்லவில்லை...

இரண்டு மாதங்களுக்குப் பின் குட்டி பெண் தியாவின் பிறந்தநாள் வந்தது... அதை முன்னிட்டு கனிமொழியின் குடும்பத்தை இங்கு அழைக்க விரும்பினார் சக்ரபாணி... சரளாவும் இதை ஆமோதித்தார்... மனோவிற்காக அவனது மாமனார் உறவு வேண்டும் என்று அவர் நினைத்தார்...

சக்ரபாணி அழைக்கப் பரந்தாமனும் வர ஒத்துக் கொண்டார்...

"ஐய்... தியா பாப்பாவுக்குப் பேர்த்டேயா...? சூப்பர்... என்ன கிப்ட் வாங்கிட்டு போகலாம்மா...?" என்று உற்சாகமாய் அன்னையைப் பார்த்து யமுனா கேட்க...

"அங்கே நீ வர வேண்டாம் யமுனா..." திலகா மறுத்தார்...

"ஏன்ம்மா...?"

"அந்தப் பையன் அவ்வளவு தூரம் பேசினதுக்கு அப்புறம் நீ அங்கே வர்றது எனக்குச் சரின்னு படலை..."

"அவன் கிடக்கான்ம்மா லூசு..." என்று யுவாவை அலட்சியப்படுத்தினாள் யமுனா...

"உன்னை யாரும் லூசுன்னு சொல்லிட கூடாதுங்கிறதுக்காகத் தான் நான் சொல்றேன்... கொஞ்சமாவது ரோசம் வேணும் யமுனா..."

அன்னை இப்படிச் சொன்னதும் யமுனாவின் முகம் சுருங்கி போய்விட்டது...

"சரிம்மா நான் வரலை..." என்றவள் எழுந்து சென்றுவிட...

"ஏன் திலகா அவளை வர வேண்டாம்ன்னு சொல்ற...?" பரந்தாமன் மனைவியைப் புரியாமல் பார்க்க...

"கல்யாணமாக வேண்டிய பொண்ணு... அடிக்கடி அங்கே கூட்டிட்டு போறதுல எனக்கு இஷ்டம் இல்லை..." என்று நிர்தாட்சண்யமாய் மறுத்த மனைவியிடம் மேற்கொண்டு வாதாடாமல் அதை ஏற்றுக் கொண்டார்...

**************************

"இப்போவாவது உங்க வீட்டுக்கு என்னைக் கூட்டிட்டு போகணும்ன்னு தோணிச்சே... ஐம் சோ ஹேப்பி யுவா..." என்று சொன்ன ஸ்வேதாவின் முகம் அத்தனை மகிழ்ச்சியைக் காட்டியது...

"என்ன யுவா எதுவுமே பேச மாட்டேங்கிறீங்க...?" என்றபடி யுவராஜின் அருகில் நெருங்க அமர்ந்தவள் வாகாய் அவனின் தோளில் சாய்ந்து கொண்டாள்...

எத்தனை வருடங்களாயிற்று அவனின் தோள் சாய்ந்து... இடையில் ஏதேதோ நடந்து அவர்களிடையே பெரும் பிளவு ஏற்பட்டுவிட்டது... அது எல்லாம் இப்போது சரியாகி விட்டதில் அவள் மிகவும் சந்தோசமாய் இருந்தாள்...

காரை ஓட்டி கொண்டு இருந்த யுவா அவளைப் பார்த்துப் புன்னகை புரிந்தவன் ஒன்றும் பேசாது சாலையில் கண்களைப் பதித்தான்...

அவள் சொல்வது போல் அவனது மனம் அத்தகைய மகிழ்ச்சியுடன் இருக்கிறதா என்றால்... இல்லை என்றே தோன்றியது... ஏதோ ஒரு எண்ணம் மனதை அழுத்தி கொண்டு இருந்தது... ஆனால் அது என்னவென்று அவனால் உறுதியாய் அறிய முடியவில்லை...

வீட்டின் முன் காரை நிறுத்தியவன் அவளை அழைத்துக் கொண்டு தனது பெற்றோரிடம் சென்றான்...

"அப்பா... இது தான் ஸ்வேதா..." மகன் அறிமுகப்படுத்தியதும் அவளை ஏற இறங்க பார்த்த

சக்ரபாணியின் முகம் திருப்தியை காட்டியது...

எங்கே மகன் தன் விளையாட்டுத்தனத்தை அவனின் வாழ்க்கைத் துணை தேர்விலும் காட்டி விடுவானோ என்று உள்ளுக்குள் பயந்து கொண்டு இருந்தார்...

அவரது கலக்கம் தேவையற்றது என்பது போல் இருந்தது ஸ்வேதாவின் அடக்கமான தோற்றம்...

அவன் அறிமுகப்படுத்தியதும் ஸ்வேதா அவரின் காலில் விழுந்தவள் அடுத்து சரளா, பாக்கியத்தின் கால்களிலும் விழுந்து ஆசிர்வாதம் வாங்க எல்லோருக்குமே அவளை ரொம்பவும் பிடித்துப் போயிற்று...

அழகான, அடக்கமான, படித்த பெண்ணை யாராவது வேண்டாம் என்று சொல்வார்களா... உடனே எல்லோரும் தங்களது சம்மதத்தை உணர்த்தினர் பார்வையால்...

ஆனால் அதில் எல்லாம் யுவா திருப்தி அடையவில்லை... அவனின் கண்கள் வாயிலை நோக்கியே இருந்தது யாரோ ஒருவரின் வருகையை எதிர்பார்த்து...

அவனை அரை மணி நேரம் காக்க வைத்துவிட்டு அவன் எதிர்பார்த்தவரின் குடும்பம் அங்கு வர அவனது கண்கள் வேகமாய் அவர்களையும் தாண்டி பின்னால் தேடி துளாவியது... தான் எதிர்பார்த்தவர் வராததில் அவன் மிகவும் ஏமாற்றம் அடைந்தான்...

ஆம்... அவன் யமுனாவின் வருகையைத் தான் அத்தனை ஆர்வத்துடன் எதிர்பார்த்து காத்து இருந்தான்... ஸ்வேதாவை அவளிடம் கர்வத்துடன் அறிமுகப்படுத்த வேண்டும்... ஸ்வேதாவை கண்டு அவள் முகம் கறுப்பதைத் தான் பார்த்து ரசித்து வேண்டும் என்று நினைத்தவனுக்கு அது நடக்காமல் போனதை எண்ணி சற்று வருத்தமாக இருந்தது...

"சித்து..." என்று ஓடி வந்த தியாவை கண்டு அவனது வருத்தம் பின்னுக்குச் செல்லப்பட்டது...

"ஹேய் குட்டி... ஹேப்பிப் பேர்த்டே..." என்றவன் அவளுக்கென வாங்கிய விளையாட்டு பொம்மைகளை எடுத்துக் கொண்டு வந்து கொடுத்தவன்,

"என் குட்டிம்மாவுக்கு இந்தச் சித்துவோட ஸ்பெசல் கிப்ட்..." என்று தான் வாங்கிய மெல்லிய தங்க சங்கிலியை அவளது கழுத்தில் போட்டு விட்டான்...

அதைக் கண்டு சக்ரபாணி, "இதுக்கு எவ்வளவுடா உன் அண்ணன் கிட்ட இருந்து பணம் கறந்த...?" என்று கேட்க... அதில் அவனது முகம் கறுத்தது...

"நான் ப்ரோக்ராம் பண்ணி சம்பாதிச்சது..." என்றவனை அவர் நம்பாமல் பார்க்க...

"என் பிரெண்ட் அவன் கம்பெனிக்காக ஹெல்ப் கேட்டான் செஞ்சு கொடுத்தேன்... அதுக்கு வந்த பணம் தான் இது... என் சொந்த காசு... நான் உழைச்ச பணம்..." அதைச் சொல்லும் போதே அவனுக்கு அத்தனை கர்வமாய் இருந்தது...

சக்ரபாணிக்கு தன் காதுகளையே நம்ப முடியவில்லை... தனது மகனா அதைச் சொன்னது ஆச்சிரியமும் நெகிழ்ச்சியுமாய் அவனைப் பார்த்தவர்,

"எப்போ இருந்துடா இப்படி மாறுன...?"

"இப்பத்தான் ஜஸ்ட் டூ மன்த்ஸ் ஆகுது..." அலட்சியம் போல் சொன்னவனை எல்லோரும் சந்தோசத்துடன் பார்த்தனர்...

"நான் சொன்னேன்ல என் ராசா பொறுப்புள்ளவன்னு... பார்த்தீங்களா என் ராசாவை..." பாக்கியம் பேரனை நினைத்துப் பெருமிதம் கொள்ள...

கண்கள் கலங்க சக்ரபாணியும் சரளாவும் அதை ஆமோதித்தனர்... அவர்களின் பார்வை நன்றியுடன் ஸ்வேதாவை பார்த்தது... அவள் அல்லவா அவர்களது மகனின் இந்த மாற்றத்திற்குக் காரணம்...

ஸ்வேதாவிற்கும் சற்றுப் பெருமையாக இருந்தது யுவாவை நினைத்து...

தியாவின் பிறந்தநாள் விழா நல்லபடியாக முடிய எல்லோரும் உணவு அருந்தி கொண்டு இருந்தனர்... அப்போது தீபாவின் தந்தை அந்தப் பேச்சை ஆரம்பித்தார்...

"சம்பந்தி உங்க பையன் இவங்க பொண்ணைக் கல்யாணம் பண்ண சம்மதிக்கலையாமே..." என்று பரந்தாமனை சுட்டி காட்டி சக்ரபாணியிடம் சொன்னவர்,

"உங்களுக்கு ஆட்சேபணை இல்லைன்னா என் பையன் இளமாறனுக்கு அந்தப் பெண்ணைப் பேசலாமா...?" அவர் கேட்டதும் சக்ரபாணி பரந்தாமன் முகத்தைப் பார்த்தார்...

"கொஞ்சம் யோசிக்கணும்ங்க..." ஏற்கெனவே பட்ட அடி பரந்தாமனை அது போல் பேச வைத்தது...

அப்போது இளமாறன், "அங்கிள் எனக்கு யமுனாவை ரொம்பப் பிடிச்சு இருக்கு... எனக்கு அவளைக் கல்யாணம் பண்ண பரிபூரணச் சம்மதம்..." என்றான் நேரிடையாக...

அவன் நேராகச் சம்மதம் கூறியது பரந்தாமனுக்கு மகிழ்ச்சி தான் என்றாலும் மனதில் மகளை நினைத்து தயங்கியவர்,

"பாப்பா கிட்ட கேட்டுட்டு சொல்றேன்ங்க... தப்பா எடுத்துக்காதீங்க..."

"இதுல தப்பா எடுத்துக்க என்ன இருக்கு...? நீங்க தாராளமா உங்க பொண்ணைக் கலந்து பேசிட்டுப் பதில் சொல்லுங்க..." என்று பெருந்தன்மையோடு சொன்ன தீபாவின் தந்தையை நன்றியுடன் பார்த்தார் பரந்தாமன்...

சக்ரபாணிக்கும் சற்று நிம்மதியாக இருந்தது... தன் மகனால் ஏற்பட்ட களங்கத்தைத் தனது மூத்த சம்பந்தி தீர்த்து வைத்ததில் அவருக்கும் மகிழ்ச்சியே...

"ஓகே யுவா நான் கிளம்பறேன்..." என்றபடி ஸ்வேதா கிளம்ப ஆயத்தமாக...

"அப்பா நான் ஸ்வேதாவை அவள் வீட்டில் கொண்டு விட்டுட்டு வர்றேன்..." என்றபடி எழுந்த யுவா எல்லோரிடமும் விடைப்பெற்று வெளியில் வந்தான்...

ஸ்வேதா ஏறியதும் காரை கிளப்பியவனின் முகம் பெரும் யோசனையில் ஆழ்ந்து இருந்தது... அவள் ஏதேதோ பேசி கொண்டு வர அவனால் உம் மட்டுமே சொல்ல முடிந்தது... அவனது எண்ணம், மனம் எல்லாம் அவனது கட்டுப்பாட்டில் இல்லை... அது வேறு எங்கோ சஞ்சரித்துக் கொண்டு இருந்தது...

அவனின் கைகள் தன்னிச்சையாய் ஸ்வேதா வீட்டின் முன்பு காரை நிறுத்த...

"ஓகே யுவா குட் நைட்..." என்ற ஸ்வேதா அவன் அருகில் வந்து அவன் முகத்தைத் தன் பக்கம் திருப்பியவள் அவனது இதழை நோக்கி முன்னேற... இருவரின் உதட்டுக்கும் இடையில் தனது கையைத் தடுப்புச் சுவராய்க் கொண்டு வந்தவன்,

"ப்ளீஸ் ஸ்வேதா... இப்ப இது வேண்டாமே..." என்று மறுக்க...

"என்ன யுவா என்னாச்சு... முதல்ல எல்லாம் நீங்க தானே வலிய கேட்பீங்க... இப்போ நானே வலிய வந்தும்..." அவள் புரியாமல் அவனைப் பார்க்க...

"எப்பவுமே விளையாட்டுத்தனமா இருக்க முடியுமா ஸ்வேதா... வயசுக்கு ஏத்த மாதிரி மாற வேண்டாமா...?"

அவனது கண்களை உற்று நோக்கியவள், "நீங்க ரொம்ப மாறிட்டீங்க யுவா... நாம மறுபடியும் சந்திச்சப்ப கூட நீங்க என்னைப் பார்த்து ஐ லவ் யூன்னு சொல்லைல... நானா தான் உங்க கிட்ட வந்து காதலிக்கிறேன்னு சொன்னேன்... ஏன் யுவா என்னை உங்களுக்குப் பிடிக்கலையா...?" என்று அவனைப் பார்த்து கேட்டவள் அவனிடம் இருந்து பதில் வராததால் கண்கள் கலங்க கலக்கத்துடன் அவனை

நோக்கியவள் அடுத்த நொடி அவனை அணைத்து கொண்டாள்...

"ஒரு தடவை உங்களை மிஸ் பண்ணிட்டு நான் பட்ட அவஸ்தை போதும் யுவா... இனியும் என்னால உங்களை மிஸ் பண்ண முடியாது..."

அவளின் அணைப்பில் உடல் இறுகியவன் அவளது வார்த்தையில் உள்ளம் இறுகினான்...

"நேரமாச்சு ஸ்வேதா..." என்று அவன் அவளை விலக்கி நிறுத்த...

‘கிளம்பு’ என்று சொல்லாமல் சொல்லும் அவனை வெறித்துப் பார்த்தவள், "பை..." என்று சொல்லியவள் காரை விட்டு இறங்கி அவனைத் திரும்பியும் பார்க்காமல் நடந்தாள்...

அவனும் அவளைக் கவனிக்கும் மனநிலையில் இல்லை... விருட்டென்று காரை எடுத்தவனின் மனம் அவன் வசம் இல்லை... கட்டுக்குள் அடங்காத குதிரையாய் அது தறி கெட்டு ஓடியது...

பல சிந்தனைகள் அவன் மனதை அழுத்த முன்னால் சென்று கொண்டு இருந்த லாரியை முந்த நினைத்து காரை செலுத்தியவன் அவனுக்கு எதிர்த்தார் போல் வந்து கொண்டு இருந்த பேருந்தை கவனிக்கத் தவறினான்...

நிமிட நேரத்தில் எல்லாம் நடந்து முடிந்து இருந்தது... பேருந்தும் அவனது காரும் நேருக்கு நேர் மோதியது...

அவனது கார் முன்பக்கம் நொறுங்க சீட் பெல்ட் போடாததால் இருக்கையில் இருந்து எகிறி விழுந்தவனின் தலையில் பலத்த அடிப்பட்டது... அதில் அவனது நினைவுகள் கொஞ்சம் கொஞ்சமாய் மங்க துவங்கியது... அந்த மங்கிய நினைவிலும் அவனது மனதில் அழியாமல் ஆழப் பதிந்து இருந்த அந்த உருவம் மெல்ல மேலெழும்பி முழுதாய் அவனை ஆக்கரமித்தது...

அந்த உருவத்தைக் கண்களில் நிறைத்தவனின் உதடுகள், "ஐ லவ் யூ பேபி..." என்று மெதுவே முணுமுணுத்தது...

பார்பி பொம்மை போன்று அழகாய் இருந்த அந்தப் பதினாறு வயது அழகிய பெண் அவனது நினைவில் மணம் பரப்பிச் சுகமாய் நிறைந்தாள்... அவளது நினைவோடு உதட்டில் புன்னகை உறைய அவன் தன் நினைவை மொத்தமாய் இழந்தான்...

மோதல் தொடரும்...

## களம் : 6

"ம்மா... காபி..." வழக்கம் போல் தாமதமாக எழுந்த யமுனா சமையலறை நோக்கி கத்தியபடி வரவேற்பறையில் வந்து அமர்ந்தாள்...

நேற்றிரவு படம் பார்த்துவிட்டுத் தாமதமாகத் தூங்கியதால் அவளது கண்ணில் இன்னும் தூக்கம் மிச்சம் இருந்தது... சோபாவில் சாய்ந்தவள் சோம்பலுடன் கண்களை மூடி கொண்டாள்...

"பாப்பா... காபி..." வேலை செய்யும் பெண்ணின் குரலில் கண்களைத் திறந்தவள்,

"அம்மா எங்கே...?" வழக்கமாய் அன்னை தான் அவளுக்குக் காபி கலந்து தருவார்...

"நான் வேலைக்கு வந்ததும் ரெண்டு பேரும் கிளம்பி போய்ட்டாங்க... என் கிட்ட எதுவும் சொல்லலையே..." என்றவள் தனது வேலையைக் கவனிக்கச் செல்ல...

யமுனாவின் கைகள் அருகில் இருந்த தொலைப்பேசியில் இருந்து தந்தையின் அலைப்பேசி எண்ணுக்கு அழைத்தது... மறுமுனையில் தந்தை எடுத்ததும்,

"அம்மா எங்கேப்பா...?"

"நானும் அம்மாவும் ஹாஸ்பிட்டல்ல இருக்கோம்மா..." அவர் கூறியதும் அவள் பதறி போனாள்...

"அம்மாவுக்கு என்னாச்சுப்பா... என்னை ஏன் நீங்க எழுப்பலை...?" அவள் பதற...

"ஐயோ பாப்பா எங்களுக்கு ஒண்ணும் இல்லை..."

"ஓ..." என்று நிம்மதி மூச்சு விட்டவளுக்குத் தெரியவில்லை இனி தான் அவள் நிம்மதி பறி போகப் போகிறது என்று...

"கனியோட கொழுந்தன் யுவாவுக்குத் தான்ம்மா ஆக்சிடெண்ட்..." அவர் கூறிய செய்தியில் அவளது இதயம்

ஒரு முறை நின்று துடித்தது...

"ஏன்...? என்னாச்சுப்பா..? இப்போ எப்படி இருக்காரு...?" கேட்கும் போதே அவளது குரல் நடுங்கியது...

எப்போதும் யுவாவை அவன் இவன் என்று மரியாதை இல்லாமல் விளிக்கும் மகள் இன்று அவனை மரியாதை பன்மையுடன் அழைப்பதை அவர் உணரவில்லை...

"கொஞ்சம் கிரிட்டிக்கல் கண்டிசன் தான்ம்மா..." அவர் சொல்லும் போதே அவளின் கைகளில் இருந்து தொலைப்பேசி நழுவியது...

"இன்னும் கொஞ்ச நேரத்தில் நாங்க வந்திருவோம்..." அவர் சொன்னதைக் கேட்க அவரின் மகள் சுயநினைவோடு இருந்தால் அல்லவா...

மறுமுனையில் மகளிடம் இருந்து சத்தம் இல்லாது போகவும், "சரி பாப்பா நான் வச்சிடறேன்..." என்று அவர் அழைப்பை துண்டித்து விட்டார்...

யுவாவின் நிலை அறிந்த யமுனா விக்கித்துப் போய் அமர்ந்து இருந்தாள்...

'ராஜ்...' என்ற ஒற்றை வார்த்தையில் மட்டுமே அவளது உலகம் நின்று சுழன்றது... அதைத் தவிர அவளது மூளை வேறு எதைப் பற்றியும் யோசிக்கும் நிலையில் இல்லை... கண்களில் கண்ணீர் கரகரவென வழிய முழங்காலில் முகம் புதைத்தவளிடம் இருந்து அதன் பின் எந்த அசைவும் இல்லை...

மருத்துவமனையில் இருந்து வீடு திரும்பிய பரந்தாமன் தம்பதியினர் வரவேற்பறையில் உட்கார்ந்து கொண்டு தூங்கும் மகளைக் கண்டனர்...

"ஏண்டி எத்தனை தடவை சொல்லி இருக்கேன்... தூங்கறதா இருந்தா ரூம்ல போய்த் தூங்குன்னு..." என்று திட்டியபடி கோபமாய் அவளை நோக்கி வந்தார் திலகா...

அவரின் அத்தனை சத்தத்திற்கும் அசைவில்லாது இருந்த மகளைக் கண்டு அவருக்கு மேலும் கோபம் வர, "யமுனா..." என்று அதட்டியபடி மகளின் தோளை பற்றி உலுக்கினார்...

அடுத்த நொடி யமுனாவின் உடல் வேரோடிந்த மரமாகச் சோபாவில் சாய்ந்தது...

"யமுனா..." என்று அலறினர் இருவரும்...

பேச்சு மூச்சு இல்லாமல் கிடக்கும் மகளைத் தன் மடியில் ஏந்திய திலகா, "யமுனா இங்கே பாரும்மா..." என்று அவள் கன்னம் தட்டி எழுப்ப முயற்சிக்க அவளோ அசைவின்றிக் கிடந்தாள்...

அவளது உயிர் அவளிடம் இருந்தால் அல்லவா அது அவளது உயிரை தேடி அல்லவா சென்று இருக்கிறது...

"என்னங்க எனக்குப் பயமா இருக்குங்க..." கணவனிடம் அவர் புலம்ப... பரந்தாமனுக்கும் கையும் ஓடவில்லை... காலும் ஓடவில்லை அருமை மகளின் நிலையைக் கண்டு...

பின் தன்னைச் சுதாரித்துக் கொண்டு மகளைத் தன் கைகளில் ஏந்தியவர் மனைவியிடம், "ஹாஸ்பிட்டலுக்குக் கூட்டிட்டு போகலாம்..." என்று காரை நோக்கி விரைய அவரின் பின்னே தானும் சென்றார் திலகா...

மருத்துவமனை செல்லும் வழி எங்கும் திலகாவின் கைகள் மகளின் முகத்தை வருடியபடி வந்தது...

ஒரு நொடி கூடச் சும்மா இராமல் சளசளவென்று பேசும் அவளது செப்பு இதழ்கள் அழுத்தமாய் மூடி இருப்பதைக் கண்டு அவருக்குத் துக்கம் பொங்கியது...

"பேசுடி யமுனா... இனி உன்னைப் பேசாதேன்னு நான் சொல்லவே மாட்டேன்... நீ எப்போதும் போல வாய் அடிச்சிட்டு கலகலப்பா இருக்கணும்... இனி நான் உன்னைத் திட்டவே மாட்டேன்டி..." என்று கதறியவரை கண்டு பரந்தாமனுக்கும் கண்கள் கரித்தது...

"நல்லா தானே இருந்தா... திடீர்ன்னு ஏன் இப்படி...?" திலகாவால் மேலே பேச முடியவில்லை...

மனைவி கேட்ட கேள்விக்குப் பரந்தாமனாலும் பதில் சொல்ல முடியவில்லை... அவருக்குமே மகளின் நிலை புதிதாக இருந்தது... இது போல் அவள் பேச்சு மூச்சு இல்லாமல் படுத்து அவர் கண்டது இல்லை...

மருத்துவமனையில் யமுனாவை சேர்த்ததும் தான் இருவருக்கும் மூச்சு வந்தது... விசயம் கேள்விப்பட்டுக் கனிமொழியும் மனோவும் அங்கு வந்தனர்... ஏனெனில் யுவாவும் அதே மருத்துவமனையில் தான் சேர்க்கப்பட்டு இருந்தான்...

இரண்டு மணி நேர போராட்டத்துக்குப் பின் யமுனா கண்களைத் திறந்தாள்...

மருத்துவர்களாலும் அவளின் உடல்நிலையைக் கணிக்க முடியவில்லை... நல்ல ஆரோக்கியமான உடலை உடையவளுக்கு எப்படி இப்படி ஒரு நிலை ஏற்பட்டது என்று அவர்களும் குழம்பி போயினர்...

ஆனால் எதையாவது சொல்ல வேண்டுமே என்று 'அனிமீக்காக இருக்கிறாள்' என்று சொல்லி இரு நாட்கள் மருத்துவமனையில் தங்க வைத்துவிட்டனர்...

"கொஞ்ச நேரத்தில் எங்களை எல்லாம் பயமுறுத்திட்ட யமுனா..." என்று கண் கலங்கிய பெற்றோரை கண்டு கண்சிமிட்டிய யமுனா,

"அப்படி இல்லைன்னா இந்த மாதிரி கவனிப்பு எனக்குக் கிடைச்சு இருக்குமா..." என்று குறும்பாகக் கூறி சிரித்தவளை கண்டு எல்லோரும் நிம்மதி அடைந்தனர்...

அங்கே யுவாவின் நிலையோ கவலைக்கிடமாகத் தான் இருந்தது... அவனுக்கு இன்னமும் நினைவு திரும்பவில்லை... அதனால் அவன் வீட்டில் மிகுந்த வருத்தத்தில் இருந்தனர்...

பொறுப்பில்லாமல் இருந்த பிள்ளை இப்போது பொறுப்பு வந்து நடந்து கொண்டதை நினைத்து சந்தோசப்படுவதற்குள் இந்த விபத்து பெரும் துயரை அளித்தது அவர்களுக்கு...

அன்று நள்ளிரவு நேரம் உறங்கி கொண்டு இருந்த யமுனா திடீரென்று கண் விழித்தாள்... பக்கத்துக் கட்டிலில் அவளது அன்னை ஆழ்ந்து தூங்கி கொண்டு இருந்தார்... மெதுவே எழுந்தவள் சத்தம் எழுப்பாமல் வெளியில் வந்தாள்...

விறுவிறுவென நடந்தவள் நேரே சென்று அடைந்த இடம் யுவாவின் அறை... அவளுக்குச் சேவகம் செய்ய வரும் செவிலிப்பெண்ணைத் தாஜா செய்து யுவா எந்த அறையில் இருக்கிறான் என்பதைப் பற்றி ஏற்கெனவே அவள் அறிந்து வைத்து இருந்தாள்...

இரவு நேரங்களில் மருத்துவர் வந்து செல்வதற்கு ஏதுவாக அவனின் அறைக்கதவு திறந்தே வைக்கப்பட்டு இருந்தது... மெல்ல திறந்து உள்ளே வந்தவள் முதலில் கண்டது பக்கத்துக் கட்டிலில் சுவர் பக்கமாய்த் திரும்பி நன்கு உறங்கும் ராகவை தான்... அதில் பயம் அகன்றவளாய் அவள் யுவாவின் அருகில் சென்றாள்...

தலையைச் சுற்றி கட்டுப் போடப்பட்டுக் கண்களை மூடி கிடந்தவனைக் கண்டு அவளுக்குக் கண்கள் கரித்தது...

அவனும் தானும் ஒருவரை ஒருவர் போட்டி போட்டுக் கொண்டு வேண்டாம் என்று புறக்கணித்தது அவளது நியாபகத்தில் பின்னுக்குத் தள்ளப்பட்டு அவனுடான காதல் மட்டுமே அவளது நியாபகத்தில் நின்றது...

"ராஜ்..." மெல்லிய குரலில் அவனை அழைத்தவள் அவனின் கன்னத்தை ஆசையுடன் வருடி கொடுத்தாள்...

அவளது அந்த ஒற்றை அழைப்பு ஆழ்ந்த உறக்கத்தில் இருந்த அவனது நினைவு அலைகளைத் தட்டி எழுப்பியது... அவளது தொடுகையை அவன் தன் நினைவடுக்கில் தேடி கொண்டு இருந்தான்...

"என்னைத் திட்டுவதற்கு, கோபப்படுவதற்காகவாவது கண் முழிச்சு வாடா... உன்னை ரொம்ப மிஸ் பண்றேன் ராஜ்... இத்தனை நாள் நீ இல்லாமல் எப்படி வாழ்ந்தேன்னே எனக்குத் தெரியலை... ஆனா இனி ஒரு நிமிசம் கூட நீ இல்லாமல் வாழ முடியாது அது மட்டும் உறுதி... என்னை உனக்குப் பிடிக்காது... அது எனக்கு நல்லா தெரியும்... ஆனா எனக்கு உன்னை ரொம்ப ரொம்பப் பிடிக்குமே... இந்த உலகத்திலேயே உன்னை மட்டும் தான்டா எனக்குப் பிடிக்கும்..."

அவளது எந்தப் பேச்சுக்கும் பதில் பேசாது இருந்தவனைக் கண்டு அவளது விழிகள் நீரை உகுத்தது...

"ஐ லவ் யூ ராஜ்..." என்றவளின் இந்த வார்த்தைகள் மட்டும் அவனது செவியைத் தீண்டி இதயத்தைச் சென்று அடைந்தது...

'இது... இவள்...' என்று அவனது இதயம் தனக்குள் ஆழப் புதைந்து இருந்தவளை மூளைக்கு அடையாளம் காட்ட முனைந்தது...

"நீ எனக்கு வேணும்டா... நீ இல்லைன்னா நான் செத்துருவேன்..." என்றபடி அவனது முகத்தைத் தனது கைகளில் தாங்கியவள் அவனது இதழில் தன் இதழை பதித்தாள் மென்மையாய்...

அவளது வார்த்தைகள் அவளது அடையாளத்தை அவனுள் பதிக்கும் முன் அவளது இதழ் ஒற்றல் அவளது அடையாளத்தை அவனுள் அழுத்தமாய்ப் பதித்தது...

ஸ்வேதாவின் இதழ் ஒற்றலை தடுத்தவனுக்கு அது எதனால் என்று இப்போது நியாபகத்துக்கு வந்தது...

தன்னவள் கொடுத்த இதழ் முத்தம் இன்றும் அவனது நெஞ்சில் நீங்கா இடம் பெற்று இருந்தது... அன்று அவள் கொடுத்த முத்தமும், அணைப்பும் அவனின் நினைவில் தோன்றி ஊனையும் உயிரையும் உருக்கி அவள் வேண்டும் என்ற தாபத்தை அவனுள் தோற்றுவித்தது...

அந்த நிலையிலும் அவளது அழுத்தமான இதழ் ஒற்றலுக்கு அவனது மனம் ஏங்கியது... லேசாக முத்தம் கொடுத்துவிட்டு விலகியவளை கண்டு அவனது மனம் செல்ல கோபம் கொண்டது... இதில் கூடவா கஞ்சத்தனம் என்று... இன்னும் இன்னும் அவளது அருகாமை வேண்டும் என்று தவித்த அவனது மனம் இறுதியில் அவளைப் பெயர் சொல்லி அழைத்துவிட்டது...

"யம்மு பேபி..." அவனது வாய் முணுமுணுத்தது...

ஆனால் அவன் சொன்னது அவளது காதில் விழவில்லை... அவன் லேசாக உதடுகளை அசைத்ததும் அவளுக்குத் தெரியவில்லை...

"இப்பவும் என்னை ஏமாத்தி கைவிட்ற மாட்டியே ராஜ்..." அவனின் கைகளைப் பிடித்துக் கொண்டு கேட்டவளின் கைகளை அவனது கை இறுக பற்றிக் கொண்டது...

அவனது கைப்பிடியின் இறுக்கத்தில் அவனின் மனநிலையை உணர்ந்தவள் மகிழ்ச்சியுடன் அவனைப் பார்த்தாள்...

"என்னை உணர்றியா ராஜ்..." அவ்வளவு நேரம் இருந்த அழுகை மாறி அவளது உதட்டில் புன்னகை வந்தமர்ந்தது...

சுயவுணர்வற்று இருக்கும் இந்த நிலையிலும் அவன் தன்னை உணர்கிறான் என்பதே அவளுக்குப் பெரும் உவகையாக இருக்க அதில் அவனுடனான கசப்பான நினைவுகள் எல்லாம் அவளுக்குப் பின்னுக்குத் தள்ளப்பட்டது...

"ராஜ்..." அவனைப் பரவசத்துடன் பார்த்துக் கொண்டு இருந்தவள் அருகில் இருந்த ராகவிடம் லேசாக அசைவு தெரியவும் அவசரமாய்க் கண்களைத் துடைத்துக் கொண்டு எழுந்தாள்...

ஆனால் அவளைப் போக விடாமல் யுவாவின் கை அவளது கரத்தோடு இறுக பிணைந்து இருந்தது... மெல்ல அவனது

கை விரல்களைப் பிரித்து எடுத்தவளுக்கு மனதில் சொல்லொண்ணா வேதனை எழுந்தது...

அவனோடு கரம் கோர்த்து வாழ்க்கை முழுவதும் வாழ வேண்டும் என்று ஆசைப்பட்டவள் அவள்... ஆனால் அவளே இன்று அதை விலக்கி வைக்கிறாளே... கடைசி வரை அவனுடன் இணைவது என்பது கானல் நீர் தானோ என்ற எண்ணம் எழுந்து அது அவள் உயிர் வரை சென்று வலித்தது...

'ம்ஹூம்... உன்னை ஒரு தடவை இழந்தது போதும் ராஜ்... இனி ஒரு முறை அந்தத் தப்பை நான் செய்ய மாட்டேன்...' உறுதியுடன் நினைத்தவள் அவன் முகத்தை ஆழ்ந்து பார்த்து அதைத் தன்னுள் ஆழப் பதிய வைத்தவள் அடுத்தக் கணம் அவனின் அறையை விட்டு வெளியேறினாள்...

தனது அறைக்கு வந்தவள் அன்னை இன்னமும் தூங்கி கொண்டு இருப்பதை அறிந்து நிம்மதி அடைந்தவளாய் கட்டிலில் ஏறி படுத்தாள்...

நேற்று யுவாவுக்கு விபத்து என்று கேள்விப்பட்டதும் அடுத்த நொடி அவளது மூளை செயலிழந்து போனது மட்டுமே அவளுக்குத் தெரியும்... அதற்குப் பிறகு என்ன நடந்தது என்று கூட அவளுக்குத் தெரியாது...

தான் சித்த பிரம்மையுற்று இருக்கும் அளவுக்கு அவன் தன்னைப் பாதிக்கிறான் என்பதை உணர்ந்தவளுக்கு உடனே கசப்பான புன்னகை எழுந்தது... அதை அவனும் உணர வேண்டுமே என்று...

அவன் தன்னை உணர்கிறான் என்பது மகிழ்ச்சியான விசயம் தான் என்றாலும் அவனின் மனம் எந்த நிலையிலும் மாறாது, அது தன் பக்கம் திரும்பாது என்பதை அவள் நன்கு அறிவாள்...

ஏனெனில் அவனது மனம் அந்த ஸ்வேதாவிடம் அல்லவா சிக்கி கொண்டு இருக்கிறது... அவன் ஸ்வேதாவை அல்லவா காதலிக்கிறான்... அதை அவன் வாயாலேயே

அவளிடம் சொல்லி அவளை நோகடித்துவிட்டு அவளை விட்டு விலகி போனவன் அல்லவா அவன்...

வேறு ஒருவளை காதலிக்கிறவன் என்று தெரிந்தும் அவனிடத்தில் காதலில் விழுந்த தன் மடத்தனத்தை எண்ணி எப்போதும் போல் இப்போதும் மனம் கலங்கி தனக்குள் நொந்து போனாள் அவள்...

ஆனாலும் அவன் தன்னுடையவன் என்ற எண்ணத்தை மட்டும் எப்போதும் போல் இப்போதும் சொல்லி கொண்டாள்...

மறுநாள் யமுனா மருத்துவமனையில் இருந்து வீட்டிற்குக் கிளம்பி கொண்டு இருந்தாள்... வராந்தாவில் நடக்கும் போது பரந்தாமன் மனைவியிடம்,

"திலகா... அந்தப் பையனை பார்த்துட்டு போலாமா...? நம்ம பாப்பாவை அவங்க எத்தனை தடவை வந்து பார்த்துட்டு நலம் விசாரிச்சிட்டு போனாங்க..."

கணவரின் கூற்றில் இருந்த உண்மை திலகாவுக்கும் புரிய, "சரிங்க பார்த்துட்டு போகலாம்..." என்று கணவரிடம் சொன்னவர் மகளிடம்,

"நீ வெளியில் இரு..." என்க...

"ஏன் நான் வந்தா என்ன...?" வழக்கம் போல் தனது துடுக்குத்தனத்தை அவள் காட்ட...

"ம்..." என்று முறைத்த திலகாவை பரந்தாமன் சமாதானப்படுத்தினார்...

அன்னை சொன்னது போல் யுவாவின் அறைக்கு வெளியே நின்று கொண்டாள் யமுனா...

பெற்றோர் உள்ளே சென்றதும் அங்கிருந்த ஜன்னல் வழியே எட்டி பார்த்தாள் அவள்... தன்னவனை மனம் குளிர பார்த்தவள் கண்ணில் அங்கே ஏற்கெனவே அமர்ந்து இருந்த ஸ்வேதாவை விழவும் அவளுக்கு மனம் துணுக்குற்றது...

"இப்போ எப்படி இருக்குங்க...?" திலகா சரளாவிடம் விசாரிப்பது அவளது காதில் நன்கு விழுந்தது...

சரளா கூறும் பதிலுக்காக அவள் காதை தீட்டி கொண்டு தவிப்புடன் நின்று இருந்தாள்...

"நேத்து வரைக்கும் உணர்வில்லாம தான் இருந்தான்... இன்னைக்கு ஸ்வேதா வந்து அவன் கூடப் பேசிட்டே இருந்தாள்... அதில் அவன் உடல்நிலை கொஞ்சம் கொஞ்சமாய் முன்னேறிட்டு இருக்கு... நாம ஸ்வேதாவுக்குத் தான் நன்றி சொல்லணும்... அவள் தான் என் பையனை உயிருடன் திருப்பி எனக்குக் கொடுத்து இருக்கா..." என்று உணர்ச்சிவசப்பட்டுச் சரளா கூறிக் கொண்டிருக்க...

"ஐயோ அப்படி எல்லாம் இல்லை ஆன்ட்டி..." ஸ்வேதா மறுத்து பேசுவது அவளுக்குக் கிணற்றுக்குள் இருந்து கேட்பது போல் இருந்தது...

கால்கள் துவள நிற்க முடியாமல் தள்ளாடியவள் அங்கிருந்த நாற்காலியில் அமர்ந்தாள்...

'அப்போ நேற்று அந்த ஸ்வேதாக எண்ணித்தான் அவன் என் கையைப் பற்றினானா...? அப்போ அவன் என்னைக் கொஞ்சமும் உணரவில்லையா...? எப்படி ராஜ் உன்னால என்னை மறக்க முடிஞ்சது...? ஆனா என்னால முடியலையேடா... உன் மனசுல அந்த ஸ்வேதா தான் அழுத்தமா பதிஞ்சு இருக்காளா...? நான் இல்லையா... என்ன இருந்தாலும் நான் இடையில் வந்தவத் தானே...' விரக்தியாய் நினைத்தவள் கண்ணில் கண்ணீர் மழை பொழிந்தது... அதைத் துடைக்கும் எண்ணம் கூட இல்லாமல் அப்படியே பிரம்மை பிடித்தது போல் அமர்ந்து இருந்தாள்...

காதலுக்குக் கண் இல்லை என்பது போல் காதலின் எண்ணங்களுக்கும் கண் இல்லை போலும்... யுவாவுக்கு விபத்து நடந்த இந்த மூன்று நாட்களாகத் தினமும் ஸ்வேதா அவனைப் பார்க்க வருகிறாள்... அப்போது எல்லாம் குணமாகாதவன் இன்று குணம் அடைந்து வருகிறான் என்றால் அதற்கு யார் காரணம் என்று கூட யோசிக்க

முடியாமல் அவள் மூளை மரத்து போய் அமர்ந்து இருந்தாள்...

கொஞ்சம் யோசித்து இருந்தாலும் அவளுக்கு அது புரிந்து இருக்கும்... ஆனால் அவளை அப்படி எல்லாம் யோசிக்க முடியாமல் செய்தது கடந்த காலத்தில் யுவா அவளிடம் பேசிய வார்த்தைகள்...

பெற்றோர் அவளை அழைத்துக் கொண்டு வீட்டிற்குச் சென்றது கூட அவளின் நினைவிற்கு எட்டவில்லை... திலகாவும் மகளை எந்தவித கேள்வியும் கேட்டுத் தொந்திரவு செய்யாமல் அவளை ஓய்வு எடுக்கச் சொல்லிவிட்டுச் சென்றுவிட்டார்...

யமுனாவின் மனம் முழவதும் குழப்ப மேகம் சூழ்ந்து கொண்டது...

அடுத்து வந்த ஒரு மாதம் அமைதியாய் கடந்து சென்றது... யுவா பூரணக் குணம் அடைந்துவிட்டான் என்ற செய்தி யமுனாவின் காதுகளை அடைந்து நிம்மதியுற செய்தது... அது போதும் அவளுக்கு... அவன் எங்கு இருந்தாலும் தீர்க்க ஆயுசுடன் இருக்க வேண்டும் என்று எண்ணி கொண்டாள்...

அன்று ஏனோ கோவிலுக்குச் செல்ல வேண்டும் போல் அவளுக்குத் தோன்ற அன்னையிடம் அனுமதி வாங்கிக் கொண்டு தனது ஸ்கூட்டியில் கோவிலுக்குக் கிளம்பினாள்...

கோவிலுக்குச் சென்று அங்குத் தன்னவனின் பெயருக்கு அர்ச்சனை செய்தவளின் மனம் அவனது நலம் ஒன்றை மட்டுமே எண்ணி பிரார்த்தனை செய்தது... அர்ச்சனை தட்டை வாங்கிக் கொண்டு வெளியில் வந்தவள் அப்போது தான் கோவிலுக்குள் நுழைந்த சரளாவை கண்டாள்...

"எப்படி இருக்கீங்க அத்தை...?" அவரின் நலம் விசாரிக்க...

"எனக்கு என்னம்மா நல்லா இருக்கேன்... நீ எப்படி இருக்க...? நீ கோவிலுக்கு எல்லாம் வருவியா...?"

"ஏன் அத்தை... நான் எல்லாம் கோவிலுக்கு வர மாட்டேன்னு நீங்களா நினைச்சுக்கிட்டீங்களாக்கும்...?" கிண்டலாய் வினவியவளை கண்டு அவர் சிரித்தார்...

"இந்தக் காலத்து பொண்ணுங்க எங்கே கோவிலுக்குப் போறாங்க அதான் கேட்டேன்..." என்றவரின் கண்கள் பருத்தி சேலையில் பாந்தமாய் இருந்தவளின் அழகை அளவிடத் தவறவில்லை...

"நாங்க எல்லாம் மாடர்ன்னா இருந்தாலும் மாரியாத்தாவை கும்பிடாம இருக்க மாட்டோம்..." என்றவள், "சரித்தை நான் கிளம்பறேன்... லேட்டான்னா அம்மா பயப்படப் போறாங்க..."

அவளின் கூற்றை ஆமோதித்தவராய், "அன்னைக்கு உங்கம்மாவை மட்டுமா நீ பயமுறுத்துன எங்களையும் சேர்த்துல்ல பயமுறுத்திட்ட..." என்றவர் அவளைக் கிளம்பச் சொல்லிவிட்டு கோவிலுக்குள் நுழைந்தார்...

வெளியில் வந்தவள் தனது ஸ்கூட்டியை நோக்கி நடந்தாள்... அப்போது தான் கவனித்தாள் அங்கு நின்றிருந்த காருக்குள் இருந்த யுவராஜை...

கார் கண்ணாடியை திறந்துவிட்டுக் காதில் ஹெட் ஃபோனை மாட்டி கொண்டு அமர்ந்து இருந்தவனின் கண்கள் எங்கோ வெறித்துக் கொண்டு இருந்தது...

விபத்துக் காரணமாக மொட்டை அடிக்கப்பட்டு இருந்த அவனது தலையில் அங்காங்கே முள்ளு முள்ளாய் முடிகள் முளைக்க ஆரம்பித்து இருந்தது... அவனின் உருவத்தைக் கண்களில் நிரப்பிக் கொண்டு அவன் அருகில் வந்தவள் காரின் கதவை தட்டினாள்...

அதில் அவனது மோனநிலை கலையாததால் அவன் காதில் மாட்டி இருந்த ஹெட் ஃபோனை வெடுக்கென்று அவள் பிடுங்க அதில் திடுக்கிட்டு போனவனாய் திரும்பி பார்த்தவன் எதிர்பாராவிதமாய் அங்கு அவளைக் கண்டதும் முழித்தான்...

அதற்குள் அவள் அந்த ஹெட் ஃபோனை தனது காதுகளில் பொருத்தி இருந்தாள்... இனிமையான குரலில் ஹரிஹரன் பாடி கொண்டு இருந்தார்...

"காதல் இருந்தால் எந்தன் கண்ணோடு கலந்துவிடு
காலம் தடுத்தால் என்னை மண்ணோடு கலந்துவிடு
உயிரே உயிரே வந்து என்னோடு கலந்துவிடு
நினைவே நினைவே எந்தன் நெஞ்சோடு கலந்துவிடு"

அந்தப் படத்தில் காதலன் தனது காதலியை நினைத்து உருகி பாடும் காதல் பாட்டு அது...

யுவா ஸ்வேதாவை எண்ணி காதலில் கசிந்து உருகி பாடுவது போல் கற்பனை செய்தவளுக்கு அந்தக் கற்பனையே கசந்தது... கண்கள் கலங்கியது...

அவன் தன்னைப் பார்த்துக் கொண்டு இருப்பதை அறிந்து தன்னைச் சமாளித்துக் கொண்டு ஹெட் ஃபோனை கழற்றி அவனிடம் நீட்டியவள், "இதுக்கு ஏன் நீ இவ்வளவு உருகி உருகி பாடணும்... நீ ம்ன்னு சொன்னா போதும் உன்னருமை ஸ்வேதா உன் மடியில் வந்து விழுந்திருவா..." என்றவளை ஒன்றும் பேசாது முறைத்தவனைக் கண்டு,

"நான் ஒண்ணும் தப்பா சொல்லலைப்பா... அவளுக்கு அந்தளவுக்கு உன் மேல் லவ்வோ லவ்வு..." என்றவளை அவன் பார்த்த தீப் பார்வையின் தீட்சண்யத்தைத் தாங்க முடியாமல் வேறு பக்கம் திரும்பி கொண்டவள்,

"கவலைப்படாதே உன் லவ் சக்சஸ் ஆகிரும்... அத்தைக்கு அதான் உன் அம்மாவுக்கு அவளை ரொம்பப் பிடிச்சு இருக்கு..."

அவள் சொன்னதை அவன் எங்கே கவனித்தான்... அவள் திரும்பி நின்றதில் அவன் முகத்தருகே இருந்த அவளது வெண்ணிற இடை அவனின் சித்தத்தைத் தடுமாறச் செய்து அவனைப் பித்தனாக்கி கொண்டு இருந்தது... அந்த இடையைத் தழுவ அவனது கைகள் துருதுருத்தது...

முயன்று தன்னை அடக்கி கொண்டவன் தன் நிலையை மறைக்க ஹெட் ஃபோனை எடுத்துக் காதில் வைத்தான்...

"விழி ஓரமாய் ஒரு நீர்த்துளி வழியுதே என் காதலி
அதன் ஆழங்கள் நீ உணர்ந்தால் போதும் போதும் போதும்
அழியாமலே ஒரு நியாபகம் அலைப்பாயுதே என்ன காரணம்
அருகாமையில் உன் வாசம் வீசினால் சுவாசம் சூடேறிடும்
கல்தரை மேலே பூக்கும் பூக்கள்
கூந்தலை போய்த்தான் சேராது
எத்தனை காதல் எத்தனை ஆசை
தடுமாறுதே தடம் மாறுதே
அடி பூமி கனவில் உடைந்து போகுதே"

அந்த வார்த்தைகள் கொடுத்த தாக்கத்தைத் தாங்க முடியாமல் காதில் இருந்து ஹெட் ஃபோனை கழற்றியவன் கண்களை மூடி இருக்கையில் சாய்ந்தான் அவன்...

அவனுக்கே சந்தேகமாய் இருந்தது இது தான் தானா என்று... ஏன் இந்த ஏக்கம்...? ஏன் இந்தத் தவிப்பு...? ஏன் இந்தச் சோகம்...?

கைக்கெட்டும் தொலைவில் அவனது மனம் கவர்ந்தவள் இருக்கிறாள்... ஆனால் அவளைக் கை கொண்டு தழுவ முடியாமல் அவர்கள் இருவரின் மனதிற்கும் இடையில் இருக்கும் மிகப் பெரிய இடைவெளியை யார் ஏற்படுத்தியது...?

கார் கதவின் மீது தட்டும் ஓசையில் கண்களைத் திறந்தவன் முன் யமுனா நின்று இருந்தாள்...

இன்னுமுமா அவள் செல்லவில்லை என்று யோசித்தவன் என்ன என்பது போல் பார்த்தான்...

"இந்தா..." என்று தன் கைகளில் இருந்த திருநீறை அவன் புறம் நீட்டினாள்... அதை வெறித்துப் பார்த்துக் கொண்டு இருந்தவன் மனதில் அலை அலையாய் பழைய நினைவுகள் எழுந்தது...

அவன் தன் கையைத் தீண்டி திருநீறு எடுப்பதற்குக் கூட யோசிப்பதை கண்டு அவளுக்குக் கோபம் வந்தது...

"நீ ஸ்வேதாவை காதலிக்கிறேன்னு எனக்கும் தெரியும்... அதுக்காகத் திருநீறு வச்சுக்கக் கூட இப்படி யோசிக்க வேண்டியது இல்லை..." என்று கோபமாய்ச் சொன்னவள் தானே திருநீறை எடுத்து அவனது நெற்றியில் பூசிவிட்டாள்...

"உன் ஸ்வேதா கிட்ட போய்ச் சொல்லு... யமுனா என்னைத் தொட்டு எனக்குத் திருநீறு வச்சு விட்டாள்ன்னு..." என்றவள் பட்டென்று அந்தக் காரியத்தைச் செய்தாள்...

அவனது புருவங்கள் மீது தன் கையைக் குடை போல் பிடித்தவள் அவனது நெற்றியில் இருந்த மீதி திருநீறை ஊதிவிட்டு, "இப்படி ஊதிவிட்டாள்ன்னும் போய்ச் சொல்லு..." என்று அவனைப் பார்த்து கண்சிமிட்டி சொன்னவள் மேலே அவன் ஏதும் கோபமாய்ப் பேசிவிடும் முன் தனது ஸ்கூட்டியை நோக்கி ஓடி விட்டாள்...

அவள் பேசிய வார்த்தைகள் ஒவ்வொன்றும் அவன் உயிர் வரை சென்று வலித்தது...

யமுனா ஸ்கூட்டியை கிளப்பிக் கொண்டு அவன் அருகில் வந்தவள், "பை ராஜ்..." அவளையும் அறியாமல் அவனது பெயரை அவளது உதடுகள் உச்சரித்தது... அதை அவள் உணரவில்லை... சிரிப்புடன் வண்டியை எடுத்துக் கொண்டு பறந்துவிட்டாள்...

ஆனால் அவன் அதை உணர்ந்தான்... தன் பெயரை அவள் உச்சரிக்கும் போது அதில் இருந்த காதலை அவன் இப்போதும் உணர்ந்தான்...

"ராஜ்..." காதலில் கரைந்து உருகி, தாபத்தில் குழைந்து ஒலித்த அவளது குரல் அவனது காதில் இன்னமும் ஒலித்துக் கொண்டே இருந்தது...

"என்னை இப்படிப் பைத்தியக்காரனாக்கிட்டு போய்ட்டேடி பாவி..." என்று கத்தியபடி ஸ்டீயரிங் வீலில் தன் கையைக்

குத்தியவனின் முகத்தில் இருந்தது கோபம் கோபம் கோபம் மட்டுமே...

மோதல் தொடரும்...

## களம் : 7

அன்று விடுமுறை தினம் ஆதலால் அந்த ஷாப்பிங் மால் நிரம்பி வழிந்தது... யமுனா தனது தோழியர் கூட்டத்துடன் அங்கு வந்து இருந்தாள்... அங்கு இருந்த துணி கடை ஒன்றில் தனக்கு வேண்டிய உடைகளைத் தேர்வு செய்து கொண்டு இருந்தவளிடம் அவளது தோழி,

"அங்கே பாருடி சூப்பர் ஹேண்ட்சம் கைய்டி... பசங்க கூட இவ்வளவு கலரா இருப்பாங்களா...?" ஜொள்ளு விட்டபடி பேசியவளை கண்டு யமுனாவிற்கு எரிச்சல் வந்தது...

'ம்க்கும்... இங்க லவ் பண்ணவனையே சைட் அடிக்க முடியலை இதுல வேறு ஒருத்தனாக்கும்...? போடி...' என்று மனதுக்குள் அலுத்து கொண்டவள் திரும்பி பார்க்காமல் தனது வேலையில் மூழ்கி இருக்க...

"ஏய் யமுனா... அவன் உன்னைத் தான் தேடி வர்றான்..." என்று மீண்டும் அவளது தோழி காது கடிக்க...

'என்னைத் தேடியா...? ஒருவேளை ராஜ்ஜா...' என்று நினைத்தவள், 'ச்சீ ச்சீ அவன் எங்கே கலரா இருக்கான்... காத்தவராயன் மாதிரி கன்னங்கரேல்ன்னுல இருப்பான்... அப்போ இது யாரு...?' அவள் யோசிக்கும் போதே,

"ஹாய் படபடப் பட்டாசு... இங்க என்ன பண்ணிட்டு இருக்க...?" என்ற குரலில் கோபத்துடன்,

"யாரு பட்டாசு... நானா... நானா...?" என்று பொரிந்தபடி அவள் திரும்ப,

"இப்படிப் பேசினா படபடப் பட்டாசுன்னு சொல்லாம வேறு எப்படிம்மா சொல்றது...?" என்று சிரித்தபடி நின்று இருந்த இளமாறனை கண்டு...

"ஹி... ஹி... நீங்களா...?" டன் கணக்கில் அசடு வழிந்தவளை கண்டு வாய்விட்டு சிரித்தவன்,

"நானே தான்..." என்றவன், "என்ன ஷாப்பிங்கான்னு எல்லாம் நான் கேட்க மாட்டேன்... பார்த்தாலே தெரியுது ஷாப்பிங் தான்னு... வேணும்ன்னா லாரியை வர சொல்லவா..." அவள் கைகளில் இருந்த பைகளை அளவிட்டவாறு சிரியாமல் சொன்னவனிடம்,

"இது எல்லாம் கொஞ்சம் கம்மி தான்... இனி தான் மெயின் பிக்சரே இருக்கு..." என்று பதிலுக்குக் கிண்டல் அடித்துச் சிரித்தவளின் புன்னகையை அவன் ரசித்துத் தன் மனதுக்குள் சேமித்துக் கொண்டான்...

இன்று எப்படியாவது அவளிடம் தன் மனதை சொல்லி விட வேண்டும் என்று எண்ணினான்...

"யமுனா... உன் கூடத் தனியா பேசணும்... நீ ப்ரீயா இருந்தா..." அவன் இழுப்பதைக் கண்டு கேள்வியாய் புருவங்களை உயர்த்தியவள் சிறு யோசனைக்குப் பிறகு,

"சரி..." என்றவள் தோழியரிடம் விடைப்பெற்று அவனுடன் செல்ல ஆயத்தமானாள்...

"பார்த்தியா நான் சொல்லலை... ஆள் ஹேண்ட்சம்மா இருக்கான்... நம்ம யமுனா கவுந்துடுவாள்ன்னு..." என்று ஒரு தோழி கிண்டல் அடிக்க...

"போடி பிசாசே... எப்ப பாரு உனக்கு அதே எண்ணம் தான்..." அவள் முதுகில் ஓங்கி அடித்து விட்டு,

"இளா... நீங்களும் ஓடி வாங்க... இல்லைன்னா என்னை அடிக்கிறதுக்குப் பதிலா இவ உங்களை அடிச்சிடுவா..." என்று கத்தியபடி கடையை விட்டு யமுனா ஓட...

அவள் சொல்வது புரியவில்லை என்றாலும் அவளுடன் இணைந்து ஓடி கடையை விட்டு வெளியில் வந்தான் இளமாறன்...

அவனின் செய்கையைக் கண்டு வயிற்றைப் பிடித்துக் கொண்டு சிரித்தவள், "ஹா... ஹா... பயந்துட்டீங்களா...?" என்று மேலும் சிரிக்க...

"சரியான அறுந்த வாலு..." என்று அவளைப் பார்த்து சிரித்தபடி சொல்லியவன் தன்னை நிதானப்படுத்திக் கொண்டான்...

"அந்தக் காபி ஷாப்ல உட்கார்ந்து பேசுவோமா...?"

"உட்கார்ந்துட்டோ இல்லை நின்னுக்கிட்டோ எப்படி வேணும்ன்னாலும் பேசலாம்... ஆனா என் வாய் அரைக்கிறதுக்கு எதாவது லஞ்சம் கொடுத்தால் தான் இந்த யமுனா இந்த இடத்தை விட்டு அசைவாள்..."

"அம்மா தாயே... அந்தக் கடையையே வாங்கிக் கொடுக்கேன்... நீ வா..." என்றவன் அவளை அழைத்துக் கொண்டு சென்றான்...

யமுனா கேட்டது எல்லாத்தையும் வாங்கிக் கொடுத்தவன் அவள் உண்டு முடிக்கும் வரை அமைதியாகப் பார்த்துக் கொண்டு இருந்தான்...

"ம்... இப்ப சொல்லுங்க... என்ன விசயம்...?" வாயை டிஷ்யூ பேப்பரில் துடைத்தபடி கேட்டவள் அவனது முகத்தை ஆர்வத்துடன் பார்த்தாள் அவன் அவள் தலையில் இறக்க போகும் பொக்ரான் அணுகுண்டை பற்றி அறியாமல்...

"யமுனா..." எப்படிச் சொல்வது என்று தயங்கியவன், "நம்ம ரெண்டு பேரு வீட்டிலேயும் நம்ம கல்யாணத்தைப் பத்தி பேசிட்டு இருக்கிறது உனக்குத் தெரியுமா...?"

அவன் சொன்னது கேட்டு அதிர்ச்சியாய் அவனைப் பார்த்தவள் மனதுக்குள், 'அப்பா... முக்கியமான விசயத்தை இப்படிச் சொல்லாம மறைச்சிட்டீங்களே...' தந்தையை நினைத்துக் கோபமாய்ப் பல்லைக் கடித்தாள்...

"அவங்க பேசுறது இருக்கட்டும்... உன் மனசில் நீ என்ன நினைக்கிறேன்னு எனக்குத் தெரியணும்... என்னை உனக்குப் பிடிச்சு இருக்கா...? எனக்கு உன்னை..." 'பிடித்து இருக்கிறது' என்று அவன் சொல்லும் முன்,

"இளா... ப்ளீஸ் வேண்டாம்..." கையமர்த்தி அவனைத் தடுத்தவள்,

"உங்க கிட்ட அவனோட நம்பர் இருக்கா...?"

"யாரோடது...?" யமுனா பேசிய விதத்திலேயே அவளது மனம் அவனுக்கு லேசாகப் புரிய ஆரம்பித்தது... இதில் அவள் வேறு யாருடைய எண்ணையோ கேட்பது குறித்து அவன் குழம்பி போனான்...

"அதான் அந்த வளர்ந்து கெட்டவன் யுவராஜ் நம்பர் தான்..."

"இருக்கு..." அவன் சொன்னதும்,

"உங்க ஃபோனை கொடுங்க..." என்று அவள் கேட்க...

எதுக்கு என்று கேட்காமல் அவள் பக்கம் நீட்டினான்... அதை வாங்கியவள் யுவராஜின் எண்ணை அழுத்தினாள்... மறுபக்கம் எடுத்த யுவராஜ்,

"என்ன மச்சி... எப்படி இருக்க...?" என்று உற்சாகத்துடன் பேச...

வெகு நாட்கள் கழித்து அவனின் இந்த மாதிரியான உற்சாகக் குரலை கேட்டவளுக்குக் கண்கள் கலங்கியது...

"என்னடா பேச மாட்டேங்கிற... ஹலோ... ஹலோ..." என்று மறுபக்கம் அவன் கத்தினான்...

"நான் யமுனா பேசறேன்..."

இளமாறனின் அலைப்பேசியில் இருந்து யமுனா எதுக்குப் பேசுகிறாள் என்று யோசித்த யுவாவுக்கு ஒன்றுமே புரியவில்லை...

"நீ எதுக்கு அவன் ஃபோன்ல இருந்து பேசற...?" அவன் கேட்டதற்குப் பதில் சொல்லாமல்,

"நீ இப்போ உடனே இங்கே வரணும்..." என்ற யமுனா தாங்கள் இருக்கும் ஷாப்பிங் மாலின் பெயரை குறிப்பிட...

"நான் என்ன உன் வீட்டு நாய்க்குட்டியா... நீ கூப்பிட்ட உடனே வாலை ஆட்டிக்கிட்டு வர்றதுக்கு... முடியாது போடி..." என்று கோபமாய்க் கத்தியவன் அழைப்பை துண்டிக்கப் போக...

"நீ இன்னும் அரை மணி நேரத்துல இங்கே வரலை... அடுத்தச் செகண்ட் நான் உயிரை விட்டுருவேன்..." உறுதியாய் கூறியவள் அலைப்பேசியை அணைத்து இளமாறனிடம் கொடுத்தாள்...

யுவராஜிடம் உரிமையாய் பேசிய யமுனாவை ஆச்சிரியமாய்ப் பார்த்தான் இளமாறன்... அது என்ன மாதிரியான உரிமை என்பது அவனுக்கு லேசாகப் புரிய ஆரம்பித்தது... மனதிற்குள் சிறிது வருத்தமாக இருந்தது இந்த மாதிரி ஒரு கலகலப்பான பெண்ணை இழக்கிறோமே என்று... ஆனாலும் மனதை தேற்றிக் கொண்டான்...

முகம் இறுகி போய்க் கைகளைக் கட்டி கொண்டு அமர்ந்து இருந்த இந்த யமுனாவும் அவனுக்குப் புதிதே... விளையாட்டும் குறும்புமாய் இருக்கும் அவளுக்குள் இப்படி ஒரு இறுக்கம் இருக்கும் என்று அவன் நினைத்தும் பார்க்கவில்லை... அவனும் அமைதியாய் வேடிக்கை பார்த்துக் கொண்டு யுவராஜின் வருகைக்காகக் காத்திருந்தான்...

யமுனா கூறி இருந்த அரை மணி நேரத்திற்கு முன்பாகப் பதினைந்து நிமிடத்தில் அங்கு வந்து சேர்ந்தான் யுவா... பதறி அடித்துக் கொண்டு வந்தவன் இவர்களைக் கண்டதும் தன்னை நிதானப்படுத்திக் கொண்டு அந்தக் காபி ஷாப்பிற்குள் நுழைந்தான்...

"என்னவாம் இவளுக்கு...? எதுக்கு வர சொன்னா...?" இளாவிடம் கேட்டுக் கொண்டே அவன் பக்கம் வந்து அமர்ந்தான் யுவா...

"அங்கே என்ன கேள்வி... கூப்பிட்டது நான்..." சொல்லும் போதே அவளது குரலில் சந்தோசமும், கர்வமும் சேர்ந்து ஒலித்தது...

தனக்காக அவன் குறிப்பிட்ட நேரத்திற்கு முன் வந்தது அவளுக்கு அத்தனை மகிழ்ச்சியாக இருந்தது...

"எதுக்குக் கூப்பிட்ட...?" அவளைக் கண்டதும் யுவாவின் முகம் எரிச்சலை தத்து எடுத்தது...

"இவர் என்னம்மோ என் கிட்ட கேட்கிறார்... அதுக்கு உன்னோட சம்மதம் வேணும்..." என்று சொன்னவளை கண்டு கொள்ளாமல் யுவா இளாவிடம்,

"டேய் இந்த ரௌடிக்கிட்ட அப்படி என்னடா கேட்டு தொலைச்ச...?"

"அது... வந்து மச்சி..." இருவருக்கும் இடையில் உள்ள உறவு குறித்து லேசாகப் புரிந்த இளா அதை எப்படிச் சொல்வது என்று தடுமாறினான்...

"அதை நான் சொல்றேன்... உன் மச்சி என்னை விரும்பறாராம்... என்னைக் கல்யாணம் பண்ணிக்கலாமான்னு கேட்கிறார்... அதுக்கு உன்னோ பதில் என்ன...?" அவளது பார்வை அவனைத் துளைத்து எடுத்தது...

அதற்கு எல்லாம் அசந்தால் அவன் யுவராஜ் இல்லையே... அதுவும் இந்த விசயம் அவன் ஏற்கெனவே கேள்விப்பட்ட விசயம் ஆதலால் அவன் நிதானமாய் அவர்கள் இருவரையும் பார்த்தான்...

"ஓ... இது தான் விசயமா..." என்று தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டவன் இளா முன் இருந்த பழச்சாறை எடுத்து ஒரே மூச்சில் பருகியவன் இருக்கையில் சாய்ந்து அமர்ந்து கொண்டு யமுனாவை அமர்த்தலாய் பார்த்தான்...

"இதுக்கு நான் என்ன பதில் சொல்லணும்ன்னு நினைக்கிற... கேள்வி கேட்டவன் அவன்... பதில் சொல்ல வேண்டியது நீ... இடையில் நான் எதுக்கு...?" இரு புருவங்களையும் கேலியாய் உயர்த்தியவன்,

"இளா... எதுக்கும் ஒரு தடவைக்குக் கோடி தடவை யோசிச்சுக்கோ... உனக்குப் பெட்ரோமாஸ் லைட்டே தான் வேணுமா..." இளாவிடம் நக்கலாய் கேட்டு வேறு அவன் சிரித்தான்...

அதில் யமுனாவுக்கு பற்றிக் கொண்டு வந்தது... 'திமிர் பிடித்தவன் இப்போ கூட வாயை திறக்க மாட்டேங்கிறானே...' மனதுக்குள் அவள் குமையும் போதே அவளது மனதில் பயமும் சேர்ந்து எழுந்தது...

ஒருவேளை அவன் தன்னை முழுவதும் கைவிட்டு விட்டானோ என்று கலக்கமும் சூழ்ந்து கொண்டது... ஆனாலும் வெளியில் அதைக் காட்டி கொள்ளாதபடி யுவாவை வெறித்துப் பார்த்துக் கொண்டு அமர்ந்து இருந்தாள்...

"போதும் மச்சி... யமுனா எவ்வளவு சீரியசா பேசிக்கிட்டு இருக்கா... நீ ஜோக் அடிச்சிக்கிட்டு... உனக்கும் அவளுக்கும் இருக்கிற உறவு எனக்குப் புரியுது... ஆனா அதை விட உங்க ரெண்டு பேருக்குள்ள ஏதோ பிரச்சினை இருக்கு... நீங்க ரெண்டு பேரும் பேசி தீர்த்து ஒரு முடிவுக்கு வாங்க..." என்றவன் யமுனாவிடம்,

"ஆல் த பெஸ்ட்..." என்று வாழ்த்தியவன், "பையன் விலாங்குமீன் மாதிரி நழுவிட்டே இருப்பான்... விடாம கப்புன்னு பிடிச்சிடு... இல்ல வேறு எங்கேயாவது வசமா சிக்கிக்கப் போறான்..."

இள கூறியதை கேட்டு கலக்கத்துடன் யமுனா யுவாவை ஏறிட்டு பார்த்தாள்... 'இனியா அவன் சிக்க வேண்டும்... அதான் ஏற்கெனவே சிக்கிட்டு தானே இருக்கான்... அந்தச் சிக்கலை எப்படிப் பிரித்து இவனை என்னோடு அழைத்துச் செல்ல போகிறேன்னு எனக்குத் தெரியலையே...'

அவளது பார்வையை உணர்ந்தார் போன்று யுவாவின் பார்வையும் அவளை விட்டு அகலவில்லை...

அதற்குள் பேரர் வந்து பில்லை கொடுக்க அதை இளா வாங்கும் முன் வாங்கிய யமுனா எழுந்து யுவா அருகில் வந்து அவனது சட்டைப் பையில் கையை வைக்க,

"ஏய் ரௌடி கையை எடுடி... ஒரு ஆம்பள சட்டையில் தைரியமா கை வைக்கிறத பாரு..." என்று வேகமாய் அவளது கையைத் தட்டி விட...

அவளோ அவனது பேச்சை அலட்சியப்படுத்தியவள், "இப்போ சட்டைப் பையில் தான் கையை வச்சேன்... அடுத்து..." அவனது பேண்ட் பையைப் பார்த்தவள், "நீயா கொடுக்கிறியா இல்லை நானே எடுத்துக்கவா...?"

அவளின் குணம் அறிந்தவன் அல்லவா அவன்...

"தண்ட செலவு... இதுக்குத் தான் கூப்பிட்டன்னு தெரிஞ்சு இருந்தா இந்தப் பக்கமே தலை வச்சு படுத்து இருக்க மாட்டேன்..." என்று சலித்தபடி சொன்னாலும் தனது பேண்ட் பாக்கெட்டில் இருந்து பர்சை எடுத்து அவளிடம் நீட்ட அவன் தவறவில்லை...

அதில் பெருமித புன்னகையுடன் பில்லுக்கான பணத்தை ஆயிரத்து ஐநூறு ரூபாயை எடுத்துப் பேரரிடம் கொடுத்து அவனை அனுப்பியவளை பார்த்து,

"தவுசண்ட் பைவ் ஹண்ரட்க்கு அப்படி என்னடி தின்னு தொலைச்ச..." டேபிளின் மீது இருந்த தட்டுக்களைப் பார்த்தான்...

"இப்படித் தின்னா உடம்பு வெய்ட் போடாம என்ன பண்ணும்..." பூசினார் போன்ற அவளது தேகத்தைப் பார்த்து கிண்டலடித்தவனை முறைத்தவள்,

"இதுக்கான பனிஷ்மென்ட்டை நீ அனுபவிக்காம போக மாட்டே மவனே..." என்று முணுமுணுத்தவள் அவனுடைய கிரெடிட் கார்ட்டை அவனுக்குத் தெரியாமல் உருவி கொண்டாள்...

இருவரது பேச்சுக்களையும் அதிலும் யமுனாவின் உரிமையான செய்கையும் பார்த்த இளா இருவருக்கும் இடையில் உள்ள அந்யோன்யத்தை, நெருக்கத்தை உணர்ந்தவனாய்,

"ஓகே அப்போ நான் கிளம்பறேன்..." என்றபடி அவன் கிளம்ப...

"இருடா நானும் வர்றேன்... இந்த ரௌடி கிட்ட என்னைக் கோர்த்து விட்டுட்டு நீ மட்டும் எஸ்கேப்பாகப் பார்க்கிறியா... கொஞ்சமும் நல்லா இல்லைடா மச்சி..." யுவாவும் அவனுடன் கிளம்ப...

அவர்களோடு எழுந்த யமுனாவும் சமத்தாய் காபி ஷாப்பை விட்டு வெளியில் வந்தவள் அவர்கள் சிறிது தூரம் சென்றதும்,

"இளா..." என்று கத்தி அழைக்க... இளாவுடன் யுவாவும் திரும்பி பார்த்தான்...

"உங்க மச்சி கிட்ட கேளுங்க அவரோட கிரெடிட் கார்ட் வேணுமா இல்லையான்னு..." யுவாவின் கார்ட்டை தூக்கி காண்பித்து ஆட்ட...

யுவா அவசரமாய்த் தனது பர்சை எடுத்து ஆராய்ந்தவன் அதில் கார்டு இல்லாமல் இருப்பதை உணர்ந்து, "ராட்சசி இதை எப்போ எடுத்தா..." என்று புலம்பியபடி அவளை நோக்கி செல்ல,

"மச்சி ஆல் த பெஸ்ட்டுடா... என்ஜாய்... நான் வர்றேன்..." என்று சொல்லிய இளா அங்கிருந்து செல்ல...

"துரோகி என்னை மாட்ட வச்சிட்டு போகுது பாரு..." என்று அவனை வைதபடி யுவா யமுனாவை நோக்கி சென்றான்...

"ஏய் மரியாதையாய் கொடுடி..." என்று அவன் கோபமாய்க் கேட்கும் போதே...

"பிசாத்துத் தவுசண்ட் பைவ் ஹண்ட்ரட்டுக்கு என்னை இன்சல்ட் பண்ணி பேசினல்ல... இன்னைக்கு இருக்கு

உனக்கு..." என்று அவனைப் பார்த்து கூறியவள் அருகில் இருந்த கடைக்குள் புகுந்து கொண்டாள்...

"போச்சுடா... யுவா இன்னைக்கு நீ செத்த..." என்று புலம்பியபடி அவனும் பின்னே சென்றான்...

அவள் தனது ஆடை தேர்வில் மூழ்கி இருக்க யுவா பொறுமை இழந்தவனாய் அங்கிருந்த நாற்காலியில் அமர்ந்தவன் தனது அலைப்பேசியை நோண்ட ஆரம்பித்தான்...

அவன் இணையத்தளத்தில் ஒரு தளம் விடாமல் மேய்ந்துவிட்டு, முகநூலில் தனது நண்பர்களுடன் அரட்டை அடித்துவிட்டு நிமிர்ந்த போது சுமார் ஒரு மணி நேரமாகி இருந்தது...

இன்னமும் கடையைப் புரட்டி கொண்டு இருந்த யமுனாவின் அருகில் வந்தவன், "இப்ப நீ என் கார்ட்டை கொடுக்கப் போறியா இல்லையா..." என்று பல்லை கடிக்க...

அவனைப் பொருட்படுத்தாமல் கடையை விட்டு அவள் வெளியில் வர, "ஒண்ணுமே வாங்கலையா... இதுக்குத் தான் ஒன் அவர்ரா என் நேரத்தை வேஸ்ட் பண்ணினியா...? உன்னை..." அவன் முடிக்கும் முன்,

"நீ எப்பவுமே வேஸ்ட் தான்... இதில் நேரத்தை பத்தி எல்லாம் நீ பேசுற... இது உனக்கே கொஞ்சம் ஓவரா இல்லையா..." என்று நக்கல் அடித்தவளை முறைத்தவனின் கையைப் பிடித்து அவனது கிரெடிட் கார்ட்டை வைத்தவள்,

"அது அந்தப் பயம் இருக்கணும்... யமுனான்னா சும்மாவா..." என்று தனது டீசர்ட்டில் இல்லாத காலரை தூக்கி விட்டு கொண்டாள்...

அவளது பேச்சு அவனைப் பாதிக்கவில்லை போலும்...

"ஏன் வாங்கலை...?" அவனின் குரலில் இருந்தது என்ன... வருத்தமா இல்லை ஆதங்கமா இல்லை கோபமா

எதுவென்று சொல்ல முடியாத உணர்வுகள் அதில் கலந்து இருந்தது...

"வேணாம்..." சொல்லும் போது அவளது முகம் இறுகி இருந்தது...

"அதான் ஏன்...?" என்றவனை மௌனமாய் ஏறிட்டு பார்த்தவளின் பார்வை உணர்த்திய செய்தியை புரிந்து கொண்டவன் தலை தானாகத் தாழ்ந்தது...

"இந்தா நீ கொடுத்த பணம்..." அவன் கொடுத்த பணத்தையும் அவள் அவன் கையில் திணிக்க...

அதில் அவனுக்குக் கோபம் வந்தது... "அப்புறம் எதுக்குடி அவன் முன்னாடி அப்படி ஒரு சீன் போட்ட...?"

"ஏன் அப்படி நடந்துக்கிட்டேன்னு உனக்குத் தெரியாது..." அவனை உற்று பார்த்தவள், "உனக்கும் எனக்கும் உள்ள உறவை நீ சொல்லணும்ன்னு எதிர்பார்த்தேன்... ஆனா நீ சொல்லலை... அதான் சிம்பாலிக்கா சொன்னேன்... உன்னை மாதிரி இல்லை அவர் புத்திசாலி சட்டுன்னு புரிஞ்சிக்கிட்டார்..."

"கொழுப்புடி..." என்று பல்லை கடித்தவனை அலட்சியமாய்ப் பார்த்தவள் அங்கிருந்து நகர அவனும் பின் தொடர்ந்தான்...

வெளியில் வந்தவள் வீடு செல்வதற்காக ஆட்டோவை தேட, "எங்கே உன் நாய்க்குட்டியை காணோம்...?" அவன் ஸ்கூட்டியை தான் கேட்கிறான் என்பது புரிந்தாலும் புரியாதவள் போல்,

"இங்கே தானே நிக்குது..."

"எங்கே...?" அவன் சுற்றும் முற்றும் பார்க்க...

"நீ தான்டா அது முட்டாள்..." அவள் கூறிய விதத்தில் அவனது ஆத்திரம் அதிகரித்தது...

"உன்னை..." என்றவன் அவளை நோக்கி கோபமாய் வர...

"நீ தானே ஃபோனில் கேட்ட நீ என்னோட நாய்க்குட்டியான்னு... ஆனா அடுத்த நிமிசம் நீ என்னைப் பார்க்க வந்தல்ல... அப்போ என்னுடைய நாய்க்குட்டி யாருன்னு நீயே சொல்லு பார்க்கலாம்..." எகத்தாளமாய் அவள் கேட்க...

தன்னைக் குறித்து அவனுக்குக் கோபம் வந்தது... அவள் தான் கூப்பிட்டால் என்றால் தனக்கு எங்கே போனது அறிவு என்று தன்னைத் தானே திட்டி கொண்டவன் அவளை முறைக்கவும் தவறவில்லை...

"எக்கேடோ கெட்டு போ..." என்றவன் தனது இருசக்கர வாகனத்தைக் கிளப்பிக் கொண்டு அவளைத் திரும்பியும் பார்க்காமல் சென்றான்...

அவன் விரைவாய் தன்னைக் காண வந்ததன் காரணத்தைப் பார்த்துக் கொண்டு இருந்தவள் கண்ணில் அவளையும் அறியாமல் ஒருவித ஏக்கம் எட்டி பார்த்தது...

யமுனாவை நிம்மதியாய் இருக்க விடாமல் அவளது தந்தை இளமாறனை பற்றி அவளிடம் சொல்லி அவளின் அபிப்ராயத்தைக் கேட்ட அதே நேரத்தில் அங்கே யுவாவின் வீட்டில் ஸ்வேதாவுக்கும் அவனுக்குமான திருமணப் பேச்சை ஆரம்பித்து இருந்தனர்...

இந்த இரு செய்தியையும் கேட்டு யமுனா தான் அதிகம் தவித்துப் போனாள்... நேரே இளமாறனை அலைப்பேசியில் அழைத்துப் பேச அவனோ,

"உங்க ரெண்டு பேரு விசயம் தெரியறதுக்கு முன்னாடி நம்ம கல்யாண விசயம் பேச ஆரம்பிச்சுட்டாங்க... அதனால இப்போ நான் என்ன சொன்னாலும் அவங்க கேட்கிற நிலைமையில் இல்லை..." என்று முடித்துக் கொண்டான்...

யுவாவிடம் இருந்து எந்தவித சாதகமான பதிலும் வரவில்லை... ஸ்வேதாவுடனான திருமணத்தில் அவன் விருப்பமாய் இருப்பது போல் இருந்தது அவனது நடத்தை....

அதற்கு மேல் யமுனாவால் தாங்கி கொள்ள முடியவில்லை... யுவாவின் சட்டையைப் பிடித்துச் சண்டை போட வேண்டும் என்ற ஆத்திரம் எழ கொஞ்சமும் யோசிக்காமல் அடுத்த நொடி அவனது வீட்டை நோக்கி கிளம்பி விட்டாள்...

அவள் வந்த நல்ல நேரமோ என்னம்மோ வீட்டின் ஆண்கள் கடைக்கும், பெண்கள் கோவிலுக்கும் சென்று இருந்தனர்... வீட்டில் பாட்டியும் பேரனும் மட்டுமே தனித்து இருந்தனர்...

ஆவேசமாய் வீட்டிற்குள் நிழைந்தவளை வரவேற்பறையிலேயே தடுத்து நிறுத்தினார் பாக்கியம்...

"யாரை பார்க்க வந்திருக்க...?" அலட்சியமாய் வினவியவரை அதை விட அலட்சியமாய்ப் பார்த்தவள் யுவாவின் அறைக்குச் செல்வதற்காக மாடிப்படியில் கால் வைக்க...

"கேட்கிறேன்ல்ல பதில் சொல்லு ராங்கி... பெரிய மனுசிங்கிற பயம் வேண்டாம்..." என்று அவள் முன்னே வந்து தடுத்த பாக்கியத்தை ஏற்கெனவே எரிச்சலில் இருந்தவள் இன்னமும் ஆங்காரம் கூடக் கொலைவெறியுடன் நோக்கினாள்...

"ஏய் கிழவி பேசாம போயிரு... இல்ல எனக்கு வர்ற ஆத்திரத்துக்கு..."

"என்னடி பண்ணுவ...?" தெனாவெட்டாய் நின்றவரை பார்த்தவளுக்கு அப்போது தான் புரிந்தது பேரனுக்கு எங்கே இருந்து இந்த அசட்டுத்தனம் வந்து சேர்ந்தது என்று...

"என்ன பண்ணுவேன்னா..." என்றவள் பாக்கியத்தின் கழுத்தின் குறுக்கே தன் கையைக் கொண்டு போனவள்,

"கொலை பண்ணிருவேன்... என் அக்கா மாதிரி நான் சாப்ட் கிடையாது... புரிஞ்சதா..."

"ஆங்..." அவளின் அடவாடியில் வாயை பிளந்து அவர் நிற்க...

"அப்படித்தான்..." என்று திறந்து இருந்த அவரின் வாயை மூடிவிட்டு அவரைப் பார்த்து கண்ணடித்தபடி படியில் வேகமாய் ஏறி சென்றாள்...

மேலே சென்று திரும்பி பார்த்தவள், "நானா வர்ற வரைக்கும் யாராவது வர்றாங்களான்னு பார்த்துட்டு இங்கேயே எங்களுக்குக் காவல் காத்துட்டு இரு... அதை விட்டுட்டு உன் பேரன் ரூமுக்கு வந்த... சேதாரம் உனக்கு இல்லை... உன் பேரனுக்குத் தான்... வசதி எப்படி...?" என்றவளின் அதிரடி பேச்சில் அவர் அதிர்ந்து போய் நின்றுவிட்டார்...

அவரின் அதிர்ந்த முகத்தைக் கண்டு மனதுக்குள் சிரித்தவள் அவனது அறைக்குச் சென்றாள்...

கதவை தட்டியதும் அவனது அனுமதி கிடைக்க வேகமாய் உள்ளே நுழைந்தவள் கதவை சாத்தி தாளிட்டாள்...

"ஏய் நீ எங்கேடி இங்கே...?" என்று கத்தியவன் அவள் கதவை தாளிட்டதைக் கண்டு,

"சொந்த வீட்டுக்குள்ளேயே என் கற்புக்கு கியாரண்ட்டியே இல்லாம போச்சு... ரௌடி கதவை திறடி... உன்னைக் கண்டாலே எனக்குத் தான் பயமா இருக்கு..." போலியாய் அலறியவனைப் பார்த்துக் கொண்டே அவனை நோக்கி வந்தவள்,

"இன்னும் என்னை என்ன செய்றதா உத்தேசம்...?" நிதானமாய்க் கேட்டவளின் கேள்வியில் அவன் தனது விளையாட்டுத்தனத்தைக் கைவிட்டவனாய் தன் ஆறடிக்கும் நிமிர்ந்து நின்றவன் கைகளைக் கட்டி கொண்டு அவளை அழுத்தமாய்ப் பார்த்தான்...

"ஏண்டா என்னை உயிரோட கொல்ற...?"

"நானா... உன்னையா... குட் ஜோக்..." என்று அலட்சியமாய்த் தோளை குலுக்கினான் அவன்...

அவனது அலட்சியத்தை வெறித்துப் பார்த்தவள், "நீ ஹீரோவா இல்லை வில்லனாடா...?"

அவளது கேள்வியில் அவள் அருகே வந்தவன் அவளது முகம் நோக்கி குனிந்து அவளது கண்களோடு தன் கண்களைக் கலக்கவிட்டவன் மெதுவே சொன்னான்...

"ஆன்ட்டி ஹீரோ (anti-hero)..."

"ஓ பெண்ணே நான் என்ன சொல்ல
காதல் தான் மண்ணில் தள்ள
உயிரோடு என்னைக் கொல்லாதே
உன் கண்கள் தான் என்னைக் கிள்ள
கொலைக்காரி மெல்ல மெல்ல
குழி தோண்டி என்னைத் தள்ளாதே"

மோதல் தொடரும்...

## களம் : 8

யுவராஜ் கூறிய வார்த்தையைக் கேட்ட உடன் வேதனை தாங்காமல் கண்களை மூடி கொண்டாள் யமுனா... என்று அவன் அவள் வாழ்வில் நாயகனாக நடந்து இருக்கிறான்... இன்று நடந்து கொள்வதற்கு... அவளைப் பொருத்தவரையில் அவன் என்றுமே வில்லன் தான்... ஆனால் அவள் மனதை கொள்ளை கொண்ட வில்லன் அவன்... அவள் உள்ளம் கவர் கள்வன் அவன்...

அவளது வெட்கம் கெட்ட மனம் அவன் குணம் தெரிந்தும் மீண்டும் மீண்டும் அவனையே சரண் அடைகிறதே... அதனால் தான் அவனுக்கு இந்த இளக்காரம் அவள் மீது... வேறு பெண்ணாக இருந்து இருந்தால் அவனைப் போல் ஒருவனை வேண்டாம் என்று தூக்கி எறிந்து விட்டு போய் இருப்பாள்...

அவ்வளவு ஏன் அவளும் இந்த இடைப்பட்ட காலத்தில் அது போல் தான் அவனிடம் இருந்து ஒதுங்கி இருந்தாள்... ஆனால் அதை இப்போது செய்ய முடியாமல் அவளது பேதை நெஞ்சம் தடுமாறுகிறதே... அதுவும் அவனுக்கு விபத்து நடந்ததைக் கேள்வியுற்றதில் இருந்து அவள் அவளாக இல்லையே... அவள் அவனாக அல்லவா மாறி இருக்கிறாள்...

அவனின் உயிருக்கு ஆபத்து என்று அறிந்ததும் அவன் மீதான அவளது பழைய கோபம் எல்லாம் மறைந்து அவன் மட்டுமே அவளது உலகமாகி போனானே... அதை அவன் அறிவானா...? அவன் உயிர் நீத்தால் கூடவே உயிர் போக்க சொல்லி அவளது உயிர் துடிக்கிறதே... அதையும் அவன் உணர்வானா...?

எந்தச் சூழ்நிலையிலும் எந்தக் காலத்திலும் அவனை இழப்பது என்பது அவளால் இயலாத காரியம்... தன்னை, தன் காதலை அவன் உணர மறுக்கிறானே என்று அவள் உள்ளுக்குள் மருகி போனாள்...

முயன்று தன்னைத் தேற்றி கொண்டவள் தன் உணர்வுகளைக் கட்டுப்படுத்திக் கொண்டு கண்களைத் திறந்து அவனின் கண்களை நேருக்கு நேராய் சந்தித்தவள், "ரொம்ப நல்ல முன்னேற்றம்... வில்லன்ல இருந்து ஆன்ட்டி ஹீரோவுக்கு..." கேலி நிரம்பிய குரலில் சொன்னவள் அவனை இளக்காரமாய்ப் பார்த்தாள்...

அவளின் கேலியில் இளக்காரத்தில் அவனுக்குப் புசுபுசுவெனக் கோபம் ஏறியது...

“யாருடி வில்லன்...? நானா...? நீ தான்டி எனக்கு வில்லி... அன்னைக்கு என் காதலுக்கு வில்லியா வந்து நின்ன... இப்ப என் கல்யாணத்துக்கு வில்லியா வந்து நிற்கிற... எனக்கும் ஸ்வேதாவுக்கும் இடையில் வில்லியா நின்னது, நிற்கிறது எல்லாம் நீ தான்... நான் இல்லை...” படபடவெனப் பொரிந்தவன்,

“இத்தனை வருசம் இல்லாத அக்கறை இப்போ என்ன புதுசா வந்து இருக்கு...? இவ்வளவு நாள் என்னைத் தேடி வராதவ இப்போ எதுக்கு என்னைத் தேடி வந்து கேள்வி கேட்கிற...? நான் என்ன உன்னை மாதிரி ஊர் சொல்லாம அட்ரெஸ் சொல்லாமலா உன் கூடப் பழகினேன்... என்னோட அட்ரெஸ் உனக்கு நல்லா தெரியும்... அப்போ எல்லாம் வராதவ இப்போ வந்து குய்யோ முய்யோன்னு கத்துன்னா நான் என்ன பயந்துருவேன்னு நினைச்சியா...? உன்னால என்ன செய்ய முடியுமோ செஞ்சுக்கோ... நான் என் ஸ்டான்ட்ல இருந்து இறங்கி வர மாட்டேன்... அதே மாதிரி உனக்கும் எனக்கும் உள்ள உறவை பத்தி யார் கிட்டேயும் வாயை திறக்க மாட்டேன்...”

இத்தனை வருடங்களாய் அவள் தன்னைத் தேடி வாராததால் அவள் மேல், அவள் காதல் மேல் அவனுக்கு ஏற்பட்ட நம்பிக்கையின்மை, கோபம், ஆதங்கம் எல்லாவற்றையும் அவளிடம் கொட்டி தீர்த்து விட்டான்...

அவனது பேச்சில் அவள் அதிர்ந்து போய் நின்று விட்டாள்...

அவளது பேச்சற்ற நிலையைக் கண்டவனுக்கு இன்னமும் ஆத்திரம் ஏறிக் கொண்டே சென்றது…

“இப்போ உனக்கு என்ன தான் பிரச்சினை… என்னைக்கு இருந்தாலும் இந்த மாதிரி ஒரு சூழ்நிலை வரும்ன்னு உனக்கு நல்லாவே தெரியும்… ஔவையார் மாதிரி கல்யாணம் பண்ணிக்காம இருக்க முடியாதும்ன்னும் உனக்குத் தெரியும்… இப்போ என்னைப் பார்த்ததால் என் கிட்ட வந்து கேள்வி கேட்கிற… ஒருவேளை நீயும், நானும் சந்திக்காமலே இருந்திருந்தா என்ன பண்ணி இருப்ப…? என்ன முடிவு எடுத்து இருப்ப…? அதே முடிவை இப்ப எடு… உன் ப்ராப்ளம் சால்வ்ட்… இதுக்கு எதுக்கு என் கிட்ட வந்து கத்துற…?”

அவன் சொல்வதும் சரி தானே… அவனைப் பார்க்காமல் இருந்து இருந்தால் தான் தானே தைரியமாக இதற்கு ஒரு முடிவு எடுத்து இருக்க வேண்டும்… அதையே இப்பவும் செய்ய வேண்டியது தானே… அதைச் செய்ய அவள் என்றுமே யோசித்தது இல்லை… ஆனால் அவளுக்கு வேண்டியது அது இல்லையே… அவன் அல்லவா…

“அப்போ நீ ஸ்வேதாவை கல்யாணம் பண்ணிக்கப் போறது உறுதி…” என்னத்தான் உணர்வில்லாத குரலில் அவள் கூறிய போதும் அவளது கண்கள் காட்டி கொடுத்தது அவளது மனவலியை…

அதைக் கண்ட அவனது மனமும் சுணங்கியது… “உனக்கு அது தேவை இல்லாத விசயம்… உன் வேலை எதுவோ அதை மட்டும் பாரு… தேவை இல்லாம என் விசயத்தில் மூக்கை நுழைக்காதே…”

“உன்னோட கல்யாணம் எனக்குத் தேவை இல்லாத விசயமா…?” இதை அவள் கேட்கும் போது இதுவரை அவனிடம் இருந்த வீராப்பு, வீம்பு எல்லாம் மெல்ல தளர்ந்தது…

எங்கே சுற்றினாலும் கடைசியில் தன்னைக் கேள்வியால் மடக்கும் அவளை என்ன செய்வது என்று தெரியாமல்

மீண்டும் வார்த்தையால் அவளைக் குதறினான்...

“நீ தானே சொன்ன... அந்த இளா என்னை மாதிரி தண்டச்சோறு இல்லை... ஐடில லட்சக்கணக்கில் சம்பாதிக்கிறான்னு... அப்புறம் என்ன அவனைக் கட்டிக்கக் கசக்குது உனக்கு... போ போய் அவனைக் கல்யாணம் பண்ணிக்கிட்டு நிம்மதியா வாழ்ற வழியைப் பாரு... அதை விட்டு என் நிம்மதியை குழி தோண்டி பறிக்காதே...”

அவனது வார்த்தைகள் அவளது நெஞ்சை வாள் கொண்டு அறுத்தது...

“ஓ... உன் நிம்மதி அந்த ஸ்வேதா கிட்ட தான் இருக்கு இல்ல...”

“இருக்கு இல்ல... இருக்கு... போதுமா... இப்ப சந்தோசமா... போ... முதல்ல என் ரூமை விட்டு வெளியில் போடி...”

சிறிதும் தயவு தாட்சண்யம் பாராமல் அறைக்கதவை நோக்கி கையைக் காட்டியவனைக் கண்டு இப்போது அவள் அதிரவில்லை...

ஒருவித தீர்மானத்துடன் அவன் அருகில் நெருங்கி வந்தவள் அவனது சட்டையைப் பிடித்து இழுத்து,

“நீயே சொன்னாலும் உன் வாழ்க்கையை விட்டு இல்லை உன் ரூமை விட்டு கூட என்னை நீ துரத்த முடியாது... என்ன சொன்ன நான் வில்லியா உனக்கு... இப்ப சொல்றேன் நல்லா கேட்டுக்கோ... ஆமாம்டா நான் உனக்கு வில்லி தான்... அவளை எப்படி நீ கல்யாணம் பண்ணிக்கிறேன்னு நான் பார்க்கிறேன்... உன்னைச் சும்மா விட மாட்டேன்டா... இவ்வளவு வருசம் வாராததால என்னை ரொம்ப ஈஸியா கழட்டி விட்டுரலாம்ன்னு நினைச்சியா...? அவ்வளவு லேசுல நான் உன்னை விட்டு போக மாட்டேன்... இப்போ என்னை உன் ரூமை விட்டுப் போகச் சொன்னல்ல... இதே ரூமுக்கு உரிமையோட வர்றேன் உன் மனைவியா... வந்து கவனிச்சுக்கிறேன்டா உன்னை... இப்போ உன்னோட டர்ன் நீ பேசு... இன்னமும் பேசு... ஆனா நீ பேசியதுக்கு,

செஞ்சதுக்கு எல்லாம் உனக்கு வட்டியும் முதலுமாய்த் தண்டனை இருக்கு…”

ஆக்ரோஷமாய்க் கத்தியவள் அடுத்த நொடி அவனின் பதிலை எதிர்பாராமல் அவனது அறையை விட்டு வெளியேறி விட்டாள்.

அவள் என்னமோ சென்று விட்டாள் தான்… ஆனால் அவளது வாசம் அவனை விட்டு செல்லவில்லை… இழுத்து சுவாசித்து அவளது வாசத்தைத் தன்னுள் சுகமாய் நிரப்பிக் கொண்டான் அவன்…

எத்தனை இரவு அவனது தூக்கத்தை இழக்க செய்து இருக்கிறது இந்த வாசம்… எத்தனை இரவு அவனது ரணத்தைக் கிளறி அவனை வேதனையில் ஆழ்த்தி இருக்கிறது… எத்தனை இரவு அவனது தாபத்தைத் தூண்டி அவள் வேண்டும் என்று அவனைத் தவிக்கச் செய்து இருக்கிறது…

அவளது வார்த்தைகள் அவனது வேதனைக்கு மயிலிறகால் மருந்திடுவது போல் அத்தனை இதமாக இருந்தது…

அவன் இப்போதும் தன்னை மட்டுமே யோசித்தான்… மறந்தும் அவளைப் பற்றி அவளது மனதை பற்றி யோசிக்கவில்லை… அப்போது அவன் அவளுக்கு இழைத்த துரோகத்தில் அந்தப் பிஞ்சு மனம் என்ன பாடுப்பட்டு இருக்கும் என்று அவன் ஒரு போதும் நினைக்கவே இல்லை…

அன்றும் சரி இன்றும் சரி அவள் தான் காதலுக்காகப் போராடி கொண்டு இருக்கிறாள்… ஆனால் அவர்களது காதலுக்காக அவன் சிறு துரும்பை கூடக் கிள்ளி போடவில்லை… அது தேவை என்றும் அவன் நினைக்கவில்லை… ஆண் என்கிற தன்னகங்காரம் அதற்கு இடமும் அளிக்கவில்லை…

ஏனோ மனம் இலவம்பஞ்சு போல் லேசாக அறையை விட்டு வெளியில் வந்தவன் துள்ளல் நடையுடன் படிகளில் இறங்கினான்…

வரவேற்பறையில் அமர்ந்து தனது அன்னையுடன் பேசி கொண்டு இருந்த யமுனாவை கண்டவன் யோசனையுடன் அவளைப் பார்த்துக் கொண்டே தனது பாட்டியின் அருகில் வந்து அமர்ந்தான்…

“ராசா… அந்த ராங்கி உன்னை எதுவும் பண்ணிடலையே… என்னைப் பார்த்து என்ன ஆட்டம் ஆடினா தெரியுமா…? இப்போ உங்க அம்மாவை கண்டதும் எப்படிப் பம்மிக்கிட்டு உட்கார்ந்து இருக்கா பாரு… ஆமா ராசா அவ எதுக்கு உன்னைய தேடிட்டு வந்தா…?” பேரனின் காதில் ரகசியமாய்க் கேட்டார் பாக்கியம்…

‘இவ கிழவியையும் விட்டு வைக்கலையா…?’ நினைத்தவனுக்குச் சிரிப்பு வந்தது…

உதட்டில் உறைந்த புன்னகையுடன் யமுனாவை பார்த்துக் கொண்டே பாட்டியிடம் மெதுவே, “அவளை நான் கல்யாணம் பண்ணனுமாம்… கால்ல விழுந்து கெஞ்சி கேட்கிறா பாட்டி…”

“என்னது அவளை நீ கல்யாணம் பண்றதா…? முடியவே முடியாது ராசா… என் உடம்புல உசிர் இருக்கிற வரை இது நடக்க விட மாட்டேன்…” பாக்கியம் திட்டவட்டமாகத் தன் மறுப்பைத் தெரிவித்தார்…

இந்த அடங்காப் பிடாரி தனது பேரனை திருமணம் செய்து கொண்டால் அவரை அவன் பக்கம் விடவே மாட்டாளே…

“நீ எதுக்குப் பியூட்டி கவலைப்படுற… நானே முடியாதுன்னு சொல்லிட்டேன்…” என்றவன் பார்வை அலட்சியத்துடன் யமுனாவை பார்த்தது…

அவனது சிரிப்பும், அலட்சியமும் அவளுள் பற்றி எரிந்த நெருப்பிற்கு மேலும் எண்ணெய் வார்த்தது போலிருந்தது… அவனை முறைத்துக் கொண்டே அவனது அன்னையுடனும், தனது சகோதரியிடமும் பேசி கொண்டு இருந்தவள் அதற்கு மேல் அங்கு இருக்க முடியாமல் எழுந்து விட்டாள்…

“அத்தே நான் வர்றேன்... அக்கா கிளம்பறேன்...” என்று விடைப்பெற்றவள் அவர்களின் பதிலுக்குக் கூடக் காத்திராமல் வெளியில் வந்தாள்...

வெளிக்காற்றைச் சுவாசித்த பின்னே அவள் சற்று நிதானம் அடைந்தாள்... தனது ஸ்கூட்டியை நோக்கி சென்றவள் அதில் ஏறியமர்ந்து கிளம்பும் போது அவள் முன் வந்து நின்றான் யுவா...

“இன்னமும் உனக்கு உரிமை இருக்குன்னு நினைக்கிற...?” அவனது பார்வை அவளின் மேனியை மேய்ந்து ஆராய்ந்தது...

அதில் அவளது தேகம் சிவந்தது... அது வெட்கத்தினாலா அல்லது கோபத்தினாலா எதுவென்று தெரியவில்லை...

“எந்தளவுக்கு உரிமை இருக்குன்னு நிரூபிச்சிட்டு வந்து உன் கிட்ட பேசிக்கிறேன்... இப்போ என் வழியை விடு...” என்றவள் அவனைச் சுற்றிக் கொண்டு சென்றாள்...

போகும் அவளைப் பார்த்து கொண்டிருந்தவன் மனதில் சிறு ஏமாற்றம் படிந்தது... ஒருவேளை அவன் தேடியது அவன் கண்ணில் படாததாலோ...?

சிறிது தூரம் சென்றவள் அவனைத் திரும்பி பார்த்து நாக்கை துருத்தி அழகு காண்பித்து விட்டு செல்ல... அதில் அவனது புன்னகை விரிந்தது...

‘அடங்கவே மாட்டியாடி நீ...’ என்று நினைத்தவன் மனதில் அடுத்து அவள் என்ன செய்யக் காத்திருக்கிறாள் என்ற எதிர்பார்ப்பு எழுந்து அவனை நிலை கொள்ளாமல் செய்தது...

எதுவாக இருந்தாலும் அவள் அவனைத் தேடி வந்து சேர வேண்டும்... அதற்காக அவன் எதையும் தாங்கிக் கொள்ளத் தயாராக இருந்தான்... அவளே அவனை நாடி வர வேண்டும் அது ஒன்றே அவனது விருப்பமாக இருந்தது...

“யுவா... யுவா...” வீட்டிற்குள் நுழையும் போதே கத்தி கொண்டே வந்தார் சக்ரபாணி... அவருடன் அவரது மற்ற இரு மகன்களும் வந்திருந்தனர்...

“எதுக்கு இப்படிக் கத்துறீங்க...? இங்கே தான் இருக்கேன் சொல்லுங்க...?” என்றபடி வந்த யுவா அவர் முன் வந்து நின்றான்...

“உனக்கும் ஸ்வேதாவுக்கும் நிச்சயம் பண்ணனுமாம்... அவள் வீட்டில் இருந்து பேசினாங்க... நாளைக்கே நிச்சயம் பண்ணிடலாமா?”

திடுமென அவர் அப்படிக் கேட்டதும் அவன் கொஞ்சம் தடுமாறிப் போனான்...

“இப்போ எதுக்கு அவசரம்...? பிறகு பார்க்கலாம்ப்பா...” என்று அவன் மழுப்ப...

“எப்போ...?” அவனைக் கூர்மையாய் அளவிட்ட தந்தையின் பார்வையை எதிர் கொள்ள அவனால் முடியவில்லை...

“எனக்கு எப்போ கல்யாணம் பண்ணிக்கணும்ன்னு தோணுதோ அப்போ பண்ணிக்குவேன்... இப்போ என்னை ப்ரீயா விடுங்க...”

“அது தான் எப்போன்னு கேட்கிறேன்...?” அவர் விடாப்பிடியாய் கேட்க...

“இப்ப எனக்கு இஷ்டம் இல்லை...” என்றவனை அவர் மேலும் வற்புறுத்தவில்லை... மாறாக அவரது பார்வை அவனைத் துளைத்து எடுத்தது... ஆனால் அவன் அதைக் கண்டு கொள்ளாமல் சென்றுவிட்டான்...

மறுநாள் காலையில் எழுந்த யமுனா குளித்து முடித்து மெல்லிய சரிகையிட்ட பட்டுப்புடவை அணிந்தவள் கண்ணாடியை பார்த்துத் தன்னை அழகாய் அலங்கரித்துக் கொண்டவள் தனது அறையை விட்டு வெளியில் வந்தாள்...

நேரே தனது பெற்றோரிடம் வந்தவள், "அப்பா இளாவை நான் கல்யாணம் பண்ண சம்மதிக்கும் முன்னாடி கனி

வீட்டுக்கு போய்ட்டு வந்திடலாம்ப்பா..."

"கனி வீட்டுக்கு போறதுக்கும் நீ சம்மதம் சொல்றதுக்கும் என்ன சம்பந்தம் இருக்கு யமுனா..." புரியாமல் கேட்ட அன்னையைப் பார்த்தவள்,

"அங்கே வந்தா தானா தெரிஞ்சிட போகுது... அதுக்குள்ள அவசரப்பட்டா எப்படி...?" என்றவளை புதிராய் பார்த்தவர்கள் அடுத்த அரை மணி நேரத்தில் கிளம்பி அவளுடன் செல்ல தவறவில்லை...

யுவாவின் வீட்டை அடைந்தவர்களைச் சக்ரபாணி வரவேற்றார்...

"என்ன சம்பந்தி சொல்லாம கொள்ளாம திடுதிடுப்புன்னு வந்து இருக்கீங்க...?" என்று வரவேற்றவரை கண்டு சங்கடமாய்ப் புன்னகைத்த பரந்தாமன் தனது சின்ன மகளை முறைக்கவும் தவறவில்லை...

"விசயம் இருக்கப் போய்த்தான் வந்து இருக்கோம் மாமா..." என்று தந்தைக்குப் பதிலாய் பதில் சொல்லியபடி உள்ளே நுழைந்த யமுனா சரளாவிடம்,

"அத்தே உங்க செல்ல மகன் எங்கே...?" என்று கேட்க...

"யாரும்மா யுவாவையா கேட்கிற...?"

"அவனைத் தான்..." என்றவள் கண்கள் அவனைத் தேடி நாலாப்புறமும் சுழன்றது...

'என்ன இவ இப்படிப் பேசுறா... எனக்கு ஏழரையைக் கூட்டாம அடங்க மாட்டா போலிருக்கே... பொண்ணைப் பெத்து வளர்த்து வச்சிருக்கிற லட்சணத்தைப் பாருன்னு எல்லோரும் என்னைக் காறி துப்ப போறாங்க...' மகளின் பேச்சு கண்டு திகில் பரவ நின்று இருந்தார் திலகா...

அடுத்து மகள் செய்த காரியத்தில் அவர் நெஞ்சை பிடித்துக் கொண்டு அமர்ந்துவிட்டார்...

"நான் போய் அவனைக் கூப்பிட்டு வர்றேன்..." என்றவள் யாரின் பதிலையும் எதிர்பார்க்காமல் யுவாவின் அறையை நோக்கி நடந்தாள்...

அவளின் செயலை தடுக்கும் எண்ணம் இல்லாமல் எல்லோரும் பிரம்மை பிடித்துப் போய் அமர்ந்து இருந்தனர்...

'இவளை என்ன செய்றது...?' பரந்தாமன் மட்டும் மகளின் நடவடிக்கை கண்டு பல்லை கடித்தார் ஆத்திரத்துடன்...

தனது அறையில் மெத்தையில் சுகமாய்த் தலை வரை இழுத்துப் போர்த்திக் கொண்டு உறங்கி கொண்டு இருந்தான் யுவராஜ்...

'என் தூக்கத்தைக் கெடுத்துட்டு இவன் மட்டும் பெரிய இவன் மாதிரி தூங்குறதை பாரு...' என்று மனதுக்குள் எரிந்தவள் அருகில் இருந்த தண்ணீர் சாடியை எடுத்து அவன் முகத்தில் கவிழ்த்தாள்...

"ஏய்..." என்று கத்தியபடி கோபத்துடன் எழுந்தவன் அங்கு யமுனாவை கண்டதும்,

"காலங்கார்த்தால நீயா...? உன் மூஞ்சில முழிச்சா இன்னைக்கு நாள் விளங்கின மாதிரி தான்... வெளிய போடி..." என்று கத்த...

"நீ சொன்னாலும் சொல்லைன்னாலும் இன்னைக்கு உன் நேரம் சரியில்லை தான்..." என்று அவனை மேலும் கீழும் அளவிடுவது போல் பார்த்துக் கொண்டு சொன்னவள் நிதானமாய் அவன் அருகில் அமர்ந்தாள்...

"என்ன சொல்ற...?" புரியவில்லை அவனுக்கு...

"உனக்கும் எனக்குமான உறவை சொல்லும் நேரம் வந்தாச்சு... பத்து நிமிசம் தான் உனக்கு டைம்... அதுக்குள்ள ரெடியாகி வா... கீழே உன் மாமியார், மாமனார், என் மாமியார், மாமனார் வெய்ட்டிங்..." என்றவளை பார்த்தவளின் பார்வையில் என்ன இருந்தது என்பதை

அவளால் உணர முடியவில்லை... உணரவும் அவள் முற்படவில்லை...

பின் அவளது பேச்சில் நிலைமையின் தீவிரத்தை புரிந்து கொண்டவனாய் மேற்கொண்டு வாதாடாமல் ஒன்றும் பேசாது குளியலறைக்குள் சென்று புகுந்து கொண்டான்... பத்து நிமிடங்களில் வெளியில் வந்தவன்,

"நீ வெளியில் போ... நான் ட்ரெஸ் மாத்தணும்..."

"ம்ஹூம் நான் மாட்டேன்... நீ அப்படியே ஜன்னல் வழியா எஸ் ஆகிட்டேன்னா...?" அவனுடன் வாதம் புரிந்தவள் அங்கிருந்து அகலாமல் சத்தியாகிரகம் செய்ய...

"சொன்னா கேட்க மாட்ட..." என்றவன் அவளைக் கண்டு கொள்ளாமல் உடை மாத்த முயல...

"கர்மம்... கர்மம்..." என்றவள் தன் கண்களை இறுக மூடி கொண்டாள்...

அதைக் கண்டு சத்தம் இல்லாமல் புன்னகை புரிந்தவன் அவசரமாய் உடையை மாற்றிக் கொண்டு தயாராகி அவளிடம் வந்து,

"போகலாமா...?" என்று கேட்டான்...

அவளது புடவை நிறத்திற்கு ஏற்றார் போன்று சட்டை அணிந்து இருந்தவனின் அழகை கண்களால் பருகியவள் அவன் கேள்வியாய் புருவத்தை உயர்த்தவும் தன் பார்வையைத் திருப்பிக் கொண்டு எழுந்து அறையின் வாயிலை நோக்கி சென்றாள்...

அன்று அவன் எழுதிய திரைக்கதைக்கு இன்று உச்சக்கட்டம் நிகழ போகிறது என்பது அவனுக்குப் புரிந்து போனது... எதுவாக இருந்தாலும் சமாளிப்பதற்குத் தயாராகவே இருந்தான்...

என்ன நடந்தாலும் அதன் முடிவு ஒன்றே ஒன்று தான்... அது யமுனா அவனிடம் வந்து சேர்வது... அது ஒன்று மட்டுமே முடிவு... ஆனால் அந்த முடிவுக்காக அவன் எந்த

மெனக்கெடலும் முயற்சிக்கப் போவது இல்லை... அதை அவள் தான் செய்யப் போகிறாள்... அதற்கு அவன் உறுதுணையாக இருக்கப் போகிறான் அவ்வளவே...

அந்த நேரத்திலும் அவளின் மனதைரியத்தை அவனால் மெச்சாமல் இருக்க முடியவில்லை...

இருவரும் ஒன்று சேர்ந்து இணைந்து படிகளில் இறங்கி வந்ததைக் கண்டு எல்லோரும் ஆச்சிரியமும் குழப்பமும் கலந்து நோக்கினர்... பின்னே கிழக்கும் மேற்கும் இணைந்து வந்தால் அது உலக அதிசயம் அன்றோ...

"நீ சொல்றியா...? இல்லை நான் சொல்லவா நமக்கான உறவை, உரிமையை..." அருகில் நின்று இருந்த யுவாவை பார்த்து அழுத்தமாய்க் கேட்டவளின் பார்வை 'இப்போ நீ வாயை திறந்து தானே ஆகணும்...' என்பது போல் அவனை எகத்தாளமாய்ப் பார்க்க...

அவனோ அதற்குக் கொஞ்சமும் அசந்து கொடுக்கவில்லை...

"நீ தானே எல்லோரையும் கூப்பிட்டுட்டு வந்திருக்க... அப்போ நீ தான் சொல்லணும்..." என்றவன் தனக்கும் அதற்கும் சம்பந்தம் இல்லை என்பது போல் விறைத்துக் கொண்டு நின்று இருந்தான்...

அந்த நிலையிலும் இளகாமல், இறங்காமல் இருப்பவனை நோக்கி அடிப்பட்ட பார்வை ஒன்றை வீசியவள் தன்னைச் சமாளித்துக் கொண்டு தனது தந்தையிடம்,

"அப்பா... இளாவை கல்யாணம் பண்ணிக்கச் சம்மதமான்னு கேட்டீங்களே... அதுக்கு இப்ப பதில் சொல்றேன்..." என்றவள் யுவாவை மீண்டும் ஒரு பார்வை பார்த்துவிட்டு,

"எனக்கு ஏற்கெனவே கல்யாணமாகிருச்சுப்பா..."

"யமுனா என்னடி சொல்ற...?" ஏக காலத்தில் அதிர்ந்தனர் அவளது பெற்றோர்...

"யாருடி அவன்...?" கனிமொழியும் அதிர்ச்சியுடன் தங்கையைப் பார்த்து வினவினாலும் யுவாவிடம் அவள் எடுத்துக் கொள்ளும் அதிகப்படியான உரிமை அவளுள் பெரும் பயத்தைக் கிளப்பி இருந்தது...

"இவன் தான் அது..." அருகில் நின்று இருந்த யுவாவை அவள் கையைக் காட்டிய போதும் அவன் அமைதியாய் நின்று இருந்தானே தவிர எதுவும் பேசவில்லை... அவளது கூற்றை மறுக்கவும் இல்லை... அதே போல் அவனது மன இறுக்கமும் தளரவில்லை...

"என்னடா யுவா இந்தப் பொண்ணு என்ன என்னமோ சொல்லுது...? உண்மையாவாடா..." என்று சரளா அலறினார்...

"ராசா என்ன நடக்குது இங்கே... எனக்கு ஒண்ணும் புரியலையே..." பாக்கியம் அவர் பங்கிற்குப் புலம்ப ஆரம்பித்தார்...

"உனக்குச் செல்லம் கொடுத்து கொடுத்துக் குட்டிச்சுவரா போய்ட்ட... எங்களுக்குக் கூடத் தெரியாம கல்யாணம் பண்ணிக்கிற அளவுக்கு உனக்கு எங்கே இருந்து தைரியம் வந்துச்சு... உன்னை..." என்று கத்தியபடி பரந்தாமன் மகளின் தலை முடியை பிடித்து உலுக்கியவர் அவளை அடிக்கக் கையை ஓங்க...

அவர் உலுக்கியதில் அவள் கழுத்தில் அணிந்து இருந்த தங்கச் சங்கிலி வெளியில் வந்து விழுந்தது...

அதில் அவன் கட்டிய தாலி அழகாய் கோர்க்கப்பட்டு அவனைப் பார்த்து ஏளனமாய்ச் சிரித்தது... நேற்று அவளிடத்தில் எதைத் தேடி ஏமாந்தானோ அது இப்போது அவன் கண்ணில் பட்டு அவனின் மனதின் ஏமாற்றத்தை போக்கியது... அவனது இத்தனை நாள் தவிப்பிற்கான விடையாக அது அவன் கண்முன் ஊசலாடியது...

அடுத்த நொடி அவன் சிறிதும் யோசிக்காமல் ஓங்கிய பரந்தாமனின் கையைப் பிடித்துக் கீழே இறக்கியவன்,

"அவள் என்னோட மனைவி... இனி அவளை அடிக்கிற வேலை எல்லாம் வச்சுக்காதீங்க..." என்றவனின் குரலில் இருந்தது கர்வமா இல்லை பெருமிதமா இல்லை சொந்தமா எதுவென்று தெரியவில்லை...

ஆனால் தான் நினைத்தது போல் அவள் தன்னைத் தேடி வந்துவிட்டாள் என்ற மகிழ்ச்சி மட்டுமே அந்தக் கணம் அவன் மனம் முழுதும் நிறைந்து இருந்தது அது மட்டும் உண்மை...

மோதல் தொடரும்...

## களம் : 9

யுவராஜின் மனநிலையை இன்னதென்று வரையறுக்க முடியவில்லை... என்றோ தான் கட்டிய மாங்கல்யத்துக்கு யமுனா இந்த அளவுக்கு முக்கியத்துவம் கொடுப்பாள் என்று அவன் கொஞ்சமும் நினைக்கவில்லை... அவளின் குண இயல்புக்கு தான் அவளை விட்டு விலகிய போதே அதைக் கழட்டி தூக்கி எறிந்து விட்டு அதே போல் அவனையும் மறந்து போயிருப்பாள் என்று தான் அவன் நினைத்தான்...

வெகு வருடங்கள் கழித்து அவன் அவளைச் சந்தித்த போதும் அவளது நடவடிக்கை அப்படித்தான் அவனுக்கு எடுத்து சொல்லியது... தான் தான் தேவை இல்லாமல் அவளின் நினைவில் திரிசங்கு நிலையில் தடுமாறிக் கொண்டு இருக்கிறோமோ என்று அவனுக்குத் தன்னைக் குறித்தே சற்று அவமானமாக இருந்தது...

அவன் சுயநினைவு இல்லாமல் இருந்த போது கூட அவளது நியாபகங்களை மட்டுமே பற்றுகோலாகக் கொண்டு தன் நினைவை அவன் உயிர்ப்பித்த போது தான் அவள் மீதான தன்னுடைய அளவற்ற காதலை அவன் உணர்ந்தான்...

ஆம் காதலே தான்... விளையாட்டுத்தனமாய் அவளைக் காதலித்து அவளது கழுத்தில் தாலியும் கட்டியவனுக்கு

அந்நேரம் அவளின் மீது இந்தளவுக்குக் காதல் இருந்ததா என்று கேட்டால் அவனது பதில் இல்லை தான்...

அதனால் தான் கிட்டத்தட்ட மூன்று வருட இடைவெளிக்குப் பின் ஸ்வேதா மறுபடியும் அவனது வாழ்க்கையில் குறுக்கிட்ட போதும் அவள் தன் காதலை அவனிடத்தில் சொல்லிய போதும் அவன் பிடி கொடுக்காமல் நழுவி கொண்டு இருந்தான்...

அதற்கு எல்லாம் என்ன காரணம் என்பதை இந்த விபத்து அவனுக்குத் தெள்ளத்தெளிவாக எடுத்துரைத்து விட்டது... அது யமுனாவை தவிர வேறு யாராலும் அவனது நினைவிலும், உயிரிலும் கலக்க முடியாது என்பது...

ஆனால் தன்னுடைய காதல் அதற்கான பிரதிபலிப்பு எல்லாம் அவளிடத்தில் இருக்கிறதா என்பது பற்றி இன்றுவரை அவனுக்கு ஐயமாகவே இருக்கிறது... ஏனெனில் அவளது விளையாட்டுக் குணம் ஏற்கெனவே அவன் அறிந்த ஒன்று அல்லவா... அவளை நம்பி அவன் ஆற்றில் இறங்க முடியாது...

ஆனால் அந்த நம்பிக்கையின்மையை இந்தத் தாலி கொஞ்சம் தகர்த்து எறிந்து இருந்தது... அவன் தான் அவளின் கணவன் அதை நினைக்கும் போதே அவனுக்குச் சற்று கர்வமாய், பெருமையாய் தான் இருந்தது...

வீட்டை பொருத்தவரை அவன் உதவாக்கரை தான்... ஆனால் அவனையும் நம்பி ஒருத்தி தன் வாழ்க்கையை ஒப்படைத்து இருக்கிறாளே அதுவே அவனுக்கு அத்தனை சந்தோசமாய் இருந்தது... அதில் இத்தனை நாள் தன்னைத் தேடி அவள் வரவில்லையே என்ற கோபம் கூடப் பின்னுக்குத் தள்ளப்பட்டு விட்டது... அவள் அவனவள் அது மட்டுமே இப்போது அவனுக்குப் போதுமானதாய் இருந்தது... இது ஒன்று போதாதா அவளை அவன் மீது காதல் கொள்ளச் செய்வதற்கு...

இன்னமும் அவளுக்குத் தன் மீது காதல் இருக்கிறதா என்றே அவனுக்குச் சந்தேகமாக இருந்தது... காதல்

இல்லாமலா அறியா வயசில் அவன் கட்டிய தாலியை இப்போதும் சுமந்து கொண்டு இருக்கிறாள் என்று அந்த மடையனுக்குத் தெரியவில்லை...

"நீ யார்டா என்னைக் கேட்கிறதுக்கு... ஒண்ணும் தெரியாத பெண் கழுத்துல தாலி கட்டிட்டதால நீ அவளோட புருசனாகிடுவியா..." பரந்தாமனுக்கு வந்த கோபத்தில் யுவராஜை ஏக வசனத்தில் திட்டி தீர்த்துவிட்டார்...

"என்னங்க..."

"அப்பா..." திலகாவும், கனிமொழியும் ஒரே நேரத்தில் கூவினர்...

என்ன இருந்தாலும் யுவா கனியின் கொழுந்தன்... இதனால் அவளின் வாழ்க்கையில் பிரச்சினை வந்துவிடக் கூடாதே என்று திலகா பயந்தார்... அதையே தான் கனியும் நினைத்தாள்...

ஆனால் சம்பந்தப்பட்டவளோ அமைதியாய் நின்று இருந்தாளே தவிர வேறு எதையும் பேசவில்லை... யுவாவை கணவனாக அடையாளம் காட்ட நினைத்தாள்... அதைக் காட்டியும் விட்டாள்... அதற்கு மேல் அவள் இதைப் பற்றி அதிகம் சிந்திக்கவில்லை... அவனுடன் வாழ வேண்டும் என்றும் அவள் நினைக்கவில்லை...

"என்ன மாமா இன்னுமா தெரியலை நான் யார்ன்னு...? அதான் உங்க மகளே சொல்லிட்டாளே நான் தான் அவள் புருசன்னு... சந்தேகமா இருந்தா அவள் கழுத்தில் நான் கட்டிய தாலியை கேட்டு பாருங்க... அது சொல்லும் எங்க காதல் கதையை..." உல்லாசமாய் உற்சாகமாய்ப் பேசியவனைக் கண்டு யமுனாவால் முறைக்க மட்டுமே முடிந்தது...

கொஞ்ச நேரத்திற்கு முன் அவன் முறுக்கி கொண்டு இருந்தது... அவன் ஸ்வேதாவை திருமணம் செய்வதற்குச் சம்மதித்தது எல்லாம் நேரம் கெட்ட நேரத்தில் அவள் நினைவில் வந்து அவளை மனம் இறுக செய்தது...

அதை எல்லாம் விடப் பதினேழு வயதில் அவளது கழுத்தில் தாலி கட்டிவிட்டு அவளை அம்போவென விட்டு விட்டு ஓடியவனை அவளால் எந்த நிலையும் மன்னிக்க முடியவில்லை... இப்போதும் தனது வாழ்க்கைக்காக அவளாய் போராடா விட்டால் அவன் எங்கே அவர்களது உறவை பறைசாற்றி அறிவித்து இருக்கப் போகிறான்... அன்றும் இன்றும் அவளை அலைக்கழித்து அவளை உயிருடன் கொல்வதே அவனுக்கு வேலையாய் போயிற்று...

இப்போது வந்து கணவன் என்று சொன்னால் எல்லாம் சரியாகிவிடுமா என்ன...

அவ்வளவு நேரம் அமைதியாய் இருந்த சக்ரபாணி பரந்தாமன் அருகில் வந்தார்...

"சம்பந்தி... என் பையன் செஞ்ச தப்புக்கு நான் உங்க கிட்ட மன்னிப்புக் கேட்டுக்கிறேன்... நாமளே அவங்க இரண்டு பேருக்கும் கல்யாணம் பண்ணி வைக்கணும்ன்னு இருந்தோம்... இடையில் அவங்களே பண்ணிக்கிட்டாங்க... அவ்வளவு தான்... விடுங்க... உங்க பொண்ணை நல்லபடியா பார்த்துக்க வேண்டியது என் பொறுப்பு... நீங்க கவலைப்படாதீங்க..." பெருந்தன்மையுடன் அவர் பேசியது கேட்டு பரந்தாமன் கோபம் சிறிது குறைந்தாலும் அவருக்கு யுவா மேல் இருந்த ஆத்திரம் சிறிதும் குறையவில்லை...

அவன் தனது சின்னமகளை ஏமாற்றித் திருமணம் செய்து கொண்டதாகவே அவர் எண்ணினார்...

சக்ரபாணி இந்தளவுக்கு இறங்கி வந்ததும் மற்றவர்கள் அதற்கு மேல் இதற்கு எதிர்ப்பு தெரிவிக்கவில்லை...

தீபா அப்போதே தனது மகள் தியாவை கூட்டி கொண்டு அவளது அறைக்குச் சென்றுவிட்டாள்... இந்தப் பிரச்சினையைப் பார்த்தால் சிறு பெண் மனம் குழம்பி போய்விடுவாள் என்று பயந்து போய் அழைத்துக் கொண்டு சென்றுவிட்டாள்...

"ராசா... உன்னை மலை போல் நம்பி இருந்தேனே... நீ இப்படி இந்தச் சீமை சித்ராங்கி கிட்ட போய் விழுந்துட்டியே..." என்று பாக்கியம் மட்டும் மனம் தாங்காமல் புலம்பி கொண்டு இருந்தார்...

"அய்யோ ப்யூட்டி... அப்படி எல்லாம் ஒண்ணும் இல்லை... அவ என்னை மயக்கி தாலி கட்ட வச்சிட்டா... இப்ப அதைச் சொன்னா உன் பேரன் மரியாதை என்னாகிறது சொல்லு... என்ன இருந்தாலும் நான் ஆம்பிளை இல்ல..." மீசையை முறுக்கி விட்டுக் கொண்டே பெண்ணிடத்தில் தான் மயங்கிய கதையை ரகசியமாய் அவன் சொல்ல...

"அப்படியா பண்ணினா அவ... இருக்கும் இருக்கும்... அவளை நம்பாதே ராசா... எதுக்கும் அவ கிட்ட தள்ளி நின்னே பழகு..." என்ற கிழவியை இப்போது வெளிப்படையாகவே அவன் முறைத்தான்...

'அழகான பொண்டாட்டியை பக்கத்துல வச்சிக்கிட்டு தள்ளி நிற்கிறதா... அப்புறம் எனக்குத் தான் நாக்கு தள்ளிரும்... தள்ளி நின்னாளே ஆளை அசத்துவா... இப்போ ஒரே வீட்டில் ஒரே ரூம்ல இருந்துட்டு என்னை என்ன அனுமார் பக்தனா மாறச் சொல்றியா கிழவி... ம்... இப்ப புரியுது தாத்தா ஏன் சீக்கிரம் போய்ச் சேர்ந்தாருன்னு...' மனதுக்குள் பாட்டியை வைதபடி நின்று இருந்தான் அவன்...

"அப்பா... நாம போகலாம்ப்பா..." என்று கிளம்ப ஆயத்தமான யமுனாவை கைப்பிடித்துத் தடுத்தான் யுவா...

சுயநினைவு இல்லாமல் மருத்துவமனையில் இருந்த போதே அவளைச் செல்ல விடாமல் அவளின் கையை இறுக பற்றியவன் அவன்... இப்போது அதை விட இறுக்கமாய்ப் பிடித்து இருந்தான் தனது கைப்பிடியை... அவனது பிடியில் அவளது கை வலியை கொடுத்தது... அதை அவளது முகச்சுளிப்பில் இருந்து அவன் உணர்ந்தாலும் பெரிதாய் கண்டு கொள்ளவில்லை...

"எங்கே...?" என்றான் முறைப்புடன்...

"இது என்ன கேள்வி...? எங்க வீட்டுக்கு..." என்றாள் அவள் அலட்சியமாய்...

அவளின் அலட்சியத்தைக் கண்டு கொள்ளாமல், "இனி இது தான் உன் வீடு... இங்கே இருந்து ஒரு அடி எடுத்து வச்சு பாரு... அடுத்த அடி எடுத்து வைக்க உன் காலு இருக்காது... என்னை உன் புருசன்னு நீ சொல்லணும்ங்கிறதுக்குத் தான் இத்தனை நாள் காத்திட்டு இருந்தேன்... இவ்வளவு நாள் உன் இஷ்டத்துக்கு நீ இருந்தாச்சு... இனி உன் வாழ்க்கை என் கையில்... என் விருப்பப்படி தான் நீ நடந்துக்கணும்... என் இஷ்டப்படி தான் இனி நீ இருக்கணும்... இனி நீ கடந்து வந்த பாதையை மறந்துற வேண்டியது தான்... இனி என்னோடு கைக்கோர்த்து என் கூட வாழப் போறதை மட்டும் தான் நீ யோசிக்கணும்..."

"என்ன புருசங்கிற உரிமையா...?" அவனைப் பார்த்து கிண்டலாய் கேட்டவள், "அப்படி ஒரு நினைப்பு இருந்தா குப்பையில தூக்கி போடு... என் வாழ்க்கையை நான் வாழ்ந்துக்க முடியும்... உன் வேலையை நீ பாரு..."

இன்னும் தன்னை விட்டு விலகி போவதிலேயே அவள் குறியாய் இருப்பதைக் கண்டு அவனுக்குக் கோபம் கோபமாய் வந்தது... இப்போது முற்றிலும் முழுமனதாய் தீர்மானித்தான் அவளுக்குத் தன் மேல் சிறிதும் காதல் இல்லை என்று... தான் கட்டிய தாலிக்காக உரிமைக்காக வந்து இருக்கிறாள்... தனக்காக இல்லை என்ற நினைவே அவனுக்குக் கசந்தது...

"என்னடி சொன்ன...?" அவளின் தாடையை இறுக பிடித்து அவள் முகத்தைத் தன் புறம் வெடுக்கென்று திருப்பியவனைக் கண்டு,

"ஐயோ... அவள் சின்னப் பொண்ணு விடுங்க..." தன் கோபத்தை விட்டு விட்டு மகளுக்காகப் பரந்தாமன் கதறினார்...

திலகா புடவை தலைப்பை வாயில் வைத்துக் கொண்டு கண்ணீர் விட்டார்... மகளின் நிலை அவருக்குக் கண்ணீரை

வரவழைத்தது...

"யுவா..." சக்ரபாணி மகனை அதட்டினார்...

"மூச்... யாரும் பேச கூடாது... இது எனக்கும் இவளுக்கும் இடையில் நடக்கும் பிரச்சினை..." என்ற யுவாவின் முகம் பயங்கரமாய் மாறி இருந்தது...

"உன் மனசுல என்னடி நினைச்சிட்டு இருக்க... என்னை என்ன கேனைன்னு நினைச்சியா...? என்னைய பார்த்தா உனக்கு எப்படித் தெரியுது... நீ என்ன சொன்னாலும், செஞ்சாலும் தஞ்சாவூர் தலையாட்டி பொம்மை மாதிரி தலையை ஆட்டிட்டு இருப்பேன்னு நினைச்சியா... உன் அப்பன் வீட்டில் போய் நீ இருக்கிறதுக்கு எதுக்குடி இங்கே வந்து இப்படி ஒரு பெரிய ட்ராமா நடத்துன... இதுக்கு என்ன காரணம்ன்னு நான் சொல்லவா... எனக்கும் ஸ்வேதாவுக்கும் நடக்க இருக்கிற கல்யாணம் நடக்கக் கூடாது... உன் கழுத்துல தாலி கட்டின பாவத்துக்கு நான் வாழ்க்கை பூரா பிரம்மச்சாரியா உன்னை நினைச்சு ஏங்கி ஏங்கி சாகணும்... அப்படித்தானே... என்ன ஒரு சுயநலம்டி உனக்கு..."

"இப்போ சொல்றேன் நல்லா கேட்டுக்கோ... ஒண்ணு நீ என் கூட வாழ்ந்தாகணும்... இல்லை இந்தத் தாலியை அவுத்து கொடுத்துட்டு உன் வழியைப் பார்த்துட்டு நீ போ... நான் என் வழியைப் பார்த்துக்கிறேன்... அதை விட்டுட்டு இந்தப் பூச்சாண்டி காட்டுற வேலை எல்லாம் என் கிட்ட வேண்டாம்... நான் நல்லவனுக்கு நல்லவன்... அதே சமயம் கெட்டவனுக்கு ரொம்ப ரொம்பக் கெட்டவன்... என்னை நல்லவனா மாத்துறதும், கெட்டவனா மாத்துறதும் உன் கையில் தான் இருக்கு... இல்லை நீ இப்படியே வீஞ்சிக்கிட்டு தான் இருப்பேன்னு சொன்னேன்னு வச்சிக்கோ... ஊர்ல ஆயிரம் பொண்ணுங்க இருக்காங்க... அவங்களைத் தினத்துக்கு ஒண்ணா கூட்டிட்டு வந்து உன் முன்னாடியே ஜல்சா பண்ணிட்டு சந்தோசமா வாழ்வேன்... என்னடி சொல்ற என் ரௌடி..." கண்கள் சிவக்க வார்த்தைக்கு வார்த்தைக்கு நக்கலும் நையாண்டியுமாய் அவன்

பேசினாலும் சொன்னதைச் செய்வேன் என்ற உறுதி அதில் தெரிந்தது...

"யுவா..." அவன் பேசியது கேட்டு அமைதியான மனோவிற்குக் கூடச் சற்றுக் கோபம் வந்துவிட்டது...

"சாரி மனோ... இப்ப நான் பேசலைன்னா... வாழ்க்கை முழுதும் என்னால பேச முடியாம போயிரும்... ப்ளீஸ்..." அண்ணன் முகத்தைப் பார்க்காமல் சொல்லியவன் பார்வை தன்னவளை விட்டு அகலவில்லை...

அதற்கு மேல் கணவன் மனைவிக்கு இடையில் தலையிடாமல் மனோ ஒதுங்கி கொண்டான்...

யமுனாவோ உச்சக்கட்ட அதிர்ச்சியில் அதிர்ந்து போய் நின்று இருந்தாள்... அவனது ஒவ்வொரு வார்த்தைகளும் அவளைக் கதிகலங்க செய்து கொண்டு இருந்தது...

அவள் அவனிடம் வாழ்க்கையைக் கேட்டு யாசித்து வரவில்லை... அவள் தனக்கான அங்கீகாரத்தைத் தேடி தான் வந்தாள்... கிஞ்சித்தும் காதல் இல்லாதவனுடன் மனம் நிறையக் காதலை சுமந்து கொண்டு இருக்கும் அவளால் எப்படி வாழ முடியும்... சத்தியமாய் அவளால் அது முடியாது... அவனுடன் ஒரே வீட்டில் ஒரே அறையில் நினைத்து பார்க்கவே அவளது தேகம் நடுங்கியது...

"இல்ல... நா... நான் போகணும்... என்னை விட்டிரு..." என்று திக்கி திணறியவளுக்கு மேலே பேச முடியவில்லை...

"அதெல்லாம் அப்படிச் சட்டுன்னு விட்டு விட முடியாது... ஒண்ணு என் கூட வாழு... இல்லை உனக்கும் எனக்கும் சம்பந்தம் இல்லைன்னு சொல்லிட்டு போய்க்கிட்டே இரு..." என்றவனைக் கண்டு என்ன பேசுவது என்று தெரியாமல் அவள் விழித்தாள்...

படபடவெனப் பட்டாசாய் வார்த்தைகளை வெடிக்கும் அவளுக்கே வார்த்தைகள் வராமல் பஞ்சமாகி போனது...

"யுவா... வாயை மூடிட்டு சும்மா இரு... எப்பப்பாரு இப்படி எதையாவது பேசி காரியத்தைக் கெடு... பெரியவங்க நாங்க எதுக்கு இருக்கோம்... நாங்க பேசி பிரச்சினை தீர்க்கிறோம்... அவளை விடு..." என்ற தந்தையின் வார்த்தைக்குக் கட்டுப்பட்டு அவளை விட்டு விலகி நின்றான் அவன்...

சக்ரபாணி யமுனா அருகில் வந்து, "உன்னை நாங்க யாரும் தப்பா நினைக்கலைம்மா... என் மகனை பத்தி எனக்கு நல்லாவே தெரியும்..." என்றவரை யுவா முறைக்க,

"உன் யோக்யதை எனக்கு நல்லா தெரியும்... அந்தப் பொண்ணை மிரட்டின மாதிரி என்னை மிரட்டுற வேலை எல்லாம் வச்சுக்காதே..." என்று மகனை அவர் மிரட்ட...

"ஆமாம்... அப்படியே நாங்க மிரட்டி உங்க மருமக பயந்துட்டாலும்..." என்று அவன் நொடித்துக் கொண்டான்...

"இங்கே உனக்கு எந்தப் பிரச்சினை வந்தாலும் நான் பார்த்துக்கிறேன்... உங்க அத்தை இருக்கா..." என்றவர் மனைவி புறம் திரும்பி, "என்ன சரளா பார்த்துக்கிட்டு இருக்க நீயும் வந்து மருமக பொண்ணு கிட்ட சொல்லு..."

"ஆமாம் மா... நாங்க எல்லாம் இருக்கிறப்போ நீ ஏன் பயப்படுற...?" என்று அவரும் ஆறுதலாய் பேசினார்...

"அப்படியே இவன் ஏதாவது வம்பு பண்ணினான்னா என் கிட்ட வந்து சொல்லு... நான் இவனைக் கவனிச்சிக்கிறேன்..."

"ஆமாம் பதினெட்டு பட்டி நாட்டாமை தீர்ப்பு சொல்லிட்டாரு கேட்டுக்கோ...என்னன்னு கம்ப்ளைண்ட் கொடுப்ப... நான் கையைப் பிடிச்சேன்... கட்டி பிடிச்சேன்... முத்தம் கொடுத்தேன்னா..." அவளுக்கு மட்டும் கேட்கும் குரலில் அவளது காதில் ரகசியம் பேசியவனின் பேச்சில் அவளது முகம் நியாயத்துக்கு வெட்கத்தில் சிவக்க வேண்டும்...

ஆனால் அவளோ பயத்தில் முகம் வெளிற நின்று இருந்தாள்... அதை அவன் கவனிக்கவில்லை...

"இங்கே பாரு யமுனா... தெரிஞ்சோ தெரியாமலோ அவர் கையால தாலியை வாங்கிட்ட இப்போ அவர் கூட வாழ முடியாதுன்னு சொல்றது அர்த்தம் இல்லை... ஒரு பொண்ணு புருசன் வீட்டில் இருக்கிறது தான் மரியாதை..." திலகா மகளுக்கு எடுத்து சொல்ல...

பரந்தாமன் மட்டும் யோசனையில் இருந்தார்...

"சம்பந்தி இப்போ என் பொண்ணை நாங்க கூட்டிட்டு போறோம்... நல்ல நாள் பார்த்து அவளை இங்கே கொண்டு வந்து விடுறோம்... ஊரு உலகத்துக்கும் இவங்க கல்யாணத்தை முறையா அறிவிக்கணும்ல..."

பரந்தாமன் கூற்றில் இருந்த உண்மையைச் சக்ரபாணியும் ஏற்றுக் கொண்டார்... ஆனால் யுவாவோ அவளை எங்கும் அனுப்ப தயாராக இல்லை...

"அவள் என்னைத் தேடி வந்த நாளான இன்னைக்குத் தான் எனக்கு நல்ல நாள்... அவளை இப்படியே விட்டா அப்படிக்கா எஸ் ஆகிடுவா இந்தக் கேடி... அதனால அவள் என் கூடவே இருக்கட்டும்... இந்த நல்ல நாள் கெட்ட நாள்லலாம் எனக்கு நம்பிக்கை இல்லை..." என்றவன் அவளை எங்கும் அனுப்ப மறுத்துவிட்டான்...

அதற்கு மேல் யாராலும் அதற்கு மறுப்பு சொல்லவில்லை... சொல்லவில்லை என்பதை விட அவன் எதையும் காதில் வாங்க தயராய் இல்லை...

"யுவா நீ எப்போடா கல்யாணம் பண்ணிக்கிட்ட..." மூத்தவன் ராகவ் எல்லோரும் சென்றதும் யுவா காதை கடிக்க...

"அது எதுக்கு உனக்கு... நான் எல்லாம் கல்யாணம் பண்ணியதே பெரிய விசயம்.. இதுல உனக்கு எதுக்கு இந்தத் தேவையில்லாத ஆராய்ச்சி..." என்று அண்ணனை முறைக்க...

"அது சரி உனக்குப் பொண்ணு கிடைக்கிறதே அதிசயம்... இதுல இந்த மாதிரி அழகான பொண்ணு கிடைச்சா உனக்கு என்ன கசக்கவா செய்யுது... என்ஜாய்டா..."

அண்ணன் கூறியதும் அவனையும் அறியாமல் அவனது கண்கள் யமுனாவை பார்த்தது...

பால் நிறத்தில் பூசினார் போன்ற தேகத்துடன் அழகோவியம் போல் இருந்தவளின் அழகு என்றும் போல் அவன் மனதை காந்தம் போல் கவர்ந்து இழுத்தது... அதையும் மீறி அவளின் துருதுருப்பு அவனுக்கு மிகவும் பிடிக்கும்... அவனை உயிர்ப்புடன் வைக்க அவளது குறும்புத்தனத்தால் மட்டுமே முடியும்...

அங்கிருந்த கண்ணாடியில் அவன் தன் உருவத்தைப் பார்த்தான்... சற்றுக் கறுப்பு தான்... அழகு என்று பிரமாதமாய்ச் சொல்ல முடியவில்லை என்றாலும் அவனிடத்தில் தனிக் கவர்ச்சி, கம்பீரம் இருக்கத்தான் செய்தது...

ஆனாலும் அவனுக்கு அவள் சற்று அதிகப்படி தான்... அதை இல்லை என்று மறுப்பதற்கு இல்லை...

'யம்மு பேபி உனக்கு இந்தக் கறுப்பன் தான்னு அந்த ஆண்டவன் முடிச்சு போட்டுட்டானே... வேறுவழியே இல்லை என்னை நீ சகித்துத் தான் ஆக வேண்டும்...' தனக்குள் சொல்லி கொண்டவன் பார்வை அவளையே மொய்த்தது...

மதிய உணவு முடிந்ததும் எல்லோரும் ஓய்வு எடுக்கத் தனிமையில் யுவா யமுனா அருகில் வந்தான்...

"வா..." என்று அவள் கையைப் பிடித்து அழைக்க...

"எங்கே...?" கண்ணில் கவனத்துடன் கேட்டவளை கண்டு அவனுக்குச் சிரிப்பு வந்தது...

"அதான் நேத்து சொன்னியே... உரிமையோட என் ரூமுக்கு வர்றேன்னு... இப்போ தான் உரிமை வந்தாச்சே... வா..."

"அந்த உரிமையை நீ கொடுக்கலை... நானா தான் எடுத்துக்கிட்டேன்..." என்று அவள் முறுக்கி கொள்ள...

"எதுவா இருந்தா என்ன... உரிமை வந்தது உண்மை தானே... இப்ப நீ வர போறியா இல்லையா...?"

"இல்லை நான் வரலை... கனி ரூமுக்கு போறேன்..."

"என்னது உன் அக்கா ரூமுக்கா...? கிழிஞ்சது போ... அங்கே உனக்கு என்னடி வேலை...?" என்று கேட்டவன், "நீ கெஞ்சினா மிஞ்சுற ரகம் உன்னை எல்லாம் வேற மாதிரி தான் டீல் பண்ணனும்..." என்றவன் அவள் அருகில் நெருங்கி வர...

"வேண்டாம் போய்டு..." என்றவள் பின்னால் நகர்ந்து கொண்டே செல்ல...

"நான் தான் ஆன்ட்டி ஹீரோவாச்சே... அப்போ இப்படித்தான் நடந்துக்குவேன்... பரவாயில்ல நீ இந்த எபெக்ட் கொடுக்கிறதும் கிக்கா தான் இருக்கு..." கண்கள் சொருகுபவன் போல் சொக்கி காண்பித்தவன் அவள் அருகில் வந்து கொண்டே இருந்தான்...

சுவர் இடிக்க மேலே செல்ல முடியாமல் விழித்தவளை கண்டு நம்பியார் போல் கைகளைப் பிசைந்து கொண்டு வில்லன் சிரிப்பு சிரித்தவன், "வசமா மாட்டிக்கிட்டியாடி என் ரௌடி... உன்னை என்ன செய்றேன் பாரு..." அவளின் இரு பக்கமும் கையை அணைவாய் ஊன்றி தன் உடல் அவள் மேல் உரச நெருங்கி நின்றவன் அவளை நோக்கி குனிந்தான்...

"அது எப்படிடா அவளைக் கல்யாணம் பண்ணிக்கச் சம்மதிச்சிட்டு என் கிட்டேயும் இப்படி ரொமான்ஸ் பண்ற... உன்னால எப்படிடா முடியுது...? என்னால முடியலைடா... தள்ளி போ..." என்று அவனைக் கண்டு கோபத்துடன் கத்தியவள் வெறுப்புடன் முகத்தைத் திருப்பிக் கொள்ள...

தாலி கட்டி விட்டு அவளை அம்போவென விட்டு விட்டு அவன் போனதில் கூட அவளுக்கு அவ்வளவு கோபம் இல்லை போலும்... ஆனால் அவன் வேறு பெண்ணைத் திருமணம் செய்யச் சம்மதித்தது தான் அவளுக்கு இருந்த பெரும் கோபமாய் இருந்தது...

"அப்படி அவள் கூட ரொமான்ஸ் பண்ண முடியாம வலிய வந்தவளையும் மகராசி நீ பத்தி விட்டுட்டியே... இனி முத்தத்துக்கும் அந்த மேட்டருக்கும் அவள் கிட்டயா போய் நிக்க முடியும்... உன் கிட்டத்தான் வந்து நிக்க முடியும்... உனக்கு விருப்பம்ன்னா சொல்லு... முருகன் மாதிரி வள்ளி தெய்வானை ரெண்டு பேரையும் கட்டிக்கிட்ட மாதிரி நானும் கட்டிக்கிறேன்... எனக்கு முழுச் சம்மதம் பா... கண்ணா ரெண்டு லட்டு திங்க ஆசையான்னு கேட்டா வேண்டாம்ன்னா சொல்ல போறேன்... சொல்லுடி அவளையும் கட்டிக்கவா... இல்லை வச்சிக்கவா... அவளுக்கு எதுன்னாலும் ஓகே தான்... அந்தளவுக்கு என்னைக் காதலிக்கிறாளாம்... சொல்லுடி என் வாயாடி..."

கொஞ்சம் கூட ஈவு இரக்கம் இல்லாமல் அடுத்தப் பெண்ணை வைத்துக் கொள்வது பற்றிக் கட்டிய மனைவியிடம் பேசுகிறோமே என்ற லஜ்ஜை சிறிதும் இல்லாமல் பேசியவனைக் கண்டு அவளுக்குக் கண்கள் கரித்தது...

கண்களில் நீர்த்துளிகள் துளிர்க்க அவனைப் பார்த்தவளின் பார்வையில் அவனது இதயம் அடியோடு தடம் புரண்டது... அவளது கண்ணீரை துடைக்க வேண்டும் என்று அவனது கைகள் பரபரத்தது... ஆனால் அதைச் செய்ய ஏனோ அவனது ஈகோ இடம் கொடுக்கவில்லை...

அவளையே அவன் பார்த்துக் கொண்டு இருந்தான்... ஆனால் அவளது அருகாமையில் அவன் கொஞ்சம் கொஞ்சமாய்த் தன்னை இழந்து கொண்டு இருப்பதை மட்டும் அவன் உணர்ந்தே இருந்தான்...

"ராசா... ராசா..." பாக்கியத்தின் குரலில் அவனது மயக்கம் தெளிந்தது... ஆனாலும் அவளை விட்டு விலக அவனுக்கு மனம் வரவில்லை...

"நானே ஒரு வில்லன்... எனக்கு இந்தக் கிழவி தான் வில்லி..." என்று கடுப்புடன் முணுமுணுத்தவன் அவளை விட்டு விலக எண்ணியவன் பின் என்ன நினைத்தானோ சட்டென்று அவளது முகம் நோக்கி குனிந்து அவளது

விழிநீரை துடைத்து விட்டான் தனது இதழ் என்னும் தூரிகையால்...

நொடி நேரத்தில் அதைச் செயலாற்றி முடித்து நிமிர்ந்தவன், "மீதியை நைட் பார்த்துக்கலாம்..." என்று அவளைப் பார்த்துக் கண்சிமிட்டினான்...

"இதற்குத்தானே ஆசைப்பட்டாய் யம்மு பேபி..." என்று முத்தம் இடுவது போல் உதட்டை குவித்தவன் பின் உல்லாசமாய்ச் சீழ்க்கை அடித்தபடி அங்கிருந்து நகன்றான்...

அவனது செய்கையில் அரண்டு போய் நின்று இருந்தவளுக்கு அவனது 'யம்மு பேபி' என்ற அழைப்பு அவளது உயிர் வரை தீண்டிச் சென்று அவளுக்கு இதம் அளித்தது...

மோதல் தொடரும்...

## களம் : 10

பரந்தாமன் தன் முன் நின்று இருந்த சின்ன மகள் யமுனாவை யோசனையாய் பார்த்தார்... காலையில் அவள் இங்கே கிளம்பி வந்த வேகம் என்ன... மலர்ச்சி என்ன... ஆனால் இப்போது வாடிய முகத்துடன் குழப்பத்தைச் சுமந்து கொண்டு இருப்பவளை கண்டு அவரின் மனம் கவலை கொண்டது...

ஒரு பெண்ணின் தகப்பனாய் அவள் யுவாவை தேர்வு செய்ததை அவரால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை... அவளுக்குச் சற்று வாய் துடுக்கு அதிகம் தான்... குறும்புத்தனமும் அதே போல் அதிகம் தான்... அதற்காகத் தெரிந்தே அவளை யுவாவிடம் விட்டு விட்டு செல்ல அவருக்கு மனம் ஒப்பவில்லை...

"பாப்பா... உண்மையைச் சொல்லு அவன் உன்னைக் கட்டாயப்படுத்திக் கல்யாணம் பண்ணினானா...? அப்படி எதுவும் நடந்து இருந்தா தைரியமா சொல்லு... அவனை ஒருவழி பண்ணிடறேன்... ஆனா காதல் கத்திரிக்காய்ன்னு ஏதாவது உளறினே நான் பொல்லாதவன் ஆகிருவேன்... போயும் போயும் நீ காதலிக்க இந்த உதவாக்கரை தான் கிடைத்தானா...?"

அவரின் மற்ற எந்த வார்த்தைக்கும் வாயை திறக்காதவள் அவரின் கடைசி வார்த்தைக்கு மட்டும் வாயை திறந்தாள்... அவனை உதவாக்கரை என்று அவர் கூறியது கேட்டு அவளுக்குக் கோபம் வந்தது...

"அந்த உதவாக்கரைக்குத் தான் கொஞ்ச நாளைக்கு முன்னே என்னைக் கல்யாணம் பண்ணி கொடுக்கச் சரின்னு நீங்க சம்மதிச்சீங்க..." அவளின் வெடுக்கென்ற பேச்சிலேயே அவளின் மனம் புரிந்து போனது அவருக்கு...

"ஓஹோ... அம்மணிக்கு அந்தளவுக்கு அவன் மேல் காதலோ... ஒண்ணு சொல்றேன் நல்லா கேட்டுக்கோ... நீ ஒரு உருப்படாதவ... அவன் ஒரு உதவாக்கரை... நீங்க ரெண்டு பேரும் சேர்ந்து புள்ளை குட்டி பெத்து எப்படி வாழ

போறீங்கன்னு நான் பார்க்கத்தானே போறேன்... ஆனா ஒண்ணு எந்தக் காரணத்த கொண்டும் அவன் சரியில்லைன்னு என் வீட்டு வாசப்படி மிதிக்காதே... இது நீயா தேடிக்கிட்ட வாழ்க்கை... கட்டின பொண்டாட்டியை பத்தி வெளியில் சொல்ல தைரியம் இல்லாதவன் இவன் எல்லாம் ஆம்பிள்ளைன்னு நம்பி அவன் கையில் நீ உன் வாழ்க்கையை ஒப்படைக்கிற... ம்... பார்க்கலாம் அது எந்தளவுக்குன்னு..." என்று அவளிடம் கத்தியவர் அந்த அறையை விட்டு கோபமாய் வெளியேறினார்...

அவர் தான் யமுனாவை யுவாவுக்குத் திருமணம் செய்து கொடுத்தால் நன்றாக இருக்கும் என்று நினைத்தவர்... ஆனால் எப்போது அவன் பெரியவர்களுக்குத் தெரியாமல் தன் மகள் கழுத்தில் தாலி கட்டியது மட்டும் இல்லாமல் அதைச் சொல்லாமல் மறைத்துவிட்டது தெரிந்ததோ அப்போதே அவன் மீது அளவுகடந்த வெறுப்பு எழுந்து விட்டது... அதற்கு உடந்தையாய் இருந்த மகள் மீதும் அவருக்கு ஆத்திரம் குறையவில்லை... சம்பந்திக்காகச் சற்று அடக்கி வாசித்தார் அவ்வளவே... ஏனெனில் யமுனா மட்டும் அவர் மகள் இல்லையே... கனிமொழியின் வாழ்க்கையும் இதில் அடங்கி இருப்பதால் தன் கோபத்தை அடக்கி கொண்டார்...

"யமுனா நீ இப்படிப் பண்ணுவேன்னு நான் கொஞ்சமும் நினைக்கவே இல்லை... அது எப்படிடி அம்மாவுக்குத் தெரியாம தாலியை மறைச்சு வைச்ச... நாங்களே கேட்டோமே உனக்கும் அந்தத் தம்பிக்கும் கல்யாணம் பண்ணி வைக்கவான்னு... அப்போ எல்லாம் பிடிக்கலைன்னு மறுத்துட்டு... இப்போ எப்படி நீங்க ரெண்டு பேரும் கல்யாணம் பண்ணிக்கிட்டீங்க... எப்போ பண்ணுனீங்க...?" அவரது கேள்விக்குப் பதில் சொல்ல முடியாமல் அவளது தலை தானாகக் குனிந்தது...

இதுவரை யமுனா தலை நிமிர்ந்து பதில் சொல்லியே பழக்கப்பட்டவள்... யுவா விசயத்தில் மட்டும் அவளால் இப்படித் தலையைக் குனிவதை தவிர அவளுக்கு வேறுவழி

தெரியவில்லை... தவறு அவனுடையதாக இருந்தாலும் அதற்கு அவளும் உடந்தை அல்லவா...

"சரி நடந்ததை நினைச்சு வருத்தப்படுறதை விட இனிமேல் என்ன செய்றதுன்னு யோசி... தெரிஞ்சோ தெரியாமலோ அந்தத் தம்பியும் நீயும் கல்யாணம் பண்ணிக்கிட்டீங்க... இனிமேல் நீ சின்னப்பிள்ளை இல்லை... காலையில் பார்த்தே தானே அவரோட கோபத்தை... அவரோட குணத்தை அனுசரிச்சு நடந்துக்கோ... மேலும் மேலும் அவரைக் கோபப்படுத்தி உன்னைக் காயப்படுத்திக்காதே... அவர் அடங்கும் ரகம் இல்லை... நீயும் அடங்கும் ரகம் இல்லை... ரெண்டு பேரும் எப்படி ஒண்ணா சேர்ந்து குப்பை கொட்ட போறீங்களோ தெரியலை... அந்தக் கடவுள் தான் உங்க ரெண்டு பேரையும் காப்பாத்தணும்... எந்த நேரத்திலும் எனக்குக் கெட்டப்பெயர் வாங்கிக் கொடுத்திடாதே... உன் வாழ்க்கை உன் கையில்..." என்று அறிவுரை கூறியவரை அப்போதும் ஏறிட்டும் பார்க்காமல் யமுனா தலை குனிந்து இருந்தாள்...

பழைய யமுனாவாக இருந்து இருந்தால், 'பாருங்க காதுல ரத்தம் வருது... ம்மா உங்க அட்வைசை கொஞ்சம் நிறுத்துங்க...' என்று கத்தி ஆர்ப்பாட்டம் செய்து இருப்பாள்...

மகளின் இந்த அமைதியே அவளது மனமாற்றத்தை எடுத்துரைப்பதாய் இருக்க அவர் ஒரு பெருமூச்சு விட்டவாறு,

"பார்த்து பத்திரமா இருந்துக்கோ... எதுவா இருந்தாலும் கனி கிட்ட கேட்டு செய்... உன் இஷ்டத்துக்கு எதையாவது செஞ்சி கெட்ட பெயர் வாங்கிடாதே..." என்று சொல்லிவிட்டு அவரும் அறையை விட்டு வெளியேற அவர் பின்னே செல்ல மனம் இல்லாதவளாய் அவள் அங்கேயே தேங்கி நின்றுவிட்டாள்...

ஜன்னல் வெளியே இலக்கற்று இருளை வெறித்துக் கொண்டு இருந்தவளின் மனம் முழுவதும் குழப்பம் மட்டுமே நிறைந்து இருந்தது...

"இங்கே என்ன பண்ணிக்கிட்டு இருக்கப் பேபி..." என்று கேட்டபடி வந்த யுவாவின் வருகையைக் கண்டு கொள்ளாது அவன் புறம் திரும்பாமல் அவள் அப்படியே நின்று இருக்க... அவள் பின்னோடு வந்து அவளை அணைத்தார் போன்று நின்றவன் ஜன்னல் கம்பியை பற்றியபடி அவள் தலையில் வைத்து இருந்த மல்லிகைப்பூவை வாசம் பிடித்தான்...

அவனது அருகாமையில் அவளது குழப்பம் அதிகமாகி முத்து முத்தாய் அவளுக்கு வியர்க்க துவங்கியது...

"பார்த்தியா உன் கிட்டே வந்தாலே எனக்கு எல்லாம் மறந்து போகுது... உன் அப்பா, அம்மா கிளம்பிட்டாங்க... வழியனுப்ப உன்னை வர சொன்னாங்க..." என்றவன் அவளின் கைப்பிடித்து அழைக்க...

ஏதோ நினைவில் அவனது கையைப் பிடித்து உதறினாள் அவள்...

"என்னடி ரொம்பத்தான் பண்ற...? இதுக்கே இப்படிக் கையை உதறினா இன்னும் கொஞ்ச நேரத்துல நடக்கப் போறதுக்கு என்னடி பண்ணுவ...?"

அவன் கேட்டதும் அவளின் மனமும் உடலும் ஒரு சேர அதிர்ந்தது... திடுக்கிட்டவளாய் அவனை ஏறிட்டு பார்த்தாள்... அவளது பார்வை உணர்த்திய செய்தி அவனுக்குப் புரிந்ததோ என்னம்மோ சிறிது நேரம் அமைதியாய் இருந்தான்...

"இப்போ போகலாமா..." என்று மீண்டும் அவளின் கையைப் பிடித்து அவன் கேட்க...

"ம்..." என்றவளிடம் இருந்து மேலே ஒரு வார்த்தை வரவில்லை...

உலக அதிசயமாய் வாயாடாமல் இருந்தவளை ஆச்சிரியமாய்ப் பார்த்தவன் ஒன்றும் பேசாது நடக்க அவள் அவனைப் பின் தொடர்ந்தாள்...

விடைப்பெற்று பெற்றோர் செல்லும் போது அவளையும் அறியாமல் அவளது கண்கள் கலங்கியது...

"அன்னைக்குச் சொன்னியே பிரியமானவங்களைப் பிரியற வலி உனக்குத் தெரியுமான்னு... அதையே இப்ப நான் உன் கிட்ட கேட்கவா... நான் உன் புருசன்... ஒரு காலத்துல என்னைக் காதலிச்சதா சொன்னவ நீ... அப்போ என்னைப் பிரிஞ்சப்போ நீ இப்படித்தான் அழுதியா...? புருசனை விட அப்பா, அம்மா, அக்கா எல்லோரும் உனக்கு முக்கியமானவங்க அப்படித்தானே..." அவளது கண்களை உற்று பார்த்து கேட்டவன்,

"ம்... நீயாவது எனக்காக அழுவதாவது... நான் தான் உனக்குப் பிடிச்சவன் இல்லையே... உன்னைப் பொருத்தவரையில் நான் வில்லன் தான் இல்லையா...?" இறுகிய குரலில் கேட்டவன் அவளின் பதிலை எதிர்பாராமல் உள்ளே சென்றான்...

அவன் முதுகை பார்த்துக் கொண்டு நின்று இருந்தவளை கனி தான் ஆறுதலாக அழைத்துச் சென்றாள்...

யமுனாவும் கனியும் வீட்டினுள் நுழையும் போது வீட்டு உறுப்பினர்கள் அனைவரும் வரவேற்பறையில் கூடி இருந்தனர்...

"ப்யூட்டி உன் புள்ள எதுக்கு இப்ப பஞ்சாயத்து கூட்டி இருக்காரு... இப்ப எனக்கு முக்கியமான வேலை இருக்குல்ல..." என்ற பேரனை முறைத்தார் பாக்கியம்...

"நான் அந்த ராங்கியை துரத்தி விடுன்னு சொல்லிட்டு இருக்கேன்... நீ என்னடான்னா அவ கூடச் சேர்ந்து வாழ்றதை பத்தி கவலைப்பட்டுட்டு இருக்க... ராசா நீ பேசுறது ஒண்ணும் சரியில்லை... சொல்லிட்டேன் ஆமாம்..."

"அய்யே கிழவி இது கூட ஒரு வகையான பழிவாங்குற டெக்னிக் தான்... வேணும்ன்னா உனக்காக ஒண்ணு செய்றேன்... அவளுக்கு ஒரு புள்ளைய கொடுத்து அவள் வீட்டுக்கு அவளைப் பத்தி விட்றலாம்... சரியா... அது கூட

உனக்காகத் தான் கிழவி... உனக்காக நான் எதை வேணும்ன்னாலும் செய்வேன்..."

சிரிக்காமல் பொய் மேல் பொய்யாய் அடுக்கிய பேரனை கண்டு பூரித்துப் போனார் அவர்... தன் மீது அவனுக்கு எத்தனை அன்பு என்று...

"யுவா..." சக்ரபாணியின் குரலில் இருந்த அழுத்தம் அவனை நிமிர்ந்து அமர செய்தது... அவரது அந்தக் குரலே அவரது மனநிலையை எடுத்து காட்ட அவரின் கேள்விக்கணைக்கு அவன் தயாரானான்...

"எப்போ ரெண்டு பேரும் கல்யாணம் பண்ணிக்கிட்டீங்க...?" அதிரடியாய் வந்தது அவரது கேள்விக்கணை...

என்னவென்று சொல்வான் படிக்கிற காலத்தில் அவனுக்கு இருபத்திநான்கு, அவளுக்குப் பதினேழு வயதில் திருமணம் செய்து கொண்டோம் என்றா... அன்று திமிராய் செய்த அந்தக் காரியம் இன்று அவனுக்குத் தலைக்குனிவை கொடுத்தது... இருந்தாலும் சமாளித்துக் கொண்டு,

"எப்போ நடந்தா என்ன...? எங்களுக்குக் கல்யாணம் முடிந்தது உண்மை... அவளோட புருசன் நான்... என்னோட மனைவி அவள்... இதில் எந்த மாற்றமும் இல்லை..." உறுதியான குரலில் முடித்தவன் இனி இது பற்றி எந்தக் கேள்வி கேட்டாலும் தான் வாய் திறக்க போவது இல்லை என்பது போல் அமைதியானான்...

"அவன் தான் சொல்ல மாட்டேங்கிறான்... நீயாவது சொல்லும்மா...?" மருமகளைப் பார்த்து கேட்டார் அவர்...

இப்போது யுவா திகில் பரவ மனைவியைப் பார்த்தான்... தன் மீதுள்ள கோபத்தில் அவள் உண்மையைப் போட்டு உடைத்து விட்டால் அதன் பின் தன் நிலைமை...? நினைக்கவே பயங்கரமாய் இருந்தது அவனுக்கு...

ஆனால் அவளிடத்தில் இருந்து வந்த பதிலோ அவளது விசும்பல் ஒலி மட்டுமே... அதைக் கண்டு சக்ரபாணி பதறிப்

போனார்...

"ஏன்ம்மா அழுவற...? அவன் உன்னை ஏதும் மிரட்டி கல்யாணம் பண்ணிக்கிட்டானா...?"

அவருக்குப் பதிலாய் அவளின் மறுப்பான தலையசைப்பே பதிலாய் கிடைக்க அதில் நிம்மதி அடைந்தது சக்ரபாணி மட்டும் அல்ல யுவாவும் தான்...

"சரி உன் கல்யாணத்தை விடு... உன்னை நம்பி ஒரு பொண்ணு வந்து இருக்கா... அதுவும் கட்டின புடவையோடு... இனியாவது உழைக்கணும்ங்கிற ஐடியா இருக்கா... இல்லை எங்க காசில் ஓசியில் காலத்தை ஓட்டலாம்ன்னு ஐடியால இருக்கியா...?" அவர் சொன்னதும் அவனுக்குச் சுரீர் என்று கோபம் எழுந்தது...

"ஏய் கிழவி... இது எல்லாம் உன் புருசன் சம்பாதிச்ச சொத்து தானே... என்ன சும்மா அந்தாளு அவர் சம்பாதிச்ச சொத்து மாதிரி சும்மா சும்மா பிலிம் காட்டுறாரு... தாத்தா சொத்து பேரனுக்கு உண்டா இல்லையா... என் சொத்தை பிரிச்சுக் கொடுக்கச் சொல்லு... அதை வச்சி என் பொண்டாட்டியை நான் காப்பாத்திக்கிறேன்..."

அவன் கத்திய கத்தலில் யமுனா கூடத் தனது அழுகையை மறந்து அவனை வேடிக்கை பார்த்தாள்...

"ஆக மொத்தம் உழைச்சு சம்பாதிக்கிற எண்ணம் இல்லை... உட்கார்ந்து சாப்பிடத்தான் எண்ணம் இருக்கு..." என்று அவனைக் கடிந்த சக்ரபாணி யமுனாவிடம் திரும்பி,

"இவனை நம்பி எப்படிம்மா கழுத்தை நீட்டின...?"

அவரது பேச்சு அவனை உசுப்பேத்தி இருக்க, "மனோ நாளைக்கு நான் கடைக்கு வர்றேன்... எனக்கு ஒரு வேலையைப் போட்டு கொடு..." என்ற யுவாவை அதிசயமாய்ப் பார்த்தனர் எல்லோரும்...

"ஆனா லேடிஸ் செக்சனா பார்த்து வேலை போட்டு கொடு... அப்பத்தான் நாலு பிகரை பார்த்துட்டு எனக்கும் நேரம்

போகும்..." என்றவனை இப்போது எல்லோரும் கொலைவெறியுடன் பார்த்தனர்.

'உன்னைப் பத்தி எனக்கு நல்லாவே தெரியும்டா...' என்பது போல் யமுனா முறைத்து பார்த்தாள் அவனை...

"எப்படியோ புத்தி வந்தா சரி..." என்ற சக்ரபாணி எழுந்து சென்றார்...

"என்ன யம்மு பேபி நம்ம ரூமுக்கு போகலாமா...?" கைகளை நீட்டி சோம்பல் முறித்தபடி கேட்ட யுவா மனைவியைப் பார்த்துக் கண்சிமிட்டினான்...

அத்தனை பேர் இருக்கையில் இப்படி அழைக்கும் கணவனை என்ன செய்வது என்று தெரியாமல் அவள் விழிக்கும் போதே சரளா, "உனக்குத் தூக்கம் வந்தா நீ போய்த் தூங்கு... அதுக்கு எதுக்கு அவளைக் கூப்பிடுற...? யமுனா இன்னைக்கு அத்தை கூடத் தான் படுத்துக்கப் போறா..."

"என்னது...?" நெஞ்சை பிடித்துக் கொண்டான் அவன்...

"இது செல்லாது... இது போங்கு ஆட்டம்... அவள் என் வொய்ப்... அப்போ அவள் என் கூடத் தான் இருக்கணும்..."

"டேய் மானத்தை வாங்காதேடா... கல்யாணம் தான் நாள் நட்சத்திரம் பார்க்காம பண்ணிக்கிட்டீங்க... இதுக்காவது நாள் நட்சத்திரம் பார்க்க விடுடா..."

இப்போது அவனது விழிகள் அர்த்தம் பொதிந்த ஒரு பார்வையை அவளை நோக்கி வீசியது... அதைத் தாங்கி கொள்ளும் சக்தி இல்லாமல் யமுனா வேறு பக்கம் திரும்பி கொண்டாள்...

"அம்மா இது கொஞ்சமும் சரியில்லை... இதுக்கு எல்லாம் நாள் நட்சத்திரம் பார்த்துக்கிட்டு..." என்று சின்னப்பிள்ளை போல் காலை உதைத்துக் கொண்டு எழுந்தவன் மேலே ஒன்றும் பேசாது தனது அறைக்குச் சென்றான்...

யமுனாவை பாக்கியத்துடன் தங்க சொல்ல அவரோ அதற்கு மறுத்து விட அவள் தனி அறையில் தங்க வைக்கப்பட்டாள்...

"நீ படுத்துக்கோ யமுனா... தண்ணி எல்லாம் எடுத்து வச்சிட்டேன்..." என்ற கனி அவளை அறையில் விட்டு விட்டு செல்ல...

"கனி கொஞ்ச நேரம் பேசிட்டு இர்றேன்..." அவளது கைப்பிடித்து யமுனா அழைக்க...

தயங்கி கொண்டே அமர்ந்தாள் கனி... மனோ அவளுக்காகக் காத்துக் கொண்டு இருப்பான் என்ற தவிப்பில் அவள் அமர்ந்தாள்... நாள் முழுவதும் வேலை வேலை என்று ஓடுபவனிடம் இரவில் மட்டுமே அவளால் நிம்மதியாய் பேச முடியும்... அவனுடன் சந்தோசமாய் இருக்க முடியும்... அதுவும் தடை படுவதைக் கண்டு அவள் நொந்து போய் அமர்ந்து இருந்தாள்...

மணி பதினொன்று ஆகவும் கனி கொட்டாவி விட்டபடி, "யமுனா... எனக்குத் தூக்கம் வருது... நீ படு..." என்று எழ...

அதற்கு மேல் சகோதரியை தன்னுடன் இருக்கச் சொல்வது அவளுக்கே அபத்தமாகத் தெரிய, "சரி கனி..." என்று விடை கொடுக்க... கனி கதவை சாத்தி கொண்டு வெளியில் சென்றாள்...

யமுனாவிற்குத் தூக்கம் என்பது அறவே இல்லை... காலையில் நடந்த விசயங்களை எல்லாவற்றையும் மனதுக்குள் நினைத்து நினைத்து மருகி கொண்டு இருந்தாள்...

அவள் நினைத்தது என்ன... நடந்தது என்ன...?

யுவாவின் கரங்களில் தன் வாழ்க்கை சிக்கி கொண்டதை அவளால் கொஞ்சமும் நினைத்து கூடப் பார்க்க முடியவில்லை... ஒரு காலத்தில் அவனது கரங்களில் விருப்பமுடன் சரணாகதி அடைந்தவள் இன்று அவனது

கரங்களில் தான் குரங்கு கையில் சிக்கிய பூமாலையாகவே தன்னை உணர்ந்தாள்...

அந்நேரம் கதவு திறக்கும் ஒலியில் திடுக்கிட்டு போய் நிமிர்ந்தவள் அங்கே கதவை சாத்தி தாளிட்டுக் கொண்டு இருந்த யுவாவை சற்றும் எதிர்பார்க்கவில்லை...

கனி சென்றதும் கதவை தாளிடாத தன் மடமையை எண்ணி நொந்து போய் அமர்ந்து இருந்தாள்...

யுவா அவள் மேலிருந்த பார்வையை விலக்காமல் அவள் அருகில் வர அவள் படக்கென்று கட்டிலில் இருந்து எழுந்து நின்றாள்...

"என்னடி பொண்டாட்டி எப்படி இருக்க...? நான் இல்லாம சந்தோசமா இருக்கிற மாதிரி தெரியுதே... அப்படி எல்லாம் உன்னைச் சந்தோசமா விடக் கூடாதே..." என்று தாடையைத் தடவியபடி யோசித்தவனைக் கண்டு அவளுள் திகில் பரவியது...

அடுத்து என்ன செய்யப் போகிறேனோ என்ற அச்சத்தில் மனம் படபடக்க விழிகள் விரிய அசையாமல் மூச்சை இழுத்துப் பிடித்துக் கொண்டு நின்று இருந்தாள்... அவளுக்கே இது தான் தானா என்று சந்தேகமாக இருந்தது...

"கடைசியில் ஒருவழியா என்னைத் தேடி வந்துட்ட..." என்றவன், "நாலு வருசமா வழி தெரியாமல் இருந்த பாதைக்கு இன்னைக்குத் தான் வழி தெரிஞ்சு இருக்கு போல..." நக்கலாய் கேட்டான்...

அவன் அப்படிக் கேட்டதும் அவளது நடுக்கம் குறைந்து பழைய தைரியமும், துடுக்குத்தனமும் அவளிடம் எட்டி பார்க்க,

"ஆமாம் உன்னைத் தேடி வர்ற மாதிரியா நீ நடந்துக்கிட்ட... நான் எதுக்குடா உன் கிட்ட வாழ்க்கை பிச்சை கேட்டு வரணும்... இப்பவும் இந்தத் தாலிக்கான

அங்கீகாரத்துக்காகத் தான் வந்தேனே தவிர உன் கூடச் சேர்ந்து வாழ்றதுக்கு இல்லை..."

"சோ என் கூட நீ வாழ விரும்பலை அப்படித்தானே..." என்றவனைக் கண்டு முறைத்தவள் பதில் பேசாமல் இருந்தாள்...

"நீ சொல்றியே அங்கீகாரம்ன்னு அதுக்கு அர்த்தம் என்ன தெரியுமா...? நான் உன் கணவன்ங்கிறது மட்டும் இல்லை... தாம்பாத்திய வாழ்க்கையில் நீயும், நானும் இணைவதற்கான அங்கீகாரமும் கூட... அதாவது..."

அதன் பின்பு அவன் அச்சில் அரங்கேற்ற முடியாத பச்சை வார்த்தைகள் கொண்டு புனிதமான தாம்பத்தியத்தை அசிங்கமாய் விளக்கிய போது அதைக் கேட்க முடியாமல் தன் காது இரண்டையும் பொத்தி கொண்டாள் யமுனா...

"ச்சீ... ச்சீ... வாயை கழுவு..." ஆத்திரத்தில் வெடித்தாள்...

"உண்மையைச் சொன்னா அதுக்கு எதுக்கு இப்படிக் கத்துற... அதைத் தானே காலம் காலமா கல்யாணம்ங்கிற பேரில் எல்லோரும் செய்றாங்க... அதில் நான் மட்டும் விதிவிலக்கா என்ன...?" எகத்தாளமாய்க் கேட்டவன்,

"ஒரு காலத்துல நீயும் அதுக்கு மயங்கியவ தான் அதை நியாபகத்தில் வச்சிக்கோ... இன்னைக்கு என்ன பெரிய பத்தினி தெய்வம் மாதிரி சிலிர்த்துக்கிற..."

எந்த வார்த்தை அவன் வாயில் இருந்து வர கூடாது என்று நினைத்தாளோ அதையே அவன் சொல்லி அவளை மேலும் நோகடித்தான்...

'கடவுளே இதுக்கு மேலேயும் என்னை உயிரோட வச்சு இருக்கியே... இந்த நொடி என் உயிரை எடுத்துட கூடாதா...' என்று கடவுளை வேண்டினாள்...

அதற்கு அந்தக் கடவுள் செவி சாய்க்கவில்லை... உப்பு தின்னவன் தண்ணி குடித்துத் தான் ஆக வேண்டும்... அது

போல் தவறு செய்த அவள் தண்டணையை அனுபவித்துத் தான் ஆக வேண்டும்... அதற்கு வேறு தீர்வு இல்லையே...

அவள் கழுத்தில் இருந்த தாலியை அவள் கண்முன் ஆட்டி, "இது நான் உனக்குப் போட்ட பிச்சை... அன்னைக்கு நான் மட்டும் இதைக் கட்டலைன்னா இன்னைக்கு உன் நிலை நான் சொன்ன நிலை தானே..." என்றவன், "இதை எப்போ எந்த நிலையில் நான் உனக்குக் கட்டினேன்னு நியாபகம் இருக்கா...?" கூர்மையான அவனது பார்வை அவளது மேனியை அங்குலம் அங்குலமாய் ரசித்துப் பார்த்தது...

அவன் கேட்டதும் அன்று அவன் தன் கழுத்தில் தாலி கட்டிய தருணம் நியாபகத்தில் வந்து ஆத்திரத்தில் அவளது முகத்தைச் சிவக்க வைத்தது... திட்டமிட்டு அவளை ஏமாற்றி அவன் தாலி கட்டியதை இப்போது நினைத்தாலும் அவளுக்கு மனம் தீயாய் பற்றி எரிந்தது...

"அன்னைக்கு இருந்ததை விட இன்னைக்குச் சும்மா கும்முன்னு ஆளை அசத்துற அளவுக்கு உன் அழகு கூடி தான் இருக்கு... இந்த அசரடிக்கிற அழகு தான்டி அன்னைக்கும் சரி இன்னைக்கும் சரி என்னைப் பைத்தியக்காரனாக்குது..."

அவள் அவனை உயிராய் நினைத்துக் காதலித்துக் கொண்டு இருக்க அவனோ உடல் தேவையை மட்டுமே கருத்தில் கொண்டு பேசியதை கண்டு அவளது உடல் உருக்கிய இரும்பில் குளித்தது போல் நெருப்பாய்க் காந்தியது...

"அந்தப் பைத்தியத்தைக் கொஞ்சம் தெளிய வச்சிரலாமா..." என்றவன் அடுத்த நொடி அவளைத் தன் அணைப்பில் கொண்டு வந்தான்...

அவனது செய்கையில் அவ்வளவு நேரம் சுரணையற்று இருந்தவளுக்கு உணர்வு வந்தது...

"இந்த ஆம்பிளை தேடுறவ உனக்கு எதுக்கு...?" அவள் திமிற...

"ஆனா எனக்கு இந்தப் பொம்பளையைத் தானே பிடிச்சு இருக்கு..." என்றவன் அவளின் இதழ் நோக்கி குனிந்தான்...

அவள் இருந்த மனநிலையில் அவன் கூறியதை கவனித்துக் கேட்கவில்லை... அப்படியே கேட்டாலும் அவன் நடந்து கொள்ளும் விதத்தில் அவனை நல்லபடியாக ஒரு போதும் அவள் நினைக்கப் போவதும் இல்லை...

அவனது முகத்தைத் தள்ளிவிட்டபடி, "என்னைத் தொட்ட கையைப் பினாயில் ஊத்தி கழுவணும்ன்னு சொன்னவன் தானேடா நீ... இப்போ மட்டும் எதுக்குத் தொடுற..."

"உன்னைத் தொட்டதுக்கு அப்புறம் மொத்தமா பினாயில் போட்டு குளிச்சிடறேன் பேபி... சரியா போயிரும்..." உல்லாசமாய்ச் சொன்னவன் அவளது கையைத் தன் கை கொண்டு அடக்கியவன் அவளின் இதழை முற்றுகையிட்டு அவளைத் தன் வசமாக்க முனைந்தான்...

கொஞ்சம் கொஞ்சமாய் அவளைத் தன்வசப்படுத்த நினைத்தவன் முழுவதும் அவள் வசமாகி போனது விந்தையிலும் விந்தை...

அவனது ஒவ்வொரு செய்கையும் நான்கு வருடங்களுக்கு முன் நடந்த சம்பவங்களை அவளுக்கு மீண்டும் நியாபகப்படுத்தியது... இத்தனை வருடங்களாக எதை மறக்க முயன்று வருகிறாளோ அதை அவன் அவளுக்கு நினைவூட்டி கொண்டு இருந்தான் தனது அணைப்பாலும், முத்தத்தாலும்...

அன்று அவன் மருத்துவமனையில் உயிருக்கு போராடி கொண்டு இருப்பதாய் கேட்ட போது பல வருடங்களுக்குப் பின் அவளது மனம் அந்த நிகழ்வை நினைத்துப் பார்த்தது... அதன் பின் இப்போது...

'அன்றும் இப்படித்தானே தொட்டான்... இப்படித்தானே உயிர் உருக காதலில் என்னுள் கரைந்து புதைந்தான்... அப்படித்தான் நானும் நினைத்தேன்... கடைசியில் அவன்

என்னை என்னை...' அதற்கு மேல் நினைக்க முடியாமல் அவள் கண்களில் கண்ணீர் ஆறாய்ப் பெருகியது...

'அவனது ஒவ்வொரு தொடுகையும் காதலால் கசிந்து உருகியது என்று எண்ணி எண்ணி பூரித்தேனே... ஆனால் அது எல்லாம் அவன் மனதின் வன்மத்தின் தடம் என்பதை எப்படி மறந்து போனேன்... பழிவாங்குவதற்கு ஏற்படுத்திய சாட்சி என்பதை எப்படி மறந்து போனேன்...'

அன்றைய அவனது கூடலும் துரோகமும் மாறி மாறி காட்சிகளாய் மனதில் ஓட அதைத் தாங்கி கொள்ள முடியாமல் அதற்கு மேல் ஓடுவதற்கு சக்தி இல்லாமல் அவளது நினைவு அத்தோடு தன் ஓட்டத்தை நிறுத்தி கொண்டது...

அதன்பின் அவளது நினைவலைகள் மொத்தமாய் அறுந்து விழ வாடிய கொடியாய் துவண்டவள் அவனது கரத்திலேயே மயங்கி விழுந்தாள்...

"நீ தேடும் காமம் என்னுள் கொட்டி கிடக்கிறது என் கணவா...
நான் தேடும் காதல் உன்னுள் துளியாவது எட்டி பார்க்கவில்லையா...?
பெண் மனம் தேடும் காதல் ஆண் மனம் தேடும் காமம்
அது தான் தாம்பத்தியம் என்றால் அது வேண்டாம் எனக்கு...
காமம் நான் உயிருடன் வாழும் வரை
காதல் நான் உயிர் இழந்தாலும் நினைவுகளாய்
உன்னில் வாழ்வேன் கடைசிவரை
காமம் வேண்டும் என்றால் எடுத்துக் கொள் என் ஊனை
காதல் வேண்டும் என்றால் எடுத்து கொள் என் உயிரை
ஊனும் உயிரும் உனக்கு மட்டுமே சொந்தம்
புரிந்து கொள் என் கணவா...
புரியாவிட்டால் எனக்கு விடை கொடு கணவா...
உன் கரங்களில் இறுதி மூச்சை நிறுத்திவிடுகிறேன் நிம்மதியாக...
இப்படிக்கு,
காதலாய் கசிந்துருகும் உன் அன்பு(?) மனைவி..."

மோதல் தொடரும்...

# களம் : 11

"நீ எல்லாம் மனுசனா இல்லை மிருகமாடா...?" ஆத்திரத்துடன் கேட்ட சக்ரபாணி அது மருத்துவமனை என்று கூடப் பார்க்காமல் யுவராஜின் கன்னத்தில் ஓங்கி அடித்தார்...

"அப்பா... ஹாஸ்பிட்டல்ல போய்..." மனோ அவரின் கையைப் பிடித்துத் தடுத்தான்...

"என்னை விடு மனோ... இவனை வெட்டி போட்டா தான்டா என் ஆத்திரம் அடங்கும்... இத்தனை நாள் வீட்டுக்கு அடங்காம இருந்தான்... ஏதோ வயசு கோளாறுன்னு விட்டு பிடிச்சா... இப்போ வாழ வந்த அந்தப் பொண்ணைப் போய் இப்படி... இவனுக்கு எல்லாம் கல்யாணம் ஒரு கேடா... ஒரு பொண்ணோட மனசை புரிஞ்சிக்கத் தெரியாதவன் எப்படி அவளைக் காதலிச்சுக் கல்யாணம் பண்ணிக்கிட்டான்..." அவர் ஆத்திரம் குறையாமல் கத்தினார்...

"ப்ளீஸ்ப்பா... அமைதியா இருங்க..." மனோ அவரைச் சமாதானப்படுத்தி அங்கிருந்த நாற்காலியில் அமர வைத்தவன் தம்பியின் பக்கம் தவறி போய்க் கூடத் திரும்பி பார்க்கவில்லை...

அவனுக்குமே தம்பியின் மீது சிறிது கோபம் இருந்தது... சரளாவும், கனிமொழியும் யமுனா நல்லபடியாகக் கண் விழிக்க வேண்டும் என்ற பதட்டத்தில் இருந்தனர்... சரளாவுக்குமே மகனின் இந்தச் செயல் பிடிக்கவில்லை... ஆனாலும் பெற்ற மகனாயிற்றே அதனால் அவனைக் கடிய முடியாமல் அமைதி காத்தார்...

யமுனாவை மருத்துவமனையில் சேர்த்த பின்னரே அவன் தனது தந்தைக்கு அழைத்து விவரத்தை கூறினான்... விசயம் கேள்விப்பட்ட சக்ரபாணி சின்ன மகன் என்ன செய்தானோ என்று பதறி போய் அந்த இரவு நேரத்திலும் வேறுவழியின்றி மனோவை அழைத்து விசயத்தைக் கூறினார்... ஏனெனில் கனிமொழி யமுனாவின் சகோதரி

அல்லவா... அவளுக்குத் தெரியாமல் எதையும் மறைக்க முடியாது...

ராகவ் குடும்பம் மற்றும் பாக்கியத்தைத் தொந்திரவு செய்யாமல் இவர்கள் நால்வரும் மட்டும் கிளம்பி வந்தனர்... வந்ததும் இளைய மகனிடம் சக்ரபாணி கோபப்பட்டுக் கத்தியது தான் இது...

"காலையில் சம்பந்தி வந்து கேள்வி கேட்பாரு மனோ... அவருக்கு நான் என்ன பதில் சொல்வேன்...? நிக்கிறான் பாரு மரம் மாதிரி..." கோபம் கொஞ்சமும் குறையாமல் அவர் புலம்பி கொண்டு இருந்தார்...

தந்தை அவனை அடித்ததோ, அவனைக் கடிந்து பேசியதோ எதையும் அவன் உணர முடியாதவனாய் உண்மையில் யுவா மரம் போல் உணர்வற்று தான் நின்று இருந்தான்... கண்கள் ஐசியூ வாயிலில் நிலைக்குத்தி நிற்க அவனது மனமோ தன்னவள் பேசிய வார்த்தையிலேயே நிலை கொண்டு அவனுள் புயலின் அமைதியை உள்ளடக்கியதாய் இருந்தது...

'வலிக்குது ராஜ்...' யமுனா மயங்கி சரியும் போது இந்த வார்த்தைகளைக் கூறிக் கொண்டே தான் மயங்கினாள்...

அவள் உணர்வில்லாமல் தன் கைகளில் துவண்ட அந்தக் கணம் அவனது உயிர் அவன் வசம் இல்லை... அரண்டு போய் விட்டான் அவளின் அந்த நிலையைக் கண்டு... அடுத்தக் கணம் அவளை அள்ளி கொண்டு மருத்துவமனைக்கு வந்துவிட்டான்... யாரையாவது எழுப்பிச் சொல்ல வேண்டும்... உதவி கேட்க வேண்டும் என்ற எண்ணம் சிறிது கூட அவனுக்குத் தோணவில்லை...

அவனுக்குத் தோன்றிய எண்ணம் ஒன்றே ஒன்று தான்... அது அவளை எப்படியாவது காப்பாற்றியாக வேண்டும் என்பது மட்டும் தான்... இப்போதும் அவனது மனம் அதைத் தான் வேண்டி கொண்டு இருந்தது... வாழ்க்கையில் எந்த நேரத்திலும் கடவுளை வேண்டாதவன் இன்று மனதுக்குள் கடவுளிடம் மண்டியிட்டு வேண்டினான்...

காலையில் மகளின் நிலை கேள்விப்பட்ட பரந்தாமன், திலகா அடித்துப் பிடித்துக் கொண்டு மருத்துவமனைக்கு ஓடி வந்தனர்... என்னதான் மகள் மேல் கோபம் இருந்தாலும் அவளுக்கு ஆபத்து என்றதும் பெற்ற மனம் துடிக்கத்தான் செய்தது... அதுவும் அவள் அவர்களது செல்ல மகளாயிற்றே... அவர்கள் வரும் வரையிலும் கூட யமுனா கண் விழிக்கவில்லை...

"உருப்பட மாட்டீங்கன்னு சொல்லி என் மகளுக்கு நான் கொடுத்த சாபம் தான் அவளை இப்படி ஆக்கிருச்சு..." என்று புலம்பி கொண்டு வந்த பரந்தாமன் மகளின் இந்த நிலைக்குக் காரணம் மருமகன் தான் என்று தெரிந்ததும் அவரது கோபம் அவன் மீது திரும்பியது...

"இது தான் கட்டிய மனைவியைக் காப்பாத்துற லட்சணமா... பேச்சு மட்டும் பெருசா இருந்துச்சு... இனி அவளோட புருசன்னு உரிமை கொண்டாடிட்டு வா... அதுக்கு அப்புறம் தெரியும் நான் யார்ன்னு...?"

அவர் கத்திய போதும் அவன் அசையவில்லை... தனது பார்வையை ஐசியூ கதவில் இருந்து திருப்பவும் இல்லை...

அவனது மனம் அவளது வார்த்தையிலேயே சுழன்றது...

அன்று முழுவதும் கண்விழிக்காமல் இருந்தவளை கண்டு அனைவருக்கும் பயம் பிடித்துக் கொண்டது... ஏதோ கொலைக்காரனை பார்ப்பது போல் எல்லோரும் யுவாவை பார்த்தனர்... அவன் யாரை பற்றியும் கவலை கொள்ளவில்லை... அவளது நலம் பற்றிய செய்தி அறியாமல் அங்கு இருந்து நகர மாட்டேன் என்பது போல் அங்கேயே இருந்தான்...

எல்லோரும் உணவு உண்ண சென்ற போது கூட அவன் செல்லவில்லை... மனோ தான் அவனின் நிலை கண்டு பரிதாபப்பட்டு அவனை உணவு உண்ண அழைத்தான்... வேண்டாம் என்பது போல் மறுத்து தலை அசைத்தவன் வேறு ஒன்றும் பேசவில்லை...

மனோ தம்பியை ஆச்சிரியமாய்ப் பார்த்தான்... தன் இயல்புக்கு மாறாய் அமைதியாக அமர்ந்து இருக்கும் இந்த யுவா அவனுக்குப் புதிது...

"எல்லாம் சரியாகும்... தைரியமா இரு யுவா..." அவனது தோள் தட்டி அவன் ஆறுதல் சொல்ல... அதற்கும் அவனிடம் இருந்து மௌனம் மட்டுமே பதிலாக வந்தது...

எல்லோரையும் பயமுறுத்திய யமுனா ஒருவழியாய் தன் கண்களைத் திறந்தாள்... தன்னைச் சுற்றிலும் நின்று இருந்தவர்களைச் சுற்றி பார்த்தவளின் விழிகள் எதையோ தேடி ஏமாந்து களைப்புடன் மூடி கொண்டது...

"பாப்பா... இப்போ எப்படி இருக்கும்மா..."

"யமுனா... நீ கண் முழிக்கிற வரை பயமா இருந்தது..."

"அம்மாடி கவலைப்படாதே நாங்க இத்தனை பேர் உனக்காக இருக்கோம்..."

இந்த வார்த்தைகள் எதுவும் அவளது மூளையைச் சென்று அடையவில்லை... அவள் எதிர்பார்த்தது வேறு வார்த்தைகள்... அவள் எதிர்பார்த்தது வேறு முகத்தை...

ஆனால் அவனையும் காணவில்லை... அவனது குரலும் கேட்கவில்லை...

'யம்மு பேபி... எப்படிடா இருக்க...?' கணவனின் இந்த வார்த்தைகளுக்காக அவள் ஏங்கினாள்... அவனது ஆறுதலான தலை வருடலுக்காக அவளது உள்ளம் ஏங்கியது...

அவன் தான் அவளது துன்பம் அனைத்திற்கும் காரணம்... இருந்தாலும் அவனைத் தான் அவள் மனம் தேடியது... இது தான் காதல் என்பதா...

காதலின் முழு அர்த்தமும் தெரியாத வயதில் வந்த காதல் தான் என்றாலும் அவளது காதலும் உண்மை காதல் தானே...

தான் அவன் மேல் இத்தனை காதலை வைத்திருக்க அவனோ தன்னை இந்தளவுக்குக் காயப்படுத்துவான் என்று அவள் கொஞ்சமும் நினைக்கவில்லை...

'ஏன் இதற்கு முன் செயலாலும், வார்த்தையாலும் அவன் உன்னைக் காயப்படுத்தியதே இல்லையா...?' என்று அவள் மனசாட்சி கேட்ட கேள்விக்கு அவளிடத்தில் பதில் இல்லை...

"அவங்க ரெஸ்ட் எடுக்கட்டும்... ரூமுக்கு மாத்தினதுக்கு அப்புறம் அவங்க கூட இருங்க..." செவிலிப்பெண் கூறியதும் எல்லோரும் வெளியில் வந்தனர்...

அங்கே தவிப்புடன் நின்று இருந்த யுவாவை யாரும் கண்டு கொண்டதாய் தெரியவில்லை... அவளைப் பார்க்க போகச் சொல்லி யாரும் அவனை வற்புறுத்தவும் இல்லை...

"யமுனா நல்லா இருக்கா யுவா... இனி கவலைப்படத் தேவை இல்லை..." மனோ மட்டும் தம்பியின் மனம் புரிந்தவனாய் யமுனாவை பற்றிச் சொன்னான்...

அதில் நிம்மதி அடைந்த யுவா எதுவும் பேசவில்லை... அவளைச் சென்று பார்க்கவும் முயற்சி செய்யவில்லை...

சில மணி நேரத்தில் யமுனாவை அறைக்கு மாற்றினர்... மறுநாள் அவளை வீட்டிற்கு அழைத்துச் செல்லலாம் என்று மருத்துவர்கள் கூறினர்... இரவு யமுனாவிற்குத் துணையாக அவளது அன்னை உடன் இருந்தார்...

எல்லோரும் வீட்டிற்குக் கிளம்பினர்... அவனும் வீட்டிற்குக் கிளம்பினான்... வீட்டிற்கு நுழைந்தவனை யாரும் கண்டு கொள்ளவில்லை...

"சித்து..." என்று ஓடி வரும் தியா கூடப் பயந்து போய் அவளது அன்னையின் காலை கட்டி கொண்டு நின்றது...

பாக்கியம் தான் பேரனை கண்டு கவலை கொண்டார்... ஒரு நாளில் எதையோ பறி கொடுத்தார் போன்று இருக்கும் பேரனை காண காண அவருக்குக் கண்ணீர் வந்தது...

"ராசா ஒரு வாய் சாப்பிட்டுட்டு போ ராசா..." அறைக்குச் செல்ல போன பேரனை அவர் தடுத்து நிறுத்தினார்...

"வேண்டாம்..." என்றபடி சென்றவனைக் கண்டு பாட்டி வாய்விட்டு அழ...

"ஒரு நாள் பட்டினி கிடந்தா துரை ஒண்ணும் குறைஞ்சி போக மாட்டாரு... நீ போய்ச் சாப்பிட்டு தூங்கு..." தாயை சத்தம் போட்டார் சக்ரபாணி...

அவரைத் திரும்பி பார்த்த யுவா ஒன்றும் பேசாது தனது அறைக்குச் சென்று படுக்கையில் விழுந்தான்...

அவனது மனம் முழுவதும் அவளது வாசமே...

'வாவ் அங்கிள்... எவ்வளவு அழகா சிகரெட்டை தூக்கி போட்டு பிடிக்கிறீங்க...? சூப்பர்...'

கைத்தட்டி சிரித்த பதினாறு வயது பருவ மங்கையாய் காட்சி அளித்தவள் மனதில் சிறு குழந்தை தான் என்பதை அவன் அறியாமல் போனது தான் அவன் செய்த முதல் தவறு...

அன்றே அவளை அவன் கணித்துத் தன்னிடம் இருந்து எட்ட நிறுத்தி இருக்க வேண்டுமோ...? அதைச் செய்ய விடாமல் அவனை அப்படி எது தடுத்து நிறுத்தியது...? அவளது அன்பா...? அவளது குறும்பா...? அவளது துடுக்குத்தனமா...? அவளது அக்கறையா...? அவளது கண்ணீரா...? அப்படி எதைக் கண்டு அவன் அவளிடம் தடுமாறி நின்றான் என்று அவனுக்கு இன்றுவரை தெரியவில்லை...

ஆனால் ஒன்று மட்டும் உண்மை அவன் காதலித்ததாய் நினைத்த ஸ்வேதாவுடன் நேரம் செலவழிப்பதை விட யமுனாவுடன் நேரம் செலவழிக்க அவனுக்கு நிரம்பப் பிடித்து இருந்தது... அர்த்தமற்று அவள் தலையைத் தலையை ஆட்டி கண்களை உருட்டி பேசும் கதைகளைக் கேட்க அவனுக்கு மிகவும் பிடித்து இருந்தது... அதற்காகவே ஸ்வேதாவிடம் பொய் சொல்லிவிட்டு யமுனாவை சந்திக்க அவனை ஓடி வர செய்தது...

அதற்கான காரணத்தை அவன் கடைசிவரை உணரவே இல்லை... இவ்வளவு ஏன் அவள் வாழ்க்கையை அவன் மோசம் செய்துவிட்டு போன பின்பு கூட அதைப் பற்றி அவன் பெரிதாகச் சிந்திக்கவில்லை... அவளுக்கு வேண்டிய தண்டனை தான் என்று மனம் குதூகலிக்கத் தான் செய்தான்... அதன் பின் நீண்ட நாலு வருடங்களில் அந்தக் குதூகலம் சற்று மறைந்து அவள் ஏன் தன்னைத் தேடி வரவில்லை... என்ன செய்தாளோ பாவம் என்ற ஏக்கமும், இரக்கமும் நாளடைவில் அவள் வராத காரணத்தால் கோபமாய் உருமாறி ஆத்திரமாய் உருவெடுத்து இருந்தது...

அண்ணன் திருமணத்தில் அவளை மீண்டும் சந்தித்த போது அவன் மகிழ்ச்சி அடையத்தான் செய்தான்... ஆனால் அவனைத் தெரியாதது போல் அவன் நடந்து கொண்ட விதத்தில் அவனது கோபம் அதிகரிக்கத்தான் செய்தது...

அந்தக் கோபத்தில் தான் அவளைத் திருமணம் செய்து கொள்ள வீட்டினர் சொன்ன போது அவன் மறுத்தான்... எங்கேயாவது மனைவியை மறுதிருமணம் செய்ய முடியுமா...? ஏனோ அந்தச் சமயம் பழிவாங்க தான் அவளைத் தான் மணந்ததை அவன் மறந்து போனான்...

அப்போது தான் இளமாறன் அவளிடம் காதல் சொன்னான்... சரி அப்போதாவது அவள் திறப்பாள் என்று பார்த்தால் உரிமையை உணர்த்தியவள் அது எந்த மாதிரியான உரிமை என்று வாய் திறந்து சொல்ல மறுத்துவிட்டாள்...

இந்நிலையில் தான் தியாவின் பிறந்தநாள் வந்தது... அப்போது ஸ்வேதாவை கண்டாவது பொறாமை கொண்டு பொங்கி எழுவாள் என்று அவன் நினைக்க அங்கு வராமல் இருந்து அவனுக்கு ஏமாற்றத்தை அளித்தாள் அவள்... அந்த நேரத்தில் இளாவின் பெற்றோர் அவளை அவனுக்காகத் திருமணம் பேசி முடிக்க அந்தக் குழப்பத்தில் தான் அவன் காரை பேருந்தில் கொண்டு சென்று மோதியது...

அந்த விபத்து நடந்ததும் ஒரு விதத்தில் நல்லதாய் போயிற்று... அவன் ஆழ்மனதில் உறங்கி கொண்டு இருந்த காதல் அவனுக்கே அப்போது தான் புலப்பட்டது... அப்போதும் அவள் வீட்டிற்கு வந்து கேட்ட போது கூடத் தன்மானம் தடுக்கத் தன் நிலையை அவளிடம் ஒத்து கொள்ளவில்லை...

மறுநாளே அவள் அதிரடியாய் அவன் வீட்டில் பிரவேசித்து அவனையும் அதிரடியாய் கிளம்பச் சொன்ன போது கூட அவளது தைரியத்தை ரசிக்கத் தான் செய்தான்... அவள் மனதில் தான் இருக்கிறோம் என்று கர்வமாய் நினைக்கக் கூடச் செய்தான்...

ஆனால் அதை எல்லாம் ஒரு நொடியில் மாற்றி விட்டாள் அவள்... ஆம் அவனை விட்டு விட்டு தந்தையுடன் அவள் செல்ல ஆயத்தமானதை தான் அவனால் தாங்கி கொள்ள இயலவில்லை... சற்று ஏமாற்றமாகக் கூட உணர்ந்தான்... கடைசிவரை அவள் தன்னை உண்மையாய் விரும்பவில்லையோ என்று...

அந்தக் கோபத்தில் தான் அவளை இங்கேயே இருக்கச் சொன்னது... அதைக் கேட்டு அவள் அவன் வீட்டில் இருந்தது அவனுக்கு அத்தனை மகிழ்ச்சியாய் இருந்தது... அவனது கோபம் கூடப் பின்னுக்குத் தள்ளப்பட்டு விட்டது... அதனால் தான் அவளிடம் அவன் நெருங்கி இழைந்தது...

அவன் நெருங்கி வர வர அவள் பயந்து விலகி சென்றது அவனுக்கு வேடிக்கையாய் இருந்தது... சரவெடியாய் வெடிக்கும் அவள் அவன் அருகாமையில் பேச திணறுவது அவனுக்குப் பிடித்தமாய் இருக்க அவளிடம் வேண்டும் என்றே வம்பு இழுத்தான்...

அன்றிரவு கூட அவளை வம்பிழுக்கத் தான் சென்றானே தவிர... அவளிடம் தவறாய் நடப்பதற்கு அல்ல...

ஆனால் அவள் பேசிய வார்த்தைகள் அவனது கோபத்தை அதிகப்படுத்தி இருந்தது... தனக்காக வரவில்லை தாலிக்கான அங்கீகாரத்தை வேண்டி தான் வந்ததாய்

அவள் கூறியது அவனது ஆத்திரத்தை மீண்டும் கிளறிவிட்டது... அதனால் தான் வார்த்தைகளைச் சற்று அளவுக்கு அதிகமாய் விட்டு விட்டான்... அப்போதும் அவள் அருகாமையில் தன்னை மறந்து இழைந்தானே தவிர அவளைத் துன்புறுத்த நினைக்கவில்லை...

'வலிக்குது ராஜ்' என்றபடி மயங்கி சரிந்தவளை கண்டு பதறி போய் அள்ளி கொண்டு ஓடியவனுக்கு அதன் பின்னரே அந்த வார்த்தைக்கான அர்த்தம் புரிந்தது...

அவள் வலி என்று சொல்லியது நிச்சயம் உடல் வலி இல்லை... ஏனெனில் அவன் மனதில் என்னத்தான் கோபம் இருந்த போதும் அவளை மென்மையாகத் தான் கையாண்டான்... அது என்னமோ தெரியவில்லை அவளைக் கண்டதும் அவனது குண இயல்பே மாறிவிடுகிறது... அந்தளவுக்கு அவனை மாற்றி விடுகிறாள் அந்தக் காதல் ராட்சசி...

அவனது தொடுகையில் அவள் மயங்கி விழுகிறாள் என்றால் அந்தத் தொடுகை அவளை எந்தளவுக்குப் பாதித்து இருக்கிறது என்பது இப்போது அவனுக்குப் புரிந்தது... அன்றும் அப்படித்தான் மயங்கி விழுந்து இருப்பாளோ என்று இன்று எண்ணி எண்ணி துடிதுடித்துப் போனான்... அன்று அவள் கதற கதற அவளை விட்டு விட்டு சென்றோமே அப்போதும் இப்படித்தான் வேதனையில் உழன்று தன்னை மறந்து விழுந்து இருப்பாளோ...

'கடவுளே...' தான் செய்த காரியத்தை இப்போது நினைத்தவனால் தாங்க முடியவில்லை... படுக்கையில் இருந்து எழுந்துவிட்டான்...

இப்போது புரிந்தது அவனுக்கு அவள் தன்னைத் தேடி வராததன் காரணமும், தன்னோடு வாழ மாட்டேன் என்று பெற்றோருடன் செல்ல நினைத்ததும்...

தன் தொடுகையை வெறுக்கும் அவள் நிச்சயம் மனதில் தன்னை அறவே வெறுத்து ஒதுக்கி இருப்பாள் என்றே நம்பினான்... இளாவுடனான அவளது திருமணத்தைத்

தடுக்கவே தன்னைத் திருமணம் செய்ததை எல்லோருக்கும் அறிவிக்க நினைத்து இருக்கிறாள்... மற்றபடி அவள் தன்னுடன் வாழ்வதற்காக அதைச் செய்யவில்லை என்று அவனுக்கு நன்கு விளங்கி போனது...

இனி யமுனா அவனது வாழ்க்கையில் எட்டாக்கனி... இதோ நாளை மருத்துவமனையில் இருந்து நேரே அவளது வீட்டிற்குத் தான் போகப் போகிறாள்... இனி அவன் வாழ்நாளில் எந்த முகத்தை வைத்துக் கொண்டு அவளைப் பார்க்க செல்வது... தன்னோடு வா என்று அவளை எப்படி அழைப்பது...

ம்ஹூம் இனி அது சாத்தியம் இல்லை... வலிய வந்த மகாலெட்சுமியை அடித்து உதைத்து அனுப்பியாயிற்று... இனி ஜென்மத்துக்கும் அவள் அவனிடம் வந்து சேர போவது இல்லை...

அவனும் அவளும் ஒன்றாய் சுற்றிய காலக்கட்டதுக்கு அவன் மனம் ஏக்கத்துடன் தாவியது...

'ஐ லவ் யூ ராஜ்...' காதலான அவளது வார்த்தைகள்...

'ராஜ்... உடம்பு சரியில்லையா... இப்போ எப்படி இருக்கு...?' அக்கறையும், கவலையுமான அவளது வார்த்தைகள்...

'உன்னைக் காணாம தவிச்சு போயிட்டேன்டா... இவ்வளவு லேட்டாவா வர்றது...' கோபமான அவளது வார்த்தைகள்...

'ராஜ்... உண்மையா நான் உன்னைக் காதலிக்கிறேன்... ப்ளீஸ் என்னைப் புரிஞ்சிக்கோ...' தவிப்பான அவளது வார்த்தைகள்...

'ராஜ்... என்னைக் கைவிட்டுறாதே... எனக்கு உன்னை விட்டா யாரு இருக்கா...? நீ நினைக்கிற மாதிரியான பொண்ணு நான் இல்லை... என் மனசுல நீ மட்டும் தான்...' கண்ணீரான அவளது வார்த்தைகள்...

அவளது அத்தனை வார்த்தைகளும் அவன் காதில் மீண்டும் மீண்டும் ஒலித்து அவனைப் பைத்தியக்காரனாக்கியது...

'வேண்டாம் போதும்டி போதும்... வார்த்தைகளால் என்னைக் கொல்லாதே... அப்போ நான் நம்பலை... இப்போ நம்பறேன்டி உன்னை...' மனதில் அவளை நினைத்துக் கதறினான் காலம் கடந்து...

"யம்மு பேபி... ஐ லவ் யூ..." என்று வாய்விட்டுச் சொன்னான் மனதார... அவளைக் காதலிப்பதை உணர்ந்தே சொன்னான்... இனி அவள் காதல் தனக்குக் கிடைக்காது என்பது தெரிந்தே சொன்னான் அவன்...

மறுநாள் காலையில் யுவா உணவு உண்ண வந்த போது மனோவிடம், "மனோ... யமுனாவை எப்போ டிஸ்சார்ஜ் பண்றாங்க..." என்று கேட்டான் மெதுவாக...

அது அவனது தந்தை காதில் விழுந்துவிட்டது போலும்...

"பெருசா கேட்க வந்துட்டான்... ஏண்டா சொன்னா மட்டும் ஹாஸ்பிட்டல் பில் கொடுத்துருவியாக்கும்... இவனே ஒரு தண்டச்சோறு... இதில் இந்தத் தண்டச்செலவு வேற..." கோபத்தில் என்ன பேசுகிறோம் என்று தெரியாமல் அவர் வார்த்தையை விட...

எப்போதும் தந்தையின் பேச்சை தூசு தட்டுவது போல் தட்டிவிட்டுச் செல்லும் யுவாவிற்கு இன்று நச்சென்று நடுமண்டையில் ஆணி அடித்தது போல் உறைக்கச் செய்தது அவரது வார்த்தைகள்...அவனை எது சொல்லி இருந்தாலும் அவன் பொறுத்து கொள்வான்... இல்லை கண்டு கொள்ள மாட்டான்... அவனைக் கட்டிய பாவத்திற்கு யமுனாவை சொல்வது அவனுக்கு மிகுந்த வருத்தமாக இருந்தது...

உண்ணாமல் அப்படியே எழுந்துவிட்டான்... அதற்கும் சக்ரபாணி குதித்தார்...

"ரோசம் இருந்தா மட்டும் போதாது... கட்டினவளை காப்பாத்துற திறமையும் வேணும்..." என்றவரை வெறுமையாய் பார்த்தவன் விறுவிறுவென வெளியேறிவிட்டான்...

அதன் பின் தனிமையில் அடுத்து என்ன செய்வது என்று யோசித்தவன் உடனே அதைச் செயல்படுத்தினான்... அதன் முதல் கட்டமாகத் தனக்கு என்று ஒரு வேலையைத் தேடி கொண்டான் தனது நண்பர்களின் தயவோடு... எல்லாமே ராஜா வீட்டு கன்றுக்குட்டிகள் அவர்களிடம் உதவி கேட்டதும் உடனே கிடைத்தது...

அடுத்தக் கட்டமாய் அவன் ஸ்வேதாவை போய்ச் சந்தித்தான்...

"ஹாய் யுவா... பார்த்து ரொம்ப நாளாச்சு... எப்படி இருக்கீங்க...?" என்று உற்சாகத்துடன் பேசிய ஸ்வேதாவை கண்டு எதுவும் பேசாமல் தன் கையில் இருந்த அலைப்பேசியைப் பார்த்துக் கொண்டு இருந்தான் அவன்...

"என்ன யுவா... இப்ப கூட இது இல்லாம இருக்க முடியலையா...?" அவனது அலைப்பேசியைப் பிடுங்க வந்தவளின் கையைத் தடுத்தவன் அதைத் தனது சட்டைப் பையில் போட்டுக் கொண்டு அவளை நேராய் பார்த்தான்...

தான் பேச வந்ததை அவளிடம் பேசியாக வேண்டிய கட்டாயத்தை உணர்ந்தவனாய், "ஸ்வேதா... நான் சொல்றது உனக்குக் கொஞ்சம் கஷ்டமா தான் இருக்கும்... ஆனா இதை மேலும் மேலும் வளர்க்க எனக்கு விருப்பம் இல்லை..."

"என்ன சொல்றீங்க யுவா...?" குழப்பமாய் அவனைப் பார்த்தாள்...

"இவ்வளவு நாள் நீ கேட்டுட்டு இருந்த கேள்விக்கு நான் இப்ப பதில் சொல்றேன்..." என்று புதிரோடு ஆரம்பித்தவன் ஒரு பெருமூச்சு எடுத்துத் தன்னைச் சமன்படுத்திக் கொண்டு, "எனக்கு உன் மேல லவ் இப்பன்னு இல்லை எப்பவுமே இருந்தது கிடையாது... ஏதோ அந்த வயசுல ஏற்பட்ட ஒரு இனக்கவர்ச்சி அவ்வளவு தான்..."

"யுவா..." ஸ்வேதாவுக்கு அவன் பேசியது கேட்டுக் கோபம் கோபமாய் வந்தது...

"இது என்ன பேச்சு யுவா...? என் பின்னாடி வந்து லவ் சொன்னது நீங்க... நான் இல்லை... வேண்டாம்ன்னு தள்ளி போனவளை வம்படியா லவ் பண்ண வச்சிட்டு இப்போ இப்படிப் பேசினா என்ன அர்த்தம்...?"

"என்ன அர்த்தம்...?" அவளையே எதிர் கேள்வி கேட்டவன், "அது காதல் இல்லைன்னு அர்த்தம்... நான் உன் பின்னாடி சுத்தி தான் உன்னை லவ் பண்ண வச்சேன்... அதை இல்லைன்னு நான் மறுக்கலை... ஆனா அதுக்கு அப்புறம் நடந்தது...?" கேள்வியாய் நிறுத்தினான்...

"என்ன... குத்தி காட்டுறீங்களா யுவா...?" அவமானத்தில் அவளது முகம் கன்றிக் கறுத்தது...

"குத்தி காட்டலை ஸ்வேதா... எதார்த்தத்தைச் சொல்றேன்... நான் உன்னைக் காதலிச்சேன்... ஆனா நீ என்னைச் சந்தேகப்பட்டு விலகி போன... ஆனா நான் காதலிக்காத ஒரு பெண்... நான் வெறுத்த ஒருத்தி... என்னை எந்தளவுக்குக் காதலிச்சு இருக்கான்னு இப்பத்தான் எனக்கே புரிஞ்சது... என்னை எந்தளவுக்கு நம்பி இருக்கான்னு இப்பத்தான் என் புத்திக்கு உறைச்சது..."

"யுவா... நீங்க... நீங்க அந்த யமுனாவையா சொல்றீங்க...?" கேட்கும் போதே ஸ்வேதாவின் குரல் இறங்கி போனது...

"ஆமாம்..." என்று தலையசைத்தவன், "காதல்ன்னா என்னன்னு அவள் எனக்கு உணர்த்திட்டா... இப்போ இந்த நொடி என் மனசுல அவள் மட்டும் தான்..."

"அவளைப் பத்தி தெரிஞ்சு இருந்தும் நீங்க எப்படி அவளை நம்புறீங்க...? அவள் எத்தனை பசங்க கூடப் பழகியவள்ன்னு உங்களுக்குத் தெரியாது... அவளோட கரெக்டர் சரி கிடையாது யுவா... அவளைப் போய் நீங்க...?" என்றவளை பார்த்து,

"ஸ்வேதா... வார்த்தைகளை அளந்து பேசு... என் மனைவியை இப்படிப் பேச உனக்கு எந்த அருகதையும் இல்லை..." ஆள்காட்டி விரல் நீட்டி எச்சரித்தவனைக் கண்டு

அதிர்ந்து போனாள் அவள்... அது அவனின் செயலால் அல்ல வார்த்தையால்...

"அவளைக் கல்யாணமே பண்ணிக்கிட்டீங்களா...? எப்போ...? எனக்குத் தெரியாம மறைச்சிட்டீங்களே..." ஆதங்கமும் கோபமும் போட்டி போட அழும் குரலில் கேட்டவளை அலட்சியத்துடன் பார்த்தவன்,

"கட்டாயம் உனக்குச் சொல்லணுமா...? அது தேவை இல்லைன்னே நினைக்கிறேன்... அது எங்க ரெண்டு பேருக்குள்ள ரகசியம்..."

"கடைசியில் என்னை ஏமாத்திட்டீங்க யுவா..."

"நான் ஏமாத்தலை... நீ தான் என்னை ஏமாத்திட்டு போன... நீ வேண்டாம்ன்னு தூக்கி எறிஞ்சிட்டு போனவனைத் தன் உயிராய் நினைச்சு அவள் கொண்டாடினாள்... நான் தான் அவளைச் சரியா புரிஞ்சிக்கலை... ஆனா இப்போ புரிஞ்சிக்கிட்டேன்... அவள் தான் என் உயிர்ன்னு..." என்றவன் எழுந்தபடி,

"நீ ஆசையை வளர்த்துக்கக் கூடாதேன்னு தான் சொல்ல வந்தேன்... சொல்லிட்டேன்... பை ஸ்வேதா..." விடைப்பெற்றவன் அவளின் பதிலை கூட எதிர்பாராமல் கிளம்பினான்...

அதே சமயம் யமுனாவை பரந்தாமன் தங்கள் வீட்டிற்கு அழைக்க அவள் முடியவே முடியாது என்று மறுத்துவிட்டாள்... அதற்குக் காரணம் அவர் அன்று பேசிய வார்த்தைகள்... அதை இன்று மெய்ப்பிப்பது போல் அவள் அங்கே சென்றாள் அது அவளுக்கு அல்ல இழுக்கு... அவனுக்கு அல்லவா இழுக்கு... இப்பவும் அவனைச் சுற்றியே யோசித்தாளே தவிர மறந்தும் தன்நிலையைப் பற்றிச் சிறிதும் யோசிக்கவில்லை...

"பாப்பா நான் அன்னைக்குப் பேசியதை மனசில் வச்சிட்டு தான் நீ பேசுறன்னு எனக்குத் தெரியுது... இன்னுமாம்மா

அவனை நம்புற..." பெற்ற மனம் தாங்காமல் பரந்தாமன் புலம்பி விட்டார்...

"அப்பா... நான் தான் அங்கே இருக்கேன்ல... நான் பார்த்துக்கிறேன்..." கனிமொழி ஆறுதலாய் சொல்ல...

"நடந்து முடிஞ்சதுக்கு உன்னால என்ன பண்ண முடிஞ்சது..." திலகா மூத்தவளை குற்றம் சாட்டினார்... அதில் கனி தலை கவிழ்ந்தாள்... அன்று சுயநலமாய்த் தான் நடந்து கொண்டது அவள் நியாபகத்தில் வந்தது...

சக்ரபாணி குடும்பத்தினரால் எந்த உத்திரவாதமும் அளிக்க இயலவில்லை... மகனின் குரங்கு குணம் தெரிந்து இருந்தும் ஒரு பெண்ணின் வாழ்க்கை பாழாகுவதை அவர்களாலும் ஏற்றுக் கொள்ள முடியவில்லை... அதனால் முடிவை யமுனா கையில் ஒப்படைத்து விட்டார்கள்...

"இல்ல நான் அங்கேயே போறேன்..." தலையைக் குனிந்து கொண்டு கூறியவள் மனதுக்குள் ஏமாற்றமாய் உணர்ந்தாள் அவனைக் காணாமல்...

அவளின் முடிவை ஏற்றுக் கொண்டு அவளை யுவாவின் வீட்டிற்கு அழைத்து வந்தனர்...

அன்று மதியம் வீட்டிற்குள் நுழைந்த யுவாவிற்குச் சற்று தவிப்பாக இருந்தது... யமுனா இங்கே வந்து இருப்பாளா இல்லை அவள் வீட்டிற்குச் சென்று இருப்பாளா என்று...

ஆவலும் எதிர்பார்ப்புமாய் வீட்டிற்குள் நுழைந்தவன் கண்ணிற்கு அவனது மனைவி தரிசனம் கொடுத்து அவனது வயிற்றில் பால் வார்த்தாள்...

அதே நேரம் அவளும் அவனைத் தான் பார்த்துக் கொண்டு இருந்தாள்... ஆனாலும் அடி நெஞ்சில் சிறு கலக்கம் இருந்து கொண்டே இருந்தது என்ன சொல்வானோ... என்ன செய்வானோ என்று... நடுச் சபையில் நாகரீகம் தெரியாமல் நடந்து கொள்வானோ என்று...

அவளது கலக்கம் அவசியமற்றது என்பது போல் இருந்தது அவனது அடுத்தக் கட்ட நடவடிக்கை...

தனது தந்தையின் முன் வந்து நின்றவன், "ஹாஸ்பிட்டல் பில் எவ்வளவு ஆச்சு...?"

அவன் ஏதோ விளையாடுகிறான் என்று எண்ணிய சக்ரபாணி எள்ளலாய், "ஐம்பதாயிரம் ஆச்சு..." என்க...

தன்னுடைய பேண்ட் பையில் இருந்து பணத்தை எடுத்தவன் ஐம்பதாயிரத்தை மட்டும் தனியே எடுத்து அவர் முன் வைத்து, "என் மனைவிக்குத் தேவையானதை என்னால் சம்பாதிக்க முடியும்... என்னை மாதிரி அவள் தண்டச்செலவு இல்லை... அவளுக்காகச் செலவு பண்ண அவளோட கணவன் நான் இருக்கேன்... இனி அவளோட படிப்பு செலவுல இருந்து எல்லாச் செலவுக்கும் நான் பணம் அனுப்பிடுவேன்... அதனால உங்க கஜானா காலியாகுதுன்னு நீங்க கவலைப்பட வேண்டாம்..." கேலியாய் கூறியவனின் பொறுப்புணர்ச்சி கண்டு சக்ரபாணியே சற்று அசந்து போனார் என்றால் மற்றவர்கள் பற்றிச் சொல்லவா வேண்டும்...

யமுனா கண்ணிமைக்க மறந்து கணவனைப் பார்த்தாள்... இரு நாட்களுக்கு முன் அவன் பேசிய வார்த்தைகள் என்ன... இப்போது அவன் பேசும் வார்த்தைகள் என்ன...

"யுவா அனுப்பறேன்னா என்ன அர்த்தம்...? நீ எங்கேடா போகப் போற...?" சரளா தான் மகனின் வார்த்தைக்கான அர்த்தத்தைச் சரியாகப் புரிந்து கொண்டு கேட்டார்...

"நான் வேலை விசயமா கோயம்புத்தூர் போறேன்..." என்றவனின் கண்கள் அவனையும் அறியாமல் தன்னவளை நோக்கியது...

அவனது பார்வைக்கான அர்த்தம் புரிந்தவளாய் அவளது கண்கள் கலங்கியது... அதை மறைக்கத் தலையைக் குனிந்து கொண்டாள்...

"யுவா..." என்று பாசமாய் அழைத்தபடி தம்பியை கட்டி கொண்டான் மனோ...

"நீ இந்தளவுக்குப் பொறுப்பா பேசியதே எனக்குச் சந்தோசமாயிருக்கு... நீ எதுக்குடா அடுத்தவன் கிட்ட கையைக் கட்டி நிக்கணும்... நாளையில் இருந்து நம்ம கடையைப் பொறுப்பா கவனிச்சுக்கோ..."

"இல்லை மனோ... என்னோட லைன் கம்ப்யூட்டர் பீல்டு... எனக்கு இந்த ஜவுளிக்கடை வியாபாரம் எல்லாம் சரி வராது..." என்று மறுத்தான்...

"சரி... நீயே ஒரு கம்பெனி ஆரம்பி... நான் உனக்கு உதவுறேன்..." என்றவனை நெகிழ்ச்சியுடன் பார்த்தவன்,

"நிச்சயம் ஆரம்பிப்பேன் மனோ... ஆனா இப்போ இல்லை... நான் தொழிலை மட்டும் கத்துக்கப் போகலை... வாழ்க்கையும் சேர்த்துக் கத்துக்கப் போறேன்... என்னை என் போக்குல விடு..." என்றவன் அந்தப் பேச்சுக்கு முற்றுப்புள்ளி வைத்தான்...

"ஏண்டா ராசா உன்னை விட்டுட்டு நான் எப்படி இருக்கப் போறேன்...?" என்று புலம்ப...

"ப்யூட்டி நீ இருப்பியோ இல்லையோ உன்னைப் பார்க்காம நான் எப்படி இருப்பேன்... வாரா வாரம் நான் உன்னைப் பார்க்க வந்துடுவேன்... நீ எனக்காக எனக்குப் பிடிச்சதை எல்லாம் சமைச்சு வச்சிரு என்ன..." என்று கேலியாய் கூறியவன் அவரை அணைத்துக் கொண்டான்...

யுவா கிளம்புவது கண்டு யமுனாவுக்குத் தான் தவிப்பாக இருந்தது... அவன் மேல் கோபம் இருந்த போதிலும் அவன் இல்லாமல் அவளா... அதை அவளால் நினைத்து கூடப் பார்க்க முடியவில்லை... மனதுக்குள் மருகி மருகி கரைந்தவள் அவனிடம் எப்படிச் சொல்வது என்று தெரியாமல் தவித்தாள்...

அவளின் தவிப்பிற்கு முற்றுப்புள்ளி வைப்பது போல் சக்ரபாணி வாய்த் திறந்தார்...

"நீ இப்படிப் பொறுப்போட பேசுறது கேட்கிறதுக்கு நல்லா தான் இருக்கு... ஆனா அந்தப் பொறுப்பை உன்னை நம்பி வந்தவளை கூடக் கூட்டிட்டு போய் வச்சு காப்பாத்துறதுலேயும் காட்டினா நல்லா இருக்கும்... இப்படி நீ ஒரு பக்கமும் அவள் ஒரு பக்கமும் வாழவா கல்யாணம் பண்ணிக்கிட்டீங்க... எங்கே போறதா இருந்தாலும் உன் கூட அவளைக் கூட்டிட்டு போய் வாழ்ற வழியைப் பாரு..."

அவரது பேச்சில் அவனது உடல் விறைத்தது... எதையோ நினைத்துக் கண்களை இறுக மூடி வேதனையை விழுங்கி கொண்டவன் பின் கண்களைத் திறந்து மனைவியைப் பார்த்தான்...

"என் மேல் நம்பிக்கை இருந்தா என்னோடு வா..." அவள் மீது இருந்து தன்பார்வையை விலக்கி கொள்ளாமல்...

அவனது வார்த்தையில் மனமும், உடலும் அதிர அவனைப் பார்த்தாள் அவள்...

அன்றும் அப்படித்தானே கேட்டான்... அப்போது அவனின் வார்த்தையை, அவனை நம்பித்தானே தன்னையே அவனிடம் ஒப்பு கொடுத்தாள்... ஆனால் அதன் பின் அந்த நம்பிக்கையை அவன் காப்பாற்றினானா... இல்லையே...

கண்களில் கண்ணீர் வழிய அவனை அடிப்பட்ட பார்வை பார்த்தபடி அமர்ந்து இருந்தவளை கண்டு அவனின் இதயம் இரண்டாய்ப் பிளந்தது போல் அவனுக்கு வலித்தது...

வாழ்க்கையில் வலியை உணராதவன் காதலின் வலியை உணர்ந்தான் அவளது விழிகளில்...

கண்ணாமூச்சி ஆட்டம் தொடரும்...

## களம் : 12

தனது பதிலுக்காகக் காத்து இருக்கும் கணவனைப் பார்த்த யமுனா அழுத விழிகளை அழுந்த துடைத்துக் கொண்டு எழுந்தவள் யுவராஜ் முன் வந்து நின்று தன் வலக்கையை அவன் புறம் நீட்டினாள்...

வாழ்க்கையில் எந்த உணர்வுகளுக்கும் ஆட்படாதவன், எந்த வட்டத்துக்குள்ளும் சிக்கி கொள்ளாதவன், இடியே விழுந்தாலும் அசையாத மன திடம் உள்ளவன் அவன்... அவளது இந்தச் செயலில் அவன் மனம் அசைந்து அவள் பால் சாய்ந்தது...

அன்றும் அவனது வார்த்தைக்காக இதே போல் தான் தன் கையை நீட்டி அவள் சம்மதத்தைத் தெரிவித்தாள்... இன்றும் அதே போல் அவன் மேல் நம்பிக்கை வைத்து அவனுடன் வர சம்மதம் தெரிவித்தவளை கண்டு இமைக்க மறந்து நின்று இருந்தான் அவன்...

அன்றாவது அவள் அவன் மேல் காதல் கொண்டு இருந்தாள்... ஆனால் இன்று அந்தக் காதலை குழி தோண்டி புதைத்தவனுடன் அவள் வர சம்மதிக்கிறாள் என்றால் இது என்ன மாதிரியான காதல்...?

இந்தக் காதலுக்குத் தான் தகுதியானவன் தானா என்று தனக்குத் தானே கேள்வி கேட்டு கொண்டவன் குற்றவுணர்வில் குறுகி போனான்...

அன்று காதலே இல்லாமல் அவளின் கையைத் தயங்காமல் பிடித்தவனுக்கு இன்று மனம் நிறையக் காதல் இருந்த போதும் உரிமையுடன் அவள் கை பிடிக்க மிகவும் யோசித்தான்...

தன் மேல் அவள் கொண்டு இருக்கும் நம்பிக்கையைத் தான் எப்படிக் காப்பாற்ற போகிறோம் என்ற யோசனை தான் அவன் மனம் எங்கும் ஓடியது...

அவளின் நம்பிக்கையைக் காப்பாற்றவும், காதலில் தான் எந்தளவுக்கு மனவலிமை உடையவனாக இருக்கிறோம் என்பதற்காகவும், அதை விட நல்ல காதலனாய் அவள் மனதில் தான் பதிய வேண்டும் என்ற சுயநலத்தாலும் தங்களுக்குள் ஒரு தற்காலிக பிரிவு அவசியம் என்பதை அவன் உணர்ந்தான்...

காதலின் முக்கியத்துவத்தை, ஒருவருக்கு ஒருவர் எந்தளவுக்குத் தேவை, அவசியம் என்பதை இந்தப் பிரிவு இருவருக்குமே உணர்த்தும் என்று அவன் நினைத்தான்...

காதலை அரிச்சுவடியில் இருந்து கற்க அவன் முடிவு செய்தான்...

அவன் மனைவியிடம் பேசுவதற்கு முடிவு செய்து வாய் திறக்கும் வேளையில் சக்ரபாணி பேசினார்...

"நீ ஆம்பிளை எங்கே வேணும்ன்னாலும் தங்கிக்குவ... ஆனா பொம்பளை புள்ளைய கூட்டிட்டு போகும் போது எல்லா வசதியும் செஞ்சிட்டு வந்து தான் கூட்டிட்டு போகணும்... முதல்ல வீட்டை பார்த்துட்டு அதுக்கு அப்புறம் மருமகளைக் கூட்டிட்டு போ..." என்றவர்,

"ஆனாலும் உன்னை நம்பி அனுப்ப கொஞ்சம் யோசனையா தான் இருக்கு... ஆனா யமுனாவே வர்றேன்னு சொல்லும் போது நான் மறுக்க என்ன இருக்கு..." என்று அவன் பேசுவதற்கு இடம் கொடாமல் அவரே முடித்துக் கொண்டார்...

அவர் சொல்வது சரி என்று படவே அவனும் வாயை திறக்கவில்லை... ஆனாலும் அவளிடம் தனிமையில் பேச வேண்டும் என்று அவனது மனம் துடித்தது... ஆனால் எந்த முகத்தை வைத்துக் கொண்டு அவளைத் தனிமையில் சந்திப்பது... அன்று போல் அவள் மயங்கி விழுந்து விட்டால்...

அவ்வளவு தான் இப்போது இனிமையாய் இருக்கும் சக்ரபாணி கோபமான சில்லிபாணியாய் மாறிவிடுவார்...

யுவா தனது அறைக்குச் சென்று ஊருக்குச் செல்வதற்குத் தேவையானவற்றை எடுத்து வைக்க ஆரம்பித்தான்... இன்று இரவு கிளம்பினால் தான் சரியாக இருக்கும்... கைகள் தான் அது பாட்டுக்கு தன் வேலையைச் செய்து கொண்டு இருந்தது... ஆனால் மனம் மனைவியைப் பற்றித் தான் யோசித்துக் கொண்டு இருந்தது...

அப்போது கதவு தட்டும் சத்தம் கேட்டு நிமிர்ந்தவன் எழுந்து சென்று கதவை திறந்தான்... அங்கே அவனது மனைவி தான் நின்று கொண்டு இருந்தாள்... அங்கு அவளைக் கண்டதும் அவன் மனம் அடைந்த சந்தோசத்திற்கு அளவே இல்லை... அதுவும் அவளே அவனைத் தேடி வந்து இருக்கிறாள்...

ஆனாலும் அதை வெளிக்காட்டி கொள்ளாமல் ஒன்றும் பேசாது வழியை விட்டு அவன் விலகி நிற்க அவனது மௌனத்தைக் கண்டு யோசனையாய் அவள் அவன் முகத்தை ஏறிட்டு பார்க்க...

"உன்னோட ரூமுக்கு வர்றதுக்குப் பெர்மிசன் கேட்கணுமா...?"

அவனது பேச்சில் ஆச்சிரியத்தில் கண்கள் விரிய அவனை நோக்கியவள் எதுவும் பேசாது உள்ளே நுழைந்தாள்...

ஏதோ அசட்டுத் தைரியத்தில் அவனைப் பார்க்க வந்து விட்ட போதும் அவளால் மனதில் இருப்பதைப் பட்டென்று போட்டு உடைக்க முடியவில்லை... அவனைப் பார்ப்பதும் அறையை நோட்டமிடுவதுமாய் இருந்தாள்...

அவளது மனதை படித்தவனாய் இருவருக்கும் இடையில் உள்ள மௌனத்தை அவனே உடைத்தான்...

"எப்படி இருக்க...?" அவன் கேட்டதும் தான் தாமதம் வேகமாய் அவன் முன் வந்தவள் சராமாரியாய் அவனை அடிக்கத் துவங்க...

"ஏய் என்னடி பண்ற...? வலிக்குதுடி..." என்று முதலில் தடுத்தவன் அடுத்து வந்த அவளது வார்த்தையில்

அப்படியே இறுகி போய் நின்றுவிட்டான்...

"இதைக் கேட்க உனக்கு நாலு வருசமாச்சாடா... இப்ப வந்து கேட்கிற எப்படி இருக்கன்னு...?" மேலும் மேலும் அவனை அடித்தவள் ஒரு கட்டத்தில் சோர்ந்து போனவளாய் அவனது சட்டைக் காலரை பற்றி அவனது முகத்தைத் தன் முகம் அருகே இழுத்தவள்,

"நான் நல்லா இல்லை... இந்த நாலு வருசமா நான் நல்லா இல்லை... ஏதோ உயிரோட இருக்கேன் அவ்வளவு தான்... நீ கேட்கலாம் நீ உயிரோட இருக்கிறதுக்குச் செத்து போயிருக்கலாமேன்னு... என்னால சாகக் கூட முடியலைடா... எனக்குள்ள நான் மட்டும் இருந்தா நான் எப்பவோ செத்துப் போயிருப்பேன்... ஆனா எனக்குள்ள நீயில்ல இருக்க... என்னால உன்னைக் கொல்ல முடியலை ராஜ்... இல்லேன்னா நீ என்னை விட்டு போன அன்னைக்கே தற்கொலை பண்ணி இருப்பேன்..." என்று கதறியவள் அவனது நெஞ்சில் முகம் புதைத்து அழுதாள்...

அவளை அணைக்கவா இல்லை விலக்கவா என்ன செய்வது என்று தெரியாமல் தடுமாறி நின்றான் அவன்... அவளது ஒவ்வொரு வார்த்தையும் அவனை உயிரோடு கொன்றது...

அவனுக்கு உடன்பிறந்த சகோதரிகள் கிடையாது... அவனுக்குத் தெரிந்த இரு பெண்கள் அன்னை மற்றும் பாட்டி... அவனுக்கும் அவர்களுக்கும் நிறையத் தலைமுறை இடைவெளி உண்டு... அப்படியே இடைவெளி இல்லாவிட்டாலும் அவன் அவர்களைப் புரிந்து நடந்து கொண்டதை விட அவர்கள் தான் அவனைப் புரிந்து நடந்து கொள்வார்கள்... அதனால் பெண்ணின் புறத்தை அறிந்த அளவுக்கு அவர்களின் அகத்தைப் பற்றி அவன் அறிந்தது இல்லை... அதை விட அறிய முற்பட்டது இல்லை...

காதலியான மனைவியின் மனதில் என்ன இருக்கிறது என்பதைப் பற்றி அறிய முடியாமல் திணறினான்... பெண்ணின் மனதிற்குள் இத்தனை நுண்ணிய உணர்வுகளா...?

தான் எதிர்பார்த்தது போல் அவளும் தன் வரவை எதிர்பார்த்து காத்து இருந்தாளோ...? அவனுக்குள் சில்லென்று இனம் புரியாத ஒரு உணர்வு எழுந்தது...

எவ்வளவு நேரம் அப்படியே நின்று இருந்தார்களோ அவள் தான் தன்னைச் சுதாரித்தவளாய் கண்களைத் துடைத்துக் கொண்டு அவனை விட்டு விலகி நின்றாள்...

தான் அவனை நெருங்கி வந்தும் கூட அவன் தன்னை அணைக்காதது அவளுக்கு மனதை உறுத்தியது...

சற்று முன்பு அவன் எல்லோர் முன்னும் பேசிய 'என் மனைவி' என்ற வார்த்தை மாமனாரின் நிர்பந்தத்தால் வந்ததோ என்று அவள் மனம் சஞ்சலப்பட்டது...

அதற்கு ஏற்றார் போல் அவனது அலைப்பேசி இசைத்தது... இருவரின் கண்களும் படுக்கை மேலிருந்த அலைப்பேசியின் மீது சென்றது...

'ஸ்வேதா காலிங்' திரையில் மின்னிய பெயரை கண்டதும் அவள் உள்ளுக்குள் நொறுங்கி போனாள்... இவளை எப்படித் தான் மறந்து போனோம் என்று மருகியவள் அங்கிருந்து விலகி செல்ல முற்பட்ட போது அவள் மேல் தொடாமல் தன் கையை நீட்டி அவளைத் தடுத்தான்...

"முக்கியமான ஃகால்லா இருக்கப் போகுது..." அவன் முகம் பார்க்காமல் அவள் வேறு எங்கோ பார்த்துக் கொண்டு சொல்ல...

'அம்மணிக்குப் பொறாமை எல்லாம் வருது...' அவனுக்கு மனதுக்குள் சந்தோசமாய் இருந்தது... அவளின் இந்த உரிமையான முகத்திருப்பல் கூட அவனுக்குப் பிடித்து இருந்தது...

"நீ சொல்ல வந்ததைச் சொல்லு..."

"நான் பேசுறது எல்லாம் உனக்குப் பிடிக்குமா... உன் மனசுக்கு பிடிச்சவங்க பேசினா தானே உனக்குப் பிடிக்கும்..."

"கட்டாயம்... என் மனசுக்கு பிடிச்சவங்க பேசினா விடிய விடிய கேட்டுட்டு இருப்பேன்..." அவளை நினைத்து அவன் சொல்ல... அவளோ அவன் ஸ்வேதாவை நினைத்து சொல்வதாய் நினைத்து மனம் வாடி போனாள்... அதற்கு மேல் அங்கு நிற்க பிடிக்கவில்லை அவளுக்கு...

"நான் போறேன்..."

"சரி போகலாம்... நீ எதுக்கு என்னைத் தேடி வந்த...?" அவன் கேட்டதும் தான் அவள் எதற்காக வந்தாள் என்பதே நியாபகத்துக்கு வந்தது...

தானும் அவனுடன் வரவா என்று கேட்க தான் வந்தாள்... ஆனால் அவன் இன்னமும் ஸ்வேதாவின் நினைவில் இருப்பதைக் கண்டதும் அதை அவனிடத்தில் கேட்க அவளுக்கு மனம் வரவில்லை...

"இல்ல சும்மா பார்க்கத்தான் வந்தேன்..." என்றவளின் முன் வந்து நின்றவன் தன்னை முன்னும் பின்னும் திருப்பிக் காட்டி,

"நல்லா பார்த்துக்கிட்டியா...?" கேலியாய் கேட்க...

அவனது கேலியில் அவளுக்குப் புசுபுசுவெனக் கோபம் எழுந்தது...

"நீ எல்லாம் ஒரு மூஞ்சி... உன்னைப் பார்த்துட்டாலும்..." உதட்டை சுழித்தாள்...

"என்ன இப்படிச் சொல்லிட்ட...? இந்த மூஞ்சியையும் ஒருத்தி உருகி உருகி லவ் பண்றாம்மா... அதை நினைவில் வச்சுக்கோ..."

"அந்தக் கர்மம் பிடிச்ச நினைவு எனக்கு எதுக்கு...?" என்றாள் வெடுக்கென்று... ஸ்வேதாவின் நினைவை வைத்துக் கொண்டு அவள் என்ன செய்ய...

"நினைவு இருக்கணும்... இருந்தாகணும்..." என்றான் ஒரு மாதிரி குரலில்...

அதை ஆராயும் நிலையில் அவள் இல்லை... அவனைச் சுற்றிக் கொண்டு அவள் செல்ல முற்பட மீண்டும் கை நீட்டி அவளைத் தடுத்தவன்,

"உன்னைக் கூட்டிட்டு போகலைன்னு நீ தப்பா நினைக்காதே... அப்பா சொன்ன மாதிரி எல்லா ஏற்பாடும் பண்ணிட்டு வந்து உன்னைக் கூட்டிட்டு போறேன்..." என்றவனை நிமிர்ந்து பார்த்தவள் ஒன்றும் பேசாது அறையை விட்டு வெளியேறினாள்...

அவள் செல்வதைப் பார்த்துக் கொண்டு இருந்தவனின் மனநிலை சந்தோசமும், துக்கமும் கலந்து இரண்டு கெட்டான் நிலையில் இருந்தது...

சந்தோசம்... அவளும் தன்னைத் தேடி இருக்கிறாள் என்பதால் ஏற்பட்டது. துக்கம்... தான் செய்த துரோகம் அவளது ஆழ்மனதில் வெறுப்பாய் படிந்து இருக்கும் வரை அவனால் அவளை நெருங்க முடியாது... விரல் நுனியால் கூட அவளைத் தீண்டுவதற்குக் கூட அவனுக்கு அவ்வளவு தயக்கமாய் இருந்தது...

கணவனது அறையில் இருந்து வெளியில் வந்தவளோ மனதுக்குள் குமுறிக் கொண்டு இருந்தாள்... அவனையும் ஸ்வேதாவையும் சரமாரியாக மனதுக்குள் திட்டி தீர்த்தவளுக்கு அவன் தன்னை அணைக்கவோ தொடவோ செய்யாமல் மிகவும் ஜாக்கிரதையாய் கவனமாய் நடந்து கொண்டது கண்டு கோபம் கோபமாய் வந்தது...

'பெரிய இவன் மாதிரி அலட்டிக்கிறான்... என்னைத் தொட்டா இவன் கற்பா குறைஞ்சு போயிரும்... அந்த ஸ்வேதாவுக்காக உன் கற்பை காப்பாத்திக்கிறியாக்கும்... ஏற்கெனவே உன் கற்பு என் கிட்ட பறி போயிருச்சுடா மடையா... அவளுக்கு நீ எச்சில் இலைடா லூசுப்பயலே...' அதற்கும் சேர்த்து அவள் அவனைத் தான் கண்டபடி வைதாள்...

அவன் வீட்டிற்கு வந்தவளை அவன் சுற்றி சுற்றி வந்ததை ஏனோ அவள் மறந்து போனாள்... அவன் தொடுகையில்

தான் மயங்கி விழுந்ததையும் சுத்தமாய் மறந்து போனாள் அவள்... அவள் நினைவில் நின்றது எல்லாம் கணவன் தன்னை உதாசீனப்படுத்தி விட்டான் என்பதே...

"வாடி ராங்கி... நீ காலடி எடுத்து வச்ச நேரம் என் பேரனை வீட்டை விட்டு துரத்துறியே இது நியாயமா...?" பேரனை காண வந்த பாக்கியம் அவளைக் கண்டு ஆத்திரத்தில் பொரிய ஆரம்பிக்க...

பேரன் மீது இருந்த அவளது கோபம் பாட்டி மீது திரும்பியது... "ஏய் கிழவி... உன் கிட்ட நான் என்ன சொல்லி இருக்கேன்... நான் இருக்கும் போது இங்கே வர கூடாதுன்னு சொல்லி இருக்கேன்னா இல்லையா...? உன்னை யாரு வெத்திலை பாக்கு வச்சு அழைச்சது... என்ன சொன்ன...? நான் உன் பேரனை துரத்துறேனா... இப்போ உன் பேரன் கோயம்புத்தூர் தான் போறான்... நீ இப்படியே பேசிட்டு திரிஞ்சன்னு வை... அவனுக்குக் காவி கட்டி இமயமலைக்கு அனுப்பிருவேன் ஜாக்கிரதை... உன் பேரனோட மகனை கொஞ்சணுமா வேணாமா...? அது என் தயவால தான் நடக்கணும்... அதனால என் கிட்ட வீணா மோதாம இருக்கப் பாரு..." படபடவெனப் பேசியவள் அவரை முறைத்துக் கொண்டு சென்றுவிட்டாள்...

அதுக்கு அப்புறம் பாக்கியம் வாயை திறப்பார்... இனி சாப்பிட கூட வாயை திறப்பாரா என்பது சந்தேகமே...!!!

இரவு இரயிலிலுக்குக் கிளம்பியவன் எல்லோரிடமும் விடைப்பெற்றவன் கடைசியாய் யமுனாவிடம் வந்தான்...

"இதைச் செலவுக்கு வச்சிக்கோ... எது தேவைன்னாலும் ஃபோன் பண்ணு..." என்றவன் அவளின் கரத்தில் சில ஆயிரம் ரூபாய் தாள்களைத் திணித்தான்...

அத்தனை நேரம் இருந்த தைரியம், கோபம் எல்லாம் அவளிடம் இருந்து விடைப்பெற்று செல்ல அவன் தன்னைப் பிரிந்து செல்வது கண்டு அவளுக்குக் கண்ணீர் வந்தது...

'எனக்குப் பணம் எல்லாம் வேண்டாம்... நீ தான்டா வேணும்...' என்று அவளது உள்ளம் கதறியது... எல்லோர் முன்னும் அதைச் சொல்ல முடியாமல் அதைத் தன்னுள் அடக்கி கொண்டாள்...

"வர்றேன்..." என்றபடி அவன் கிளம்ப...

'இதோ அவன் என்னை விட்டுப் போகப் போகிறான்...' அவனது பிரிவை தாங்க முடியாமல் அவளின் மனம் தன் உறுதியை இழந்து தளர ஆரம்பிக்க அதற்கேற்ப அவளது உடலும் தள்ளாட ஆரம்பித்தது...

அவளது உணர்வுகள் அவனைச் சென்று அடைந்ததோ என்னம்மோ... மீண்டும் அவள் அருகில் வந்தவன்,

"இந்தப் பிரிவு நிரந்தரம் இல்லை... தற்காலிகம் தான்..." அவளது கண் பார்த்து சொன்னவனைக் கண்டு அவளது முகம் பூவாய் மலர்ந்தது... அவளது மன தளர்ச்சி கூடச் சொல்லாமல் கொள்ளாமல் விடைப்பெற்றுச் சென்றுவிட்டது...

அவளது நினைவில் ஸ்வேதா இல்லை... அவளுக்கும் அவனுக்கும் மட்டுமான காதல் உலகில் அவள் சஞ்சரித்துக் கொண்டு இருந்தாள்...

"உண்மையாவா ராஜ்..."

ஆம் என்பது போல் தலையசைத்தவனைக் கண்டு, "ராஜ்..." என்ற கூவலுடன் அவனை அணைத்து கொண்டாள்...

அவர்களது செயலை எல்லோரும் ஆச்சரியமாய்ப் பார்த்துக் கொண்டு இருந்தனர்... எல்லோருக்கும் ஒன்று மட்டும் நன்கு புரிந்தது அது இருவரும் ஒருவரை ஒருவர் அளவுக்கு அதிகமாய்க் காதலிக்கின்றனர் என்று...

"எல்லோரும் பார்க்கிறாங்க பாரு பேபி..." அவள் காதில் ரகசியமாய் முணுமுணுத்தவன் பேச்சு கேட்டு விலகியவள் எல்லோரையும் காண நாணி தலையைக் குனிந்து கொள்ள...

தன்னவளின் வெட்கத்தை ரசித்தபடி எல்லோரிடமும் விடைப்பெற்றுக் காரில் ஏறியவன் மனம் நிறைந்து இருந்தது...

இரயில் கிளம்பியதும் யுவா பொழுது போகாமல் முகநூலில் மேய்ந்து கொண்டு இருந்தான்... அப்போது தான் அவனுக்கு நியாபகத்துக்கு வந்தது தன்னவளை நான்கு வருடங்களாக அவன் ப்ளாக் செய்து இருப்பது...

'கண்ட கண்ட பக்கி எல்லாம் பிரெண்ட்டா இருக்கு... இவளை போய் அன்பிரெண்ட் பண்ணி ப்ளாக் பண்ணி தொலைச்சிட்டேனே... திரும்ப ரெக்வெஸ்ட் கொடுத்தா காறி துப்புவாளோ... எவ்வளவோ பார்த்துட்டோம் இதையும் பார்த்துரலாம்...' என்று எண்ணியவன் அவளை ப்ளாக் லிஸ்ட்டில் இருந்து எடுத்து விட்டு அவளுக்குப் பிரெண்ட் ரெக்வெஸ்ட் கொடுத்தான்...

அடுத்த ஒரு மணி நேரத்திற்கு அவளிடம் இருந்து எந்தப் பதிலும் இல்லை... அதற்குள் அவன் நூறு முறை முகநூலை புதுப்பித்துப் புதுப்பித்துப் பார்த்துவிட்டான்...

ஒரு மணி நேரத்திற்குப் பின் அவள் அவனைத் தோழனாக இணைத்து கொண்டதுடன் ஒரு குறுஞ்செய்தியும் அவளிடம் இருந்து வந்தது...

"அய்யாவுக்கு இப்பத்தான் நான் இருக்கிறது கண்ணுக்கு தெரிஞ்சதா... உர்ர்ர்ர்ர்..." என்று கோப முகத்துடன்...

அதைக் கண்டு வாய்விட்டு சிரித்தவன்... "இன்னுமாடி உன்னை அந்த மார்க் பையன் பேஸ்புக்ல விட்டு வச்சியிருக்கான்..."

"நீயே இருக்கிறப்போ எனக்கு என்னடா குறைச்சல்...? நான் இங்கே தான் இத்தனை வருசமா இருக்கேன்..."

"ம்ஹூம்... அப்படி என்ன முக்கியமா இங்கே வெட்டி முறிக்கிற... பசங்க கூட நல்லா கடலை போடுவியே... இப்பவும் அதைத் தானே செய்ற... அது தான் உனக்கு நல்லா வருமே... இப்போ எத்தனை பேர் கூடக் கடலை

வறுத்துட்டு இருக்க... கருகுற வாடை இங்கே வரைக்கும் அடிக்குது..."

சிறிது நேரம் அவளிடம் இருந்து பதில் வரவில்லை...

"வாழ்க்கையில் ஒரு முறை அடிப்பட்டது போதும்... இனியும் அடிப்பட நான் தயாரா இல்லை..."

அவளது பதிலை படித்தவன் மனதுக்குள் நொந்து போனான்...

"சாரி யம்மு பேபி..."

"யம்மு பேபி அக்சப்டட்... பட் சாரி நாட் அக்செப்டட்..."

அடுத்த நொடி மனம் தாங்காமல் அவளுக்கு அழைத்தான்... அவளும் அவனின் அழைப்பை எதிர்பார்த்து இருந்தாளோ என்னவோ உடனே எடுத்தாள்... ஆனால் பேசவில்லை மௌனம் சாதித்தாள்...

"சாரிடி..." என்றான் மனதார...

அவனின் மன்னிப்பு அவளின் மனதை அசைத்ததோ என்னம்மோ...

"நான் எதுக்கு ராஜ் பேஸ்புக்கை விட்டு ஓடி ஒளியணும்... நான் எந்தத் தப்பும் பண்ணலை... சிலர் என்னைத் தவறா நினைச்சாங்க... அவங்களுக்குப் பயந்துட்டு நான் விலகி போனா நான் தவறானவள்ன்னு நானே எல்லோருக்கும் சொல்ற மாதிரி ஆகிடாது... அந்த மாதிரி ஆட்களை எல்லாம் நான் விலக்கி வச்சிட்டு இதை ஆக்கப்பூர்வமான வழியில் பயன்படுத்துறேன்... பேஸ்புக் கெட்டதுக்கு மட்டும் இல்லை நல்லதுக்கும் பயன்படுது... இதைச் சொன்னவனே நீ தானேடா... இப்பவும் நீ சொன்னதைத் தான் நான் ஃபாலோ பண்றேன்... அதுக்கு நான் தான் உனக்குத் தேங்க்ஸ் சொல்லணும்..." நீளமாய்ப் பேசியவள்,

"டேப்லெட் போட்டது தூக்கம் தூக்கமா வருது ராஜ்..." என்க...

"முதல்ல தூங்கு பேபி..." என்றான் அவளின் உடல்நிலையைக் கருத்தில் கொண்டு...

"ம்... ம்... குட் நைட்..." என்றவள் அழைப்பை துண்டித்தாள்...

அவளுடன் பேசியதில் அவனுக்குப் பழைய நியாபகங்கள் மனதில் குமிழிட ஆரம்பித்தது...

தூக்கம் வருவதாய்ச் சொன்னவளும் துக்கம் நிறைந்த மனதுடன் கண்களில் கண்ணீர் மல்க கடந்த காலத்தைத் தான் அசை போட்டுக் கொண்டு இருந்தாள்...

இருவரின் மனமும் தங்களின் காதலை தேடி ஒரே திசையில் பயணிக்க ஆரம்பித்தது...

கண்ணாமூச்சி ஆட்டம் தொடரும்...

## களம் : 13

"டேய் மச்சி... காதலை சொல்றதுக்குச் சிங்கம் மாதிரி சிங்கிளா தான்டா போகணும்... இப்படிப் பன்னிங்க மாதிரி கூட்டமா போனா அசிங்கம்டா..." நண்பன் வாசுதேவனுக்குக் காதலை பற்றிப் பாடம் எடுத்துக் கொண்டு இருந்தான் யுவராஜ்...

"ப்ளீஸ்டா... இந்த ஒரு தடவை வாடா... அதுக்கு அப்புறம் உன்னை நான் கூப்பிடலை போதுமா..." வாசுவுக்கு முதன்முறையாய் தனிமையில் காதலியை சந்திக்கப் போகும் பயத்தில் இதயம் படபடவென அடித்துக் கொண்டது...

அந்தப் பயத்தைத் தணிப்பதற்காகத் தான் அவன் யுவாவை தன்னுடன் அழைத்தது...

"சரி சரி நீ கெஞ்சி கேட்கிறதால வர்றேன்..." என்றபடி இருசக்கர வாகனத்தைக் கிளப்பினான் யுவா...

இருவரும் தங்களது இருசக்கர வாகனத்தில் மருதமலை நோக்கி விரைந்தனர்...

அங்கு அவர்கள் வந்தடைந்த பின்னும் வாசுவின் காதலி இன்னமும் வரவில்லை...

"எங்கேடா சிஸ்டரை இன்னும் காணோம்...?"

"வருவாடா... அவங்கப்பா, அம்மா ரொம்ப ஸ்டிரிக்ட்... ஏதாவது ஒரு காரணம் சொல்லிட்டு வர வேண்டாமா...?"

"அது சரி..." என்றவன் வண்டியில் சாய்ந்து நின்று கொண்டு சுற்றுப்புறத்தை வேடிக்கை பார்த்தான்...

"அது என்னடா கோவில்ல தான் லவ்வை சொல்லணும்ன்னு சென்ட்டிமென்ட்... நீ லவ் பண்றது அவங்களுக்குத் தெரியும்... அவங்க லவ் பண்றது உனக்கும் தெரியும்... காலேஜ்லேயே பார்த்து லவ்வை சொல்லி

முடிக்க வேண்டியது தானே... என்ன சென்ட்டிமென்ட்டோ...?" யுவா அலுத்துக் கொள்ள...

"எல்லாரும் உன்னை மாதிரி தைரியமா இருக்க முடியுமா...? நீ ஸ்வேதா காலேஜ்ல சேர்ந்த ஒரே மாசத்துல அவ கிட்ட லவ் சொன்ன மாதிரி..."

ஸ்வேதா என்ற பெயரை கேட்டதும் யுவாவின் கண்கள் கனவில் மிதந்தது...

"அவளை மாதிரி ஒரு பொண்ணை மிஸ் பண்ண முடியுமா வாசு... அதான் பார்த்த உடனே லவ்வை சொல்லிட்டேன்..."

அழகு, படிப்பு, குணம் என்று எல்லாவற்றிலும் சிறந்து விளங்கும் ஸ்வேதாவை காதலிக்க எத்தனையோ பேர் அவளைச் சுற்றி வந்த போதும் தைரியமாய்த் தன் காதலை சொன்னது யுவா மட்டும் தான்... கிட்டத்தட்ட ஒன்றரை ஆண்டுகளாய் இவனைச் சுற்ற விட்டு இப்போ தான் போனால் போகிறது என்று இவனின் காதலை ஏற்றுக் கொண்டாள் அவள்...

"மச்சி சொல்றேன்னு தப்பா நினைக்காதே... அவ குணத்துக்கும் உன்னோட குணத்துக்கும் செட்டாகுமா...? அவ பொறுப்பு பருப்புன்னு டயலாக் அடிக்கிறவ... நீயோ பொறுப்புன்னா கிலோ என்ன விலைன்னு கேட்கிற ஆளு... நீங்க ரெண்டு பேரும் எப்படி லைப்ல செட்டாகி ஒத்து போவீங்க..."

வாசுதேவன் சொல்வதும் ஒருவிதத்தில் உண்மை தான்... ஸ்வேதாவை பொருத்தவரையில் எந்த ஒரு காரியமும் திட்டமிட்டுச் செய்ய வேண்டும்... எப்போது பார்த்தாலும் படிப்பு, படிப்பு என்று அதிலேயே இருப்பவள்... அப்படிப்பட்டவள் எதைக் கண்டு இவனிடத்தில் காதலில் விழுந்தாள் என்று அவளுக்கே தெரியாது... அவன் தன் பின்னாடி சுற்றியதால் பரிதாபப்பட்டுக் காதலில் விழுந்தாளா என்பது இதுவரை அவளுக்குமே அது புரியவில்லை...

இப்போதும் படிப்பு முடிந்து வேலைக்கும் போகாமல், சொந்த தொழிலையும் கவனிக்காமல் கோயம்புத்தூரில் சுற்றிக் கொண்டு இருப்பவனைக் கண்டு அவளுக்குச் சிறிது எரிச்சலாகத் தான் இருந்தது...

"யுவா... வாழ்க்கையில் கொஞ்சமாவது பொறுப்பு வேணும்... நீங்க இப்படி இருந்தா எப்படி உங்களை நம்பி நான் என் வாழ்க்கையை ஒப்படைக்கிறது..." எதார்த்தத்தை அவனுக்கு எடுத்தும் சொல்ல அவள் முயல...

"அதைப் பத்தி உனக்கு என்ன கவலை... உன்னை எப்படிக் காப்பாத்தறதுன்னு எனக்குத் தெரியும்..." என்று கூறி அவளது வாயை அடைத்து விட்டான் யுவா...

ஏனெனில் அவன் தான்றித்தனமாக நடந்து கொண்ட போதும் படிப்பில் கெட்டி... நல்ல மதிப்பெண்கள் எடுத்துத் தேர்ச்சி அடைந்தவனுக்குக் கேம்பஸ் இன்டர்வியூவில் வெற்றி பெற்று வேலையும் கிடைத்தது... ஆனால் அவன் அந்த வேலைக்கும் செல்லவில்லை... கொஞ்சநாள் ஜாலியாக இருந்துவிட்டு அதன் பின் வாழ்க்கையைத் தீர்மானிக்க முடிவு செய்தான்... அவளும் அவனது கோபம் கண்டு அமைதியாய் இருந்துவிட்டாள்...

"டேய் மச்சி... ரெண்டு பேருமே விளையாட்டுத்தனமா இருந்தா குடும்பத்தை யார் பார்த்துக்கிறது... அவளாவது பொறுப்பா இருக்கட்டுமேடா..." என்றவனைப் புரியாமல் பார்த்த வாசு அதற்கு மேல் அவனின் வாயை கிண்ட விரும்பவில்லை...

"அதோ கீர்த்தி வந்துட்டாடா..." என்று முகம் பிரகாசமாக வாசு சொன்னதைக் கேட்டு அவன் காட்டிய திசையில் பார்த்தான்...

ஸ்வேதாவின் வகுப்பில் படிக்கும் கீர்த்தனா வந்து கொண்டு இருந்தாள்... ஸ்வேதாவுடன் அவளை அடிக்கடி பார்த்து இருப்பதால் நட்பின் பேரில் அவளைப் பார்த்துச் சிரித்தான்...

"இது என்னோட பிரெண்ட் யுவா..." வாசு அவனை அறிமுகப்படுத்த...

"அண்ணாவை எனக்கு நல்லா தெரியுமே..."

"ஸ்வேதாவோட கிளாஸ்மேட்டுடா..." வாசுவின் காதை கடித்தான் யுவா...

"ஓ... அப்படியா..." வாசு இழுக்கும் போதே...

"மச்சி பை... கிளம்பும் போது ஃகால் பண்ணு..." என்று இருவருக்கும் தனிமை கொடுத்து நாகரீகமாக நகர்ந்தான் யுவா...

"கீர்த்தி... தனியாவா வந்த..." வாசு கேட்டுக் கொண்டே நடக்க,

"இல்லை... பக்கத்து வீட்டு பொண்ணோட வந்தேன்..." சுற்றும் முற்றும் பார்த்துக் கொண்டு பயந்தபடி வந்தவளை கண்டு இரக்கம் சுரக்க அவளின் கையை ஆறுதலாய் பிடித்துக் கொண்டான் வாசு...

சொல்லாமலே சிறு செயலில் அங்கே ஒரு காதல் அழகாய் அரங்கேறியது...

யுவா கோவிலில் இருந்த படிகளில் ஒரு ஓரமாய் அமர்ந்துவிட்டான்... அவனுக்கும் கடவுளுக்கும் வெகு தூரம்... நேரம் போகாமல் சிகரெட்டை எடுத்தவன் அதைத் தலைவர் ஸ்டைலில் தூக்கி போட்டு வாயில் பிடித்தான்... அவன் எப்போதுமே அப்படிச் செய்தபின் தான் சிகரெட் புகைப்பான்...

"வாவ் அங்கிள்... எவ்வளவு அழகா சிகரெட்டை தூக்கி போட்டு பிடிக்கிறீங்க...? சூப்பர்..." என்ற குரலில் அவன் திரும்பி பார்த்தான்...

இளஞ்சிவப்பு சட்டையும், இளஞ்சிவப்பு சிறு பூக்கள் பரவி இருந்த வெள்ளை முழநீளப் பாவடையும் அணிந்த ஒரு பெண் அவனைப் புன்னகையுடன் பார்த்துக் கொண்டு இருந்தாள்...

தன்னைத் தான் அவள் சொன்னாளா என்ற சந்தேகம் தோன்ற சுற்றும் முற்றும் பார்த்தவன் 'என்னையவா சொல்ற...?' என்பது போல் கையைத் தன் பக்கமாய் நீட்டி அவன் கேட்க...

"உங்களைத் தான் அங்கிள்..." சிரிப்பு மாறாமல் கூறியவளை கண்டு அவனுக்குக் கோபம் அடக்க மாட்டாமல் ஏறியது...

"ஏய்... என்னைய பார்த்தா உனக்கு என்ன அங்கிள் மாதிரியா இருக்கு...?" அவன் பல்லை கடிக்கும் போதே அங்கு வந்து சேர்ந்தனர் வாசுவும், கீர்த்தனாவும்...

"யமுனா இங்கே என்ன பண்ணிக்கிட்டு இருக்க...? கோவிலுக்குப் போகலையா...?" கீர்த்தனா கேட்க...

யமுனாவோ அவள் கேட்ட கேள்விக்குப் பதில் சொல்லாமல், "அக்கா... இவர் அங்கிள் மாதிரி தானே இருக்கார்... நான் அங்கிள்ன்னு சொன்னா என் மேல் கோபப்படுறாரு..."

வாசு பொங்கி வந்த சிரிப்பை அடக்கி கொண்டான்... கீர்த்தனாவுக்குமே சிரிப்பு வந்தது நாகரீகம் கருதி அமைதியாய் இருந்தாள்...

நண்பனின் காதலி முன் தன்னைக் கேவலப்படுத்தும் அந்தப் பெண்ணை யுவா கொலை வெறிக் கொண்டு பார்த்தான்...

"யமுனா... அவர் அங்கிள் இல்லை... வாசுவோட பிரெண்ட்..." கீர்த்தி விளக்கி சொல்ல...

"ஓ... அண்ணாவோட பிரெண்ட்டா...? மீசை எல்லாம் வச்சு பெரிய ஆள் மாதிரி இருக்கவும் அங்கிள்ன்னு நினைச்சேன்..." என்ற யமுனா யுவாவை பார்த்து, "சாரிண்ணா மன்னிச்சிக்கோங்க..." என்று மன்னிப்பு கேட்க...

"நான் உனக்கு அண்ணனா...? என்னை அண்ணன்னு சொல்லாதே..." என்று அவளைப் பார்த்து வெறுப்புடன்

சொல்லியபடி அவன் முறைக்க...

"அப்போ தம்பின்னு சொல்லவா...?" கிண்டலாய் கேட்டவளை கண்டு அவனின் இரத்தம் கொதி நிலைக்குச் சென்றது...

"வாயை மூடிட்டு போடி..." என்று அவளைப் பார்த்து ஆத்திரமாய்க் கூறியவன் முகத்தை வேறு பக்கம் திருப்பிக் கொண்டான்.

சிறிது தூரம் சென்றவள் நின்று கீர்த்தியிடம் சென்று, "அவரோட பேர் என்ன...?" யமுனாவை பற்றி அவளுக்குத் தெரியுமாதலால் அவள் வாய் திறக்கவில்லை...

"யுவராஜ்..." வாசு சொல்ல... உடனே யமுனா திரும்பி யுவாவை பார்த்து,

"ஹலோ ராஜ் தம்பி... பார்த்து பத்திரமா இரு..." என்று கை அசைத்து சொல்ல...

யுவா அதில் கடுப்பானவன், "நீ முதல்ல பார்த்து போடி ரௌடி..." என்று பதிலுக்குக் கத்தினான்...

"என்னம்மா இப்படிப் பண்ணிட்டியே..." நண்பனுக்காக வாசு பரிந்து கொண்டு வர...

"சாரிண்ணா அவரோட பேரு யுவா வாய்க்குள் நுழைய மாட்டேங்குது... அதான் ராஜ்ன்னு கூப்பிட்டேன்..." என்று அவனுக்கும் சேர்த்து கௌண்ட்டர் கொடுத்தவள் கலகலவெனச் சிரித்தபடி படியேற...

ஒரே நேரத்தில் இரண்டு யுவராஜை சேர்த்து பார்த்த மலைப்பில் அசந்து போய் நின்றுவிட்டான் வாசு...

வாசுவும் கீர்த்தனாவும் கோவிலில் தேங்கி விட ஓரிடத்தில் நிற்க முடியாமல் வேகமாய்ப் படியிறங்க துவங்கினாள் யமுனா...

கடகடவெனப் பத்துப் படிகள் இறங்கியவளால் அதற்கு மேல் இறங்க முடியவில்லை... படிகளின் சூட்டை தாங்க

முடியாமல் கால்கள் தடுமாறியது...

ஒவ்வொரு படியாய் நின்று நின்று அவள் வர ஒரு கட்டத்தில் அவளால் மேற்கொண்டு இறங்கி செல்ல முடியாமல் கண்கள் கலங்கியது... சுற்றும் முற்றும் நிழல் இருக்கிறதா என்று தேடினாள்... ம்ஹூம் எங்கும் நிழல் இல்லை... கீழே செல்வது ஒன்றே வழி...

செருப்பைக் கீழே உள்ள கடையில் கழட்டி வைத்து விட்டு வந்த தன் மடமையை எண்ணி நொந்து போனவளுக்கு இப்போது எப்படிச் செல்வது என்று தெரியவில்லை...

அப்போது அவளது காலில் சில்லென்ற நீர் படும் உணர்வில் அவள் திரும்பி பார்க்க யுவராஜ் தான் தன்னிடம் இருந்த பாட்டிலில் இருந்த குளிர்ந்த நீரால் அவளது பாதத்தை நனைத்துக் கொண்டு இருந்தான்...

அவனது செய்கையில் அவளது மனம் நெகிழ்ந்தது... அவளையும் அறியாமல் அவன் தனது தடத்தை அழுத்தமாய் அவளது இதயத்தில் பதித்தான்...

பின்பு தன்னுடைய நிழல் அவளது பாதத்தின் மீது படும் படி நின்று கொண்டவனை நன்றியுடன் பார்த்த யமுனா, "தேங்க்ஸ்..." என்க...

அதைக் காதில் வாங்காதவனாய், "செருப்பு போட்டுட்டு போகணும்ன்னு அறிவில்லை..." என்று அவளைக் கடிய...

"கோவில்ல எப்படி...?" அவள் தயங்கி நிறுத்த...

"சாமி உள்ளே தானே இருக்கு... படியில செருப்பு போட்டுட்டு போறதால சாமி ஒண்ணும் கோச்சுக்காது..."

"சாமி கோச்சுக்குதோ இல்லையோ நீங்க கோச்சுக்கிறீங்க பார்த்தீங்களா... அதான் சாரி கேட்டுட்டேனே..." என்றவளை ஒரு மாதிரியாகப் பார்த்தவன் ஒன்றும் பேசாமல் நிற்க...

"சாரி... உங்களைப் பத்தி தெரியாம விளையாட்டா பேசிட்டேன்..."

"நீ விளையாடறதுக்கு நானா கிடைச்சேன்..." என்றவன் அவளிடம் பாராமுகம் காட்ட...

அவனின் உதவியில் நெகிழ்ந்து போயிருந்தவள் அவன் தன்னை மன்னிக்காதது மனதுக்கு மிகவும் கஷ்டமாக இருந்தது...

ஒரு கையில் அலைப்பேசியை வைத்து பார்த்துக் கொண்டு இருந்தவன் மறுகையில் சிகரெட் வைத்து புகைத்துக் கொண்டு இருந்தான்...

அவனையே பார்த்துக் கொண்டு இருந்தவள் மனதில் அவனது கம்பீரமான உருவம் மெல்ல மெல்ல பதிந்தது...

அவன் அப்படி ஒன்றும் அழகில்லை... அவன் யார் என்று தெரியாது... ஆனாலும் அவன் பால் அவளது மனம் கொஞ்சம் கொஞ்சமாய்ச் சாய்ந்தது...

தான் அவனை எந்தளவுக்குக் கடுப்படித்தாலும் அவன் அதைக் கண்டு கொள்ளாமல் தனக்கு உதவியதை எண்ணியவளுக்கு அவனை நிரம்பப் பிடித்துப் போனது...

எவ்வளவு நேரம் இப்படியே நிற்க முடியும் கீழே இறங்கி தான் ஆக வேண்டும்...

யமுனா தயக்கத்துடன் அடுத்தப் படியில் காலை வைக்க அவள் அருகில் வந்த யுவா தனது செருப்பை அவளிடம் கொடுத்து,

"இதைப் போட்டுட்டு இறங்கு..." என்றவன் அவளின் பதிலை எதிர்பார்க்காமல் விறுவிறுவெனப் படிகளில் இறங்கி சென்றுவிட்டான்...

அவனின் செருப்பில் காலை நுழைத்தவளுக்கு மனதுக்குள் சிலீரென்று ஒரு உணர்வு வந்து தாக்கியது... அந்த உணர்வுக்கு என்ன பெயர் என்று தெரியவில்லை... ஆனால் அந்த உணர்வு அவளுக்கு மிகவும் பிடித்து இருந்தது...

ஏதோ கனவில் நடப்பது போல் அவள் ஒவ்வொரு படியாய் இறங்கி வர அவளுக்கு முன்னமே கீழிறங்கி போயிருந்த

யுவா அப்போது அவளைத் தான் பார்த்துக் கொண்டு இருந்தான்...

நல்ல அழகாய் பார்பி பொம்மை போன்று இருந்தவளை அவன் அதிசயமாய்ப் பார்த்தான்... ஸ்வேதா அழகு தான்... ஆனால் இவளை போன்று ஆளை அசரடிக்கும் அழகு அவள் கிடையாது...

'இப்ப எதுக்கு இந்தத் தேவையில்லாத ஆராய்ச்சி...?' தனக்குத் தானே சொல்லி கொண்டவனின் கண்கள் யமுனாவை விட்டு அகலவில்லை...

அவள் மேல் அவனுக்கு எந்தவித கோபமும் இல்லை... ஒரு அழகான பெண் தன்னைப் பார்த்து அங்கிள் என்று சொல்லிவிட்டாளே என்று அவனுக்கு மிகுந்த வருத்தமாக இருந்தது...

அவன் யமுனாவை கீர்த்தனாவின் தோழி என்றே நினைத்துவிட்டான்... அவனுக்குத் தெரியாது அவள் பதினோறாவது படிக்கும் பதினாறு வயது சிறுமி என்று...

காலம் அங்கிருந்து தான் தன் கணக்கை அவன் வாழ்வில் எழுத ஆரம்பித்ததோ என்னவோ...

அதற்குள் இறங்கி வந்த யமுனா அவனது செருப்பை அவனிடம் கொடுத்தவள், "தேங்க்ஸ்..." என்றாள் மறுபடியும்...

"ம்... ம்..." என்று முணுமுணுத்தவன் வேறு எதுவும் பேசவில்லை...

"நீங்க பெரிய மீசை எல்லாம் வச்சு பெரிய ஆள் மாதிரி இருந்தீங்களா... அதான் அப்படிக் கூப்பிட்டுட்டேன்... சாரி..." மீண்டும் மன்னிப்பை யாசித்தவளிடம் அவனால் பராமுகம் காட்ட இயலவில்லை...

"இட்ஸ் ஓகே..." என்றவன் அமைதியாய் நின்று இருந்தான்...

ஆனால் மனதிற்குள், 'முதலில் இந்த மீசையைக் குறைக்கணும்... இல்லை ஒரேடியாய் மழிக்கணும்...' என்று

உறுதி எடுத்துக் கொண்டான்...

'உங்களுக்கு இந்த மீசை ரொம்ப அழகா இருக்கு யுவா...' என்று சொன்ன ஸ்வேதாவின் வார்த்தைகளை ஏனோ அவன் அந்நேரம் மறந்து போனான்...

"பிரெண்ட்ஸ்..." என்று கையை நீட்டியவளை ஆச்சிரியமாய்ப் பார்த்தவன் தயங்காமல் தன் கையை நீட்டினான்...

அவனின் கையோடு தன் கையை இணைத்து குலுக்கியவள் கரத்தில் மின்சாரம் பாய்ந்தது அவனது தொடுகையில்...

காதலுக்குத் துணை வந்தவள் தன்னையும் அறியாமல் காதலில் விழுந்தாள்...

வீட்டிற்குள் வந்தவள் பெரியம்மா கேட்ட கேள்விக்குப் பதில் கூட அளிக்காமல் கையைப் பார்த்துக் கொண்டே கனவில் மிதந்து செல்ல கற்பகம் அவளை ஒரு மாதிரியாகப் பார்த்தாலும் அவளைத் தவறாக நினைக்கவில்லை...

யமுனா பிறந்ததில் இருந்து பெரியப்பா மாணிக்கம் தான் அவளை வளர்த்து வருகிறார்... குடும்பத்தைச் சின்ன வயதில் இருந்து உழைத்து மிகவும் சிரமப்பட்டு முன்னேற்றிய அண்ணனுக்குப் பரந்தாமனால் செய்ய முடிந்த ஒரே உதவி தன் மகளை அவருக்குத் தானமாய்க் கொடுத்தது தான்...

தங்களது அன்னையைப் போல் பிறந்தவளை கண்டு குழந்தை இல்லாத மாணிக்கம் கண்கள் கலங்க தம்பியிடம், "அம்மாவை எனக்கு வளர்க்க கொடு பரந்தாமா..."

அண்ணன் கேட்டு அவரால் மறுக்க முடியவில்லை... ஆனாலும் திலகா என்ன சொல்வாரோ என்று தயக்கம் மனதில் இருந்தது...

"அக்கா இவள் உங்க பொண்ணு..." என்று பெருந்தன்மையுடன் பிறந்த கொஞ்ச நாளில் மூத்தவர்கள்

விருப்பம் அறிந்து யமுனாவை கற்பகம் கரங்களில் திலகா கொடுத்து விட்டார்...

மனைவியின் பெருந்தன்மையான குணத்தில் பரந்தாமன் பூரித்துப் போனார்...

இப்போது மாணிக்கம் உயிரோடு இல்லாவிட்டாலும் கற்பகம் யமுனாவை தன் பெண் போல் சிறப்பாக வளர்த்து வருகிறார்...

அன்றிரவு கணினி பார்த்துக் கொண்டு இருந்தவள் ஏதோ எண்ணம் தோன்ற முகநூலில் வாசுதேவனின் ப்ரொபைல் சென்று அங்கிருந்து யுவராஜை தேடி கண்டு பிடித்தவள் அவனுக்குப் பிரெண்ட் ரெக்வெஸ்ட் கொடுத்தாள்...

யார் இந்த யமுனா என்று தெரியாவிட்டாலும் அவனும் உடனே தோழியாக ஏற்றுக் கொண்டான்...

"ஹாய் எப்படி இருக்கீங்க...?" என்று அவள் உடனே குறுஞ்செய்தி அனுப்ப...

"நான் நல்லா இருக்கேன்... சாரி நீங்க யாருன்னு தெரியலையே...?" அவனின் பதிலில் அவள் முகம் வாடி போனது...

"நான் யார்ன்னு தெரியலையா...? காலையில் கீர்த்தி அக்காவோட கோவிலுக்கு வந்தேனே..." என்று அவள் நியாபகப்படுத்த... அவனுக்கு நியாபகம் வந்துவிட்டது...

"ஓ... எஸ்... எஸ்... ஐ ரிமெம்பர்டு... தட் பார்பி டால்... அம் ஐ கரெக்ட்...?"

அவன் தன்னைப் பார்பி டால் என்று சொன்னது அவளுக்கு வானத்தில் பறப்பது போல் அத்தனை சந்தோசமாய் இருந்தது...

அதன் பின் முகநூலில் அவர்கள் இருவரும் அடிக்கடி பேசி கொண்டனர்... அவன் நட்பாக எண்ணித்தான் அவளிடம் பேசினான்... எந்தச் சூழ்நிலையிலும் அவன் தன் எல்லையை மீறவில்லை... அவளோ அவனை மனதுக்குள்

பத்திரமாக வைத்து பூஜித்து வந்தாள்... அப்போதும் அது காதல் என்று அவள் உணரவில்லை... எது எப்படியோ அவர்கள் இடையே நெருங்கிய நட்பு இழையோடியது...

இந்நிலையில் அவனின் பிறந்தநாள் வந்தது... முகநூலில் அவனுக்கு வாழ்த்து சொல்லியவள் அவனின் அலைப்பேசிக்கு அழைத்தாள்...

"ஹேப்பிப் பேர்த் டே..." என்று அவள் வாழ்த்த...

"தேங்க்யூ..." என்றவனின் குரல் சுரத்தில்லாமல் ஒலித்தது...

"என்ன ராஜ்... ஏன் குரல் என்னவோ போல் இருக்கு...?"

"ப்ச்... ஒண்ணும் இல்லை..." என்று அவன் சொன்னாலும் அவனின் மனம் மிகவும் எரிச்சலில் இருந்தது என்னவோ உண்மை...

அவனின் பிறந்தநாளுக்கு அவனுடன் நேரம் செலவழிக்காமல் ஸ்வேதா ஊருக்குச் சென்றுவிட்டதில் அவன் மிகவும் கோபமாய் இருந்தான்...

காதலன் பிறந்தநாளை விட அவளுக்கு வேறு என்ன முக்கிய வேலை வேண்டி இருக்கு...? அவன் மனம் சமாதானம் ஆகாமல் கொந்தளித்துக் கொண்டு இருந்தது...

"ராஜ் உங்களைப் பார்க்க முடியுமா...?"

"ஓ... பார்க்கலாமே..." என்றவன் அடுத்த அரை மணி நேரத்தில் அந்தப் பூங்காவில் அவளைச் சந்தித்தான்...

இன்று வரை அவளைப் போய்த் தான் சந்தித்ததற்கான காரணம் அவனுக்குத் தெரியவே இல்லை...

அன்றலர்ந்த மலர் போல் புத்துணர்ச்சியுடன் அவனுக்காகக் காத்திருந்த யமுனாவை கண்டதும் அவனது மன எரிச்சல் அவனையும் அறியாமல் விலகி செல்ல முகத்தில் நிறைந்த புன்னகையுடன் அவளை நோக்கி வந்தான்...

"ஹேப்பிப் பேர்த் டே ராஜ்..." மீண்டும் அவனை வாழ்த்தியவளிடம் நன்றி கூறிக் கொண்டே அவள் அருகில் அமர்ந்தான்...

"இன்னும் இன்னும் பல பிறந்தநாள் நீ கொண்டாடணும் ராஜ்..." என்றவள் அவனின் புறம் தன் கையில் இருந்த திருநீறை நீட்டினாள்...

அவளின் செயல் அவன் மிகவும் நெகிழ்ந்து போனான்... கண்ணிமைக்காமல் அவளை அவன் பார்க்க...

"என்ன அப்படிப் பார்க்கிற... வச்சுக்கோ..." அவளின் ஆணையை மறுக்க முடியாமல் திருநீறை எடுத்து நெற்றியில் பூசி கொண்டவன் கண்கள் கலங்கியது...

அவன் கண்கள் கலங்கவும் அவள் பதறி போனாள்...

"கண்ணுல விழுந்திருச்சா..." என்றவள் நொடி நேரம் கூடத் தாமதிக்காமல் அவனின் கண்ணில் கை வைத்து வாய் குவித்து ஊத... அவளிடம் இருந்து வந்த சுகந்தம் அவனை ஸ்தம்பிக்கச் செய்தது என்றால், அவனின் அருகாமை அவளைச் செயலிழக்க வைத்தது...

ஒரு இதயம் தெரிந்தே காதலில் விழுந்தது... ஒரு இதயம் தெரியாமலேயே காதலில் விழுந்தது... தெரிந்தோ தெரியாமலோ இருவரின் இதயமும் காதலில் இடம் பெயர்ந்தது என்னவோ உண்மை...

அறிந்தும் அறியாமலும் தெரிந்தும் தெரியாமலும்
சத்தம் இல்லாமல் இடம் மாறியது இரு இதயம்
இது தான் காதலுக்கான இலக்கணமோ...?
இல்லை இலக்கணக் கோட்பாடுகளுக்கு அடங்காத
இலக்கியக் காதல் அல்லாத நவீன காதல் இதுவோ...!!!

கண்ணாமூச்சி ஆட்டம் தொடரும்...

## களம் : 14

"இப்போ ஓகேவா ராஜ்...?" என்று கேட்டபடி யுவராஜை பார்த்த யமுனா அப்போது தான் உணர்ந்தாள் அவனது அருகாமையை...

அவனது மூச்சுக்காற்று தனது கழுத்தில் உரசி செல்வதை உணர்ந்தவளின் தேகம் கூசி சிலிர்த்தது... முதன்முறையாய் ஒரு ஆணின் இந்த நெருக்கம் அவளுக்குப் புதிது... அவளுக்கு ஆண் நண்பர்கள் நிறைய உண்டு என்ற போதிலும் இந்தளவுக்கு யாரிடமும் நெருங்கி பழகியது இல்லை... அவனது அருகாமையில் தேகம் தடதடக்கச் சட்டென்று அவனை விட்டு விலகியவளுக்குப் படபடப்பாய் இருந்தது...

அந்தப் படபடப்பை போக்குவதற்காகக் கல் மேடையில் அமர்ந்தவளுக்குத் தனது உணர்வுகளை எப்படிக் கட்டுப்படுத்துவது என்று தெரியவில்லை...

'கடவுளே என்னவானது எனக்கு...? ஏன் இப்படி உணர்கிறேன்...?' தனக்குள் கேள்வி கேட்டுக் கொண்டு இருந்தவள் அவனது குரலில் தன் நினைவை கலைந்து அவனைப் பார்த்தாள்...

"தேங்க்ஸ்..." ஏன் நன்றி உரைக்கிறோம் என்று தெரியாமல் யுவாவின் உதடுகள் நன்றியை உதிர்த்தது...

எதற்கும் உணர்ச்சிவசப்படாதவனை அவளது அன்பான சிறு செயல் கண்களைக் கலங்க செய்தது... வறண்ட பாலைவனம் ஒரு சொட்டு நீரை எவ்வளவு வேகமாக உறிஞ்சுமோ அது போல் வாழ்க்கையில் முதன் முறையாக அவன் மேல் அக்கறை காட்டிய அந்தப் பெண்ணின் அன்பை தனக்குள் ஆழமாய்க் கிரகித்துக் கொண்டான்... அதை அவன் ஏன் என்று உணரத்தான் இல்லை...

அவனது காதலி காட்டாத அக்கறையை யமுனா அவனிடத்தில் காட்டியதில் அவனுக்கு அவளை மிகவும்

பிடித்துப் போனது... அது எந்த மாதிரியான பிடித்தம் என்று அவன் யோசிக்கவில்லை...

ஏனெனில் ஏற்கெனவே வேறு ஒருத்தியை காதலிப்பவன் அவன்... அவன் மனதில் வேறொரு பெண் காதலியாய், வருங்கால மனைவியாய் சிம்மாசனமிட்டு அமர்ந்து இருக்க யமுனாவை அவன் அந்த மாதிரி எண்ண முடியவில்லை... அதனால் அவளைத் தனது தோழியாய் தன் மனதில் அழுத்தமாய் அமர்த்திக் கொண்டான்...

அதைத் தாண்டி அவன் அதைப் பற்றி யோசிக்க விரும்பவில்லை... காதல் என்பது ஒரு முறை ஒருத்தியிடம் மட்டும் தான் வரும் என்று அவன் எண்ணினான்... நம்பினான்... விளையாட்டுத்தனமாய் இருப்பவனிடத்திலும் காதல் பற்றிய எண்ணம் நல்லவிதமாகவே இருந்தது அதிசயமே...

"என்ன பார்பி டால் ப்ரீஸாகிட்டே...?" அவள் கண் முன் சொடக்கு போட்டு அவன் அழைக்க...

"ஆங்..." அதில் தடுமாறியவளை கண்டு அவன் வாய்விட்டுச் சிரித்தான்...

"அட... பார்பி டாலுக்கே வார்த்தைக்குப் பஞ்சமா...?"

அவனின் புன்னகை அவளது இதயத்தில் சில்லென்று ஊடுருவி சென்றது... அவனது புன்னகை மட்டும் அல்ல அவனுமே அவளுள் ஊடுருவி சென்று அந்தப் பிஞ்சு மனதை காதல் என்னும் சுழலில் சிக்க வைத்தான்...

அவனை மிகவும் பிடிக்கும் அவளுக்கு... அது காதல் தானா என்பது பற்றி அவள் யோசிக்கவில்லை... வீணே ஆராயவில்லை... ஆனால் இப்போது அவளை யோசிக்க வைத்தது அவனது அருகாமை அதில் அவளுக்கு ஏற்பட்ட தடுமாற்றம்... அந்தக் கணம் அவள் உணர்ந்தாள் அவன் மீதான காதலை...

பதின் பருவத்தில் அவன் யார் என்று அறியாமல் அவனது குடும்பப் பின்புலம் தெரியாமல் அவன் மீது வந்த காதல்

அழுத்தமாய்க் காலத்தால் கூட அழிக்க முடியாததாய் அவளது இதயத்தில் பதிந்தது...

"பேர்த்டே பேபிக்குக் கிப்ட் எதுவும் கிடையாதா...?" சிரிப்புடன் கேட்டவனைப் பார்த்தவள் தனது கைப்பையில் இருந்து அந்த விலையுயர்ந்த பேனாவை எடுத்து அவனிடம் நீட்டினாள்...

அவனைப் பொருத்தவரையில் அது சிறு பொருள் தான்... இருந்தாலும் அவள் அன்போடு வாங்கிக் கொடுத்த காரணத்தாலேயே அவனுக்கு அது பொக்கிசமாய்த் தோன்ற அதை எடுத்து தனது சட்டைப் பையில் சொருகி கொண்டவன்,

"எப்படி இருக்கு...?" என்று நெஞ்சை நிமிர்த்திக் கொண்டு அவன் கேட்க...

அவனது செயலில் அவளுக்குத் தான் மூச்சடைத்தது... ஏனோ அவன் அவளை அவனது இதயத்தில் அமர செய்தது போல் புளங்காகிதம் அடைந்தாள்... அந்த நினைவில் அவளது முகம் செந்நிறம் கொண்டது...

"சரி கிளம்பு..." என்று அவன் எழ...

"எங்கே...?" புரியாமல் விழித்தாள் அவள்...

"ட்ரீட் வேண்டாமா...?" கண்சிமிட்டி அவன் கேட்டதில் அவள் இதயம் தடம் புரண்டது...

"இல்லை... இப்போ நான் வீட்டுக்கு போகணும்... லேட்டானா அம்மா சத்தம் போடுவாங்க... பை ராஜ்..." என்றவள் அவனிடம் விடைப்பெற்று செல்ல அவளது வார்த்தையில் அவனுக்குச் சிறிது ஏமாற்றமாய் இருந்தாலும் அவளுக்காகக் கையசைத்து விடை கொடுத்தான்...

புள்ளி மானாய் துள்ளி கொண்டு செல்லும் அவளைப் பார்த்தபடி அமர்ந்திருந்தவன் மனதில் யமுனா அழுத்தமாய்த் தனது காலடி வைத்து நுழைந்ததை அவன் உணரவில்லை...

ஸ்வேதாவுக்கும் அவனுக்கும் இடையில் அதே ஏற்றத்தாழ்வுடன் வாழ்க்கை செல்ல அவனுக்கே இந்தக் காதல் வாழ்க்கை சலிப்பு தட்ட ஆரம்பித்தது... அவன் ஒரு துருவத்தில் நின்றால் அவள் மறுதுருவத்தில் நின்று கொண்டு அவனைத் தான் அவள் பக்கம் வர செய்தாளே தவிர ஒருபோதும் அவள் அவனுக்கு இணங்கி வந்தது இல்லை... அவனது விருப்பு வெறுப்பு பற்றிப் பெரியதாய்க் கவலைப்பட்டது கிடையாது... அதனாலேயே இப்போது எல்லாம் அவனே ஸ்வேதாவை தள்ளி நிறுத்தி வைக்கலானான்...

அன்று வாசு அவனை அழைத்து, "நானும் கீர்த்தியும் சினிமாவுக்குப் போறோம்டா... நீ சிஸ்டரை கூட்டிட்டு வாயேன்..." என்றழைக்க...

"ஆமாம் நான் கூப்பிட்டதும் அப்படியே ஓடி வந்துடுவா பாரு... நீ போ மச்சி... நான் வரலை..." என்று யுவா அலுத்துக் கொள்ள...

"கூப்பிட்டுத்தான் பாரேன்டா..." வாசு வற்புறுத்தி சொல்லவும் யுவா எதுக்கும் ஸ்வேதாவை அழைத்துப் பார்ப்போம் என்று எண்ணி அவளை அழைக்க...

"யுவா... இப்போ என்னால வர முடியாது... சாரி..." என்றவள் என்ன காரணம் என்று கூடச் சொல்லாமல் வைத்துவிட அவனுக்குக் கோபம் கோபமாய் வந்தது...

வாசுவை அழைத்துச் சொல்ல... "நீயாவது வாடா..." என்க...

"எதுக்குச் சிவபூஜையில் கரடி மாதிரியா... நான் வரலைப்பா..." என்று யுவா மறுக்க...

"கீர்த்தித் தனியா வர மாட்டாள்டா... யமுனா கூடத் தான் வருவா... அதனால நீ மட்டும் கரடி இல்லை போதுமா... ஒழுங்கா வந்து சேரு..." என்று வாசு சொல்லிவிட்டு அலைப்பேசியை வைக்க...

'அட... பார்பி டால் வருதா... அப்போ நல்லா பொழுது போகுமே... அவளைப் பார்த்தும் நாளாகி போச்சு...'

என்றவன் யமுனாவை காண போகும் சந்தோசத்துடன் கிளம்பினான்...

திரையரங்கில் யமுனாவை கண்டதும் யுவா தன்னையும் அறியாமல், "பார்பி டால்..." என்று உற்சாகமாய்க் கையை ஆட்ட...

நண்பனின் அதிகப்படியான உற்சாகத்தை வாசு ஆச்சிரியமாய்ப் பார்த்தாலும் பெரிதாய் கண்டு கொள்ளவில்லை...

எதிர்பாராமல் யுவாவை அங்கே கண்டதும் யமுனாவும் விழியகல அவனைப் பார்த்தவள், "எப்படி இருக்கீங்க...?" என்று கேட்டவளின் கண்கள் அவனைத் தலையில் இருந்து கால் வரை அலசி ஆராய்ந்தது...

முகநூல் மற்றும் அலைப்பேசியில் மட்டுமே அவர்களது நட்பு வளர்ந்து கொண்டு இருந்தது... நேரில் சந்திக்கவில்லை...

"நல்லா இருக்கேன்..." என்றவன் அவளோடு சகஜமாக உரையாடினான்...

உள்ளே சென்று அமர்கையில் வாசுவும் கீர்த்தனாவும் அருகருகே அமர யமுனா யுவா அருகில் அமர வேண்டியதாய் போயிற்று...

யுவா மனதில் ஸ்வேதா இருப்பதால் வாசுவும், கீர்த்தியும் இருவரையும் இணைத்து தவறாக எண்ணவில்லை... அதில் யமுனா சிறு பெண் என்பதால் அவர்களின் கற்பனை தறிக்கெட்டு செல்லவில்லை...

யமுனா கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை யுவா அருகில் தான் அமர்ந்து படம் பார்ப்போம் என்று... அவனது அருகாமையில் எப்போதும் போல் அவளது இதயம் படபடவென்று அடித்துக் கொண்டது...

"இப்போ மட்டும் உன் அம்மா எப்படி விட்டாங்க...?" சகஜமாகக் கேட்டுக் கொண்டு அவள் பக்கம் அவன் சரிய அவளின் இதயம் நின்று துடித்தது...

"அது... கீர்த்தி அக்கா கூடங்கிறதால விட்டாங்க..." அவளின் பேச்சு அவன் காதில் விழும் முன் திரையில் தோன்றிய நாயகனை கண்டு ரசிகர்கள் சத்தமாய் விசிலடிக்க அதில் அவளது வார்த்தைகள் அமுங்கி போனது... இல்லை என்றால் அவளது அக்கா என்ற விளிப்பை வைத்து அவளது வயதை கணித்து இருப்பான்...

உடன் சேர்ந்து தானும் உற்சாகமாய் விசிலடித்தவனின் உற்சாகம் அவளையும் தொற்றிக் கொண்டது... அதன் பின் படம் அவளது மனதில் பதிந்ததோ என்னமோ ஆனால் அவனது ஒவ்வொரு செய்கையும் அவளது மனதில் பசுமையாய்ப் பதிந்தது... பொக்கிசமாய் அதைத் தன் மனப்பெட்டகத்தில் சேமித்து வைத்து கொண்டாள்...

படம் முடிந்து யுவாவிடம் இருந்து விடைப்பெறும் போது மனமே இல்லாமல் விடைப்பெற்றவள் கண்கள் கூடச் சிறிது கலங்கிவிட்டது... அவனுக்கு அது போல் எதுவும் தோன்றவில்லை போலும்... ஆனாலும்,

"அடுத்து எப்போ மீட் பண்ணலாம்...?" அவன் ஆர்வமாய்க் கேட்டதில் அவளது கண்கள் பளிச்சிட்டது...

"எப்போன்னாலும்..." அவளும் ஆர்வமாய்ப் பதில் சொல்ல...

"அம்மா திட்ட மாட்டாங்களா...?"

"சமாளிக்க யமுனாவுக்கா சொல்லி தரணும்..." என்று கெத்தாய் சொன்னவளை கண்டு அவனுக்குச் சிரிப்பு வந்தது...

"உன் கூடப் பார்த்த இந்தச் சினிமாவை என் வாழ்நாளில் நான் மறக்க மாட்டேன்..." உண்மையான சந்தோசத்துடன் கூறியவனைக் கண்டு அவளது மனம் வானில் பறந்தது...

அன்று விடைப்பெற்று வீடு வந்த பின்பும் கூட அவனது வார்த்தைகள் அவளது காதில் ஒலித்துக் கொண்டே இருந்தது...

மறுநாள் கீர்த்தி மூலம் யுவா படத்திற்குச் சென்றதை கேள்விப்பட்ட ஸ்வேதா அவனிடம் சண்டைக்கு வந்தாள்...

"அது எப்படி நான் இல்லாமல் நீ மட்டும் போகலாம்...?"

"நீ இல்லாம நான் சினிமா பார்க்க போகக் கூடாதா... காதலி இல்லாம சினிமாவுக்குப் போகக் கூடாதுன்னு ஏதாவது சட்டம் இருக்கா என்ன...?" நக்கலாய் கேட்டவனைக் கண்டு அவளால் பல்லை தான் கடிக்க முடிந்தது...

"இங்கே பாரு ஸ்வேதா... உன்னைக் கூப்பிட்டேன் நீ வரலை... அதோட உன் லிமிட்டை நீ நிறுத்திக்கோ... நான் எங்கே போறேன்... என்ன பண்றேன்னு என்னைக் கேள்வி கேட்குற வேலை எல்லாம் இனி வேண்டாம்... அப்படிக் கேள்வி கேட்கிறவ என் கூட டைம் ஸ்பெண்ட் பண்ணு... அதை விட்டு விட்டு இப்படி ஃசில்லியா பிகேவ் பண்ணாதே..."

அதைக் கேட்ட ஸ்வேதாவின் கடுப்பு கூட, "உன்னை மாதிரி நான் ஒண்ணும் சும்மா ஊரை சுத்திட்டு இல்லை... நீ கூப்பிடதும் வேலை இல்லாம ஓடி வர்றதுக்கு... எனக்கு ஆயிரம் வேலை இருக்கு..." பதிலுக்குக் கத்த...

"ஆயிரம் வேலை இருக்குன்னு சொல்றவ எதுக்கு ஆயிரத்து ஓராவது வேலையா எனக்கு ஃபோன் போட்டு பேசுற... போ போய் உன் ஆயிரம் வேலையைப் பாரு..." கடுப்புடன் கூறியவன் அலைப்பேசியை அணைத்து போட்டான்...

புரிதல் இல்லாத காதல் எத்தனை நாட்கள் உயிர் வாழும்...? அதனால் தான் அதன் முடிவு யமுனா ரூபத்தில் வந்ததோ...

அந்நேரம் மீண்டும் அவனது அலைப்பேசி அழைக்கச் சலிப்புடன் எடுத்தவன் அழைப்பது யமுனா என்றதும் அவனது பழைய உற்சாகம் மீள சந்தோசத்துடன் உயிர்ப்பித்துக் காதில் வைத்தான்...

"என்ன பார்பி டால் என் நியாபகம் எல்லாம் இருக்கா உனக்கு...?"

ஒவ்வொரு கணமும் அவனது நினைவில் வாழ்ந்து அவனது எண்ணங்களில் சுவாசித்து வருபவளின் மனதை பற்றி அறியாமல் அவன் கேட்டான்...

"அதான் கூப்பிட்டேன்... இன்னைக்கு நீங்க ப்ரீயா...? நாம எங்கேயாவது போகலாமா...?"

"என்ன இப்படிக் கேட்டுட்ட...? ஐயம் ஆல்வேஸ் ப்ரீ தான்... ஒரு அழகான பொண்ணு கூப்பிட்டு மாட்டேன்னு சொல்வேனா... நீ ரெடியா இரு... நான் வந்து பிக்கப் பண்ணிக்கிறேன்..."

ஸ்வேதாவால் காயமுற்ற மனதை யமுனாவுடன் செல்வதன் மூலம் அவன் ஆற்றிக் கொள்ள முயல... காதலில் தவிக்கும் அவள் அவனுடன் நேரம் செலவழிப்பதில் சந்தோசம் அடைய... மொத்தத்தில் இருவருமே மற்றவரின் அருகாமையை விரும்பினர் என்றால் மிகையல்ல...

முதல் தடவை மட்டுமே அவள் அவனை அழைக்க வேண்டி இருந்தது... அதன் பின் அவனே அவளை அழைத்தான்... விருப்பத்துடன் அவளுடன் ஊரை சுற்றினான்...

எதிர்காலத் திட்டம், வேலை, பணத்தின் முக்கியத்துவம் பற்றிப் பேசி அவனை ஒன்றுக்கும் உதவாதவன் என்று கூறும் ஸ்வேதாவை விட... அவனது சின்னச் சின்னச் செய்கைக்கும் மகிழ்ந்து அவனைக் கதாநாயகன் மாதிரி பார்க்கும் யமுனாவுடன் நேரம் செலவழிக்க அவனுக்குமே நிரம்பப் பிடித்து இருந்தது...

அன்று ஒரு நாள் இரு கையையும் விரித்து விட்டு எந்தவித பிடிமானமும் இல்லாமல் அவன் பைக் ஓட்டியது கண்டு கண்கள் விரிய ஆச்சிரியப்பட்ட யமுனா ஆர்ப்பரித்து மகிழ்ந்தது அவனது மனக்கண்ணில் வந்து போனது... அதே இதை ஸ்வேதா, 'குரங்காட்டி வித்தை' என்று கேலி செய்ததையும் அவன் மனம் ஒப்பிட்டு பார்க்க தவறவில்லை...

அவன் செய்யும் சின்னச் சின்ன விசயங்களையும் இமாலய சாதனையாய் அதிசயித்து வியக்கும் யமுனா தனது குறும்புத்தனத்தால், கலகலப்பான குணத்தால் அவனையும் அறியாமல் அவனது மனதில் நுழைந்ததை அவன் உணரவில்லை... உணர முடியாதபடி அவனது காதல் தடையாக இருந்தது...

ஸ்வேதாவுடனான உறவை காதல் என்று உறுதியாய் நம்பியவன் யமுனாவுடனான உறவை நட்பு என்ற சாயம் பூசி அதன் உண்மையான உணர்வை தனக்குத் தெரியாமல் மறைத்துவிட்டான்...

அன்று ஸ்வேதா வற்புறுத்தி அழைத்ததால் யுவா வேறுவழியின்றி அவளைப் பார்க்க கல்லூரிக்கு வந்திருந்தான்... இப்போது எல்லாம் அவனுக்கு அவளுடன் நேரம் செலவழிக்கவே பிடிக்கவில்லை... இந்நேரம் யமுனாவுடன் வந்து இருந்தால் ஏதாவது நகைச்சுவை பேசி அவனைச் சிரிக்க வைத்து இருப்பாள்... ஸ்வேதா தானும் சிரிக்க மாட்டாள் மற்றவர்களையும் சிரிக்க விட மாட்டாள் என்று மனதுக்குள் நொந்து கொண்டு அமர்ந்திருந்தவன் காதில் அந்தக் குரல் இனிமையாய் விழுந்தது...

"ராஜ்..." யமுனாவின் அழைப்பில் முகம் மலர திரும்பி பார்த்தான்...

'அம்மா தாயே... என்னை ரட்சிக்க வந்த தெய்வமே... இவ தொல்லையில் இருந்து என்னைக் காக்க வந்த என் குல விளக்கே...' மனதுக்குள் யமுனாவிற்குத் துதி பாடியவன்,

"ஹாய்..." என்று உற்சாகம் கொப்பளிக்க அவளைப் பார்த்துக் கையசைத்தான்...

அவனின் செய்கையை ஒருவித முகச்சுளிப்புடன் பார்த்துக் கொண்டு இருந்தாள் ஸ்வேதா... இத்தனை நேரம் தன் முன் யாருக்கு வந்த விருந்தோ என்று அமர்ந்து இருந்தவன் வேறு ஒருத்தியை கண்டு முகம் மலர்வது அவளுக்கு அத்தனை உவப்பாக இல்லை...

"பார்பி டால் என்ன இந்தப் பக்கம்...?" அவனின் பார்பி டால் என்றழைப்பில் வழக்கம் யமுனாவின் முகம் சிவந்து விகசிக்க... ஸ்வேதாவோ முகம் இருண்டு போனாள்...

வேகமாய்த் தங்கள் எதிரில் இருந்த பெண்ணை அளவிட்டாள்... உண்மையில் பொம்மை போல் அழகாய் இருந்த பெண்ணைக் கண்டு அவள் உள்ளம் எரிந்தது பொறாமையில்...

"என் கூட வந்தாள்..." என்று கீர்த்தனா சொல்ல...

"ஓ..." என்றவன் யமுனா தன்னையும் ஸ்வேதாவையும் மாறி மாறிப் புரியாமல் பார்ப்பதை கண்டு,

"பார்பி டால்... இவங்க தான் ஸ்வேதா... என்னோட லவ்வர்... அய்யாவோட செலக்சன் எப்படி இருக்கு...?" சட்டைக் காலரை பெருமையுடன் தூக்கிவிட்டுக் கொண்டு அவளிடம் கேட்டான்...

அவன் மனதில் எந்த விகல்பமும் இல்லை... கல்மிசமும் இல்லை... அதனால் தன் காதலியை தோழியிடம் அறிமுகப்படுத்துவது போல் அவன் அறிமுகப்படுத்தினான்...

யுவா தன்னை அறிமுகப்படுத்திய விதத்தில் ஸ்வேதாவின் மனக்கசப்பு அகல அவள் சற்று பெருமிதத்தோடு அமர்ந்திருந்தாள்... எத்தனை அழகான பெண்கள் அவன் முன் வந்தாலும் அவன் மனதில் இருப்பது அவள் அல்லவா...

யுவாவின் வார்த்தைகள் யமுனாவின் பிஞ்சு மனதில் இடியை இறக்கியது... உலகமே தட்டாமாலை சுழல்வது போல் இருந்தது...

அல்லும் பகலும் அவனை நினைத்துக் கொண்டு அவள் காத்திருக்க அவன் என்னடா என்றால் 'இது தான் என் காதலி' என்று அவளிடம் வேறு ஒருவளை அறிமுகப்படுத்துகிறான்... அப்படி என்றால் அவன் அவளுடன் பழகியதற்கான அர்த்தம் தான் என்ன...?

கொஞ்சம் பயந்த சுபாவம் உடைய பெண்ணாக இருந்து இருந்தால் காதல் தோல்வியில் துவண்டு போய் அழுது புரண்டு இருப்பாள்... ஆனால் இவள் சற்றுத் தைரியமான பெண் என்பதால் கண நேரத்தில் தன்னைத் தேற்றிக் கொண்டு அவன் அருகில் வந்தவள்,

"இவ உன் லவ்வர்ன்னா... அப்போ நான் யாரு...?"

"ஏய் என்ன உளர்ற...?" யுவாவிற்குச் சத்தியமாய் அவள் கூற வருவது என்னவென்று புரியவில்லை...

அவனின் சட்டைக் காலரை பிடித்தவள், "நான் உளர்றேனா...? இருக்கும் இருக்கும்... இப்போ என் பேச்சு உளறலா தான் இருக்கும்... இவ உன் லவ்வர்ன்னா எனக்கு என்ன பேரு...? நீ என் கூடச் சுத்தினதுக்கு என்ன பேரு...? சொல்லுடா... அதுக்கு எல்லாம் என்ன பேருடா...?" என்று ஆங்காரமாய்க் கத்தியவளை கண்டு அவன் ஸ்தம்பித்துப் போய் விட்டான்...

யமுனாவிடம் இருந்து இந்த மாதிரியான வார்த்தைகளை அவன் சத்தியமாய் எதிர்பார்க்கவில்லை... அதுவும் எந்தவொரு இடத்திலும் அவளிடம் தான் காதலை தெரிவிக்காத நிலையில், நட்புடன் பழகியதை அவள் தவறாக எடுத்து கொண்டதை அறிந்து அவன் உறைந்து போனான்...

அவளது இந்த அறியாமைக்கு அவனோ அவளோ காரணம் அல்ல... அவளின் இரண்டுங்கெட்டான் வயதே காரணம் என்று அவனுக்கு அப்போது தெரியவில்லை... அவன் ஸ்வேதா, கீர்த்தனா போன்றே அவளையும் எண்ணி இருந்தான்...

"யமுனா என்ன இது...? எத்தனை பேர் பார்க்கிறாங்க பாரு...? அண்ணா சட்டையை விடு..." கீர்த்தி யமுனாவின் கையைத் தடுக்க...

"விடுங்கக்கா... எனக்கு இப்போ உடனே பதில் தெரிஞ்சாகணும்... இவன் இஷ்டத்துக்கு என் கூட ஊர்

சுத்துவான்... அப்புறம் வேண்டாம்ன்னு கழட்டிவிட்டு வேற பொண்ணை லவ் பண்றேன்னு சொல்வான்... நான் நல்லாயிருன்னு ஆசிர்வாதம் வழங்கிட்டு போகணுமா... முடியாதுக்கா... என் மனசை கெடுத்து காதலை கொடுத்து என்னை நாசாமாக்கிய இவன் எனக்குப் பதில் சொல்லியே ஆகணும்... திட்டம் போட்டு என்னை ஏமாத்திட்டான்..." யமுனாவின் ஆத்திரம் கொஞ்சமும் குறையவில்லை...

யுவா திட்டமிட்டுத் தன்னை ஏமாற்றிவிட்டான் என்றே அவள் நினைத்தாள்...

ஒரு பாவமும் அறியாது ஒன்றும் செய்யாது வீண் பழியை அவன் சுமந்து கொண்டு அமர்ந்து இருந்தான்... அவனது மனம் ஆதங்கத்தில் கொந்தளித்துக் கொண்டு இருந்தது...

"யுவா நீங்க இப்படிப் பண்ணுவீங்கன்னு நான் கொஞ்சமும் எதிர்பார்க்கலை..." ஸ்வேதாவின் குரலில் அவன் தன் உணர்வு பெற்று அவளை நிமிர்ந்து பார்த்தான்...

கேள்வியாய் நோக்கியவனை வெறுப்புடன் பார்த்தாள் ஸ்வேதா... அதிலேயே அவன் அடிப்பட்டுப் போனான்... இனி தான் என்ன பேசினாலும் ஸ்வேதா நம்பப் போவதில்லை என்பதை உணர்ந்தான்...

"ஏதோ விளையாட்டுத்தனமா இருக்கீங்கன்னு தான் நினைச்சேனே ஒழிய... நம்ம காதலையும் இப்படி விளையாட்டுத்தனமா எடுப்பீங்கன்னு நான் நினைக்கலை... என்ன யுவா நடக்குது இங்க...? உங்க விருப்பத்துக்கு நான் வளைஞ்சு கொடுக்காததால அவளைப் பிடிச்சுட்டீங்களோ... இத்தனை நாளா நான் கூப்பிட்டப்போ எல்லாம் வராம இவ கூடத் தான் சுத்திட்டு இருந்தீங்களோ... இதுக்குப் பேர் தான் காதலா... ச்சீ தூ... இதுக்குப் பேரு வேற... அப்போ நான்... இப்போ இவ... அடுத்து யாரு...? இன்னும் எத்தனை பேரை ஏமாத்த திட்டம் போட்டு இருக்கீங்க...? உங்களைப் போல ஒரு பொறுக்கியை காதலிச்சதுக்காக நான் வெட்கப்படுறேன்... இனி மேல் என் முகத்தில் முழிக்காதீங்க யுவா..."

படபடவெனப் பொரிந்தவள் வேகமாய் அங்கிருந்து சென்றுவிட்டாள்...

அவன் பேசுவதற்கோ விளக்கம் சொல்வதற்கோ ஸ்வேதா சற்றும் இடம் அளிக்கவில்லை... அதே போல் அவன் விளக்கத்தைக் கேட்பதற்கும் அவளிடத்தில் பொறுமை இல்லை... காதலில் பொறுமை, நம்பிக்கை மிகவும் அவசியம் என்பதை அவள் உணராமல் போனாள்...

ஸ்வேதா செல்வதை உணர்ந்தாலும் அவளைத் தடுக்கும் வகையறியாது செயலற்று போய் அமர்ந்து இருந்தான் யுவா... ஒரே நேரத்தில் காதலியும், தோழியும் அடுத்தடுத்து கொடுத்த அதிர்ச்சிகள் அவனைச் செயலிழக்க செய்து இருந்தது...

"பதில் சொல்லு ராஜ்..." அந்நேரம் தன் சட்டையைப் பிடித்து உலுக்கிய யமுனாவை கண்டதும் அவனின் பொறுமை காற்றில் பறக்க அவளது கன்னத்தில் ஓங்கி ஒரு அறை விட்டான்...

"நான் எப்போடி சொன்னேன் உன்னை லவ் பண்றேன்னு... நான் என்னைக்காவது வாய் திறந்து உன் கிட்ட சொன்னேனா... நீயா எதாவது நினைச்சிக்கிட்டா நானா பொறுப்பு... இப்போ சொல்றேன் நல்லா கேட்டுக்கோ நான் உன்னைக் காதலிக்கலை... காதலிக்கலை... காதலிக்கலை... போதுமா..." என்று கோபமாய் இரைந்தவன் வேகமாய் அங்கிருந்து செல்ல...

"யமுனா... இந்த வயசில் உனக்கு எதுக்கும்மா லவ் எல்லாம்... அண்ணாவும் ஸ்வேதாவும் ஏற்கெனவே லவ்வர்ஸ்... நீ தான் அவங்களைத் தப்பா புரிஞ்சிருக்க... அநியாயமா லவ்வர்ஸை பிரிச்சிட்டியே யமுனா... பாவம் ரெண்டு பேரும்..." கீர்த்தி அவளுக்கு ஆறுதல் சொல்வது போல் மற்ற இருவருக்காகப் பரிதாபப்பட...

பாவம் அந்தப் பிஞ்சு மனம் தேற்றுவார் இன்றிக் காதல் தோல்வியில் துவண்டது... யுவா கூறிய ஒவ்வொரு

வார்த்தையும் அவள் காதில் ஒலித்துக் கொண்டே இருக்கக் கண்களில் கண்ணீர் வழிந்தது...

அழுதழுது முகம் சிவந்து போய் வீட்டிற்கு வந்தவளை கற்பகம் என்ன ஏது என்று விசாரிக்க உடம்பு சரியில்லை என்று கூறி தனது அறையில் சென்று அவள் முடங்கிக் கொண்டாள்...

'ராஜும் அவளும் ஏற்கெனவே லவ்வர்சா...? இல்லை இல்லை ராஜ் என்னைத் தான் காதலித்தான்... அவளை இல்லை... எனக்குத் தெரியும் அவன் என்னைத் தான் காதலித்தான்... ஆனால் என்னை ஏமாற்றிவிட்டான்...' முட்டாள்த்தனமாய்ப் புலம்பி கொண்டு இருந்தாள் அவள்...

காதல் என்றால் என்ன என்று தெரியாத வயதில் இது தான் காதல் என்று அவளாக ஒன்றை அனுமானித்து அந்த வரையறைக்குள் அடங்கிய யுவாவை விட்டு விலக அவளால் முடியவில்லை...

பதின் வயதில் வரும் காதலை எல்லோரும் உரம் போட்டு வளர்ப்பது இல்லை...

பெரும்பாலானோர் வயதின் முதிர்ச்சி காரணமாக அதை மறந்து அதில் இருந்து வெளியில் வந்து வேறு வாழ்க்கையை வாழ பழகி கொள்கின்றனர்...

சிலர் அதைக் காதலாய் கூட எண்ணாமல் இனக்கவர்ச்சியாய் எண்ணி மறந்தும் போய் விடுகின்றனர்...

ஒரு சிலர் மட்டுமே யமுனாவை போன்று அதை வாழ்க்கையாக எண்ணி வாழ்கின்றனர்... அந்தக் காதலை உரம் போட்டு மரமாக வளர்த்து மறக்க முடியாமல் தவிக்கின்றனர்...

அத்தகையை ஆழமாய் வேரூன்றிய யமுனாவின் காதல் கிடைக்கவும் யுவராஜ் கொடுத்து வைத்து இருக்க வேண்டும்...

மறுநாள் யுவராஜ் ஸ்வேதாவை தேடி கல்லூரிக்குச் சென்றான்... அது அவன் ஏற்கெனவே படித்த கல்லூரி தான்... பெரும்பாலானோர்க்கு அவனை நன்றாகத் தெரியும்... நேற்றைய நிகழ்வு கொடுத்த தாக்கத்தின் விளைவாலோ என்னம்மோ எல்லோரும் அவனைக் கேலியாய்ப் பார்ப்பது போல் உணர்ந்தான்...

ஆனாலும் அதைக் கண்டு கொள்ளாது அவளின் வரவிற்காகக் காத்து இருந்தான்... ஏனெனில் தவறு முழுமையும் அவனது பெயரில் அல்லவா இருக்கிறது...

ஸ்வேதா தன் தோழிகள் புடைச்சூழ வருவதைக் கண்டு அவள் முன் சென்று நின்றான்... அவனைக் கண்டதும் அவர்கள் விலகி செல்ல இறுக்கமான முகத்துடன் ஸ்வேதா அவனைக் கண்டு கொள்ளாமல் நிற்க,

"ஸ்வேதா... அவ ஏதோ தெரியாம உளறிட்டா... அவ கூட நான் ப்ரெண்ட்லியா தான் பழகினேன்... அவ தான் புரிஞ்சிக்காம பேசிட்டா... நீயாவது நான் சொல்றதை புரிஞ்சிக்கோ... நான் உன்னைத் தான் காதலிக்கிறேன் ஸ்வேதா..." என்றவனை இகழ்ச்சியாய் பார்த்தவள்,

"இந்த வாய் நேத்து எங்கே போயிருந்தது...? இதை அவ முன்னாடி சொல்லி இருந்தீங்கன்னா நானும் நம்பி இருப்பேன்... இப்போ நீங்க சொல்றதை நான் நம்பணுமா...? நீங்க ஏமாத்துறத்துக்கு நானா கிடைச்சேன்... அதுக்கு வேற ஆளை பாருங்க சார்..." இகழ்ச்சியாய் கூறியவள்...

அங்கிருந்த அவளது கல்லூரி தோழர்களை எல்லாம் அழைத்து, "சார் சொல்றாரு... என்னைத் தான் சின்சியரா லவ் பண்றாராம்... இதை நான் நம்பலாமா பிரெண்ட்ஸ்...?"

ஏற்கெனவே கல்லூரியில் அவனது குண இயல்புகள் எல்லோருக்கும் அத்துப்படி... அவன் ஸ்வேதாவின் பின் காதல் என்று அலைந்ததையே உலக அதிசயமாய்ப் பார்த்தனர் எல்லோரும்... அப்படிப்பட்டவர்கள் அப்போதே இது எத்தனை நாளுக்கு என்று தான் நினைத்தனரே தவிர

யாரும் அவன் காதலில் ஒழுங்காக இருப்பான் என்று நினைக்கவில்லை...

"வேண்டாம்..." ஸ்வேதாவுக்கு ஆதரவாக எல்லோரும் குரல் கொடுக்க அதில் கேலியாய் அவள் அவனைப் பார்க்க அதில் அவனது முகம் அவமானத்தில் கறுத்துப் போனது...

"எனக்கு உன்னோட பதில் தான் வேணும் ஸ்வேதா... இவங்க பதில் தேவையில்லை..." அப்போதும் உறுதியாய் அவளிடம் கேட்டவனைக் கண்டு அவளுக்கு எரிச்சலாக வந்தது...

"இவ்வளவு நடந்த பிறகும் உன்னை நம்பி என் வாழ்க்கையை உன் கிட்ட ஒப்படைக்க நான் என்ன முட்டாளா...? ஏற்கெனவே பொறுப்புக் கிடையாது... இப்போ பொறுக்கித்தனம் வேற... நாளைக்கு வேற என்ன என்னவெல்லாம் வினைகள் வந்து சேர போகுதோ தெரியலை... உனக்கு ஒரு பெரிய கும்பிடு ஆளை விடு..." அவனைப் பார்த்து இரு கரம் தூக்கி கும்பிட்டவள் அங்கிருந்து வேகமாய்ச் சென்றுவிட்டாள்...

அவள் என்னவோ சென்றுவிட்டாள் தான் ஆனால் சுற்றிலும் இருந்த கூட்டம் அவனைப் பார்த்து இளக்காரமாய்ச் சிரித்த அவமானத்தை அவனால் என்றுமே மறக்க இயலாது...

பல பெண்களைக் காதலித்து ஏமாற்றி மோசம் செய்த மோசக்காரனாய் காமுகனாய் தன்னைச் சித்தரித்த யமுனா மேல் அவனது ஒட்டு மொத்த கோபமும் திரும்பியது...

"யமுனா..." பல்லை கடித்தான் ஆத்திரத்துடன்...

தோழனாய் இருந்தவன் எதிரியாய் மாறினான் நட்பின் துரோகத்தால்... எந்தவொரு பகைமைக்குப் பின்னும் அவமானப்படுத்தப்பட்ட துரோகம் இருக்கும் போலும்... இவன் பகை பாராட்டுவதற்குக் காரணமாய் அமைந்தது யமுனாவின் துரோகம்... அதுவும் நம்பிக்கை துரோகம்...

நட்பாய் நினைத்து தோழியாய் பழகியவள் அவனை இப்படி உயிரோடு கொல்வாள் என்று அவன் ஒரு போதும்

நினைக்கவில்லை... அவனின் சுயத்தையே அல்லவா மறக்க செய்துவிட்டாள்...

இப்போது அவன் யுவராஜ் அல்லவே எல்லோர் கண்ணுக்கும் பெண்ணை ஏமாற்றும் பொய் பித்தலாட்டுக்காரன், பொறுக்கி அல்லவா... எப்பேர்ப்பட்ட பட்டத்தை அவனுக்கு வாரி வழங்கி இருக்கிறாள் தோழி என்னும் நச்சுப் பாம்பு, நயவஞ்சகி...

தோழியிடம் எப்படிக் காதல் வரும் என்று கூடத் தெரியாத கூமுட்டையாக அல்லவா அவள் நடந்து கொண்டு இருக்கிறாள்... என்ன சொன்னாள் திட்டமிட்டு அவளை ஏமாற்றி விட்டானாம்...

"இருடி... இனி தான் நான் திட்டமிட்டு உன்னை ஏமாத்த போறேன்... நீ என்ன என்ன பட்டம் எல்லாம் எனக்கு வாங்கிக் கொடுத்தியோ அந்தப் பட்டத்தை எல்லாம் உன்னிடம் காட்ட போறேன்... ஒரு பொம்பளை பொறுக்கி என்ன பண்ணுவானோ அதைச் செஞ்சு காண்பிக்கிறேன்டி... அப்புறம் வச்சுக்கறேன்டி என் கச்சேரியை..."

அவனளவில் அவன் நினைத்தது சரி... அவள் அளவில் அவள் நினைத்தது சரி... மொத்தத்தில் புரிதல் இல்லாமல் போனதே இருவருக்குமான இந்தப் பிரச்சினைக்குக் காரணம் என்பதை இருவருமே உணரவில்லை... உணர முற்படவும் இல்லை...

அதன் பின் அவன் செய்தது எல்லாம் மிகவும் திட்டமிட்டு நிதானமாய் யோசித்துச் செய்தது தான்...

அதன் விளைவு முகநூலில் அவளுக்கு ஒரு குறுஞ்செய்தி அனுப்பினான்...

"சாரி... சாரி... சாரி... மன்னிச்சுக்கோ பேபி..."

ஒவ்வொரு மன்னிப்பின் பின்னாலும் ஒரு மனதின் வலி இருக்கும்... அவனது மன்னிப்பின் பின்னாலும் வலி இருந்தது... அது அவனுக்கு ஏற்பட்ட அவமானத்தின் வலி...

அவனின் சுயகௌரவம் அடிப்பட்டதன் வலி… தோற்றுப் போன காதல் கொடுத்த உயிர் வலி… இது எல்லாவற்றையும் விட அவனது நட்பிற்குக் கிடைத்த மரண அடியின் மரண வலி… அது அவன் உயிர் வரை சென்று வலிக்கச் செய்தது…

அவளுக்கும் அவனுக்குமான யுத்தத்தை அவன் முடிவு செய்துவிட்டான்… இதில் ஏன், எதற்கு என்ற காரணக் காரியங்களை எல்லாம் அவன் அலசி ஆராயப் போவது இல்லை… அதனால் ஏற்படப் போகும் நியாய அநியாயங்களைப் பற்றி அவன் யோசிக்கப் போவதில்லை… தனக்கு வலிக்க வலிக்க அடித்தவளை அதை விட வலிக்க வலிக்க அடிக்க வேண்டும்… அவள் வாழ்நாளில் எழ முடியாதபடி அடிக்க வேண்டும்… அது ஒன்றே அவனது இலக்காக, வெறியாக இருந்தது…

கண்ணாமூச்சி ஆட்டம் தொடரும்…

## களம் : 15

யமுனாவை தன் வழிக்குக் கொண்டு வருவதற்கு யுவராஜ் இரண்டே இரண்டு வார்த்தைகளை மட்டுமே பயன்படுத்தினான்... தான் செய்த தவறுக்கு அவளிடம் மன்னிப்பு கேட்டவன் ஸ்வேதா தன்னைக் காதலிப்பது போல் நடித்து ஏமாற்றிவிட்டாள் என்று அவன் உருக்கமாய்ச் சொன்ன போது அந்தப் பேதை பெண்ணும் அதை உண்மை என்று நம்பி 'நான் இருக்கிறேன் உனக்கு' என்று இரு கரம் தூக்கி அவனுக்கு ஆதரவு அளித்து விட்டாள்...

இதோ தன் காதலை சொல்வதற்காக அவளைத் தனியே அழைத்து வந்து விட்டான்...

"உன்னோட காதலை இப்போ உணர்றேன்... என்னை மன்னிச்சு ஏத்துக்கோ..." என்றவன் அவளின் கண்களை நேருக்கு நேர் சந்தித்து,

"ஐ லவ் யூ யம்மு பேபி..." என்றான்...

காதலை இவ்வளவு வன்மையுடன், குரோதத்துடன் ஒருவனால் சொல்ல முடியும் என்பதை அவன் நன்கு நிரூபித்தான்...

"ராஜ்..." அவனின் உள் மன சூழ்ச்சியை அறியாத அவள் அவனது காதலை எண்ணி பூரித்துப் போனாள்... கைக் கூடாதா என்று ஏங்கிய காதல் கைக்குக் கிட்டியது எண்ணி சந்தோசப்பட்டாள்...

"அன்னைக்கு உன்னை அடிச்சதுக்குச் சாரி பேபி..." என்றவனின் வலது கரம் அவளது இடது கன்னத்தை மென்மையாய் வருடியது...

அவனது தொடுகையில் அவளுள் ஏதோ ஒன்று சிலிர்க்க கண்களை மூடி கொண்டாள்... அவளது முகம் நாணத்தால் செங்காந்தள் மலராய் சிவந்து போனது...

"நான் அடிச்சது இன்னுமா சிவந்து இருக்கு..." என்று கேட்டவனை அவள் கண் திறந்து பார்க்கும் முன் அவளது

கன்னத்தில் அவன் தனது உதட்டை அழுத்தமாய்ப் பதித்தான்...

சும்மாவே அவனது அருகாமையில் அவள் தன்னை இழப்பவள் அவனின் முத்தத்தில் தன்னை மொத்தமாய் இழந்தவளாய் அவனது நெஞ்சில் முகம் புதைத்து அவனுள் சுருண்டு போனாள்...

அவளின் இந்தச் செய்கையை அவன் சிறிதும் எதிர்பார்க்கவில்லை... அவளின் உணர்வுகளோடு விளையாட எண்ணியவனின் உணர்வுகளோடு அவள் தன் காதலால் விளையாடியதை எண்ணி செயல் இழந்தவனாய் அமர்ந்து இருந்தான்...

அவளின் உணர்வை தூண்டி விட எண்ணியவன் இப்போது அவனின் உணர்வுகள் தூண்டப்பட்டு அவனை அலை அலையாய் அடித்துச் செல்வதை உணர்ந்தான்...

"ராஜ்..." அவனின் சட்டையை இழுத்து பிடித்து அவனுள் இன்னும் இன்னும் புதைந்தவளை அவனையும் அறியாமல் அவனது கைகள் சுற்றி வளைத்துக் கொண்டது....

அவனது பழிவாங்கும் உணர்வையும் தாண்டி இத்தனை நாள் அவன் தேடிய ஏதோ ஒன்று அவன் மனதை நிறைத்தது... அதைப் பற்றி அவன் அலசி ஆராயவில்லை...

அதன் பின் அவன் தன் காதல் நாடகத்தில் ஒரு போதும் பின்வாங்கிடவில்லை... அவனின் நாடகம் தெரியாமல் அவனின் நடிப்புத் திறமையில் அவள் மயங்கி தான் போனாள்... இந்த மயக்கம் என்று தீருமோ...

இப்போது யமுனா பன்னிரெண்டாம் வகுப்பு படித்தாள்... படிப்பு அவளைப் பாதி நேரம் விழுங்கியது என்றால் மீதி அவளுடைய நேரத்தை யுவா களவாண்டு கொண்டான்... அவள் படிப்புக்கு எந்தளவுக்கு முக்கியத்துவம் கொடுத்தாளோ அந்தளவுக்கு யுவாவுக்கும் முக்கியத்துவம் கொடுத்தாள்...

இதில் அவள் உறங்கும் நேரம், உண்ணும் நேரம் மிகவும் குறைந்து போனது... உடல் சோர்வுற்ற போதும் மனச்சோர்வு இல்லாமல் அவள் இரண்டையும் அழகாய் கையாண்டாள்... அதற்கு எல்லாம் உந்து சக்தியாய் இருந்தது அவனது காதல்... அது கொடுத்த ஊக்கம் அவளை உற்சாகத்துடன் இருக்க வைத்தது...

அன்று அவளுக்கு அழைத்தவன் அவளைச் சினிமாவிற்கு அழைக்க...

"ராஜ் எனக்கு எக்ஸாம் இருக்கு... இன்னொரு நாளைக்குப் போலாமே...?" மறுநாள் அவளுக்கு மாதிரி தேர்வு நடைப்பெறுவதாக இருந்தது...

அவள் கல்லூரி படிப்பவள் என்று நினைத்து கொண்டவனோ, "இப்போ விட்டா என்ன அடுத்தச் செம்ல பார்த்துக்கலாம்..." என்க...

"அடுத்தச் செம்மா...?" அவள் புரியாமல் விழிக்க...

"இப்போ வர முடியுமா... முடியாதா...?" அவன் இறுதியாய் கேட்ட போதும் அமைதி காத்தவளிடம்,

"அவ தான் என்னைப் புரிஞ்சிக்காம அவமதிச்சான்னா... நீயும் என் மனசை புரிஞ்சிக்க மாட்டேங்கிற... எனக்கு எல்லாம் காதல் செட்டாகாது..." அவன் விரக்தியாய் முணுமுணுக்கவும் அடுத்த நொடி பெரிய அன்னையைச் சரிகட்டி விட்டு அவன் அழைத்த திரையரங்கு முன் நின்று அவனுக்காகக் காத்து இருந்தாள் அவள்...

தனக்காகக் காத்து இருந்தவளை கண்டதும் அவனுக்கு அத்தனை சந்தோசமாய் இருந்தது... அவனுக்காகத் துரும்பை கூடக் கிள்ளி போடாத ஸ்வேதாவின் காதலில் நொந்து போய் இருந்தவனுக்கு யமுனாவின் எள் என்றால் எண்ணெயாய் நிற்கும் காதல் இதமாய், மருந்தாய் இருந்தது... அதனால் வந்த மகிழ்ச்சி தான் இது என்றும் அவன் உணரவில்லை...

அவளை அழைத்துக் கொண்டு உள்ளே சென்று அமர்ந்தவன் அன்று அவளை எங்கே படத்தைப் பார்க்க விட்டான்...

அன்று அவன் கைகளும் உதடுகளும் அவளிடம் அத்து மீறியதை அவன் சற்று அதிகப்படியாய் உணர்ந்தே இருந்தாலும் அதைச் செயல்படுத்த அவன் கொஞ்சமும் தயங்கவில்லை... கொஞ்சம் கொஞ்சமாய் அவளைத் தனக்கு, தன் தொடுகைக்கு அடிமையாக்கி கொண்டு இருந்தான்... அதை உணராத அப்பாவையவளும் அவன் தொடுகையில் உருகி குழைந்து வெளியில் சிணுங்கினாலும் அவனுக்கு ஒத்துழைக்கத் தான் செய்தாள்...

அவளின் இந்தச் செய்கையே அவளை அவனின் மதிப்பில் அவளைத் தாழ செய்ததை அவள் அறியவில்லை அவள் அறிந்த போதோ அவளின் தரம் இன்னும் தாழ்ந்து போயிருந்தது அவனிடத்தில்...

"ப்ளீஸ் இன்னொரு தடவை ராஜ்..." கண்களைச் சுருக்கி கொண்டு உதடு குவித்துத் தன்னைப் பார்த்து கெஞ்சிய யமுனாவை கண்டு அவனுக்குச் சிரிப்பு வந்தது...

"இதுக்குப் போய்க் கெஞ்சணுமா பேபி..." என்றவன் அவள் கேட்டது போல் சிகரெட்டை தூக்கி போட்டு வாயில் பிடிக்க...

"சூப்பர்... சூப்பர்..." என்று கைத்தட்டி குதூகலித்தவளை கண்டவனுக்கு எப்போதும் போல் அந்தக் கேள்வி முளைக்க அவளைப் பிடித்துத் தன்னருகே இழுத்தவன் அவளைத் தன் அணைப்பில் வைத்துக் கொண்டு,

"எல்லாப் பொண்ணுங்களும் ஆம்பிள்ளைங்க சிகரெட் பிடிச்சா சண்டைக்கு வருவாங்க... ஆனா நீ என்னைச் சிகரெட் பிடிக்கச் சொல்றியே... உண்மையில் நீ என்னை லவ் பண்றியாடி..."

"எனக்கு நீ இப்படிப் பண்றது ரொம்பப் பிடிச்சு இருக்கு ராஜ்... இதுக்கும் நான் உன்னை லவ் பண்றதுக்கும் என்ன

சம்பந்தம்...? அது பாட்டுக்கு அது... இது பாட்டுக்கு இது..." என்றவள் அவனது வாசத்தை நுகர்ந்து,

"இந்த ஸ்மெல் கூட எனக்கு ரொம்ப ரொம்பப் பிடிச்சு இருக்கு..." என்றவளை ஒரு மாதிரியாய் பார்த்தானே தவிர வேறு ஒன்றும் சொல்லவில்லை...

அதை அவளும் கண்டு கொள்ளவில்லை அவனை மேலும் ஒட்டி கொண்டு அமர்ந்தவளுக்கு முன்பு இருந்த சங்கோஜம் எதுவும் இப்போது அவளிடத்தில் இல்லை... இல்லை என்பதை விட அதை இல்லாமல் ஆக்கி இருந்தான் அவன்...

அந்நேரம் அவனது அலைப்பேசி ஒலித்தது... வாசு தான் அழைத்து இருந்தான்... பேசிவிட்டு வைத்தவன் உடனே கிளம்பினான்...

"என்ன ராஜ்... இப்பத்தான் வந்த... அதுக்குள்ள கிளம்பிட்ட..." அவன் கைப்பிடித்து அவள் தடுக்க...

"இப்படியே உன் கூட இருந்தா என் வேலையை யாரு பார்ப்பா...?" கேலியாய் அவன் கேட்க...

"ஒரு வேலையும் பார்க்க வேணாம் ராஜ் என் கூட இரு..."

உண்மையில் அவளின் இந்த வார்த்தையில் அவன் எந்த மாதிரி உணர்ந்தான் என்று அவனுக்கே தெரியவில்லை... அவனையும் அறியாது அவனது கைகள் அவளைத் தன்னுடன் இறுக்கி கொண்டது...

"அப்புறம் புவ்வாவுக்கு என்ன பண்றது... உன்னை நானும்... என்னை நீயும் கடிச்சு சாப்பிட்டு பசியைப் போக்கிக்கலாமா..."

அவன் சொன்னதன் பசியின் அர்த்தம் வேறு என்றாலும் அதை அழுத்தி அவன் சொன்னவிதமும் அவளது காது மடலை இதழால் வருடியவாறு அவனது செயல் உணர்த்தியவிதமும் அந்தப் பசியின் அர்த்தத்தை வேறவிதமாய் அர்த்தப்படுத்தியது...

அதன் குறுகுறுப்பில் உடல் சிலிர்த்தவள், "அதெல்லாம் நான் பார்த்துக்கிறேன்... நீ என் கூட இருந்தா போதும்..." பணத்தின் அருமை தெரியாத காரணத்தால் தந்தையின் செல்வநிலையைக் கருத்தில் கொண்டு அவள் சொன்னாள்...

"எப்படி எப்படி... நீ சம்பாதிச்சு என்னைக் காப்பாத்த போறியா...?" அவளது காதை வருடிய இதழ்கள் இப்போது சற்று இரங்கி அவளது கழுத்தை வருடியது...

அவளைத் தன்வசம் இழுக்க நினைத்தவன் தன்னைக் கொஞ்சம் கொஞ்சமாய் இழந்து கொண்டு இருந்தான் அவளது வசமாய்...

"ஏன் காப்பாத்த மாட்டேன்னா...? உனக்காக இது கூட நான் செய்ய மாட்டேன்னா ராஜ்..." அவன் புறம் திரும்பி அவனது கண்களைப் பார்த்து சொன்னவளின் கண்களை அவனால் தான் சந்திக்க முடியாமல் போனது...

பின் தன்னைச் சுதாரித்துக் கொண்டு அவளின் மூக்கை பிடித்து ஆட்டியவன், "அது நீ சம்பாதிக்கும் போது பார்க்கலாம்... இப்போ வாசு கூப்பிடறான்... ஏதோ பேங்க் லோன் விசயமா ஆபிசரை பார்க்க போகணுமாம்... போய்ட்டு வர்றேன்..." என்றவன் கிளம்ப அவள் மனமே இல்லாமல் விடை கொடுத்தாள்...

அவன் கூறியதும் உண்மை தான் இப்போது தான் பொறுப்பு வந்து வாசுவுடன் சேர்ந்து சொந்தமாய்த் தொழில் துவங்க ஆயத்தமானான்... இதற்கு முழுப் பொறுப்பு வாசுவின் முயற்சி தான்... அவன் தான் இவனைத் தூண்டிவிட்டுத் தொழில் ஆரம்பிக்கச் சம்மதிக்க வைத்தான்...

யுவாவிற்கும் எத்தனை நாள் தான் பெற்றோரிடத்தில் பொய் கூறிக் கொண்டு இப்படி ஊர் சுற்றிக் கொண்டு இருப்பது என்ற எண்ணம் ஒரு புறம் தோன்றினாலும் தன்னை உதவாக்கரை என்று சொன்ன ஸ்வேதா முன்பு

தலை நிமிர்ந்து நிற்க வேண்டிய நிர்பந்தமும் அவனுக்கு ஏற்படத் தொழிலில் மும்முரமாய் இறங்கினான்...

இவர்களது காதல் விவகாரம் வாசுவுக்கோ கீர்த்தனாவுக்கோ இன்னமும் தெரியாது...

யமுனா சொன்னதை அசை போட்டுக் கொண்டு வண்டி ஓட்டி கொண்டு இருந்தவனுக்கு அவளது எந்தவித எதிர்பார்ப்பும் இல்லாத காதல் மனதை அசைக்கத்தான் செய்தது... இருந்தாலும் அத்தனை பேர் முன்னிலையில் அவன் பட்ட அவமானம் அவனது இளக்கத்தை மறைய செய்து அவனை இறுக செய்தது...

எது எப்படி இருந்தாலும் ஸ்வேதாவின் புறக்கணிப்பில் நொந்து இருந்த அவனது மனதிற்கு யமுனாவின் காதல் மருந்தாய் இருந்ததை அவன் மறுப்பதற்கு இல்லை... அதனாலேயே ஸ்வேதாவிடம் அவன் எதிர்பார்த்து மறுக்கப்பட்டதை யமுனாவிடம் தயங்காமல் வாய்விட்டு கேட்டு பெற்றுக் கொண்டான்...

நள்ளிரவில் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்த யுவாவின் அலைப்பேசி அழைத்தது...

"என்ன பேபி இந்த நேரத்துல...?" கொட்டாவி விட்டுக் கொண்டே கேட்டவனின் கேள்விக்கு அவளது அழுகையே பதிலாக வந்தது...

அதில் அவன் உறக்கம் கலைய எழுந்தவன், "ஹேய் யம்மு பேபி என்னாச்சு...? எதுக்கும் கலங்காத யம்மு பேபி அழுறது புதுசா இருக்கே..."

"ராஜ் அந்த மனோஜும் அவன் பிரெண்ட்சும் சேர்ந்துட்டு பேஸ்புக்ல என் கிட்ட சேட்ல அசிங்கம் அசிங்கமா பேசுறாங்க..."

அவள் கூறிய மனோஜ் மற்றும் அவனது நண்பர்கள் இவனுக்கும் தெரியும்... ஸ்வேதா, கீர்த்தனா வகுப்புத் தோழர்கள் தான் இவர்கள்...

"உனக்கு எதுக்கு அவங்க கூட எல்லாம் பிரெண்ட்ஷிப்..." கடிந்தவனுக்கு அந்த மனோஜ் மேல் கொலைவெறி வந்தது...

அது அவள் அவனது காதலி என்ற உறவு கொடுத்த உரிமையால் வந்ததோ...?

"கீர்த்திக்கா பிரெண்ட்ஸ்ன்னு தான் பிரெண்டானேன்..." யுவாக்கு இருந்த ஆத்திரத்தில் அப்போதும் அவள் கூறியதை கவனிக்கவில்லை...

"அவன்களை நான் கவனிச்சிக்கிறேன்... நீ அவங்களை அன்பிரெண்ட் பண்ணி ப்ளாக் பண்ணு..." என்று அவளுக்கு மேலும் அறிவுரை கூறியவன் மறுநாளே அந்த மனோஜை சென்று சந்தித்தான்...

"எதுக்குடா யமுனா கிட்ட அப்படிப் பேசின...?" யுவா கேட்டதுக்கு அவனோ அலட்சியமாய்...

"நீ மட்டும் யூஸ் பண்ணி பார்த்தேல்ல... அது மாதிரி நானும் யூஸ் பண்ணி பார்க்கலாமேன்னு ட்ரை பண்ணினேன்..." என்றவனைப் புரட்டி எடுத்துவிட்டான் யுவா...

அந்நேரம் அங்கே வந்த ஸ்வேதா இருவரையும் விலக்க அவளைப் பார்த்த யுவா முறைத்துக் கொண்டே விலகினான்...

"ஸ்வேதா... நீ சொல்லித்தான் அவ கூட அப்படிச் சேட் பண்ணினேன்... அதுக்கு இவன் வந்து அடிக்கிறான் பாரு..." அவளிடம் மனோஜ் புகார் அளிக்க...

"இது உன் வேலை தானா..." என்று யுவா அவளை ஆத்திரத்துடன் முறைத்தான்...

"இப்போவாவது அவளோட லட்சணம் தெரிஞ்சுக்கிட்டீங்களா யுவா... எத்தனை பசங்க கூடச் சேட் பண்றாள்ன்னு உங்களுக்கே இப்ப புரிஞ்சி இருக்குமே... அவளை மாதிரி ஒருத்தியவா நீங்க லவ் பண்றீங்க..." ஏளனமாய்க் கேட்டாள் ஸ்வேதா...

அவளிடத்தில் இல்லாது அப்படி என்ன அந்த யமுனாவிடம் இருக்கிறது என்று அவள் பின்னே யுவா அலைந்தான் என்று அவளுக்குக் கோபமாய் வந்தது...

யமுனா தவறானவள் என்று யுவாவிடம் நிரூபிக்கப் பாடுபட்டாள்... ஏனோ யுவாவுடன் பழகியதை அவளாலும் மறக்க முடியவில்லை... அதை அவனிடம் ஒத்துக் கொள்ள அவளது தன்மானம் இடம் கொடுக்கவில்லை...

அவளிடம் பதில் பேசாது மனோஜிடம் வந்தவன், "உனக்கு வேணும்ன்னா இவளை..." ஸ்வேதாவை சுட்டி காட்டியவன், "யூஸ் பண்ணிப் பாரு... ஏன்னா இவளும் நான் யூஸ் பண்ணினவ தான்..." என்றவன் ஸ்வேதாவை வெறுப்புடன் பார்த்தான்...

"டேய் என்னை என்னடா சொன்ன...?" ஆவேசம் பொங்க அவள் அவன் முன் வர...

"உன்னைச் சொன்னா இவ்வளவு கோபம் வருதுல்ல... அதே மாதிரி தான் அவளும்... தேவை இல்லாம அவளைப் பேசாதே... இத்தோட அவளோட விளையாடுறதை நிறுத்திக்கோ..." என்று அவளை எச்சரித்தவன் அங்கிருந்து செல்ல முற்பட...

"என்ன அவளுக்குப் பெருசா சப்போர்ட் பண்ண வந்துட்ட... அவ எதுக்கு இவங்க கூடச் சேட் பண்ணனும்... அதனால தான் அவங்க அப்படிப் பேசி இருக்காங்க... அவ ஒழுங்கு இல்லை... இதுல என்னை எதுக்கு அவ கூட இணைச்சு பேசுறீங்க... அவளும் நானும் ஒண்ணா..." என்று அவள் குதிக்க...

அவளைத் தீர்க்கமாய்ப் பார்த்தவன், "நிச்சயம் ஒண்ணு இல்லை தான்..." என்றான் யமுனாவை பற்றி அறிந்தவனாய்...

அதில் ஸ்வேதாவின் தன்மானம் சீண்டப்பட, "நீயும் ஒரு பொறுக்கி... அவளும் ஒரு பொறுக்கி... உங்க ரெண்டு

பேருக்கும் ஜோடி பொருத்தம் அபாரம்..." எள்ளல் குரலில் பாராட்டியவளை கண்டு,

"தேங்க்ஸ்..." என்றவன் விறுவிறுவெனச் சென்றுவிட்டான்...

அதன் பின் ஸ்வேதாவை அவன் சந்திக்கவே இல்லை... சந்திக்கும் அளவிற்கு அவள் மனுசியாய் நடந்து கொள்ளவில்லையே...

ஆனாலும் அவள் கூறிய வார்த்தைகள் அவனது காதில் ஒலித்துக் கொண்டே இருந்தது...

யமுனா ஒழுங்காக இருந்து இருந்தால் இந்தப் பிரச்சினை வந்திருக்க வாய்ப்பே இல்லை என்று நம்பியவனின் கோபம் யமுனாவின் மேல் தான் திரும்பியது... ஆனால் அந்தக் கோபத்தை அவன் உடனே காட்டவில்லை...

சமய சந்தர்ப்பம் பார்த்து காத்திருந்து அவளைத் தனது வார்த்தையில் அடித்துக் காயப்படுத்தினான்...

அதற்கான சந்தர்ப்பம் அடுத்து வந்த நாட்களில் தானாய் அமைந்தது...

யமுனாவின் பெரிய அன்னையின் மூத்த சகோதரருக்கு உடல்நிலை சரி இல்லாததால் அவர் தனது சொந்த ஊருக்கு செல்ல யமுனா தேர்வு காரணமாக அவளை வேலை செய்யும் பெண்ணை நம்பி விட்டு விட்டு சென்றார்...

இரவு அமர்ந்து தேர்வுக்குப் படித்துக் கொண்டு இருந்தவள் வீட்டு தொலைப்பேசி அழைத்ததில் அதன் ரிங் சத்தத்தில் அழைப்பது யுவா தான் என்று அவளுக்குத் தெரிந்து போனது...

"ராஜ்..." ஆர்வமாய் அழைத்தவளின் ஆர்வத்தை அவனும் ஏமாற்றாமல் தனது முத்தத்தால் அவளுக்கு அர்ச்சனை செய்தவன்,

"யம்மு பேபி எவ்வளவு நேரமா நிற்கிறது... கதவை திறடி..." என்க...

"எங்கே இருக்க...?" ஆச்சிரியமும் அதிர்ச்சியுமாய்க் கேட்டவளிடம்,

"உன் வீட்டு வாசல் முன்..." அவன் சொன்னதும் தான் தாமதம் தொலைப்பேசியை வைத்தவள் ஓடி சென்று கதவை திறந்தாள்...

"இந்நேரத்தில் நீ எப்படி இங்கே...? நல்லவேளை இப்பத்தான் வேலைக்காரி தூங்க போனா... ஷ்..." என்றவள் அவனின் கைப்பிடித்து அழைத்துக் கொண்டு தனது அறைக்குச் சென்றாள்...

"ஹப்பாடி..." அறைக்குள் நுழைந்ததும் கதவை சாத்தி தாளிட்டவள் பெருமூச்சு விடும் போதே அவளைப் பின்னால் இருந்து அணைத்துக் கொண்டான் யுவா...

"ஏய் ராஜ் என்ன பண்றீங்க...?" அவனது கைகளும், உதடுகளும் இதுவரை அவளைத் தொட்டு பரிசோதிக்காத இடங்களைப் பரிசோதித்துப் பார்த்து அவளது உணர்வுகளைப் பரீட்சித்துக் கொண்டு இருந்தது...

"இன்னைக்கு என்ன நாள் தெரியுமா...?" அவளைத் தன் புறம் திருப்பியவன் அவளது முகம் எங்கும் முத்தமிட...

அப்போது தான் அவளுக்குமே நியாபகம் வந்தது... இன்று பன்னிரெண்டு மணிக்கு அவனது பிறந்தநாள் பிறக்கிறது என்று...

"ஹேப்பிப் பேர்த்டே ராஜ்..." இப்போது அவளே அவனை அணைத்து தனது வாழ்த்தை கூற...

"தேங்க்யூ..." புன்னகையுடன் அதை ஏற்றுக் கொண்டவன் தான் கொண்டு வந்திருந்த பார்சலை எடுத்து அவளிடம் நீட்ட... புரியாமல் கேள்வியாய் பார்த்தவளிடம் புன்னகையுடன்,

"இதைக் கட்டிட்டு வா..." என்றவன் அவளுக்குத் தனிமை கொடுத்துப் பால்கனியில் போய் நின்றான்...

இன்றோடு அவளுக்கும் அவனுக்குமான உறவு முடிய போகிறது... அவன் பட்ட அவமானத்திற்கும் வலிக்கும் ஒரு முடிவு வர போகிறது... இத்தோடு யமுனாவிற்கு ஒரு பெரிய கும்பிடு... ஒரு பெரிய குட்பை...

நினைத்தவனுக்கு ஒரு புறம் சந்தோசமாய் இருந்தது... ஒரு புறம் டென்சனாகவும் இருந்தது... அவனையும் அறியாமல் அவனது கை சிகரெட்டை எடுத்தது... அதைத் தூக்கி போடும் போது அவனையும் அறியாது அவனது கை நடுங்கியது...

அந்த நடுக்கத்திலும் பதற்றத்திலும் அவன் மிகச் சரியாக அதைத் தூக்கி போட்டு வாயில் பிடித்தவன் உதடுகள் வெற்றிப் புன்னகையில் வளைந்தது... உல்லாசமாய் அதைப் பற்ற வைத்து புகையை இழுத்தவன் யமுனாவின் வரவிற்காகக் காத்திருக்க ஆரம்பித்தான்...

"ராஜ்..." அவளது அழைப்பில் திரும்பி பார்த்தவன் இனிமையாய் அதிர்ந்தான்...

புடவையில் அத்தனை அழகாய் இருந்தவளை கண்டு அவன் இமைக்க மறந்தான்...

கண்ணாமூச்சி ஆட்டம் தொடரும்...

## களம் : 16

யமுனாவின் அழகில் மயங்கி பிரமித்துப் போய் நின்றிருந்த யுவராஜ் தன் பிரமிப்பில் இருந்து வெளிவந்தவன் வேக எட்டுக்கள் வைத்து அவள் புறம் வந்தான்...

அவளது முகத்தை இரு கரங்களில் தாங்கி கண்களால் அவளின் அழகை பருகினான்...

அவனது விழி வீச்சை தாங்க முடியாமல் கண்களை மூடி கொண்ட யமுனா, "ராஜ்..." என்றாள் முணுமுணுப்பாக...

வெட்கத்தில் விழி மூடி நின்றிருந்த அவளது நிலையில் தன்னைப் பறி கொடுத்த யுவா, "அழகுடி..." என்றபடி அவளது நெற்றியில் மென்மையாய் தன் இதழை பதித்தான் தன்னை மறந்து காதலாய்...

அவனது வார்த்தையில் கண்களைத் திறந்தவள் அவனது செயலில் செவ்வானமாய்ச் சிவந்து தலையைக் குனிய... அவளின் வெட்கத்தில் தன் உணர்வு பெற்றவன் அவளை அழைத்துக் கொண்டு அறைக்குள் நுழைந்தான்...

தான் கொண்டு வந்திருந்த கேக்கை எடுத்து வைத்தவனைக் கண்டு அவள், "எல்லாம் ப்ளான் பண்ணி தான் வந்தீங்களா...?" என்றாள் சிறு சிரிப்புடன்...

"பின்னே... எல்லாம் பக்கவா ப்ளான் பண்ணி இருக்கேன்..." என்றான் ஒரு மாதிரி குரலில்...

தன்னிடம் இருந்த லைட்டரின் உதவியால் மெழுகுவர்த்தியை பற்ற வைத்தவன் அவள் புறம் திரும்பி, "இங்கே வா..." என்றான்...

அவள் அருகே வந்ததும் அவளைத் தன் கையணைவில் வைத்துக் கொண்டே கேக்கை வெட்டினான்...

முதல் துண்டை எடுத்து அவளுக்கு ஊட்டி விட்டவனிடம்,

"உங்களுக்கு..." என்று கேட்டவளை பார்வையால் விழுங்கியவன் அடுத்த நொடி அவள் முகம் நோக்கி குனிந்தான்...

ஒரு நிமிடம் கழித்து அவன் மீண்டும் நிமிர்ந்த போது அவள் வாயில் இருந்த கேக் இவனின் வாய்க்கு இடம் பெயர்ந்து இருந்தது...

"கேக் ரொம்ப டேஸ்ட்டி..." என்று கண்சிமிட்டி சிரித்தவனைக் கண்டு,

"ராஜ்..." என்று அவனது நெஞ்சில் தன் கைகளைக் கொண்டு பொய்யாய் குத்தி சிணுங்கியவளை கண்டு வாய் விட்டு சிரித்தவன் மிச்சம் இருந்த கேக்கை எடுத்து அவளது முகம் முழுவதும் பூசினான்...

"ஐயோ என்ன ராஜ் இப்படிப் பண்றீங்க..." என்று புலம்பியவளிடம்,

"இப்போ க்ளீன் தானே பண்ணனும்... அய்யா அதுல எக்ஸ்பர்ட்..." என்றவனின் இதழ்கள் அழுத்தமாய் அவளது முகம் முழுவதும் ஊர்ந்து கேக்கை சுத்தம் செய்தது...

அவனது தொடுகையில் உருகிய பாவையவள் உணர்ச்சி பிழம்பாய் மாறி அவனுள் ஒன்ற... அவளது நிலையைக் கண்டவன் புன்சிரிப்புடன் அவளோடு சரிந்தான் படுக்கையில்...

தான் திட்டமிட்டபடி மெதுவே அவளைத் தன் வசம் கொண்டு வந்திருந்தான் வெற்றிகரமாக... அதற்காக அவன் வருத்தப்படவில்லை... வேதனைப்படவில்லை... அவளால் அவன் அடைந்த அவமானம் மட்டுமே அவன் கண் முன் நின்றது... எப்பேர்ப்பட்ட பட்டத்தை அவனுக்கு வாங்கிக் கொடுத்துவிட்டாள் அவள்... பாவி...

அவன் உதடுகளும், கைளும் காட்டிய மாயாஜாலத்தில் மெதுவே மூழ்கி கொண்டு இருந்தவள் அவன் சற்று எல்லை மீறும் போது அவளது பெண் மனம் விழித்துக் கொண்டது...

அவசரமாய் அவனைத் தள்ளிவிட்டு அவள் எழுந்து கொள்ள உணர்வின் பிடியில் இருந்தவன் ஏமாற்றத்துடன் மல்லாக்க விழுந்தான்...

"யம்மு பேபி ப்ளீஸ்டி..." அவளின் கையைப் பிடித்துச் சுண்டி இழுக்க...

உணர்ச்சிப்பிடியில் தடுமாறிக் கொண்டு இருந்தவள் அவன் இழுத்த வேகத்தில் அவன் மீதே வந்து விழுந்தாள்... சந்தோசத்துடன் அவனது கரங்கள் அவளை வளைத்துக் கொண்டது...

"ராஜ்... வேண்டாமே..."

"எனக்கு வேணுமே..." அவளது காதில் கிசுகிசுப்பாய் அவன் சொல்ல... அவனது மீசை அவளது காது மடலில் உராய்ந்ததில் அவள் பாகாய் உருகி கொண்டு இருந்தாள்...

"கல்யாணத்துக்கு முன்னாடி இது தப்பு இல்லையா...?" அதில் அவளை நேருக்கு நேர் பார்த்தவன் ஒன்றும் பேசாது அவளை விலக்கி விட்டு எழுந்து அமர்ந்தான்...

"ராஜ்..." அவன் காட்டிய ஒதுக்கத்தில் அவள் தான் தவித்துப் போனாள்...

"என் மேல் நம்பிக்கை இருந்தா..." வாக்கியத்தை முடிக்காமல் அவளை நோக்கி அவன் தனது வலக்கரத்தை நீட்ட...

ஏற்கெனவே அவனது ஒதுக்கத்தில் தவித்தவள் அவனது இந்த வார்த்தையில் வேறு எதைப் பற்றியும் அவள் யோசிக்கவில்லை தனது வலக்கரத்தை அவன் முன் நீட்டினாள்...

அவளது ஒட்டு மொத்த பலகீனமாய் அவன் இருந்தான்... அவனது காதல் இருந்தது... தைரியமான பெண்ணான அவளையும் நாய்க்குட்டியாய் மாற்றி இருந்தது காதல்... அவனுக்காக உயிரையும் தர சித்தமாக இருந்தாள் அவள்... அந்தளவுக்கு அவனைப் பிடித்து இருந்தது அவளுக்கு...

அவளது தயக்கம் இல்லாத ஒப்படைப்பை கூட அவன் தவறாக நினைத்தான்...

'அது என்னடி உங்க பெண் இனம் எல்லாமே இப்படித்தானா...? மனசுக்குள்ள ஆசை இருக்கு... ஆனா போனா போகுதேன்னு எங்களுக்காக வர்ற மாதிரி சீன் போடுறீங்க...' மனதுக்குள் எள்ளலாய் நினைத்தவன் அடுத்த நொடி அவளை அள்ளி அணைக்கத் தயங்கவில்லை...

என்னத்தான் அவன் சொன்னதும் தன்னை ஒப்புக் கொடுத்தாலும் யமுனாவின் மனதுக்குள் ஏதோ ஒன்று சரி இல்லாததாய் தோன்றியது...

நேரம் செல்ல செல்ல முதலில் பாகாய் உருகி குழைந்த உடல் இரும்பாய் இறுக ஆரம்பித்தது... அவன் முத்தமிட்டு முத்தமிட்டு அவளது இறுக்கத்தைப் போக்க முயற்சித்த போதும் அவளால் இளக முடியவில்லை...

அவளை விட்டு விலகியவன் யோசனையாய் அவளைப் பார்த்தான்... அவனது விலகல் உணர்ந்து கண் திறந்தவள் அவனது யோசனை கண்டு எழுந்தாள்...

"சாரி ராஜ்..." அவனின் ஏமாற்றம் கண்டு அவளது கண்கள் கலங்கியது... தன்னால் அவனின் ஆசையைப் பூர்த்திச் செய்ய முடியவில்லையே என்று அவள் தவித்துப் போனாள்...

"என்னால முடியலை... பயமா இருக்கு..." பதினேழு வயது சிறுமியாய் தாம்பத்தியத்தை நினைத்து அச்சம் கொண்டவளாய் அவள் அமர்ந்து இருந்தாள்...

அவனோ அவளை வேறு விதமாய் நினைத்துக் கொண்டான்... திருமணம் என்ற நிகழ்வு இல்லாமல் இதை ஏற்க மறுக்கிறாள் என்று எண்ணினான்...

தன்னை அவமானப்படுத்தியவளை காலம் முழுவதும் கண்ணீர் வடிக்க வைக்க அவன் அதையும் செய்யத் தயாராய் இருந்தான்...

தனது சட்டைப்பையில் இருந்த மஞ்சக்கயிறை எடுத்து நொடி பொழுதில் அவளே எதிர்பார்க்காத வகையில் அவளின் கழுத்தில் கட்டி மூன்று முடிச்சும் போட்டு விட்டான்...

அவன் வாழ்க்கையில் செய்த பெரிய தவறு அது தான்... அவளைப் பழித்தீர்க்க மட்டும் அவன் தொட்டு இருந்தால் நூற்றோடு ஒன்றாய் அவளையும் எண்ணி மறந்து போயிருப்பான்... ஆனால் தாலி கட்டி மனைவி ஆக்கி கொண்டவளை அதன் உரிமை கொடுத்த உறவை மறக்க முடியாமல் தான் இத்தனை காலம் அவன் தவித்துக் கொண்டு இருந்தான்...

காதலித்த காதலியை மறந்துவிடலாம் ஆனால் கட்டிய மனைவியைக் கட்டையில் போகும் போதும் மறக்க முடியாது என்பதை அவனுக்குத் தீர்க்கமாய் உணர்த்தியது இந்த மஞ்சள் கயிறு... மஞ்சள் கயிறு ஒன்றினால் மட்டுமே இந்தக் குற்றவுணர்ச்சியை ஒருவனுக்குக் கொடுக்க முடியும்...

நாலு சுவற்றுக்குள் நடந்தாலும் திருமணம் திருமணமே... அதன் காரணமும் ஒன்றே...

கழுத்தில் கிடந்த தாலியை நம்ப முடியாமல் பார்த்தாள் யமுனா...

"ராஜ்..." கலக்கமும் சந்தோசமும் கலந்து பார்த்தவளை கண்டு,

"இப்போ பயம் இல்லையே..." என்று அவளை மென்மையாய் அணைத்து கொண்டவனின் அணைப்பில் பூனை குட்டியாய் சுருண்டவள் ஆம் என்பது போல் ஆமோதிப்பாய் தலையசைத்தாள்...

இப்போது அவன் அவளது கணவன் என்கிற பந்தம் அவளை அவனுடன் நெருங்க செய்தது...

அந்த முட்டாள் பெண் அப்போதும் அவனைக் கண்டு சந்தேகிக்கவில்லை... இந்நேரம் அவனிடம் தாலி எப்படி

வந்தது என்று யோசிக்கவில்லை... எல்லாவற்றிற்கும் முன்னேற்பாடாய் திட்டமிட்டு வந்தவனின் செயலை அவளால் சந்தேகம் கொள்ள முடியவில்லை...

அவளது அந்த இளக்க நிலையை அவன் தனக்குச் சாதகமாக்கி கொண்டான்...

கணவன் என்ற பந்தத்தைக் கொடுத்தவனாய் இருந்தாலும் ஒரு கட்டத்தில் வலியில் வேதனையில் அவனை விலக்கி விட அவள் செய்த முயற்சிகள் யாவும் வீணாய்ப் போனது...

உணர்ச்சியின் பிடியில் இருந்தவனோ அவளது எதிர்ப்பை எல்லாம் ஒன்றும் இல்லாததாய்ச் செய்து அவளைத் தனது ஆளுகையின் கீழ் கொண்டு வந்தான்... அவளது கண்ணீருக்கு அவனிடத்தில் மதிப்பு இல்லாமல் போனது...

முடிந்தது எல்லாம் முடிந்தது... புயல் வேகத்தில் பூந்தளிரை நாசம் செய்துவிட்ட திருப்தியில் அவன் அவளை விட்டு விலகினான்...

அயர்வுடன் படுத்து இருந்தவளின் அருகில் வந்தவன் அவளது கன்னம் தட்டி, "ரொம்ப வலிக்குதோ..."

அவளுக்கு உடல் எல்லாம் வலித்தது தான் இல்லை என்று சொல்ல முடியாது... ஆனால் அதைச் சொன்னால் அவனது மனம் வலிக்குமோ என்று எண்ணியவள் வலிய வரவழைத்துக் கொண்ட புன்னகையுடன் இல்லை என்று அவள் தலையாட்டினாள்...

"பொய் சொல்லாதடி... உண்மையைச் சொல்லு..." அவளின் தோளை பற்றி அவன் உலுக்க...

"ரொம்ப ரொம்ப வலிக்குது ராஜ்..." என்றவள் அவனது நெஞ்சில் முகம் புதைத்து கதறுவதற்காக அருகில் வர...

அவளைப் பிடித்து உதறி தள்ளியவன், "இது தான்டி எனக்கு வேணும்..." என்றான் ஆக்ரோசத்துடன்...

"ராஜ்..." பயத்துடன் பின்னே நகர்ந்தவள் அவனின் கண்ணில் காதலை தேடி ஏமாந்தாள்... அப்போதே ஏதோ

ஒன்று சரியில்லை என்று அவளுக்குத் தோன்றியது...

"இப்போ உனக்கு வலிக்குதுல்ல... இந்த மாதிரி தான்டி அன்னைக்கு அத்தனை பேர் முன்னாடி என்னை அவமானப்படுத்தினப்போ எனக்கு வலிச்சது... உன்னால அத்தனை பேரும் என்னைக் கேவலமா பார்த்தாங்கடி... அப்போ முடிவு செஞ்சேன்... உன்னை வலிக்க வலிக்க அடிக்கணும்..."

அவனது பேச்சில் அதிர்ச்சியில் உறைந்து போயிருந்தாள் அவள்...

"என்ன சொன்ன நான் உன்னைத் திட்டம் போட்டு ஏமாத்தினேன்னா... ஆமாம்டி நான் திட்டம் போட்டுத்தான் ஏமாத்தினேன்... அப்போ இல்லை... இப்போ இந்த நிமிசம்... என்னைப் பொம்பளை பொறுக்கியா தானே எல்லோர் முன்னாடியும் உருவகப்படுத்தின... இப்போ நான் ஒரு பொம்பளை பொறுக்கி தான்... போ போய் எல்லார் கிட்டேயும் சொல்லு... இவன் என்னை நம்ப வச்சு கெடுத்துட்டான்னு சொல்லு... எனக்கு எந்தப் பயமும் இல்லை... ஆமாம்ன்னு சொல்லிட்டு போய்க்கிட்டே இருப்பேன்... அதுக்கு அப்புறம் உன் நிலைமை..." என்று நிறுத்தியவன்,

"அன்னைக்கு அந்த மனோஜ் கூப்பிட்டானே அது மாதிரி இன்னும் நிறையப் பேரு கூப்பிடுவாங்க... உனக்குத் தான் இது எல்லாம் சகஜமாச்சே... அதான் அத்தனை பேரு கூடப் பழகுறியே..."

"ராஜ்..." உரக்க கத்தியவள் காதுகளை மூடி கொண்டாள்...

உடல் வலியை விட மனம் மிகுந்த வலி அடைந்தது... அவனது வார்த்தைகள் ஒவ்வொன்றும் குத்தீட்டியாய் மாறி அவளைக் குத்தி கிழித்துக் கொண்டு இருந்தது...

"ராஜ்... நீ பேசுறது எல்லாம் பொய் தானே..." அப்படி இருந்தும் அவளது உள்ளத்தில் மிச்சம் இருந்த காதல் அவனது வார்த்தையை நம்ப விடவில்லை...

"உண்மைம்மா... உன் மேல் சத்தியமா உண்மை..." அவளது தலையில் அடித்துச் சத்தியம் செய்தவனைக் கண்டு அவளின் கண்கள் கண்ணீர் வடித்தது...

அப்படி அவன் பழிவாங்கும் அளவிற்கு அவள் என்ன தவறு செய்தாள் அவனைக் காதலித்ததைத் தவிர... உயிருக்கு உயிராய் காதலித்தால் இது போல் உயிர் போகும் வலியை அனுபவித்துத் தான் ஆக வேண்டுமா... அப்படி என்றால் இந்த உயிர் காதல் வேண்டவே வேண்டாம் என்று எப்போதோ அவள் விலகி போயிருப்பாளே...

"உன்னைக் காதலிச்சதுக்கு இது தான் பரிசா ராஜ்..."

"ஆமாம்..." என்றான் இரக்கமே இல்லாமல்...

"அப்போ நீ என்னைக் காதலிக்கவே இல்லையா..."

அவளது வார்த்தைகள் அவனின் காயத்தைக் கீறி விட்டதோ என்னமோ வேகமாய் அவள் அருகில் வந்தவன் அவளது கூந்தலை பற்றி அவளது முகத்தை நிமிர்த்தியவன்,

"நான் எப்போவாவது உன் கிட்ட சொல்லி இருக்கேனாடி நான் உன்னைக் காதலிக்கிறேன்னு... நட்புக்கும், காதலுக்கும் வித்தியாசம் தெரியாமல் உளறினவ நீ தான்... நான் இல்லை... நான் என் லிமிட் தெரிஞ்சு தான் உன் கூடப் பழகினேன்... நீ தான் எல்லாத்தையும் தப்பா புரிஞ்சிட்டு நாசப்படுத்திட்ட..." குமுறியவன்,

"ச்சே..." என்று அவளை விடுவித்து விட்டு தள்ளி நின்றான்...

"அப்போ இத்தனை நாளா என்னைக் காதலிச்சது எல்லாம்..."

"எல்லாமே நடிப்பு போதுமா... காதல் ஒரு முறை தான் வரும்... அது ஸ்வேதா மேல் மட்டும் தான்... உன் மேல் இருந்தது எல்லாம் காதல் இல்லை... பழிவாங்குற எண்ணம் மட்டும் தான்..."

அவனது வார்த்தையில் அவளுள் ஏதோ ஒன்று உடைந்தது... 'ராஜ்...' ஊமையாய் கதறியது அவளது மனம்...

"இத்தோடு உனக்கும், உன் காதலுக்கும் ஒரு பெரிய கும்பிடு... ஆளை விடு தாயே..." இரு கரம் தூக்கி போலியான பவ்யத்துடன் கும்பிடு போட்டவன் அறையை விட்டு வெளியேற போகும் போது அங்கு மேசையில் இருந்த பாடப் புத்தகத்தைக் கண்டு அதிர்ந்து போய் நின்றுவிட்டான்...

பன்னிரெண்டாம் வகுப்பு கணித புத்தகம் அவளின் வயதை அவனுக்குப் பறைச் சாற்றி அவனைப் பார்த்து ஏளனமாய்ச் சிரித்தது...

"நீ... என்ன படிக்கிற...?" கேட்கும் போதே அவன் குரல் நடுங்கியது... பயத்தில் படபடவென அவனது இதயம் அடித்துக் கொண்டது...

"ப்ளஸ் டூ..." அழுகையின் ஊடே வந்தது அவளது வார்த்தைகள்...

'கடவுளே...' நிற்க முடியாமல் அவனது கால்கள் தள்ளாட சுவற்றில் சாய்ந்து நின்றான்... தான் செய்யக் கூடாத தவறு செய்துவிட்டது போல் அவனது மனமும் தள்ளாடியது...

எல்லாம் கொஞ்ச நேரம் தான் தைரியம் வரப் பெற்றவனாய் நெஞ்சை நிமிர்த்தி நின்றவன், "ரொம்ப நல்லது... ஸ்கூல் படிக்கிறப்பவே ஆம்பிள்ளையைத் தேடுறியே... உன்னை எல்லாம்... ச்சீ... ச்சீ... கேவலம்..." தன் குற்றவுணர்ச்சியை மறைக்க அவளைத் தாக்கி காயப்படுத்தினான்...

"ராஜ்... நான் அப்படிப்பட்ட பொண்ணு இல்லை..." அடிப்பட்ட பறவையாய் கதறினாள் அவள்...

"பின்னே எப்படிப்பட்ட பொண்ணு... உன்னைப் பத்தி எனக்குத் தெரியாதா..." என்றவன் கதவை திறந்து கொண்டு வெளியில் செல்ல...

அவன் போவதை உணர்ந்து அருகில் கிடந்த சேலையை உடம்பில் சுற்றிக் கொண்டு அவன் பின்னே ஓடினாள்...

"ராஜ்... என்னைக் கைவிட்டுறாதே... எனக்கு உன்னை விட்டா யாரு இருக்கா...? நீ நினைக்கிற மாதிரியான பொண்ணு நான் இல்லை... என் மனசுல நீ மட்டும் தான் இருக்க..." மெல்லிய குரலில் கெஞ்சியபடி பின்னால் வந்தவளை அவன் கண்டு கொள்ளாது விறுவிறுவெனச் சென்றுவிட்டான்...

அந்த நள்ளிரவு நேரத்தில் அவனைப் பின் தொடர்ந்து செல்ல அவளால் முடியவில்லை... அதற்கு அவளது உடையும் ஒத்துழைக்கவில்லை...

வாயிற் கதவை மூடியவள் நேரே தனது அறைக்கு வந்தாள்...

அங்கே கலைந்து இருந்த படுக்கை சற்று நேரத்திற்கு முன் நடந்த கூடலை கண் முன் காணொளியாய் ஒளிபரப்ப துக்கத்தில் கண்ணீர் மட்டுமே துணையானது அவளுக்கு...

ஒரு மணி நேரத்திற்கு முன்பு அவனைக் கண்டு அவள் அடைந்த சந்தசோம் என்ன... இப்போது அவன் வரவை நினைத்து அவள் கொள்ளும் துயரம் தான் என்ன...

"போச்சு போச்சு... எல்லாம் போச்சு..." தலையில் அடித்துக் கொண்டு அழுதவளின் கண்களில் கைகளில் கன்றி சிவந்து இருந்த தடங்கள் அவனது எச்சத்தின் மிச்சமாய் மச்சமாய் நின்று அவளைப் பயமுறுத்தியது... கைகளில் மட்டும் தானா உடலில்...? நினைவே பயமாய் இருந்தது...

எந்தப் பெண்ணும் எண்ணி எண்ணி உள்ளம் பூரிக்கும் கூடலானது அவளைப் பொருத்தவரை அவனின் வன்மத்தின் கூடாரமாய் மாறிப் போனது பேதையவள் செய்த பாவமா...

அறையில் இருப்பது மூச்சு முட்டுவது போல் தோன்ற பால்கனியில் வந்து அமர்ந்தாள்...

யுவாவை சந்தித்த காலத்தில் இருந்து இன்று வரை ஒவ்வொன்றாய் நினைத்து நினைத்து பார்த்தவளுக்கு அவன் தன்னைக் காதலிக்கவில்லை என்ற ஏமாற்றத்தை தாங்கி கொள்ள முடியவில்லை…

'காதல் இல்லாமலா அவன் என்னைத் தொட்டான்…' அவன் கரங்கள் தன்னைத் தொட்டுத் தழுவிய தருணங்கள் நினைத்து பார்த்தவளுக்கு அதில் காதல் இல்லை என்பதை நம்ப முடியவில்லை…

அவனோடு கூடிய தருணங்களே அவள் மூளை திரும்பத் திரும்ப ஒளிபரப்ப அதில் அவளது மனம் காதல் இருந்ததா இல்லை தான் ஏமாற்றப்பட்டு விட்டோமா என்று தடுமாறியது… முடிவில் அவள் ஏமாற்றுப்பட்டு விட்டதை மூளை ஏற்றுக் கொண்டு விட அதை மனம் ஏற்க முடியாமல் தவித்தது… அதில் சுவாசம் தடைப்பட அவள் மெல்ல மெல்ல மூர்ச்சையானாள்…

எத்தனை நேரம் மயங்கி கிடந்தாளோ அதிகாலையில் பெய்த மழை அவளது முகத்தில் தன் சாரலை விசிறியடிக்க அதில் மயக்கம் தெளிந்தவள் எழுந்தாள்…

இன்னும் சிறிது நேரத்தில் விடிந்துவிடும்… என்ன செய்வது என்று யோசித்தவள் வேகமாய் எல்லாவற்றையும் சுத்தம் செய்து தானும் குளித்துவிட்டு அமர்ந்தாள்… பின் நிதானமாய் யோசித்தாள்…

காதல் மட்டுமே அவளது பலகீனம்… இப்போது அந்தக் காதலும் அவளிடம் இருந்து சொல்லாமல் கொள்ளாமல் விடைப்பெற்று சென்றுவிட அடுத்த என்ன என்று யோசிக்க ஆரம்பித்தாள்…

ஆனால் ஒன்று மட்டும் உறுதி… எந்த நிலையிலும் அவனைத் தேடி மட்டும் சென்று வாழ்க்கை பிச்சை கேட்க மாட்டாள் அவள்… அவன் அவள் செய்த காரியத்தால் மட்டும் கோபம் கொண்டு அவளைப் பழிவாங்கி இருந்தால் அவனின் காலில் விழுந்து கூட வாழ்க்கைப் பிச்சை கேட்டு இருப்பாள்… ஆனால் அவளை ஆம்பிளை தேடி

அலைகிறாயா என்று கேட்டதற்குப் பிறகு அவனைத் தேடி போக அவளது தனது தன்மானம் இடம் கொடுக்கவில்லை...

'இங்கே மானமே போய்விட்டது இதில் தன்மானம் எதற்கு...?' விரக்தியாய் நினைத்தவளுக்குத் தன்நிலை குறித்துச் சிரிப்பு தான் வந்தது...

அவனைத் தேடி போகக் கூடாது என்று நினைத்தவளால் அவனது நினைவை மறக்க முடியவில்லை... மீண்டும் மீண்டும் அவளது மனம் அவனை நினைத்தது... கண்ணீர்விட்டவளை காய்ச்சலுக்கும் பிடித்துப் போனது...

இரண்டு நாளில் வந்த பெரிய அன்னை அவளது நிலை கண்டு பதறிப் போனார்... காய்ச்சலால் தான் அவள் அவ்வாறு இருக்கிறாள் என்று நினைத்துக் கொண்டார்... பக்குவமாய் அவர் கவனித்துக் கொள்ள ஓரளவு தேறி வந்தாள்...

அதன்பின் வந்த பன்னிரெண்டாம் வகுப்புத் தேர்வில் அவளால் கவனம் செலுத்த முடியாமல் அதில் தோல்வியைத் தழுவினாள்... இது எல்லோருக்குமே அதிர்ச்சி தான்... அவளைத் தொலைப்பேசியில் அழைத்த பரந்தாமன் திட்டி தீர்த்துவிட்டார்... அதை மௌனமாய் வாங்கிக் கொண்டாள் தான் செய்த தவறுக்காக...

அடுத்துப் பரீட்சை நன்றாக எழுதி தேர்ச்சி பெற்றவள் பெரிய அன்னை இறந்துவிடத் தனது பெற்றோரிடமே சென்னைக்கு வந்துவிட்டாள்... அதன் பின் படிப்பின் அவசியத்தை உணர்ந்தவள் இன்றுவரை படிப்பில் தாழவில்லை...

அக்கா கனிமொழியிடம் இயல்பாய் ஒட்டி கொண்டாள்... தந்தையிடம் வேண்டும் என்றே வம்பு செய்து அவரிடம் திட்டு வாங்கினாள்... அது அவள் என்றோ செய்த தவறுக்கு தான் என்று அவளது மனசாட்சிக்கு மட்டுமே தெரியும்... எத்தனை பெரிய விசயத்தைப் பெற்றோரிடம் இருந்து மறைத்து இருக்கிறாள்... அந்தப் பாவத்துக்கான பிரயாசித்தமாகத் தந்தையின் திட்டை எண்ணினாள்...

எப்போதும் கலகலப்பாய் இருக்க ஆரம்பித்தாள்... அது அவளது மனத்துயரை அடுத்தவர்களுக்குக் காட்டாது மறைக்கத் தான்... அதையும் மீறி அவனது நியாபகம் அவ்வப்போது எழும்... அதில் அவளது மனம் மயங்கி நினைவு மயங்கும் நிலைக்குத் தள்ளுவதை உணர்ந்து அதைக் கொஞ்சம் கொஞ்சம் மறக்கலானாள்...

அவனது நினைவுகளை அவள் மறந்தாலும் அவன் கட்டிய தாலியை அவள் மறக்கவில்லை... கழட்டி எறியவில்லை... பெண்ணுக்குத் திருமணம் என்பது ஒரு முறை தான் என்பது ஏனோ அவள் ஆழ்மனதில் பதிந்து போயிருந்தது... அதைப் பெற்றோருக்குத் தெரியாமல் மறைக்க அவள் பட்ட பாடு அவளுக்கு மட்டுமே தெரியும்... உறங்கும் போது உடை விலகியோ இல்லை சங்கிலி வெளியில் வந்து தாலி காட்டி கொடுத்து விடுமோ என்று அவள் தாலியை எப்போதும் உள்ளாடையுடன் சேர்த்து ஊக்கு குத்தி இருப்பாள்... அந்தளவுக்குக் கவனமாய் இருந்தாள்... ஏன் பாதுகாத்தாள் எதற்குப் பாதுகாத்தாள் அது அவளுக்கே தெரியவில்லை...

மறக்க நினைத்த நினைவுகளை நியாபகப்படுத்த என்று அவன் மீண்டும் வந்து நின்றான் அவளது அக்காவின் கொழுந்தனாய்...

அன்று அவளை விட்டு வந்த யுவா அதன் பின் கோயம்புத்தூரில் இருக்கவில்லை... வாசுவிடம் தனியே தொழில் ஆரம்பிக்கும்படி கூறியவன் சென்னை வந்துவிட்டான்...

அவன் என்னம்மோ அவளைப் பிரிந்து வந்துவிட்டாலும் அவளது நினைவுகளை அவனால் மறக்க முடியவில்லை அது மட்டும் உண்மை... அதிலும் இரவு எழும் அவளது நினைவுகளை அடக்க அவன் பெரும்பாடு பட்டான்...

'ச்சீ... கேவலம் போயும் போயும் அவளைப் போய் நினைப்பதா...' முயன்று மனதுக்குக் கடிவாளமிட்டு அவள் நினைவுகளை அடக்கினான்... அதையும் மீறி எழும் நினைவுகளை அவனால் ஒன்றும் செய்ய முடியவில்லை...

சில சமயம் அவள் என்ன செய்து இருப்பாளோ... சின்னப் பெண்ணாயிற்றே என்று அவன் மனதில் இரக்கம் தோன்றும்... அதே போல் மனதின் மூலையில் சிறு நம்பிக்கை ஒன்று இருந்தது... தன்னைத் தேடி அவள் வருவாள் என்று... ஆனால் நாட்கள் செல்ல செல்ல இந்த இரக்கத்திற்கும் காத்திருப்புக்கும் அர்த்தம் இல்லாமல் போனது தான் மிச்சம்...

'அவள் எதுக்கு என்னைத் தேடி வரணும்... அதான் அவளுக்கு ஊரில் அத்தனை பிரெண்ட்ஸ் இருக்காங்களே... அதில் எவனையாவது பிடிச்சு இருப்பா... நீ எதுக்குடா அவளை நினைச்சு கவலைப்படற... உன் வாழ்க்கையை நீ ஜாலியா என்ஜாய் பண்ணு...' மனதுக்குள் ஆத்திரமாய் நினைத்தவன் தனது வாழ்க்கையை வாழ ஆரம்பித்தான்...

தந்தை பொறுப்பாய் தொழிலை பாரு என்று சத்தம் போட்ட போதும் கூட அவனால் வேலையைச் செய்ய முடியவில்லை...

அவன் யாருக்காக, எதுக்காகச் சம்பாதிக்கணும் என்ற விரக்தி மனப்பான்மையே அவனுள் எழுந்து ஆட்டிப்படைக்க உல்லாசமாய்த் தனது வாழ்க்கை முறையை மாற்றிக் கொண்டான்... அந்த உல்லாசம் அவனுக்கு உற்சாகத்தைக் கொடுத்ததோ இல்லையோ அவளது நினைவுகளை மறக்க உதவியது...

மூன்று வருடங்கள் கழித்து ஸ்வேதாவை சந்தித்த போது அவள் மீண்டும் காதலை சொன்ன போது அதை ஏற்றுக் கொள்ளவும் இல்லை... அதை மறுக்கவும் இல்லை... மௌனமாய் இருந்தான்... அந்த நேரம் அவன் மனம் என்ன மாதிரி உணர்ந்தது என்று அவனுக்கே தெரியாது... அதனால் அவளிடம் அமைதி காத்தான்... நட்பு முறையில் மட்டுமே அவளிடம் பேசினான்...

அவனைப் பாடாய்ப் படுத்த என்று மீண்டும் அவனது கண்ணில் பட்டாள் யமுனா அவனது அண்ணனின் மச்சினியாய்...

அவளது மனதை அவளுக்கு எடுத்துரைக்க அவனுக்கான விபத்து காரணமாய் அமைந்தது... அன்று உணர்ந்தாள் அவன் இன்றி அவள் இல்லை என்பதை...

அதே போல் அவள் தன்நினைவு இழந்து மயங்கி விழுந்து அவனுக்கு அவனது காதலின் ஆழத்தை உணர்த்தினாள்... அப்போது உணர்ந்தான் அவன் அவளின்றி அவன் இல்லை என்று...

உணர்ந்த இரு நெஞ்சமும் இன்னமும் தங்கள் மனங்களை வெளிப்படுத்தவில்லை...

அவள் மனதில் ஸ்வேதா நெருஞ்சி முள்ளாய் உறுத்தி கொண்டு இருந்தாள்...

அவன் மனதில் அன்று அவன் நடந்து கொண்டவிதம் குற்றவுணர்ச்சியை அளித்து அவனுக்கு உறுத்தலாய் இருக்கிறது...

இருமனமும் மனம் திறக்கும் நாள் எந்நாளோ...!!!

கண்ணாமூச்சி ஆட்டம் தொடரும்...

## களம் : 17

பழைய நினைவுகளை அசைப் போட்டுக் கொண்டு இருந்த யமுனாவிற்கு அத்தனை நேரம் இருந்த தைரியம் மறைந்து மனம் கோழையாய் துவண்டு போனது... என்ன முயன்றும் யுவராஜ் அவளுக்குச் செய்த துரோகத்தின் தாக்கம் அவளுள் இருக்கத்தான் செய்தது...

'என்னை நம்பாமல் ஏமாற்றி விட்டானே... என்னை என் காதலை புரிந்து கொள்ளாமல் போனானே...' அவளது மனம் துன்பத்தில் தவிக்கத்தான் செய்தது...

அந்தத் தவிப்பில் அவளது நாசி உயிர்காற்றுக்கு ஏங்கி தவிக்கப் பழையபடி மூச்சுத்திணறல் உண்டானது அவளுக்கு... நா வறள கண்கள் இருட்டி கொண்டு வருவது போல் இருந்தவளுக்கு அந்நேரம், 'இந்தப் பிரிவு நிரந்தரம் இல்லை... தற்காலிகம் தான்...' என்று அவன் கூறிய வார்த்தைகள் அவளின் உயிர்காற்றாய் மாறி அவளின் உயிரை காப்பாற்றியது...

வருவான் வந்து தன்னை அழைத்துச் செல்வான் என்று நம்பிக்கை எழுந்தது அவள் மனதில்...

அவன் அத்தனை துரோகம் செய்தும் ஏன் அவனைத் தேடி வந்தோம் என்ற கேள்வியே அவளது மனதை வண்டாய்க் குடைந்தது... வேண்டாம் என்று ஒதுங்கியவனைத் தானும் வேண்டாம் என்று தானே ஒதுக்கினாள்... பின்னே இப்போ மட்டும் ஏன் அவனைத் தேடி தான் வர வேண்டும்...?

அன்று அவன் உயிருக்கு போராடிய போது உணர்ந்தாள் அவன் இல்லை என்றால் அவள் இல்லை என்று... அந்தக் கணம் அவள் தனது ஈகோவை விட்டு விட்டு அவன் காலடியில் முழுதாய் சரண்டைந்துவிட்டாள்... இருந்தாலும் அவனிடம் வாழ்க்கைப் பிச்சை கேட்க அவளுக்கு வாய் கூசத்தான் செய்தது... தனது திருமணத்தைத் தடுக்கவும், அவனுக்கும் ஸ்வேதாவுக்குமான திருமணத்தை நிறுத்தவும் தான் அவள் இருவருக்கும் நடந்த திருமணத்தை

எல்லோரிடமும் சொன்னாளே தவிர அப்போதும் அவள் அவனுடன் வாழ தயாராய் இல்லை தான்...

ஆனால் அடுத்தக் கணம் அவன் அவளது வாழ்க்கையைத் தனதாக்கி கொண்டு கையில் எடுத்ததைத் தான் அவளால் நம்ப முடியவில்லை... அன்று சாட்டையாய் சுழன்று அவனது நாவு பேசிய வார்த்தைகளை அவனே மறந்து தன்னை அவனுடைய மனைவி என்று ஒத்துக் கொண்டு அவனுடன் இருக்க வேண்டும் என்று சொன்னது கேட்டு அவளுக்குமே சிறிது அதிர்ச்சி தான்... ஏற்றுக் கொள்ள முடியாது இது பழிவாங்கல் தான் என்று உறுதியாய் அவளை மறுத்து கறிவேப்பிலை போல் அவளைத் தூக்கி தூரப் போட்டு போனவன் இன்று இப்படிப் பேசுவதன் அர்த்தம் தான் என்ன...?

அதிலும் நேற்று நடந்தது எல்லாமே அவளால் இன்னமும் நம்ப முடியவில்லை... மனைவி என்கிறான், கடமை என்கிறான்... என்னத்தான் ஆயிற்று அவனுக்கு...? கடமை என்றாலும் அவனின் இந்த மாற்றம் அவளுக்குப் பிடித்துத் தான் இருந்தது... ஆனால் இந்த மாற்றம் நிரந்தரமானதா இல்லை தற்காலிகமானதா...??? அந்தக் கேள்வி தான் அவள் மனதில் ஓடி கொண்டு இருந்தது...

அதே நேரம் யுவாவின் மனதிலும் அவளது நியாபக ஊர்வலமே... 'வலிக்குது ராஜ்...' அன்றும் இன்றும் அவள் கூறிய வார்த்தைகளே அவனது காதில் ஒலித்து அவனது நிம்மதியை நிலைக்குலையச் செய்தது...

ஒரு பெண்ணின் வலியை அதுவும் பதினேழு வயது சிறுமியின் வலியை அவன் இப்போது நன்கு உணர்ந்தான்... இப்போது அவன் அவளது வாழ்க்கையைச் சீரமைத்து இருந்தாலும் அவன் செய்த குற்றம் குற்றமே... அதுவும் எப்பேர்ப்பட்ட கொடுமை அது...!

கண்களை மூடி இருக்கையில் சாய்ந்தவனின் கண்களில் கண்ணீர் வழிந்தது... அதைத் துடைக்கும் எண்ணம் கூட இல்லாமல் அமர்ந்து இருந்தான்... ஆண் என்ற மூர்க்கத்தில்

அன்று அவன் செய்த பிழையை இந்தக் கண்ணீரின் மூலம் கரைக்க முயன்றான்...

அந்நேரம் அவனது அலைப்பேசியில் குறுஞ்செய்தி ஒன்று வந்ததற்கான சத்தம் எழுந்தது... சுவாதீனமாய் எடுத்து பார்த்தவன் விழிகள் விரிந்தது ஆச்சிரியத்தில்...

'மிஸ் யூ ராஜ்...' யமுனா தான் அனுப்பி இருந்தாள்...

கண்கள் கலங்க அலைப்பேசி மீது இதழொற்றியவன் அதை நெஞ்சோடு அணைத்துக் கொண்டான்...

இதுநாள் வரை அவன் தேடிய காதல் அவனைத் தேடி வந்து விட்டதை உணர்ந்தான்...

ஸ்வேதாவிடம் தான் தேடி தோற்றுப் போன காதல் யமுனாவிடத்தில் இருந்ததை இந்த நொடி உணர்ந்தான்... காலம் கடந்து யமுனா மீதான தன் காதலை அவன் உணர்ந்தான்...

மன்னிக்க முடியாத தவறு செய்தவனையும் மன்னித்து ஏற்றுக் கொண்ட யமுனா அவனுக்குத் தேவதையாய் தெரிந்தாள்... மலர்களால் அர்ச்சிக்க வேண்டிய தேவதையை இதுநாள் வரை முட்களால் அல்லவா அவன் அர்ச்சித்து இருக்கிறான்... இனி காலம் முழுவதும் அவளைக் கண் கலங்காமல் காப்பாற்ற வேண்டும் என்று உறுதி எடுத்துக் கொண்டான்...

கோயம்புத்தூர் இரயில் நிலையத்தில் அவன் வந்திறங்கிய போது...

"வெல்கம் பேக் டூ கோயம்புத்தூர்..." இரு கை நீட்டி வரவேற்ற வாசுவை கண்டதும் யுவாவின் முகம் மலர்ந்தது...

"என்னடா இவ்வளவு காலையில் நேரில் வந்திருக்க...? நான் என்ன சின்னப்பையனா நானே வந்திருப்பேனே..." அந்த அதிகாலை நேரத்தில் வந்து நின்ற நண்பனை கண்டு சந்தோசம் தாங்கவில்லை அவனுக்கு...

"நான் எங்கே எழுந்திருச்சேன்... காலையிலேயே எங்க வீட்டு வாண்டு எழுப்பி விட்டிருச்சு அதான் பிரெண்ட்டை கூட்டிட்டு வரலாம்ன்னு வந்துட்டேன்..." என்று பேசியபடி வாசு அவனது காரில் இவனை ஏற சொல்லி தானும் ஏறியமர்ந்து காரை கிளப்பினான்...

வாசு - கீர்த்தனா தம்பதிகளுக்கு இரண்டு வருடங்களுக்கு முன் தான் திருமணமாகி இருந்தது... ஒரு வயதில் சத்யன் என்ற மகன் இருக்கிறான்...

"ஹோட்டல்ல ரூம் போட்டு இருக்கேன் மச்சி... என்னை அங்கே இறக்கி விட்டிரு..." என்ற யுவாவை முறைத்த வாசு,

"என் வீடு இருக்கிறப்போ ஹோட்டல் எதுக்கு...? இங்கே இருக்கிற வரை நான் சொல்றதை கேட்டுட்டு பேசாம இருக்கிற... என்ன புரிஞ்சதா...?" என்ற வாசு தன் வீட்டை நோக்கி காரை செலுத்தினான்...

ஓரக்கண்ணால் நண்பனை நோக்கிய வாசுவிற்கு அவனின் தோற்ற மாற்றம் ஆச்சிரியத்தைக் கொடுத்தது... தாடியுடன் முகத்தில் பழைய களையிழந்து எதையோ பறி கொடுத்தார் போன்று அதுவும் இத்தனை அமைதியாய் அமர்ந்து இருக்கும் இந்த யுவா அவனுக்குப் புதிதே...

யுவா இருக்கும் இடத்தில் நிச்சயம் இளமை துள்ளல் இருக்கும்... கலகலப்பு இருக்கும்...

"எனித்திங் ராங் யுவா..." வாசுவின் கேள்வியில் திரும்பி பார்த்தவன்,

"நத்திங்டா..."

"எப்போ கல்யாண சாப்பாடு போட போற...? நம்ம செட்ல முக்கால்வாசி பேர் லைப்ல செட்டில் ஆகியாச்சு..."

யுவா சிறிது நேரம் மௌனம் காத்தவன், "எனக்குக் கல்யாணம் ஆகிருச்சு மச்சி..."

"என்ன...?" அதிர்ச்சியுடன் அவனைப் பார்த்தான் வாசு...

"ம்... என் மனைவியை உனக்கு நல்லா தெரியும்..."

"யாரு... ஸ்வேதாவா...?"

ஸ்வேதா பெயர் கேட்டதும் யுவாவுக்குக் கசந்தது...

"இல்லைடா... யமுனா..."

"யமுனா... யாருடா அது..." நியாபக அடுக்கில் தேடினான் வாசு...

"அதான்டா முன்னாடி சிஸ்டர் கூட வருவாளே..." யமுனாவை நியாபகப்படுத்தினான் யுவா...

"அவளையா...? நீயா...? எப்படிடா...?" நம்ப முடியாமல் கேட்டான் வாசு...

"எப்படியோ... இப்போ அவள் தான் என் மனைவி... என் காதல் மனைவி... போதுமா..." யமுனாவை நினைத்ததும் அவனது உதட்டில் அவனையும் அறியாது புன்னகை வந்தமர்ந்தது...

யுவாவின் புன்னகை நிறைந்த முகமே அவனது மனதை பறைச்சாற்ற அதற்கு மேல் வாசு தோண்டி துருவி கேட்கவில்லை...

வீடு வந்ததும் கீர்த்தனாவிடம் விசயத்தைச் சொல்ல அவள் மகிழ்ந்து போனாள்...

"எனக்கு யமுனா கூடப் பேசணும்... நீங்க பேசும் போது சொல்லுங்கண்ணா..." என்றவளிடம் சரி என்று தலையாட்டினான்...

வாசுவின் மகன் சத்யன் கொலு கொலுவென அழகாய் இருந்து யுவாவை வெகுவாய்க் கவர்ந்தான்... அவனது மழலை சிரிப்பு யுவாவை பெரிதும் மயக்கியது...

அவனைத் தன் அலைப்பேசியில் புகைப்படம் எடுத்துக் கொண்டான் யமுனாவிடம் காட்டுவதற்காக... அவனுக்குமே

அடி மனதில் ஏக்கமாக இருந்தது தங்களுக்கும் இது போல் ஒரு மகவு இருந்தால் எப்படி இருக்கும் என்று...

காலையில் வேலைக்குக் கிளம்பி வந்தவனை வாசு நேரே தனது அலுவலகத்துக்கு அழைத்து வந்தான்...

"வாசு இங்கே எதுக்குக் கூட்டிட்டு வந்திருக்க...?"

"இங்கே தான் உனக்கு வேலை..." என்ற வாசு தனது இருக்கையில் யுவாவை அமர வைத்தான்...

"டேய் என்னடா பண்ற...?" பதறி போய் எழுந்தவனைத் தோள் பற்றி அமர வைத்தவன்,

"இது நாம ரெண்டு பேரும் சேர்ந்து உருவாக்கணும்ன்னு நினைச்ச கம்பெனி... இதில் உன்னோட ஐடியாவும் இருக்கு... உன்னோட இடமும் காலியா தான் இருக்கு... அதுக்கு யாரையும் நான் ரீப்ளேஸ் பண்ணலை..." என்றான் பெருந்தன்மையுடன்...

"வாசு..." கண்கள் கலங்கியது யுவாவிற்கு... நல்ல நட்பு அமைவதும் வரம் தான் போலும்...

அன்று அவன் திட்டமிட்டு செயலாற்றி எல்லாம் கை கூடி வரும் நேரத்தில் அப்படியே வாசுவிடம் ஒப்படைத்து விட்டு போய்விட்டான்... இந்த நாலு வருடத்தில் ஓரளவு பேர் சொல்லும் அளவுக்கு இந்தக் கம்பெனி வளர்ந்து இருப்பதற்குக் காரணம் வாசு மட்டுமே... அவன் அல்ல...

"இல்லை வாசு... வேலை மட்டும் கொடு போதும்..." யுவா மறுக்க...

"வேலையைத் தான்டா கொடுத்து இருக்கேன்..." தன்னோடு இணைந்து பணியாற்ற தோழனை இருகரம் நீட்டி அழைத்தான்...

ஆனாலும் யுவாவிற்கு மனம் கேட்கவில்லை...

"இப்போது மாத சம்பளம் பெற்றுக் கொண்டு பணியாற்றுகிறேன்... பிறகு நீ சொல்வதைக் கேட்கிறேன்"

என்றதும் அதற்கு மேல் வாசுவாலும் வற்புறுத்தவில்லை...

"ரொம்ப மாறிட்டே யுவா..."

"இந்த மாற்றமும் பிடிச்சு தான் இருக்கு மச்சி..." என்று சிரித்தவன் மாற்றத்துக்கான காரணத்தைக் கூறவில்லை...

அன்று வேலை முடிந்து வந்தவன் மனதில் யமுனாவின் நியாபகமே... வந்ததில் இருந்து அவளிடம் பேசவில்லை... பேச முடியாமல் அவனது குற்றமுள்ள நெஞ்சு குறுகுறுத்தது... எந்த முகத்தை வைத்துக் கொண்டு அவளிடம் பேசுவது என்று தயக்கமாக இருந்தது...

அந்நேரம் அவனது எண்ணத்தின் நாயகியே அவனை அழைத்தாள்... அவன் எடுத்தவுடன் படபடவெனப் பொரிந்து தள்ளிவிட்டாள்...

"இது தான்டா நீ... என்னை மறந்துட்டுக் கை கழுவிட்டுப் போறது தான் உனக்கு அல்வா சாப்பிடறது மாதிரியே... இப்பவும் என்னைக் கைவிட்டுட்டு போற ஐடியால தான் இருக்கியா... முன்னயாவது நான் தனி ஆளு... இப்போ என் கூட என் மாமனார் மிஸ்டர். சக்ரபாணி இருக்கார்... அவரைக் கூட்டிட்டு வந்தேன் மவனே நீ செத்தேடா..."

அவளது பேச்சில் அவனுக்குச் சிரிப்பு வந்தது...

"அப்படி எல்லாம் இல்லை..."

"நேத்து நைட் வரைக்கும் நல்லாத்தானே பேசின... இப்போ என்ன ஆச்சு...?"

அவளது கேள்வியில் மௌனம் காத்தான்...

"நான் செஞ்சதை உன்னால எப்படி மன்னிக்க முடிஞ்சது...?" மொட்டையாக அவன் திடீர் என்று கேட்டதும் அவளுமே மௌனமானாள்...

"நான் எங்கேடா மன்னிச்சேன்... நீ தான் வலுக்கட்டாயமா என்னைப் பிடிச்சு வச்சிட்டு விட மாட்டேங்கிற..." என்று அலுத்து கொண்டாள் வேண்டும் என்றே...

"அப்போ நான் சொன்னதால தான் என்னோட இருக்கியா...?"

"ம்..." குத்துமதிப்பாய் தலையை ஆட்டி வைத்தாள்... அது எங்கே அவனுக்குத் தெரிய போகுது...

அவனின் மனம் அடிப்பட்டுப் போனது... ஏற்கெனவே உள்ள குற்றவுணர்ச்சியுடன் இந்தப் பழிவுணர்ச்சியும் சேர்ந்து கொண்டது...

"இன்னைக்கு அப்பா, அம்மா வந்து இருந்தாங்க..." அடுத்து அவளே ஆரம்பித்தாள்...

"என்னவாம்...?"

"சீர் செய்யறேன்... நகை கொடுக்கிறேன்னு..." என்றவள், "உனக்கு ஏதும் எதிர்பார்ப்பு இருக்கா ராஜ்... உன் வொய்ப் இவ்வளவு சீர் கொண்டு வரணும் அது இதுன்னு..."

"ம்ஹூம் இல்லை..." முன்பு இருந்த யுவாவாக இருந்து இருந்தால் பட்டியல் போட்டு சொல்லி இருப்பான்...

"அப்போ சரி..." நிம்மதி பெருமூச்சு விட்டவள், "எதுவும் வேண்டாம்ன்னு திருப்பி அனுப்பிச்சிட்டேன்... எனக்கு என்னோட ராஜ் எல்லாம் செஞ்சி தருவான்னு சொல்லிட்டேன்... என்ன நான் சொன்னது சரி தானே..."

கொஞ்ச நேரம் முன்பு அவள் பேசியதில் காயமுற்ற அவனது இதயம் இப்போது மகிழ்ச்சியில் துள்ளியது...

"நிச்சயமா பேபி... உனக்குச் செய்யாமலா..."

"எனக்கு எங்கப்பா மேல கோபம் ராஜ்... அவரு உன்னைப் பத்தி தப்பா பேசியது எனக்குப் பிடிக்கலை... அதான் அவரோடது எதுவும் வேண்டாம்ன்னுட்டேன்..."

"பெரியவங்க அப்படித்தான் இருப்பாங்க..." என்றவன் பேச்சை மாற்றுவதற்காக வாசு கீர்த்தனாவை பற்றிப் பேசினான்...

"அப்படியா..." என்று குதூகலித்தவளுக்குச் சத்யனின் புகைப்படத்தை அனுப்பி வைத்தான்...

"சத்யா ஃபோட்டோ பார்த்தியா... அழகா இருக்கான்ல்ல..." என்றவன் தனது அடிமனதின் ஆசையை அவளிடம் சொல்லாமல் மறைத்தான்...

"அப்போ நமக்கும் ஒரு குழந்தை உண்டாகி இருந்தா இது மாதிரி தான் இருந்திருக்கும்ல ராஜ்..." அவளது வார்த்தையில் திராவகம் வீசியது போல் துடித்துப் போனான் அவன்...

"எத்தனையோ முறை யோசிச்சு இருக்கேன் ராஜ்... ஒரு குழந்தை அதுவும் உன்னை மாதிரி வந்திருந்தா நல்லா இருந்து இருக்கும்... என் வாழ்க்கைக்கும் ஒரு பிடிப்பு வந்து இருக்கும்ன்னு நினைப்பேன்... ஆனா அதுக்கு வழியே இல்லாம போச்சு இல்ல..."

அவளது காதலை எண்ணி பூரிப்பதா இல்லை தனது செயலை நினைத்து நாணுவதா என்ன செய்வது என்று தெரியாது திகைத்து நின்றான் அவன்...

பதினேழு வயதில் அவளுக்கு அவன் செய்த செயலே மாபாதகம் என்று எண்ணி அவன் உள்ளம் குமைந்து கொண்டு இருக்க இதில் குழந்தை வேறா... அவனின் குற்றத்தை அதிகரிப்பது போல் அவனது குற்ற மனப்பான்மையையும் அவள் அதிகரிக்கச் செய்தாள்...

அலைப்பேசியை அணைத்து போட்டவனுக்கு வாய்விட்டு ஓவென்று கதறியழ வேண்டும் போல் இருந்தது...

அடுத்து வந்த நாட்களில் அடுத்தடுத்து வேலைகளைச் சூறாவளியாய்ச் செய்து முடித்தவன் அந்த வார இறுதியில் சென்னையை நோக்கி புறப்பட்டான்... அவன் வருவதை வீட்டில் யாரிடமும் சொல்லவில்லை...

அவன் வீட்டிற்கு வரும் போது யமுனா தியாவுடன் சேர்ந்து கண்ணாமூச்சி விளையாடி கொண்டு இருந்தாள்... அன்று

போல் இன்றும் கண்ணைக் கட்டி கொண்டு வந்த யமுனா தவறி போய் அங்கு வந்த யுவாவை கட்டி பிடித்தாள்...

அவனிடம் இருந்து வந்த அவனுக்கே உரித்தான பிரத்யேக நறுமணத்தில் அவசரமாய்க் கண் கட்டை அவிழ்த்தவள் எதிர்பாராவிதமாய் அவனை அங்குக் கண்டதில் மலர்ந்த அவளது முகம் அடுத்த நொடியில் கூம்பி போனது...

'என்னடி ஆம்பிளையைத் தேடி அலையறியா...?' அன்றும் அதற்கு முன்னரும் அவன் கூறிய வார்த்தைகள் அவளது மனதை கூறு போட்டுக் கிழித்தது...

அவனது மனதிலும் அதே வார்த்தைகள் தான் ஓடியதோ என்னமோ... வேதனையுடன் கண்களை மூடி கொண்டான்...

"சாரி ராஜ்..." என்று பதறி போய் அவனிடம் இருந்து விலகியவள் இறைஞ்சுதலுடன் அவனைப் பார்த்து,

"தயவுசெஞ்சு தப்பா மட்டும் பேசிடாதே ராஜ்... நான்... நான் அந்த மாதிரி பொண்ணு இல்லை..." என்றாள் வேதனையுடன் கண்களில் கண்ணீர் மல்க...

அவன் வன்மத்தால், குரோதத்தால் ஒரு முறை அவளை உயிருடன் கொன்றதுக்கு அவனைப் பல முறை உயிருடன் கொன்றாள் அவனது காதல் ராட்சசி தனது மாசற்ற காதலினால்...

பழிக்கு பழி வாங்க வாழ்க்கை ஒன்றும் போர்க்களம் அல்லவே... பழிவாங்கியவனையும் மன்னித்துக் காதலை வாரி வழங்கும் இவள் மாதிரி பெண்கள் இருக்கும் வரை பெண்ணியம் போற்றப்படுமோ...

இவள் புரட்சிபெண்ணாக உருமாறி அவனை நீதிமன்றத்துக்கு இழுத்து நியாயத்துக்காகப் போராடவில்லை என்றாலும் இவளும் ஒருவிதத்தில் புரட்சி பெண்ணே... ஆம் காதலில், அன்பில் மறுமலர்ச்சி செய்த புரட்சி பெண்ணவள் இவள்...

கண்ணாமூச்சி ஆட்டம் தொடரும்...

## களம் : 18

"சித்து..." தியாவின் ஆர்ப்பாட்ட குரலில் யுவராஜ் தன் வருத்தத்தை மறைத்துக் கொண்டு,

"அடடே தியா குட்டி... எப்படி இருக்கீங்க...?" என்று அவளைத் தூக்கி கொண்டான்...

"சித்து... மிஸ் யூ சித்து..." என்று அவனது இரு கன்னத்திலும் முத்தமிட்டது சின்னச்சிட்டு...

"மீ டூ குட்டி..." என்று மகளின் கன்னத்தில் அவன் முத்தமிட்டாலும் அவனது பார்வை யமுனா மீதே இருந்தது...

"உள்ளே போகலாமா...?" மகளிடம் கேட்டவன் மனைவியைப் பார்த்தான்... அவள் அவனை நிமிர்ந்து பார்த்தால் அல்லவா கண்கள் கலங்க தலைகுனிந்து நின்று இருந்தாள்...

ஒரு எட்டு எடுத்து வைத்தவன் மனைவியிடம் அசைவு இல்லாது போகவும் திரும்பி பார்த்தான்... அவளது மனநிலை அவனுக்குப் புரிவதாய்... ஆனாலும் அவளைத் தொட்டு ஆறுதல் சொல்ல தயங்கினான்...

"வா..." அதற்கும் அசைவில்லாது நின்றவளை கண்டு ஆற்றாமையாக இருந்தது...

துள்ளல் துடிப்பு நிறைந்த பெண்ணைத் தனது செயலாலும் வார்த்தையாலும் தான் காயப்படுத்தியதை எண்ணி மனம் நொந்து போனவனாய் அவள் அருகில் வந்தான்... அமைதியாய் இருந்தவளின் தலையைப் பரிவுடன் வருடி கொடுத்தவன் அவளது தோளில் அழுத்தமாய்க் கையைப் போட்டு தன்னுடன் அணைத்துக் கொண்டான்...

அவனது செயலில் பிரமிப்பாய் அவனை ஏறிட்டு பார்த்தாள் அவள்... எத்தனையோ வார்த்தைகள் கொடுக்காத ஆறுதலை அந்த ஒற்றை அணைப்பு அவளுக்குக் கொடுத்தது...

"சாரி யம்மு பேபி..." என்றான் முணுமுணுப்பாய்...

அதில் கண்கள் கலங்கியவள் அவனது தோளில் சாய்ந்து கொண்டாள்...

"சித்து... சித்தி கிட்ட சாரி கேட்காதே... என்னுடைய சாக்லேட் எல்லாம் எடுத்து சாப்பிட்டுட்டு என் கிட்ட சாரி கேட்கலை அவங்க... அதனால நீயும் கேட்காதே..." சின்னவள் சின்ன அன்னையைச் சித்தப்பனிடம் போட்டு கொடுத்தாள்...

"ஓய்... இவ்வளவு நாள் சாக்லேட் லஞ்சமா கொடுத்து விளையாட கூப்பிட்டது நீ... இப்போ உங்க சித்துவை பார்த்ததும் என்னைப் போட்டு கொடுக்கிறியா...? உன்னை..." சண்டைக் கோழியாய் சிலிர்த்துக் கொண்ட யமுனாவை கண்டு அவனுக்குச் சிரிப்பு வந்தது...

"சித்து..." சிணுங்கிய மகளின் கன்னத்தில் முத்தமிட்டவன்,

"நான் உனக்கு நிறையச் சாக்லேட் வாங்கித் தர்றேன் குட்டி... சித்தி கூடச் சண்டை போடாம இரு..."

"சாக்லேட் உன் மகளுக்கு மட்டும் தானா... எனக்கு எல்லாம் கிடையாதா..." யமுனா அவனிடம் சண்டைக்குப் போனாள் தனது மனவருத்தத்தை மறந்து...

"உனக்கு இல்லாததாடி... உனக்கும் தான்..." என்றவனைக் கண்டு,

"அது அந்தப் பயம் இருக்கணும்..." கெத்தாய் கூறியவளை கண்டு அவனுக்குச் சற்று நிம்மதியாய் இருந்தது... சற்று முன் அவளைப் பார்த்த போது ஏற்பட்ட வருத்தம் இப்போது இல்லை...

யுவா வரவை உணர்ந்து வீட்டு உறுப்பினர் எல்லோரும் அவனின் நலம் விசாரிக்கக் கூடிவிட்டனர்...

"ராசா... எப்படி இருக்கப்பா...?" என்றபடி வந்த பாக்கியம் பேரனுடன் நின்று இருந்த யமுனாவை கண்டதும் முறைத்தார்...

"நீ இல்லாம இந்தக் கிழவி தான் சாப்பிடாம ரொம்ப மெலிஞ்சு போச்சு..." பாக்கியத்தின் பருமனான உடலை

கேலி போல் பார்த்தபடி சொன்னவள், "போய் அதைக் கொஞ்சம் கொஞ்சு... என்னை முறைக்கிறதை பாரு..." கணவனிடம் கூறிக் கொண்டே அவள் விலகி நிற்க...

அதைக் கேட்டு அவனுக்குச் சிரிப்பு பீரிட்டது... இருந்தாலும் அடக்கி கொண்டு, "ப்யூட்டி எப்படி இருக்க...? உன்னைப் பிரிஞ்சி என்னால இருக்க முடியலை... அதான் வந்துட்டேன்..." என்று அணைத்துக் கொண்ட பேரனை கண்டு கண்ணீர் விட்டார் அந்த மூதாட்டி... கூடவே இருந்து வளர்த்த பாசம்...

அதற்குள் சக்ரபாணி அங்கு வர யுவா அமைதியாய் அவரைப் பார்த்தான்...

"வேலையில் சேர்ந்து ஒரு வாரம் ஆகலை அதுக்குள்ள வீட்டை தேடி வந்துட்ட...?" நக்கலாய் கேட்டவரை கண்டு,

"யமுனாவை கூட்டிட்டு போகலாம்ன்னு வந்தேன்..."

அதில் எல்லோரும் திடுக்கிட்டு அவனைப் பார்த்தனர்... யமுனா மட்டுமே சந்தோசமாய் அவனைப் பார்த்தாள்...

"வீடு பார்த்திட்டியா...? மாச சம்பளம் எவ்வளவு...? உங்க ரெண்டு பேர் செலவையும் உன்னால சமாளிக்க முடியுமா...? இப்போ வீராப்பா கூட்டி போய்ட்டு பின்னாடி வந்து கஷ்டப்படுறேன் கண்ணைக் கசக்க கூடாது..." சக்ரபாணி கேட்கவும் அவனுக்குச் சுறுசுறுவெனக் கோபம் எட்டி பார்த்தது...

"அப்படி ஒரு நிலை வராது... வந்தாலும் என் மனைவியைப் பார்த்துக்க எனக்குத் தெரியும்..." என்றான் முறைப்புடன்...

அவனை ஒரு பார்வை பார்த்தவர் ஏதோ யோசித்தவராய் பின்பு, "எல்லாமே அவசரகதியில் செஞ்சு முடிச்சிட்டீங்க... உங்க ரெண்டு பேர் ஜாதகம் பார்த்ததுல முதல்ல கட்டிய தாலியை பிரிச்சுட்டு மறுதாலி கட்ட சொல்றாங்க... அதனால வார வெள்ளிக்கிழமை உங்க கல்யாணத்தை நம்ம குல தெய்வம் கோவில்ல பண்ணலாம்ன்னு முடிவு

பண்ணி இருக்கேன்... அதுக்கு அப்புறம் உன் பொண்டாட்டியை நீ கூட்டிட்டு போ..."

"இன்னும் ஒரு வாரமா... அது எல்லாம் முடியாதுப்பா..." என்று மறுத்தவனை முறைத்தவர்,

"இந்த ஒரு விசயத்துலயாவது என் பேச்சை கேளு..." என்று முடித்துக் கொண்டவர் எழுந்து வெளியில் சென்றுவிட்டார்...

அவள் அருகில் இல்லாமல் அவளின் நினைவில் அவன் தவிப்பது அவனுக்கு அல்லவா தெரியும்... அவருக்கு எங்கே அவனது தவிப்பு தெரிய போகிறது...

அவனது கவலையில் அவன் அவளைக் கவனிக்க மறந்தான்... தாலி, திருமணம் என்றதும் அவளுள் பழைய நினைவுகள் கிளர்ந்து எழுந்து அவளைச் சூறாவளியாய் சுழற்றி அடித்தது... அமைதியாய் அறைக்கு வந்துவிட்டாள்...

அவள் பின்னே வந்தவன் அவளது முகமாற்றத்தை வேறு மாதிரி எண்ணி கொண்டான்...

"உன்னைக் கூட்டிட்டு போகலாம்ன்னு தான் இருந்தேன்... ஆனா அப்பா..." என்று இழுத்தவனைப் பார்த்து தனது வேதனையை விழுங்கி கொண்டு அவனைப் பார்த்து சிரித்தாள்...

"பரவாயில்லை விடு... இதிலாவது அவங்க பேச்சை கேட்போமே..." அவளின் பேச்சை கேட்ட பின்பே அவனுக்குச் சற்று நிம்மதியாய் இருந்தது...

அன்று மாலை யமுனாவை அழைத்துக் கொண்டு கடைவீதிக்கு வந்திருந்தான்... திருமணத்துக்குத் தேவையான உடைகளை வாங்குவதற்காக... பரந்தாமன் தான் எடுத்துத் தருவதாகக் கூறினார்... சக்ரபாணி பணம் தருவதாகக் கூறிய போதும் அதை எல்லாம் மறுத்துவிட்டு அவன் தனது பணத்தில் அவளுக்கு வாங்கித் தருவதற்காக வந்து இருந்தான்...

அன்று அவர்கள் வந்திருந்த அதே ஷாப்பிங் மாலுக்கு அழைத்து வந்தவன் அன்று அவள் உடை எடுக்காமல் சென்ற கடைக்கு அழைத்துச் சென்று புடவையை எடுக்கச் செய்தான்... அன்று ஏற்பட்ட வலியை இன்று சமன் செய்தான்...

"இது நல்லா இருக்கா ராஜ்... இது... இது..." என்று கடையில் இருந்த அனைத்து புடவையையும் தன் மேல் போட்டு காண்பித்தவளுக்கு அத்தனை புடவையையும் வாங்கிக் கொடுக்க வேண்டும் என்ற ஆவல் அவனுக்குப் பிறந்தது... ஆனால் கையிருப்பு அவனிடத்தில் அவ்வளவு இல்லையே... வாழ்க்கையில் பணம் எவ்வளவு முக்கியம் என்பதை அந்த நேரம் அவன் உணர்ந்தான்... தனக்காக இல்லை என்றாலும் மனைவியை நன்றாக வைத்து கொள்வதற்காகவாவது சம்பாதிக்க வேண்டும் என்று அவனுக்குத் தோன்றியது...

"உனக்கு எது பிடிச்சு இருக்கோ அதை எடு பேபி..." என்றான் புன்னகையுடன்...

"எனக்கா... நீ எப்பவும் இப்படிச் சிரிச்சிக்கிட்டே இருக்கணும் அதான் பிடிச்சு இருக்கு..." அவனது கன்னத்தைப் பிடித்து இழுத்தவள்,

"முதல்ல இந்தத் தாடியை எடு... தேவதாஸ் மாதிரி அசிங்கமா இருக்கு..." என்றவள், "பார்வதியை பிரிஞ்சு இருக்க முடியலையோ... இனியும் அவளைப் பத்தி நினைச்சிட்டு இருந்தே மவனே... குடலை உருவி மாலையா போட்டுருவேன்... உன்னை இல்லை... உன் பார்வதியை... அவ உயிரோட இருந்தா தானே அவளை நினைப்ப..." கடுப்புடன் சொல்ல...

"உனக்கு என்ன தாடியை தானே எடுக்கணும் எடுக்கிறேன் போதுமா... முதல்ல புடவையை எடுடி..." என்றான் வாய் கொள்ளா சிரிப்புடன்...

"நான் அவளைச் சொன்னா மட்டும் உனக்குப் பிடிக்காதே..." என்று முணுமுணுத்துக் கொண்டே,

"நான் செலக்ட் பண்ண மாட்டேன்... எனக்குப் பதிலா நீ தான் செலக்ட் பண்ணனும்... அதான் உனக்கு நான் கொடுக்கிற பனிஷ்மென்ட்..." என்று அவள் முறுக்கி கொள்ள...

அவன் சிரித்தபடி அங்கிருந்த புடவையைப் பார்க்கலானான்... அழகான அடர் பச்சையில் மிதமான சரிகையுடன் இருந்த புடவையை அவளிடம் எடுத்து காட்ட...

அத்தனை நேரம் இருந்த கோபம் மறைந்து, "சூப்பர்..." என்று அவள் குதூகலிக்க... அதையே பில் போட சொல்லியவன் அவனுக்கும் தேவையானதை எடுத்துக் கொண்டு வெளியில் வந்தார்கள்...

அப்போது அங்கு வந்த இளமாறன் இவர்களைக் கண்டு உற்சாகமாய் வந்தான்...

"டேய் ரெண்டு பேரும் சேர்ந்து என்னைக் காமெடி பீசாக்கிட்டீங்களேடா..."

அதைக் கேட்டு இருவரும் வாய்விட்டு சிரித்தனர்...

"நீங்க என்னைக் காதலிக்கிறேன் தான் சொன்னீங்க... எனக்குக் கல்யாணம் ஆகிருச்சான்னு நீங்க என்னைக் கேட்கவே இல்லையே..." கலகலவெனச் சிரித்தவளை கண்டு,

"அம்மா தாயே... இனி நீ சொன்ன மாதிரி எந்தப் பொண்ணைப் பார்த்தாலும் இந்தக் கேள்வியைக் கேட்ட பின்னாடி கல்யாணம் ஆகலைன்னு கன்பார்ம் ஆனதுக்கு அப்புறம் லவ் சொல்றேன்..." கேலியாய் சொன்ன இளா தானும் சேர்ந்து உடன் சிரித்தான்...

"பார்த்து ரொம்ப நாளாச்சு யுவா... வா அந்தக் காபி ஷாப்ல போய்ப் பேசலாம்..." நண்பனை அழைத்தவன், "மேடம் இன்னைக்கு என்னோட ட்ரீட் மேடம்... அன்னைக்கு மாதிரி பையன் கிட்ட சண்டைக்கு நிக்காதீங்க..."

"ஒரு இனாவான வசமா மாட்டி இருக்கும் போது ராஜ்க்குச் செலவு நான் வைப்பேனா... என்ன ராஜ்...?" அவளின்

பேச்சில் ஆமோதிப்பாய் தலையசைத்த சிரித்த யுவாவை கண்டு மயக்கம் வராத குறை இளாவுக்கு...

"யுவா நீயாடா இது...?" ஆச்சிரியப்பட்ட இளாவை,

"ஹலோ ஒருத்தரை திருந்தவிட மாட்டீங்களே..." என்ற யமுனாவை கண்டு,

"திருந்தட்டும் தாயே... கொஞ்சம் சொல்லிட்டுத் திருந்த சொல்லுங்க... திடீர்ன்னு பார்க்கிறவங்களுக்கு ஹார்ட் அட்டாக் வந்திர போகுது..."

"அடுத்தத் தடவை திருந்தறப்போ டிவி நியூஸ்ல டெலிகாஸ்ட் பண்ண சொல்றேன்..." என்றவளை பார்த்து பெரிய கும்பிடு போட்ட இளா,

"தெய்வமே வாம்மா... எதையாவது வாங்கிக் கொடுத்து உன் வாயை அடைக்கிறேன்..." காபி ஷாப் நோக்கி நடக்க...

"நீங்க ரெண்டு பேரும் போங்க... நான் வாஷ்ரூம் போய்ட்டு வந்திடறேன்..." என்று யுவா செல்ல...

இளாவும், யமுனாவும் உள்ளே சென்று அமர்ந்தனர்...

"இந்த லிஸ்ட்ல உள்ளது எல்லாத்தையும் நான் ஆர்டர் பண்ணவா...?" நமட்டு சிரிப்புடன் கேட்ட யமுனாவை பார்த்து,

"இரும்மா... எதுக்கும் என் பர்ஸில் பணம் இருக்கான்னு பார்த்துக்கிறேன்..." அவன் கிண்டல் செய்ய...

"இளா..." ஒற்றை விரல் நீட்டி அவனைப் போலியாய் எச்சரிக்கை செய்தவள் வாய்விட்டு சிரித்தாள்...

அங்கு ஏற்கெனவே அமர்ந்து இருந்த ஸ்வேதாவுக்கு யமுனாவை நன்கு அடையாளம் தெரிந்தது... அதுவும் அவள் யுவா இல்லாத வேறு ஆண்மகனுடன் இணைந்து பேசி கொண்டு இருப்பது தெரிந்து இகழ்ச்சியாய் அவளது இதழ்கள் வளைந்தது... அவளது மனதில் குரூரமான எண்ணம் தோன்ற எழுந்து யமுனாவை நோக்கி நடந்தாள்...

"உன்னை நம்பி உன்னை இங்கே விட்டுட்டு கோயம்புத்தூர்ல போய் இருக்கான் அந்த மடையன்... ஆனா நீ இங்கே வேறு ஒருத்தன் கூடச் சுத்திக்கிட்டு இருக்க... நீ இன்னும் மாறலை... ம்... யுவாவை விட இவன் ஆளு சூப்பரா இருக்கான்ல அதான் இவன் பின்னாடி சுத்துற போலிருக்கு... உனக்குத் தான் யுவா வேண்டாம்ல... அப்புறம் எதுக்கு அவனை விடாம பிடிச்சுட்டு இருக்க..."

ஸ்வேதாவின் பேச்சில் அதிர்ந்து போய் விழித்தான் இளா...

முதலில் திகைத்து போய் அவளைப் பார்த்த யமுனா அது ஸ்வேதா என்றதும் அலட்சியமாய் முகத்தைத் திருப்பிக் கொண்டாள்... எத்தனை ஜென்மம் எடுத்தாலும் மறக்கும் முகமா அது... அந்தளவுக்கு வெறுக்கும் முகம் அது... ஆனால் அவளது வார்த்தைகள் இவளது மனதில் கொந்தளிப்பை உண்டாக்கியது உண்மை... கொதித்த மனதை அடக்கி கொண்டு கணவனின் வரவிற்காகக் காத்திருந்தாள்...

யுவா அங்கே வந்தவன் ஸ்வேதாவை கண்டு திடுக்கிட்டுப் போனான்... வேகமாய் யமுனாவின் அருகில் வந்தவன் அவள் தோளில் ஆறுதலாய் கை வைக்க அவனது தொடுகையில் நிமிர்ந்தவள் அவனைக் கண்டதும் எழுந்து அவனது கையை இறுக்கமாய்ப் பிடித்துக் கொண்டு ஸ்வேதாவை வெறுப்பாய் பார்த்தாள்...

எதிர்பாராமல் யுவாவை பார்த்த ஸ்வேதாவுக்குச் சற்று அதிர்ச்சியாக இருந்தது...

"நீங்க எங்கே இங்கே...?" தடுமாறினாள் அவள்...

"அவன் கிட்ட என்ன பேச்சு உனக்கு..." சொடக்கு போட்டு அவளை அழைத்த யமுனா,

"நீ இவனை ரொம்பக் காதலிக்கிறியோ...?" யமுனாவின் கேள்வியில் ஸ்வேதா மட்டுமல்ல ஆண்கள் இருவருமே திகைத்து போயினர்...

"அப்படிக் காதலிக்கிறவ கண்ணுக்கு தன் காதலனை விட அடுத்தவன் அழகா தெரிய மாட்டான்... என்ன சொன்ன இளா யுவாவை விட அழகா...? இதுலேயே உன் காதலோட லட்சணம் தெரியுது... உன் மனசுல எவ்வளவு அழுக்கு இருக்குன்னும் புரியுது... இப்படித்தான் மனசுக்குப் பிடிச்சவங்களை அடுத்தவங்களோட கம்பேர் பண்ணிட்டு திரிவியா... ஆனா நான் அப்படி இல்லை... அன்னைக்கும் சரி இன்னைக்கும் சரி எனக்கு என் ராஜ் தான் அழகு... உன்னை மாதிரி நான் அடுத்த ஆம்பிளையைப் பார்த்து ஜொள்ளு விட்டுட்டு திரியலை... இனிமே கொண்டு என்னைப் பத்தி ஏதாவது பேசின இல்லை எங்க ரெண்டு பேருக்கு இடையில் வர நினைச்சே மவளே சங்கை அறுத்துருவேன் அறுத்து..."

ஸ்வேதாவை எச்சரித்தவள் இளாவிடம், "சாரி இளா இன்னொரு நாள் பார்க்கலாம்..." என்று விடைப்பெற்றவள் யுவாவிடம்,

"உனக்கு வேற தனியா சொல்லணுமா...?" என்று கடுகடுத்தவள் அவனை இழுத்துக் கொண்டு நடக்க... யுவா நிறைந்த மனதுடன் எல்லையில்லா காதலுடன் அவளின் இழுத்த இழுப்பிற்கு ஏத்தபடி அவள் பின்னே சென்றான்...

இளா சிரிப்புடன் அவர்கள் போவதை பார்த்துக் கொண்டு இருந்தான்... ஸ்வேதா பேயடித்தார் போல் திகில் பரவ நின்றிருந்தாள்... அவளைத் திரும்பி பார்த்த இளா,

"உங்களுக்கு ஒண்ணு தெரியுமா மேடம்... நான் ஏற்கெனவே அவளை ப்ரபோஸ் பண்ணி இருக்கேன்... ஆனா அவள் என்னை ஏறெடுத்து கூடப் பார்க்கலை... இப்ப கூடப் பார்த்தீங்கல்ல எப்படிச் சொல்லிட்டு போறாள்ன்னு... காதல்க்கு அழகு முக்கியம் இல்லை... மனசு தான் முக்கியம்ன்னு... அது உண்மையும் கூட... அந்த நல்ல மனசு அவள் கிட்ட இருக்கு... அதனால் தான் இத்தனை வருசம் கழிச்சும் அவளுக்கு யுவா கிடைச்சு இருக்கான்... இது தான் உண்மையான காதல்..." என்றவன்...

"மேடம் இத்தோட விட்டாள்ன்னு சந்தோசப்படுங்க... இல்லை சொன்னதைச் செஞ்சுட்டு தான் மறுவேலை பார்த்து இருப்பா... அதான் அறுக்கிற வேலை..." கேலியாய் கூறி சிரிக்க...

அதில் அங்கிருந்து ஓடியே போய்விட்டாள் ஸ்வேதா...

ஆட்டோவில் செல்லும் போது கோபமாய் முகத்தைத் தூக்கி வைத்துக் கொண்டு யமுனா வர...

"கோபமா பேபி..."

"இல்லை ரொம்பக் கூலா இருக்கேன்..." ஈயெனப் பல்லை இளித்துக் காண்பித்தவளை கண்டு யுவாவிற்குச் சிரிப்பு வந்தது...

"இல்லை நீ கோபமா தான் இருக்கே..."

"ரொம்பப் பெரிய கண்டுப்பிடிப்பு..." என்று உதட்டை சுழித்தவள்,

"ஆமாம்... கோபமாத்தான் இருக்கேன்... அவ அந்தப் பேச்சு பேசுறா நீ வாயை திறப்பேனாங்கிற மாதிரி ஊமைக்கோட்டான் மாதிரி அசையாம இருக்க..." கோபத்தில் படபடத்தவளிடம்,

"அவ என்ன பேசினாள்ன்னு எனக்கு எதுவுமே தெரியாதுடி... இல்லைன்னா கேட்டு இருப்பேன்..."

"ம்க்கும்... கேட்டுட்டாலும்..." இழுத்து நீட்டி நொடித்தவள், "உனக்குத் தெரியாம நான் இளா கூடச் சுத்திக்கிட்டு இருக்கேன்... அவன் ஆளு சூப்பரா இருக்கானாம்... அதான் அவன் கூட வந்து இருக்கேன்னு சொல்றா... அவளை..." ஸ்வேதாவை நினைத்து பல்லைக் கடித்தாள் அவள்...

அவள் சொன்ன செய்தியில் பழைய நினைவுகளை அவன் மனம் கிளறிவிட்டது... அதே சமயம் இன்று யமுனாவின் வார்த்தைகளும் அவனது காதில் ஒலித்தது... அன்று அவன் அவளைக் கொடிய வார்த்தைகள் பேசி கொன்றதும் நியாபகத்துக்கு வந்தது...

மனதால் கூடத் துரோகம் நினைக்காதவளை போய்த் தான் பேசிய வார்த்தைகள் ஒவ்வொன்றும் பூமராங்காயாய் மாறி அவனைத் திருப்பித் தாக்கியது... அவளை வலிக்கச் செய்ததை விட அவனை அதிகம் வலிக்கச் செய்தது இப்போது...

மனைவியின் அருகில் நெருங்கி அமர்ந்தவன் அவளது கரத்தோடு தன் கரம் கோர்த்து அவளது கையில் அழுத்தமாய்த் தன் இதழை பதித்தவன், "சாரி பேபி..." என்றான் கண்கள் கலங்க மன்னிப்பு கேட்டான் என்றோ தான் செய்த தவறுக்கு...

அவனது செய்கை அவளையும் உருக்கியதோ என்னமோ...

"பரவாயில்லை விடு..." என்றாள் சமாதானமாய்...

ஸ்வேதா பேசியதற்காக வருந்துகிறான் என்று அவள் நினைத்தாள்... ஆனால் அது அவன் பேசியதற்காக என்று அவள் உணரவில்லை...

உணரும் போது பூ புயலாகி யாரை தாக்க போகின்றதோ...???

ஒரு வாரம் எப்படிச் சென்றது என்றே தெரியவில்லை... இதோ யுவாவும், யமுனாவும் குல தெய்வம் முன் கண் மூடி பிரார்த்தித்துக் கொண்டு இருந்தனர்...

இருவர் மனதிலும் தங்களது இணை நன்றாக நலம் பெற்று இருக்க வேண்டும் என்ற எண்ணத்தைத் தவிர வேறு எதுவும் இல்லை...

அவள் கழுத்தில் இருந்த தாலியை கழற்றி கோவில் உண்டியலில் போடும் போது என்னத்தான் உணர்வுகளை அடக்கி வைத்திருந்த போதும் மெல்லிய விம்மல் ஒன்று அவளிடம் இருந்து வெளிப்படத்தான் செய்தது... அவளின் மனநிலை புரிந்தவனாய் அவளது கையை ஆறுதலாய் பற்றிக் கொண்டான் யுவா...

அவன் என்ன ஆறுதல் கூறிய போதும் துரோகத்தின் பரிசு அவளது மனதில் ஆறாத வடுவாய் பதிந்து இருக்கத்தான் செய்தது...

மறுதாலி எடுத்து அவன் கட்டிய போது அவனையும் அறியாமல் சிறு நிம்மதி ஏற்பட்டது... அவனுக்குமே அன்று அவள் கழுத்தில் தாலி கட்டிய சூழ்நிலை ஒவ்வாமல் மனதை அரித்துக் கொண்டு தான் இருந்தது... அந்தத் துக்கம் இப்போது அவனுக்கு இல்லை...

அவளோ உணர்வுகள் அற்றுச் சிலையாய் மாறி போயிருந்தாள்...

அதன் பின் அவன் அவளுடன் இருக்க முடியாமல் நெருங்கிய உறவினர்கள் கூட்டம் இருவரையும் சூழ்ந்து கொண்டது...

மீள் தாலி கட்டியதை சாக்காக வைத்து சக்ரபாணி இருவீட்டு நெருங்கிய உறவினர்களையும் அழைத்துப் பெரிய விருந்துக்கு ஏற்பாடு செய்து விட்டார்...

எல்லாம் முடிந்து அவர்கள் வீடு வர மாலை ஆனது...

இரவு அறைக்கு வந்த யுவா அங்கிருந்த அலங்காரத்தைக் கண்டு அதிர்ந்து போனான்... ஒரு காலத்தில் இதற்கு ஏங்கியவன் தான் அவன்... ஆனால் இன்று இதை இயல்பாக எதிர்கொள்ள முடியாத அளவுக்குக் குற்றவுணர்ச்சியில் தவித்தான்... அதை விட யமுனாவை எப்படி அணுகுவது என்று தெரியவில்லை...

இதுவரை அவளது மனக்காயத்துக்கு அவன் மன்னிப்பு ஒன்றை கேட்டுத் தப்பித்துக் கொண்டு இருந்தான்... ஆனால் இனி அந்த மன்னிப்பு கூட அவளிடம் செல்லுபடியாகுமோ என்ற அச்சம் எழ பயத்துடன் அவளின் வருகைக்காகக் காத்து இருந்தான்...

வேதனையுடன் அமர்ந்து இருந்தவனின் மனதில் என்னத்தான் ஒதுக்கி தள்ள நினைத்தாலும் அன்று

அவளுடன் கூடிய கூடலே நியாபகத்திற்கு வந்து அவனை அலைக்கழித்தது...

அறைக்கதவு திறந்து யமுனா வருவதை உணர்ந்து திரும்பி பார்த்தவனுக்குத் தன் நிலை குறித்துப் பயங்கரமாய் இருந்தது...

கதவு பக்கத்தில் நின்று கொண்டு அவனை வெறித்துப் பார்த்தவள் அருகில் வந்தவன், "வா பேபி..." என்றான் முயன்று வரவழைத்துக் கொண்ட சாதாரணக் குரலில்...

"உனக்கான அங்கீகாரம் இப்ப கிடைச்சிருச்சு இல்ல... அன்னைக்கு யாருக்கும் தெரியாமல் பண்ணியதை இன்னைக்கு எல்லோருக்கும் தெரிய பண்ண போற இல்ல... இதைத் தான் அன்னைக்கு அப்படிச் சொன்னியோ..." என்று அன்று அவன் கூறிய தகாத வார்த்தைகளைத் திருப்பிக் கூறியவள்,

"வா... உனக்குத் தான் லைசென்ஸ் கொடுத்தாச்சே... இப்ப எந்தத் தடையும் இல்லையே... வந்து எடுத்துக்கோ..." மாராப்பு சேலையை எடுத்து கீழே நழுவ விட்டவள் இரு கரம் நீட்டி அவனை வாவென அழைத்தாள்...

அவள் நின்றிருந்த கோலத்தில், அவள் அழைத்த விதத்தில் அவனது சர்வாங்கமும் நடுங்கியது...

அவனது ஆண் என்கிற அகம்பாவம் சுத்தமாய்ச் செத்துப் போனது அவளது அழைப்பில்...

## களம் : 19

அசையாமல் தன்னைப் பார்த்துக் கொண்டு இருந்த கணவனைக் கண்டு ஏளனமாய் யமுனாவின் உதடுகள் வளைந்தது...

"ஓ... உனக்குக் கேக் இல்லாம ரொமான்ஸ் பண்ண முடியாதுல்ல..." என்றவளின் கண்கள் கட்டிலின் பக்கத்தில் வைக்கப்பட்டு இருந்த இனிப்பு வகைகள் மீது நிலைக்குத்தி நின்றது...

வேகமாய் அதன் அருகில் சென்றவள் அங்கிருந்த இனிப்பு ஒன்றை கையில் எடுத்துக் கொண்டு யுவா அருகில் வந்து அதை அவனிடம் நீட்டினாள்...

சர்க்கரை பாகில் நன்கு ஊற வைக்கப்பட்டு இருந்த குலோப்ஜாமூனை பார்த்தாலே நாவில் எச்சில் ஊறும்... ஆனால் அவனுக்கோ அதைப் பார்த்தாலே வேம்பாய் கசக்க அவள் கையில் இருந்து அதைப் பிடுங்கி தூர எறிந்தான்...

"ப்ளீஸ் கொல்லாதேடி யம்மு..." என்று வேதனையில் மனமும் முகமும் கசங்க கூறியவன் அவளின் நழுவிய சேலையை எடுத்து அவள் மீது ஒழுங்காகப் போட்டு விட்டான்...

பின் அவளது முகத்தைக் கைகளில் தாங்கியவன், "வலிக்குது பேபி..." என்றான் அவளின் செயலின் வலியை தாங்காதவனாய்... அவனது வலி கண்டு தனது வலியாய் துடித்தவள் கதறிவிட்டாள்...

"அன்னைக்கு நீ பேசியதும் எனக்கு இப்படித்தான்டா வலிச்சது... நான் என்ன பாவம் பண்ணினேன்... என்னை அப்படி வலிக்க வலிக்கப் பேசிட்டு போன... உன்னைக் காதலிச்சது அவ்வளவு பெரிய குத்தமாடா... என்னைப் பிடிக்கலைன்னா என்னைப் பிடிக்கலைன்னு சொல்லி இருக்கலாமே... அதை விட்டுட்டு நம்ப வச்சு கழுத்து அறுத்திட்டியே... நான் உன்னை அத்தனை பேர் முன்னாடி பேசியது தப்பு தான்... ஆனா அதுக்காக நீ என்னை இப்படி

அநியாயமா பழிவாங்கி இருக்க வேண்டாம் ராஜ்... ஒரு பொண்ணு வாழ்க்கையை எவ்வளவு ஈசியா கெடுத்துட்டு போயிட்ட..."

அவன் பதில் பேசாது மௌனமாய் அவளைப் பார்த்துக் கொண்டு இருந்தான்... அவன் மனம் அவளை விட அதிக வேதனையில் உழன்று கொண்டு இருந்ததை அவள் அறியவில்லை... அவளாவது தனது துக்கத்தை அவனைத் திட்டி தீர்த்து ஆற்றி கொள்கிறாள்... ஆனால் அவன் செய்த தவறுக்கு தலைக்குனிந்து கூனிக்குறுகி வாய் இருந்தும் மௌனியாய் நின்று கொண்டு இருக்கிறான்...

"உன்னை எந்தளவுக்கு நம்பி இருந்தேன்னா அந்த ராத்திரி வேளையிலும் உன்னை என் ரூமுக்குள்ள வர விட்டு இருப்பேன்... ஆனா அந்த நம்பிக்கையை நீ அவ்வளவு கேவலமா பேசிட்ட... நான் ஆம்பிளைக்கு அலையறவளா...? சொல்லுடா... நான் அலையறவளா...? உன்னைத் தவிர வேறு யார் வந்தாலும் அவங்க கூடப் படுக்கிற அளவுக்கு நான் என்ன கேவலமானவளா...? பார்க்கிற ஆம்பிளைங்க கூட எல்லாம் படுக்க நான் என்ன வேசியாடா...?"

"ப்ளீஸ்டி..." அவளது வார்த்தையின் வீரியம் தாங்காமல் அவனது கண்கள் கண்ணீரை சொட்டியது...

அவனது கண்ணீர் கண்டு அவளது கண்ணீரும் பெருகியது... எல்லோருக்கும் வாழ்க்கை வரமாக இருக்கத் தனக்கு மட்டும் ஏன் வாழ்க்கை சாபமாகப் போனது என்றே தோணியது...

"உன் கூடப் படுத்ததால தானே நீ என்னை அப்படிப் பேசின...? அது எப்படிடா காலம் காலமா உங்க ஆண் இனம் இப்படிப் பேசுறதை பொழைப்பா வச்சு இருக்கீங்க... விவரம் தெரிஞ்சதுல இருந்து அம்மா கிட்ட கூடக் காட்டாத உடம்பை ஒரு ஆண் கிட்ட ஒரு பெண் காட்டுறான்னா அவன் மேல அவள் எந்தளவுக்கு நம்பிக்கை வச்சு இருக்கணும்... அந்த நம்பிக்கையைக் கொல்ல உங்களுக்கு எல்லாம் எப்படி மனசு வருது...? மனசே இல்லாத உங்க கிட்ட மனசை பத்தி பேசி என்ன பிரயோஜனம்... தப்பு என் பேரிலும் இருக்கு...

என்னத்தான் காதலனா இருந்தாலும் ஒரு எல்லையோட நிறுத்தி பழகி இருக்கணும்... அதை நான் செய்யாதது என் தப்பு..."

"ஆனா நான் நானா இல்லையே... நீயா இல்ல மாறி இருந்தேன்... கடைசியில் யமுனாங்கிற தனி மனுசி இல்லாம போய் ராஜ் ராஜ்ன்னு சாதாசர்வகாலமும் உன்னைத் தானே நினைச்சிட்டு இருந்தேன்... அதுக்குத் தான் நீ கை மேல பலன் கொடுத்திட்டியே... இப்ப புரியுது... எந்தப் பொண்ணும் எந்த நேரத்திலும் தன்னோட தனித்தன்மையை இழக்க கூடாதுன்னு... ஆனா நான்... இப்போ கூடப் பாரு நான் அதை எல்லாம் இழந்து உன் முன்னாடி வந்து நிற்கிறேன்... என்னைக் கண்டா எனக்கே வெறுப்பா இருக்கு... அப்படி என்னடி உனக்குக் காதல் வேண்டி கிடக்குன்னு என்னை நானே செருப்பால அடிக்கணும் போலிருக்கு..."

"உன் மனசுல அந்த ஸ்வேதா இருக்கான்னு தெரிஞ்சும் உன் கல்யாணத்தை நிறுத்த வந்தேன் பாரு... என்னை எல்லாம் என்ன செய்றது... எத்தனை அடிப்பட்டாலும் திருந்தாத ஜென்மம் நான்..." தலையில் அடித்துக் கொண்டு அழுதவளின் கைகளைப் பிடித்துத் தடுத்தவன்,

"தப்பு செஞ்சவன் நான்... அடிக்கிறதா இருந்தா என்னை அடி..." அவளது கை கொண்டு அவன் தன் கன்னத்தில் அடித்துக் கொள்ள அவளுக்கு அழுகை பொங்கியது...

"கையை விடுடா..." தனது கைகளை அவன் பிடியில் இருந்து உருவி கொண்டவள்,

"உன்னால பாதிக்கப்பட்டப்போ கூட உன்னைத் தண்டிக்கணும் நான் நினைக்கலை... அப்பவே என் அப்பா கிட்ட சொல்லி மைனர் பொண்ணைக் கெடுத்துட்டதா உன்னைச் சட்டத்தோட முன்னாடி நிக்க வச்சிருக்க என்னால முடியும்... ஆனா அதை நான் ஏன் செய்யலை தெரியுமா... அந்த உறவை நீ காமமா நினைச்சு அசிங்கமா பேசி இருக்கலாம்... ஆனா அதை நான் புனிதமா தான் நினைச்சேன்... நாலு சுவத்துக்குள்ள நடந்ததை எல்லார்

கிட்டேயும் கடைப்பரப்ப எனக்கு விருப்பம் இல்லை... இப்பவும் அதை யார் கிட்டேயும் சொல்ல எனக்கு விருப்பம் இல்லை... இது உனக்கும் எனக்கும் மட்டுமேயான உறவு... சாகும் போது கூட இந்தக் கட்டையோட தான் வேகணும்... இதை நாலு பேர் கிட்ட சொல்லி உன்னைக் கேவலப்படுத்தி நம்ம வாழ்க்கையைக் கேவலப்படுத்த ஒருநாளும் நான் நினைச்சது இல்லை..."

அவளது வார்த்தைகள் அவனைப் பிரமிப்பில் ஆழ்த்தியது... இதுவரை அவளை அவன் விளையாட்டு பெண்ணாய் தான் எண்ணி இருக்கிறான்... இப்போது அவளது காதல், அவளது எண்ணங்கள் அவனை ஆச்சிரியப்படுத்தியது... அவளது பக்குவம் தனக்கு இல்லாமல் போனதே என்று வருந்தினான்... இருந்து இருந்தால் இத்தனை பெரிய துயர் இருவர் வாழ்விலும் வந்திருக்காதே...

"ஓகே பேபி... நடந்து முடிஞ்சதை மறந்திரு... இனி வாழப் போற வாழ்க்கையை மட்டும் யோசி..."

"இனி வாழப் போற வாழ்க்கையா...?" எதையோ யோசித்தவள் முகம் கன்றியது...

"வேண்டாம் இந்த வாழ்க்கை எனக்கு வேணாம்..." கதறியவள் நிற்கும் சக்தி இழந்து கீழே அமர்ந்து விட்டாள்... முழங்காலில் முகம் புதைத்திருந்தவளின் முதுகு குலுங்கியது அழுகையில்...

அவன் தானும் கீழே அமர்ந்து அவளை ஆதரவாய் தன் மடி சாய்த்தான்... ஆனால் திமிறிக் கொண்டு எழுந்தவள் கலங்கிய விழிகளுடன் அவனை ஏறிட்டு பார்த்து,

"நான் தப்பு பண்ணிட்டேன்டா... ரொம்பப் பெரிய தப்பு பண்ணிட்டேன்டா..."

"நானும் தான்டி தப்புப் பண்ணிட்டேன்... உன்னை விடப் பெரிய தப்பு... அதுக்காக அழுது கரைஞ்சா சரியா போயிடுமா... முதல்ல அழுகையை நிறுத்து பேபி... அடுத்து

என்ன செய்யலாம்ன்னு யோசி..." அவளைப் பார்த்து அவனுக்குமே பரிதாபமாய் இருந்தது...

"சரி நான் அழலை..." என்று கண்களைத் துடைத்தவள் தன் கையை அவன் முன் நீட்டினாள்...

"எனக்கு ஒரு ப்ராமிஸ் பண்ணு..."

"எதுக்கு...?" அவனது வார்த்தையிலும், கண்களிலும் எச்சரிக்கை தெரிந்தது...

"நான் திரும்ப உன் வாழ்க்கையில் வந்திருக்கக் கூடாது ராஜ்... என்னால உனக்குச் சந்தோசம் கொடுக்க முடியாது... உன் கூட வாழ முடியாது... என்னால எதுவுமே முடியாது..."

"சரி இது எதையும் நான் எதிர்பார்க்கலை போதுமா... ஒரு நல்ல பிரெண்ட்ஸ் மாதிரி இருப்போம் ஓகேவா...?"

"ம்ஹூம்... வேண்டாம்... அப்புறம் அந்தக் கிழவி என்னைக் கேள்வி கேட்டே கொன்னுரும்... அதுக்கு உன் புள்ளையைத் தூக்கி கொஞ்சணும்ன்னு ரொம்ப ஆசை... அதனால நீ..."

"நான்..." அவனது விழிகள் கூர்மையாய் அவளைப் பார்த்தது...

"நீ உன் மனசுக்கு பிடிச்ச ஸ்வேதாவை கல்யாணம் பண்ணிக்கோ... நான் விலகி போயிடறேன்..." அவளுக்குமே துக்கமாய்த் தான் இருந்தது இதைச் சொல்ல...

ஆனாலும் சொல்லித்தான் ஆக வேண்டும்... தன்னைத் திருமணம் செய்து கொண்டதால் அவனது வாழ்வு பாழாக வேண்டும் என்று அவள் விரும்பவில்லை... அவனாவது நன்றாக இருக்க வேண்டும் என்று எண்ணினாள்...

"நான் சொன்னேன்னா அவளைப் பிடிக்கும்ன்னு..." அவளை முறைத்தான் அவன்...

"நீ தானேடா சொன்னே அவளை லவ் பண்றேன்னு..." குழப்பமாய்ப் பார்த்தவளை அவன் ஒன்றும் பேசாது பார்த்தான்...

அவன் அன்றும் இன்றும் கூறிய வார்த்தைகள் அவள் மனதை எந்தளவுக்குக் காயப்படுத்தி இருக்கிறது என்று அவனுக்கு இப்போது புரிந்தது...

இப்போது, 'நான் ஸ்வேதாவை காதலிக்கவில்லை ஆரம்பத்தில் இருந்து உன்னைத்தான் காதலித்தேன்...' என்று சொன்னால் நம்புவாளா... இல்லை 'நினைவு இழந்து கிடந்த போது கூட உன் நினைவில் உயிர்த்தெழுந்தேன்' என்று சொன்னால் தன் காதலை புரிந்து கொள்வாளா... நிச்சயம் இன்றைய மனநிலையில் அவள் எதையும் ஏற்க போவதும் இல்லை... எதையும் காது கொடுத்து கேட்க போவதும் இல்லை...

இருவர் மனதிலும் காதல் அளவுக்கு அதிகமாய் இருக்கிறது... அதை ஒருவருக்கு ஒருவர் உணர்த்த தெரியாமல் இவ்வளவு காலம் ஒருவரை ஒருவர் அளவுக்கு அதிகமாய்க் காயப்படுத்தியாயிற்று... இனியாவது காதலை புரிந்து அதை மற்றவருக்கு உணர்த்தி வாழ வேண்டும்...

இப்போது யமுனா இருக்கும் மனநிலைமையில் அவளிடம் காதலை எதிர்பார்ப்பது முட்டாள்தனம்... அடிப்பட்ட சிறு குழந்தையின் மனநிலையில் இருக்கும் அவளுக்குத் தான் மருந்தாக மாற வேண்டிய நேரம் இது என்பதை அவன் உணர்ந்தான்... அவனும் குற்றவுணர்ச்சியில் குமைந்து கொண்டு இருந்தால் வாழ்க்கை நேர்பாதையில் கொண்டு செல்ல முடியாது என்பதை உணர்ந்தான்...

"நான் யாரை காதலிக்கணும், கல்யாணம் பண்ணணும்ன்னு நான் தான் டிசைட் பண்ணணும் நீ இல்லை... நான் முதல்ல சொன்னது இன்னும் அப்படியே தான் இருக்கு... நீ என் கிட்ட வர்ற வரைக்கும் தான் உன் வாழ்க்கை உன் கையில்... எப்போ என் கிட்ட வந்துட்டியோ அப்பவே உன் வாழ்க்கை என் கையில்... என் கூடத் தான் நீ இருந்தாகணும்..."

"நானா உன்னைத் தேடி வரணும்ன்னா... நீ என்னைச் சந்தேகப்பட்டியா ராஜ்... உன்னை மறந்திட்டு வேறு

ஒருத்தனை..." மேலே சொல்ல முடியாமல் நிறுத்தியவள் கண்கள் கலங்க அவனைப் பார்த்தாள்...

"அதெல்லாம் எதுக்கு இப்போ...? இப்போ உள்ள கதையை மட்டும் பேசு..." என்றான் சமாளிப்பாக... அவள் தன் மனதை சரியாகக் கணித்துக் கூறியதை கண்டு அவனுக்குமே சற்று அவமானமாய் இருந்தது...

"அப்போ இப்போ எப்பவுமே நீ என்னை நல்லவிதமாய் நினைக்க மாட்டியா ராஜ்..." அவளுக்கு எல்லாமே கசந்தது...

"போனதை விடுன்னு சொல்றேன்ல..."

"அது எப்படி முடியும் ராஜ்...?" தன் வாழ்க்கையில் காதல் பொய்த்து போனதை எண்ணி அவளுக்கு அழுகையாய் வந்தது...

பதில் பேசாது எழுந்தவன் அவள் அருகில் குனிந்து அவளைத் தூக்கினான்... அவளைத் தன் நெஞ்சோடு அணைத்து கொண்டவன் அவள் காதோரமாய், "இப்படி முடியுமே..." என்றான் கிசுகிசுப்பாக...

"விடுடா என்னை..." என்று திமிறியவளை கண்டு கொள்ளாது படுக்கையில் கிடத்தியவன்,

"வாழ்க்கையை அதன் போக்கில் வாழ பழகிக்கணும் பேபி... ரொம்பவும் யோசிச்சா வாழ்க்கை ருசிக்காது... இந்த நொடி நீயும் நானும் கணவன், மனைவி... இது யாராலையும் பிரிக்க முடியாத பந்தம்... அதை மட்டும் யோசி..." என்றவனை...

"எனக்கு இது பிடிக்கலை..."

"எது பிடிக்கலை... நானா...?" அவன் கேட்டதும் அடிப்பட்ட வலி அவள் கண்ணில் தோன்றி மறைந்தது...

"இந்த வாழ்க்கை..." இருவரையும் சுட்டி காட்டியவள் பின் படுக்கையைச் சுட்டி காட்டினாள்...

அவளது பயம் புரிந்தது... அதற்குக் காரணம் அவன் அல்லவா... சிறு பெண்ணைக் கட்டில் யுத்தத்தில் தன் வீரத்தை காட்டி வென்றதை நினைத்து இப்போது உள்ளம் வெட்கினான்... ஆனாலும் அதை அவளிடம் காட்டி கொள்ளவில்லை...

"இப்படியே பயந்து பயந்து விலகி இருக்கிறதுக்கு... வாழ்வா சாவான்னு வாழ்ந்து பார்த்திடலாமே..." என்றவன் அவளை நெருங்கினான்...

அவன் அருகில் வருவதை உணர்ந்து பயத்தில் அவள் கண்களை இறுக மூடி கொள்ள அவனுக்குமே உள்ளுக்குள் கொஞ்சம் உதறலாகத் தான் இருந்தது... அன்று போல் இன்றும் அவள் மயங்கி விடுவாளோ என்று... ஆனால் அன்று போல் இன்று அவன் இல்லையே... இன்று அவன் மனம் முழுவதும் அவள் அல்லவா இருக்கிறாள்... அவள் காயப்படுவதை அவனுமே விரும்ப மாட்டானே...

"யம்மு பேபி..." வார்த்தைக்கும் வலிக்குமோ என்று மென்மையாய் அழைத்தவனின் குரலில் இருந்த ஏதோ ஒன்றில் கண்களைத் திறந்தாள் அவள்...

"ஐ லவ் யூ பேபி..." அவளது கண்களைப் பார்த்து இதயத்தில் பொங்கி வழிந்த காதலுடன் சொன்னவனின் கண்களும் எல்லை இல்லா காதலை பிரதிபலித்தது...

அவளும் அவனது கண்களைத் தான் பார்த்துக் கொண்டு இருந்தாள்... அவனது கண்ணில் தெரிந்த காதல் அவளையும் கட்டி போட்டது அன்று போல் இன்றும்... அன்று போல் இன்றும் ஆராயாமல் அவன் கூறுவதை நம்பும் தன்னைக் குறித்து அவளுக்கே அவமானமாக இருந்தது...

அவன் கண்களைச் சந்திக்க சக்தியற்று தன் கண்களை இறுக மூடி கொண்டாள்... கண்களின் ஓரம் கண்ணீர் வழிந்தது...

"உண்மையா பேபி... என்னை நம்புடி..." அவளது கண்களில் மென்மையாய் இதழை பதித்தான்... அவனது செய்கையில்

கண்களை மலர்த்தியவளை கண்டு,

"எனக்கு ஒரு சான்ஸ் கொடுடி... நானும் கொஞ்சமே கொஞ்சம் நல்லவன் தான்..." அவன் சொன்னவிதத்தில் அவளுக்குச் சிரிப்பு வந்தது...

"யாரு... நீ... நல்லவன்...? நம்பிட்டேன்..." என்று நீட்டி இழுத்தவளின் சகஜமான பேச்சு அவனுக்கு உற்சாகத்தை அளிக்க...

"நானே தான்... நம்பித்தான் ஆகணும் பேபி..." என்றவன், "குலோப்ஜாமூனை எடுக்கவா...?" திடுமென அவன் அப்படிக் கேட்டதில் அவள் முழித்தாள்...

"நம்பிக்கையை டெஸ்ட் பண்ணத்தான்..." என்றான் அவள் காதில் முணுமுணுப்பாய்...

"ஆங்..." அவள் வாயை பிளந்து கொண்டு அவனைப் பார்க்க அது தான் சமயம் என்று அவனது கை நீண்டு அருகில் இருந்த குலோப்ஜாமூனை எடுத்து அவளது வாயில் அடைத்தது...

அடுத்தக் கணம் அவள் சிந்திக்க விடக் கூட நேரம் இல்லாமல் அவளது இதழோடு தன் இதழை பொருத்தினான்... குலோப்ஜாமூனின் இனிப்பு சுவையை விட அவளின் இதழ் தேனின் இனிப்பு சுவையில் மயங்கியவன் வண்டாய் மாறி இதழ்ப்பூவின் ஒட்டு மொத்த தேனையும் பருக ஆரம்பித்தான்...

அவனது இதழொற்றலில் நியாயத்திற்கு மயங்கி இருக்க வேண்டும் பாவையவள்... ஆனால் அவளோ எந்த நிமிடமும் அவளை விட்டு விட்டு போய்விடுவானோ என்ற அச்சத்தில், தகாத வார்த்தைகள் கூறி தன்னைக் கேவலப்படுத்தி விடுவானோ என்ற எண்ணத்தில் கண்களில் கண்ணீர் தான் பொங்கியது...

அவளது கண்ணீர் அவனின் தாபத்திற்கு அணைப் போட்டதோ என்னமோ... அவளது கண்ணீரை உணர்ந்தவனாய் அவளை விட்டு விலகினான்...

அவள் மயங்காமல் இருப்பதே அவனுக்குச் சற்று நிம்மதியாய் இருந்தது... ஆனாலும் இந்தக் கண்ணீர்...???

அவளது கண்களை மென்மையாய் துடைத்துவிட்டவன், "எதுக்குடி இத்தனை கண்ணீர்... உன் கண்ணீருக்கோ இல்லை உன் காதலுக்கோ கொஞ்சமும் தகுதியானவன் நான் கிடையாது... ஆனா இனிமேல் அதுக்குத் தகுதியானவனா என்னை மாத்திக்க முயற்சி பண்றேன்... அதே சமயம் நீயும் என்னைப் புரிஞ்சிக்கக் கொஞ்சம் முயற்சி பண்ணு... நடந்து முடிஞ்ச எதையும் என்னால மாத்த முடியாது... ஆனா வாழ்க்கையைப் பத்தின உனக்குன்னு ஒரு கற்பனை இருக்கும்ல அந்த வாழ்க்கையை என்னால் கொடுக்க முடியும்..." என்று நீளமாய்ப் பேசியவன்,

"ப்ராமிசா பேபி..." அவளது தலையில் கை வைத்துச் சத்தியம் செய்தவனைக் கண்ணிமைக்காமல் பார்த்தவள் ஒன்றும் பேசாது அமைதி காத்தாள்...

"சரி நீ தூங்கு..." என்றவன் அவளை விலகி செல்ல...

அவனது அந்த விலகல் கூட அவளது மனதை வேதனைப்படுத்த அவளது முகமும் வேதனையில் கசங்கியது...

"என்னடா..." அவளது வேதனை அவனை வாட்டியது... முதன்முறையாய் அவளது மனதை படித்தான் அவன்... அதிலேயே அவன் வாழ்க்கையில் வெற்றிப் பெறுவதற்கு முதல் படியில் காலடி எடுத்து வைத்தான்...

பதில் பேசாது தன்னைப் பார்த்தவளை இரு கரம் நீட்டி அவன் வாவென அழைக்கத் தாயிடம் அடைக்கலம் தேடும் கன்றாய் பெரும் கேவலுடன் அவனின் கரங்களில் சரண் புகுந்தாள்...

தன் தொடுகையை வேண்டாம் என்கிறாள் அதே சமயம் விலகினால் வேதனைப்படுகிறாள்... மனைவியின் மனநிலையை அவனால் கணிக்க முடியவில்லை... ஆனால் ஒன்று மட்டும் உண்மை இது எல்லாம் அவளது அளவுக்கு

அதிகமான காதலால் தான் என்பது மட்டும் அவனுக்குப் புரிந்தது...

*********************

"வீடு பிடிச்சு இருக்கா...?" ஆர்வத்துடன் கேட்ட கணவனை ஏமாற்றாமல் யமுனா உடனே பதில் கூறினாள்...

"ரொம்ப ரொம்பப் பிடிச்சு இருக்கு..." என்று அவனைப் பார்த்து கூறியவள் அந்த ஒற்றைப் படுக்கையறை கொண்ட சிறிய வீட்டை தன் கண்களால் வலம் வந்தாள்...

இருவரது தந்தை வீட்டை ஒப்பிடும் போது இது மிகச் சிறியது தான்... ஆனாலும் இது அவர்களுக்கு மட்டுமேயான தனி வீடு அல்லவா... அவளுக்குச் சந்தோசமாய் இருந்தது...

அங்கிருந்த பால்கனி வழியே கீழே எட்டி பார்த்தாள்... ஆறாம் மாடியில் இருந்து கீழே பார்ப்பதற்கு நன்றாக அழகாக இருந்தது... அந்தக் குடியிருப்பில் இருந்த குழந்தைகள் விளையாடுவதைக் காண்பதற்கு உற்சாகமாக இருந்தது...

"ஹாய்..." உற்சாகமாய் அவர்களைப் பார்த்து கையசைத்தாள்...

"என் பேரு யமுனா... இவங்க என்னோட ஹஸ்பெண்ட் யுவராஜ்... நானும் உங்களோட ஜாயிண்ட் பண்ணிக்கலாமா...?"

"ஓ..." கோரசாய் ஒலித்த குரலில் அவளுக்கும் மகிழ்ச்சி தொற்றிக் கொண்டது...

"ப்ளீஸ் ராஜ்... நான் போகவா..." கெஞ்சியவளை கண்டு அவனுக்குச் சிரிப்பு வந்தது...

"இதுக்கு எல்லாமா பெர்மிசன் கேட்கிறது... தாராளமா போ..." என்றான் அவளின் நெற்றியில் விளையாட்டாய் முட்டியபடி...

"தேங்க்ஸ் ராஜ்..." அவனது தோள் பற்றிக் குதூகலித்தவள் அவன் எதிர்பாரா நேரத்தில் அவனது கன்னத்தில் இதழ் பதித்து விட்டு ஓடி விட்டாள்...

அவளது இயல்பான அந்தச் செயலில் கன்னத்தில் கை வைத்தபடி ஸ்தம்பித்து விட்டான் அவன்... தானாக அவளாகக் கொடுத்த முதல் இதழொற்றல் அவனது இதயத்தைத் தீண்டி சென்றது...

"ஹேய்..." கீழே இருந்து கேட்ட யமுனாவின் குரலில் கீழே எட்டி பார்த்தான்...

சிறு பிள்ளைகளுடன் தானும் சிறு பிள்ளையாய் மாறி விளையாடி கொண்டு இருந்தவளை கண்டு அவனுக்குமே சந்தோசமாய் இருந்தது...

இரு வீட்டாரையும் சமாளித்து அவளைத் தன்னுடன் தனியாய் அழைத்து வருவதற்குள் அவனுக்குப் போதும் போதும் என்றாகிவிட்டது...

பரந்தாமன் வீட்டிற்குத் தேவையான அனைத்தும் வாங்கித் தருகிறேன் என்று நிற்க... அவனின் தந்தையோ ஒரு படி மேலே போய்த் தனி வீடு வாங்கித் தருவதாகக் கூறி அதில் நிலையாக நின்றார்... இவை அனைத்தும் வேண்டாம் தனது சம்பாத்தியத்தில் எது சரியாய் வருகிறதோ அதில் தாங்கள் வாழ்ந்து கொள்கிறோம் என்று கூறி மனைவியை மட்டும் அழைத்து வந்துவிட்டான்...

இனி தான் தனது பொறுப்பு கூடுவதை உணர்ந்தான்... முன்பு போல் விளையாட்டுத்தனமாய் இருக்க முடியாது என்ற நிதர்சனம் உறைத்தது... மனைவியின் குழந்தைத்தனத்தைத் தக்க வைத்துக் கொள்ளத் தனது விளையாட்டுத்தனத்தை மூட்டை கட்டி தூக்கி எறிந்தான் அவன்... அவனது மனமாற்றம் அவளுக்கும் புரிந்து அவனுடன் அவள் சேர்ந்து வாழ வேண்டும்...

சிறிது நேரம் அவள் விளையாடி கொண்டு இருப்பதைப் பார்த்துக் கொண்டு இருந்தவன் உள்ளே வந்து இருவரது

உடைமைகளையும் அதனதன் இடத்தில் அடுக்கி வைத்தான்... வீட்டுக்கு தேவையான மற்ற பொருட்களை ஏற்கெனவே அவன் சேகரித்து வைத்துவிட்டு தான் அவளை அழைக்கச் சென்று இருந்தான்...

ஒரு மணி நேரத்தில் வீட்டிற்குள் வந்தவளை குளியலறைக்குள் பிடித்துத் தள்ளிவிட்டான்...

"ராஜ்... ஒன் மினிட் ரெஸ்ட் எடுத்துட்டு குளிக்கிறேனே..." என்று சிணுங்கியவளை...

"மூச்... போய்க் குளிச்சிட்டு வா... வெளியில் போறோம்..." என்றான்...

"எங்கே... எங்கே...?" என்று உற்சாகப் பந்தாய் குதித்தவளின் மூக்கை பிடித்து ஆட்டி,

"கோயம்புத்தூர் அம்மணி பார்க்காத இடமா...? எல்லாம் பார்த்த இடம் தான்..." என்று அவளைக் குளியலறையில் தள்ளி கதவை சாத்தினான்...

கிளம்பி தயாராக வந்தவளின் அழகை கண்களால் பருகியவனின் பார்வை பேதத்தைக் கண்டு அவளது இதயம் தடம் புரண்டது...

"ராஜ்... போகலாமா..." அவள் கேட்டது அவளுக்கே கேட்கவில்லை...

"ஆங்... போகலாம்..." என்றவன் அவளை அழைத்துக் கொண்டு கிளம்பினான்...

ஆட்டோவில் ஏறிய போது, "ஏன் ராஜ் உன்னோட பைக் என்னாச்சு...?"

"அது அப்பா சம்பாத்தியத்தில் வாங்கியது... இனி தான் என் சம்பாத்தியத்தில் வாங்கணும்..." வெளியில் வேடிக்கை பார்த்தபடி கூறியவனைப் பார்த்தவளுக்கு அவனது தன்மானம் புரிவதாய்...

"நீ வாங்குவ ராஜ்... எனக்கு நம்பிக்கை இருக்கு..." என்று அவனது கரத்தோடு தன் கரத்தை கோர்த்து கொண்டாள் அவள்...

எந்த நிலையிலும் தன் மேல் நம்பிக்கை மாறாமல் இருக்கும் அவளது காதல் அவன் மனதை அசைத்தது...

"உன்னோட நம்பிக்கை தான் பேபி எனக்குத் தன்னம்பிக்கையைக் கொடுக்குது... நீ என் கூட இருந்தா போதும்... என்னால் எல்லாத்தையும் சாதிக்க முடியும்..." என்றவன், "கூடவே இருப்ப தானே...?"

"ம்..." அவனது வார்த்தையில் அவளது கண்கள் கலங்கியது...

பேருந்து நிலையத்தில் இறங்கி அங்கு இருந்து பேருந்தில் ஏறி மருதமலைக்கு அவளை அழைத்து வந்தான்...

மலையேறும் போது பழைய நியாபகத்தில் அவளது மனம் சிக்குண்டு தவித்தது... இருந்தாலும் அவனுக்காக அதைக் காட்டி கொள்ளாது அவனுடன் சென்றாள்...

மேலே சென்று கடவுளை தரிசனம் செய்துவிட்டு வரும் போது லேசாக இருட்ட ஆரம்பித்தது... மழை வருவது போல் மேகம் வானை மூடியது...

அங்கிருந்த பக்கவாட்டுப் படியில் அமர்ந்தவனைத் தொடர்ந்து தானும் அமர்ந்தவள் நெஞ்சில் பழைய நியாபக ஊர்வலம்...

"இந்த இடம் நியாபகம் இருக்கா..." அவன் கேட்டதுக்கு ஆம் என்று தலையசைத்தவள் நேரெதிரே வெறித்துக் கொண்டு இருந்த தன் நிலையை மாற்றிக் கொள்ளவில்லை...

அவளின் மனம் புரிந்தோ என்னமோ அவனும் அமைதியாய் இருந்தான்...

இதுவும் ஒரு விதமான சிகிச்சை தான்... ரணத்தை மூடி வைக்க வைக்கச் சீழ்ப்பிடித்துப் போகுமே தவிர அது ஆறாது... இதே இது அதை அறுத்துச் சிகிச்சை செய்து

மருந்து போட்டால் நிச்சயம் ஆறும்... அதைத் தான் அவன் செய்து கொண்டு இருந்தான்...

எந்த இடத்தில் அவள் காதல் பொய்த்து போனதோ, எந்த இடத்தில் அவள் தன் காதலை தொலைத்தாளோ அந்த இடத்தில் அதை மீட்க எண்ணி அவளை அழைத்து வந்து இருந்தான்... அந்தக் காதலை அள்ளி அள்ளி தர அவன் தயாராய் இருந்தான்... உணர அவள் தயாராய் இருக்க வேண்டும்...

"போகலாமா..." அவனது குரலில் இயந்திரத்தன்மையுடன் எழுந்து நின்றவளின் அருகில் வந்தான் அவன்...

"யம்மு பேபி... ஐ லவ் யூடி..." அவனது வார்த்தையில் திகைப்புற்று அவள் அவனை ஏறிட்டு பார்க்க...

அவளைப் பார்த்தபடி தனது கரங்களில் அவளைத் தூக்கினான்...

"யேய் விடுடா..." சிணுங்கியவள், "அன்னைக்கு மாதிரி சூடு கூட இல்லை... தரை கூலாத்தான் இருக்கு..." அவள் கீழே இறங்க முற்பட...

"சூடா இருந்தா தான் தூக்கணுமா பேபி... காதலா இருந்தாலும் தூக்கலாம்..." அவனது பதிலில் விழி விரிய ஆச்சிரியமாய்ப் பார்த்தவள் அடுத்தக் கணம் அவனது நெஞ்சோடு சுருண்டாள்...

அவளது செயலில் ஒரு கணம் திகைத்தவனின் கரங்கள் மறுநொடி அவளை இறுக்கமாய் அணைத்துக் கொண்டது...

அவர்களை ஆசிர்வதிப்பது போல் வானம் மழையைப் பன்னீர் போல் தூவியது...

கண்ணாமூச்சி ஆட்டம் தொடரும்...

# களம் - 20

"குட் மார்னிங் யம்மு... எழுந்திருடா..." யுவாவின் குரலில் இன்னமும் போர்வையை இழுத்துப் போர்த்திக் கொண்டு யமுனா உறங்க ஆரம்பிக்க...

"எப்படித்தான் உங்கம்மா உன்னைச் சமாளிச்சாங்களோ...?" என்று சலித்தாலும் அவள் அருகில் அமர்ந்து போர்வையை விலக்கியவன் அவளை எழுப்பிவிட அவளோ அவன் மடியில் புரண்டு படுத்து விட்ட தூக்கத்தைச் சுகமாய்த் தொடர்ந்தாள்...

"முடியலைடி பேபி... எழுந்திருடா..." என்றவனின் குரலுக்கும் அசையவில்லை அவள்...

"இப்ப நீ எழுந்திரிக்கலை தண்ணியை எடுத்து ஊத்திடுவேன்..." அதற்குப் பலன் இருந்தது...

"நைட் எல்லாம் உன்னால நான் தூங்கவே இல்லை தெரியுமா...?" கண்களைக் கசக்கி கொண்டு எழுந்து அமர்ந்தவள் அவனிடம் காய்ந்தாள்...

"ஏய்... நைட் நான் என்னடி பண்ணினேன்... நீ பெட்ல படுத்து இருந்த... நான் சமத்தா கீழே படுத்து இருந்தேன்..." அவன் சொன்னதில் அவள் இடுப்பில் கை வைத்து முறைத்து பார்த்தாள்...

"நீ என் கூடத் தானே படுத்து இருந்த... எப்போ கீழே போய்ப் படுத்த..." என்றாள் கோபத்துடன்...

"ம்... கேட்கிறா பாரு கேள்வியை... நைட் நீ விட்ட உதையில கீழே போய் விழுந்தவன் அப்படியே தூங்கிட்டேன்..." என்றான் சிரியாமல்...

"அப்படியா பண்ணினேன்... சாரி..."

"தூக்கத்திலேயும் ஒரு இடத்தில் அடங்கி இருக்க மாட்டியாடி... என்னம்மா பெட்டை சுத்துற..."

"ஹி... ஹி..." அசடு வழிந்தவள் கையில் காபி கோப்பையைத் திணித்தான்...

"தேங்க்ஸ் புருசா... என் மனம் அறிந்து காபி கொடுக்கும் நீர் நீடூழி வாழ்க..."

'நாம ரெண்டு பேரும் ஒரே ப்ளென்ட்... நான் எப்படியோ நீயும் அப்படியே... இது தெரியாதா எனக்கு...' மனதுக்குள் நினைத்தவன் வெளியில் சிரித்து வைத்தான்...

"அது சரி நான் என்ன பண்ணினேன் நீ தூங்காம இருக்கிறதுக்கு..."

"உன்னால தான் நேத்து நான் மழையில் நனைஞ்சேன்... நைட் எல்லாம் தும்மல் வந்துட்டே இருந்தது..." மூக்கை உறிஞ்சினாள் அவன் மனையாள்...

"நைட் எல்லாம் கும்பகர்ணி மாதிரி தூங்கிட்டு... தும்மிட்டு இருந்தியா..." போலியாய் அவன் முறைக்கவும்... அவள் அசடு வழிந்தாள்...

"சரி குளிச்சிட்டுக் கிளம்பு... உன்னைக் காலேஜ்ல விட்டுட்டு நான் வேலைக்குப் போகணும்..." என்றவனை விழி விரிய ஆச்சிரியத்துடன் பார்த்தாள்...

"என்ன படிக்கணும்ன்னு எண்ணம் இருக்கா... இல்லையா...?"

அன்றும் அவனது நினைவில் படிப்பை கோட்டை விட்டாள்... இன்றும் அவன் அழைத்ததும் படிப்பை கூட மறந்து அவன் பின்னே வந்துவிட்டாள்... ஆனால் அன்று அவள் எப்படி இருக்கிறாள்... என்ன செய்கிறாள் என்பதை நினைத்து கூடப் பார்க்காதவன் இன்று அவளின் வருங்காலத்திற்குக் கல்வி அவசியம் என்பதை உணர்ந்து செயலாற்றியதை நினைத்து அவளது கண்கள் கலங்கியது...

காபி கோப்பையைப் பக்கவாட்டு மேசையில் வைத்தவள், "தேங்க்ஸ் ராஜ்..." என்று அவனைத் தாவி அணைத்து கொண்டாள்...

"உன்னைப் பார்த்தாலே நான் என்னை மறந்திர்றேன் ராஜ்... அந்தளவுக்கு நீ என்னை ஆட்டுவிக்க..."

"தட்ஸ் குட் பேபி... நீ என்னை மட்டும் நினைச்சிட்டு இரு... உன்னைப் பார்த்துக்கத் தான் நான் இருக்கேனே..."

"எப்படி ராஜ் டிசி வாங்கின...? இங்கே எப்படிச் சீட் வாங்கின...?"

"உன் கையெழுத்தை நானே போட்டுக் காரியத்தை வெற்றிகரமா முடிச்சிட்டேன்..."

"யூ சீட்..." வார்த்தையில் இருந்த கோபம் அவள் முகத்தில் இல்லை... அவளுக்குச் சிரிப்புப் பொங்கியது...

"நான் எல்லாம் பர்ஸ்ட் ஸ்டாண்டர்ட்லேயே எங்கப்பா சைன் போட்டவனாக்கும்... இப்போ உன் சைனை போடுறது பெரிய விசயமா...?" தன்னுடைய டீசர்ட்டின் காலரை அவன் தூக்கி விட்டுக் கொள்ள...

"ராஜ்... உன்னை என்ன பண்றது..." அவனது தலை முடியை களைத்து விட்டு சிரித்தவளை அவன் ஆசையுடன் பார்த்துக் கொண்டு இருந்தான்...

அவள் கிளம்பி வருவதற்குள் அவன் உணவை வெளியில் இருந்து வாங்கி வந்துவிட்டான்...

கல்லூரிக்கு கிளம்பி வந்தவளை உணவு உண்ண அழைத்தவன், "இன்னும் கொஞ்ச நாளைக்கு ஹோட்டல் சாப்பாடு தான்... அட்ஜஸ்ட் பண்ணிக்கோ... மதியம் காலேஜ் கேன்டீன்ல சாப்பிட்டுக்கோ... நானும் வெளியில் பார்த்துக்கிறேன்... நைட் நான் வரும் போது வாங்கிட்டு வர்றேன்... இல்லை ரெண்டு பேரும் சேர்ந்து வெளியில் போகலாம்..."

பொறுப்பாய் பேசிய கணவனை இமைக்காமல் பார்த்தாள் அவள்... அவனது மாற்றம் மெல்ல புரிய ஆரம்பித்தது... தானும் தன்னுடைய விளையாட்டுத்தனத்தைக் கைவிட்டவளாய்,

"என்னை ஒண்ணுத்துக்கும் உதவாதவள்ன்னே முடிவு பண்ணிட்டியா ராஜ்..."

அவளது பேச்சில் அவன் பதறிப் போனான்... "ஐயோ அப்படி எல்லாம் இல்லை பேபி... எனக்கும் சமைக்கத் தெரியாது... உன்னைத் தொந்திரவு பண்ண வேண்டாமேன்னு தான்... நீ படிக்கிற வேலையை மட்டும் பாரு... சாப்பாடு ஒண்ணும் பெரிய விசயம் இல்லை..."

"சாப்பாடு பெரிய விசயம் இல்லை தான்... ஆனா சேவிங்ஸ் ரொம்ப முக்கியம் இல்லையா... நீ பைக் வாங்கணுமா வேண்டாமா..."

அவளது பொறுப்பான பேச்சில் நிம்மதி அடைந்தவனாய், "அட பேபி பெரிய பெரிய பேச்சு எல்லாம் பேசுதே..."

"பேபிக்கு சமைக்கவும் தெரியும்ன்னு சொன்னா...?"

"உண்மையாவா..."

"ம்... பெரியம்மா கூட இருந்தப்போ கத்துக்கிட்டேன்... இனி நானே சமைக்கிறேன்... இன்னைக்கு ஈவினிங் போய் அதுக்குத் தேவையானது வாங்கிட்டு வந்திரலாம்..." என்றவளை ஆச்சிரியமாய்ப் பார்த்தவனை,

"ஹலோ... என்ன பார்வை வேண்டி கிடக்கு... ஆபிஸ் போற எண்ணம் இல்லையா... கிளம்பு... கிளம்பு..." என்று அவனை அவசரப்படுத்தியவள் அவனின் கைப்பிடித்துக் கண் நோக்கி,

"நானும் கொஞ்சமே கொஞ்சம் பொறுப்பானவள் தான்..." கண் சிமிட்டி சொன்னவளை தோளோடு அணைத்து கொண்டவன்,

"கொஞ்சம் இல்லை... ரொம்பவே..." என்றான் நிறைவாக...

அவளைக் கல்லூரியில் விட்டு விட்டு அலுவலகத்துக்கு வந்தவனின் நேரத்தை வேலை விழுங்கி கொண்டது... ஆனாலும் அவளது மதிய உணவு இடைவெளியை

கணக்கிட்டு நியாபகமாய் அந்நேரம் அவளுக்கு அழைத்தான்...

"சாப்பிட்டியா யம்மு பேபி..." அவனது அக்கறை அவளின் அடி நெஞ்சு வரை சென்று தித்தித்தது... அவனிடம் அவள் எதிர்பார்த்தும் இந்த அக்கறையைத் தானே...

"சாப்பிட்டுட்டு இருக்கேன்... நீ சாப்பிட்டியா..."

"இன்னும் இல்லை... இனி தான்..."

"முதல்ல போய்ச் சாப்பிடு... நேரம் என்ன பாரு...? அல்சர் வந்திர போகுது..."

அவளது அன்பை நினைத்து அவனது மனம் கசிந்தது...

"மேடம் சொன்னா கேட்காம இருக்க முடியுமா... இதோ போறேன்..." என்றவன், "ஈவினிங் பஸ் பிடிச்சு பத்திரமா வீட்டுக்கு போ... நான் சீக்கிரம் வர பார்க்கிறேன்..."

"ம்... சரி..." என்றவள் அலைப்பேசியை அணைத்தாள்...

மனதில் எழுந்த நிம்மதியுடன் வகுப்பிற்குச் சென்றாள்...

அன்றே சமைப்பதற்குத் தேவையான பொருட்களை வாங்கி வந்தனர் இருவரும்... மறுநாளில் இருந்து அவள் எளிமையாய்ச் செய்வதற்குச் சுலபமான உணவு வகைகளைச் செய்ய ஆரம்பிக்க அதில் சில குறைகள் இருந்தாலும் மனதில் இருந்த காதல் அதை எல்லாம் கண்டு கொள்ளாமல் உண்ண சொல்லியது... விட்டு கொடுத்து வாழ சொல்லியது... அவர்களின் வாழ்க்கை இனிமையாகத் தொடங்கியது...

அந்த வார இறுதியில் யுவா யமுனாவை வாசு, கீர்த்தனா வீட்டிற்கு அழைத்துச் சென்றான்...

"யமுனா உன்னைப் பார்த்து எவ்வளவு நாளாச்சு...?" கீர்த்தி அவளைப் பார்த்ததும் பாசத்துடன் அணைத்து கொண்டாள்...

"நீங்க ரெண்டு பேரும் கல்யாணம் பண்ணுவீங்கன்னு நான் நினைக்கவே இல்லை..." என்ற கீர்த்தியின் வார்த்தையில் அவனும் அவளும் ஒருவரை ஒருவர் பார்த்து கொண்டனர்....

"சத்யா எங்கே...?" யுவா பேச்சை மாற்ற...

"உள்ளே இருக்கான்..." கீர்த்தி யமுனாவை அழைத்துக் கொண்டு போய்ச் சத்யாவை அவளிடம் கொடுத்தாள்...

யமுனாவை அத்தை என்று அன்னை ஒரு தடவை சொல்லி கொடுத்ததும் சத்யா கப்பென்று பிடித்துக் கொண்டான்...

"த்தை..." என்று அவளிடம் தாவி வந்தான்...

அவனது மழலை மொழியில் அன்பில் மனதை பறி கொடுத்தவளாய் யமுனா அவனைக் கீழே இறக்கவில்லை... அவள் சின்னவனைக் கொஞ்சுவதை வாசுவுடன் பேசி கொண்டே யுவா பார்த்துக் கொண்டு இருந்தான்... அவளைக் கையில் குழந்தையுடன் பார்ப்பதற்கு அவ்வளவு பாந்தமாய் இருந்தது... தங்களுக்கும் குழந்தை பிறந்தால் இது போல் தான் இருக்கக் கூடும் என்ற எண்ணம் தோன்றியது அவனுக்கு... அந்த எண்ணமே அவனுக்கு அவ்வளவு உவகையாக இருந்தது...

நண்பனின் பார்வையை உணர்ந்த வாசு, "மச்சி... நீ இந்தளவுக்குச் சிஸ்டரை லவ் பண்ணுவேன்னு நினைக்கலைடா... இவங்களை இவ்வளவு லவ் பண்ற நீ எப்படிடா ஸ்வேதா கிட்ட சிக்கின..."

"காதல்ன்னா என்னன்னு யம்முவை பார்த்து தான்டா உணர்ந்தேன்... என் வாழ்க்கை பாதையை மாத்தினவடா..." லாவகமாய் ஸ்வேதா பற்றிய பேச்சை தவிர்த்து விட்டான்... அதை உணர்ந்து வாசுவும் அதைப் பற்றிப் பேசவில்லை...

வீட்டிற்கு வந்த பின்னும் யமுனா சத்யா பற்றிய பேச்சை விடவில்லை...

"எவ்வளவு அழகா இருக்கான்ல ராஜ்... அந்தக் குண்டு கன்னத்துல கிஸ் கொடுத்துட்டே இருக்கணும்

போலிருக்கு... அவனை விட்டுட்டு வர மனசே இல்லைடா..." என்று புலம்பியவள், "எனக்கு அவனை மாதிரி ஒரு குழந்தை வேணும் போல் இருக்கு... அதுவும் உன் சாயல்ல..."

அவனிடம் சத்தம் இல்லாது போகவும் அவனைப் பார்த்தாள்... அவன் கண்ணிமைக்காமல் தன்னைப் பார்த்துக் கொண்டு இருப்பதை உணர்ந்தவளுக்கு அப்போதும் தான் கூறியதன் அர்த்தம் புரிய முகம் கூம்பி போனது... கவலையுடன் கட்டிலில் அமர்ந்தவளின் அருகில் அமர்ந்தவன்,

"நிச்சயமா பெத்துக்குவோம் பேபி... ஒண்ணு இல்லை பத்து..." என்றவன், "பத்து போதுமா இல்லை இன்னும் வேணுமா..." கண்ணடித்துக் கேட்டவனைக் கண்டு அவளது கண்களில் கண்ணீர் வழிந்தது...

"அது இந்த ஜென்மத்தில் நடக்காது ராஜ்... உன் ஆசை நிறைவேறாது... என்னோட ஆசையும் நிறைவேறாது... என்னால முடியலைடா..." என்று அழுதவளை நெஞ்சோடு அணைத்துக் கொண்டான்...

இந்த ஒரு வார காலத்தில் அவளின் நடவடிக்கையை அவனும் பார்த்துக் கொண்டு தானே இருக்கிறான்... பகல் பொழுதில் அவனுடன் கலகலப்பாய் பேசுபவள் இரவில் படுக்கைக்கு வரும் போது மட்டும் அவளது கலகலப்புக் காணாமல் போய்விடும்... அவன் தான் அவள் மனதை மாற்றிச் சகஜநிலைக்குக் கொண்டு வருவான்...

"காலம் இப்படியே போகாது பேபி... மாற்றம் வரும்..." என்று அவளுக்கு அவன் ஆறுதல் சொல்ல...

"எனக்கு நம்பிக்கை இல்லை ராஜ்..."

"நம்பிக்கை தான் வாழ்க்கை பேபி... கட்டில் உறவு மட்டும் தான் வாழ்க்கை இல்லை பேபி..." என்றவன் அவள் முகம் நிமிர்த்தி, "குழந்தை இல்லைன்னா என்ன எனக்கு நீ குழந்தை... உனக்கு நான் குழந்தை..." என்று அவளது

நெற்றியில் இதழ் பதித்தவனின் அன்பு மழைச்சாரலாய் அவளது மனதில் இறங்கினாலும் ஏதோ ஒன்று அவளுக்கு அச்சத்தைத் தோற்றுவித்தது...

"எனக்கு ரொம்பப் பயமாயிருக்கு ராஜ்..." என்றாள் அவனது சட்டையை இறுக பற்றிக் கொண்டு...

திருமண வாழ்க்கையின் அடிப்படை தாம்பத்தியம்... அந்தத் தாம்பத்தியத்தின் அடிப்படை மழலை செல்வம்... இந்த இரண்டும் இல்லாத திருமண வாழ்வு அவனுக்குச் சலிப்பை உண்டு பண்ணி அவனைத் தன்னிடத்தில் இருந்து பிரித்து விடுமோ என்று அவள் பயந்து போயிருந்தாள்... அவளுக்குத் தெரியவில்லை அவளது கணவன் காமத்தை வென்று காதலில் நீடித்து நிற்பவன் என்று...

"நான் இருக்கும் போது எதுக்குப் பயப்படுற..." ஆறுதலாய் அணைத்து கொண்டவனின் கரங்களில் என்றும் போல் சுருண்டு போனாள்...

இருவரின் மனதிலும் எதிர்காலத்தைப் பற்றிய எண்ணங்களே... அவன் நம்பிக்கையுடன்... அவளோ அவநம்பிக்கையுடன்...

அடுத்து வந்த நாட்கள் வேகமாய்ப் பறந்தது... இதோ அவர்கள் தனிக்குடித்தனம் வந்து இரண்டு மாதங்களாகி விட்டது... யமுனாவிற்குக் கல்லூரி நன்கு பழகிவிட்டது... அவளின் கலகலப்பான குணத்திற்கு நிறையத் தோழிகள் கிடைத்தனர்...

அன்று மாலை வீட்டிற்குச் செல்வதற்காகப் பேருந்து நிலையத்துக்கு வந்து நின்றாள் யமுனா... அந்நேரம் ஸ்கூட்டியில் வந்த ஒரு பொண்ணைக் கார்க்காரன் ஒருவன் இடித்துவிட்டு நிற்காமல் செல்ல அந்தப் பெண் நடுரோட்டில் கீழே விழுந்ததில் அவளுக்குப் பலத்த அடி ஏற்பட்டது...

யாரும் உதவிக்கு வர யோசித்துக் கொண்டு இருக்க யமுனாவும் சில பெண்களும் அந்தப் பெண்ணிடம் சென்றனர்... உடனே மருத்துவமனைக்குக் கொண்டு

சென்றாக வேண்டிய கட்டாயம்... யமுனா துணிந்து அவளை ஆட்டோ ஒன்றில் ஏற்றி மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றாள்...

அவளை மருத்துவமனையில் சேர்த்துவிட்டு அவளது அடையாள அட்டையில் இருந்த அவளது வீட்டு தொலைப்பேசிக்கு அழைத்து விபரத்தை கூற அடுத்த அரை மணி நேரத்தில் அவர்கள் அங்கு வந்தனர்...

அந்தப் பெற்றோருடன் அவளது சகோதரனும் அடித்துப் பிடித்துக் கொண்டு வந்தான்... அவன் அந்த மனோஜ்... ஒரு காலத்தில் யமுனாவுக்கு முகநூலில் பிரச்சனையைக் கொடுத்தவன்...

அவனைக் கண்டதும் யமுனா அதிர்ந்து நின்றாள்... அவனுமே அவளைக் கண்டு திகைத்துப் போனான்... பெற்றோர் முன்னிலையில் அவனாலும் எதையும் காட்டி கொள்ளாத நிலை...

தங்கையின் உடல் நிலையை விசாரித்துவிட்டுப் பெற்றோரிடம் சொன்னவன் அவர்களை அவளைப் பார்க்க அனுப்பிவிட்டு யமுனாவிடம் வந்தான்...

வந்த வேலை முடிந்ததில் யமுனா கிளம்ப ஆயத்தமானாள்...

"யமுனா நில்லு..." மனோஜ் கூப்பிட்டதற்கு நிற்காமல் அவள் விறுவிறுவென நடந்தாள்...

அவன் பேசிய ஆபாச பேச்சுக்களும், அனுப்பிய ஆபாச காணொளியும் அவளது மனக்கண்ணில் எழுந்து அவளை இறுக செய்தது...

ஓடி வந்து அவள் முன் நின்று வழியை மறித்தவன், "சாரி யமுனா... அன்னைக்கு நான் தெரியாம பண்ணிட்டேன்... என்னை மன்னிச்சிரு..." என்றவனை வெறுப்பாய் பார்த்தவள்,

"உன் கூடப் பேசுறது கூட எனக்கு அருவருப்பா இருக்கு... என் கண் முன்னாடி நிற்காதே... போயிடு..." என்று கோபம்

அடக்கப்பட்ட குரலில் அவள் கத்தினாள்...

"உன் கோபம் நியாயமானது தான்..." என்று அவளது கோபத்தை ஏற்றுக் கொண்டவன், "என் சிஸ்டரை காப்பாத்தினதுக்குத் தேங்க்ஸ்..."

"உன் சிஸ்டர்ன்னு தெரிஞ்சு இருந்தா காப்பாத்தியே இருக்க மாட்டேன்..." என்றாள் வெறுப்புடன்...

அவளது வெறுப்பில் அவன் அசந்து போய் நின்றுவிட்டான்... அன்று யுவா அவனை அடித்துவிட்டுப் போனதும் தான் அவனுக்கே தெரிந்தது ஸ்வேதா அவனை வைத்து விளையாடியது... அதன் பின் தான் அவன் தன் தவறை உணர்ந்தான்...

அந்நேரம் யமுனாவின் அலைப்பேசி அழைத்தது... அவள் அதை எடுக்க அதில் யுவாவின் புகைப்படத்துடன் அவன் அழைப்பது வந்தது... அதை மனோஜ் பார்த்துவிட்டான்...

"வீட்டுக்கு வந்திட்டியா பேபி..."

"இன்னும் இல்லை... ஹாஸ்பிட்டல்ல இருக்கேன்..."

"உனக்கு என்னாச்சு பேபி..." மருத்துவமனை என்றதும் அவனுக்குப் பயம் வந்தது...

"எனக்கு ஒண்ணும் இல்லை... ஒருத்தங்க அடிப்பட்டுக் கிடந்தாங்க அவங்களைக் கொண்டு வந்து சேர்த்தேன்... நீ கவலைப்படாதே நான் வீட்டுக்கு வந்துடுவேன்..." சொல்லிவிட்டு அழைப்பை துண்டித்தவளை பார்த்த மனோஜ்,

"யுவா சாரும் நீயும் கல்யாணம் பண்ணிக்கிட்டீங்களா...?" ஆச்சிரியமாய்க் கேட்டவனைக் கண்டு அவளுக்கு எரிச்சல் வந்தது...

"ஆமாம்... அதுக்கு என்ன இப்போ..." என்றாள் கடுமையுடன்...

"அதான் சாருக்கு அன்னைக்கு அந்தக் கோபம் வந்ததா..." என்று தனக்குள் பேசி கொண்டவனை யோசனையாய் பார்த்தவள்,

"என்னைக்கு...?" அவள் கேட்டதும் அவனது முகம் கறுத்துப் போனது அந்த நாள் நியாபகத்தில்...

"உன் கூடப் பேஸ்புக்ல பேசினதுக்கு மறுநாள்... எப்படிடா யமுனா கிட்ட அப்படிப் பேசுவன்னு என்னையும் என் பிரெண்ட்சையும் அடி பின்னி எடுத்துட்டார்... நீங்க யூஸ் பண்ணின மாதிரி அவளை நாங்களும் யூஸ் பண்ணிக்கிறோம்ன்னு சொன்னதுக்கு அவர் அடிச்ச அடியை என் உயிர் இருக்கிறவரை மறக்க மாட்டேன்... நாங்க நினைச்சோம் அவர் ஸ்வேதாவை லவ் பண்றாருன்னு... ஆனா அப்பவே சொன்னாரு ஸ்வேதா நான் யூஸ் பண்ணின பொண்ணு தான்... வேணும்ன்னா அவளை யூஸ் பண்ணிக்கோன்னு... அப்பவே யோசிச்சேன் லவ் பண்ற பொண்ணை இப்படிக் கேவலமா பேசுறாரு... ஆனா யாரோ ஒரு பொண்ணுக்காக நம்மைப் போட்டு மிதிக்கிறாரேன்னு... இப்போ தானே தெரியுது... அவர் உன்னைத் தான் லவ் பண்ணி இருக்காருன்னு..."

அவன் சொல்ல சொல்ல யமுனாவின் மனம் பூவாய் மலர்ந்தது... அன்றே தனக்காகத் தன் கணவன் சண்டை போட்டு இருக்கிறான்... தன்னை விட்டுக் கொடுக்காமல் பேசி இருக்கிறான்... அப்படி என்றால் அவனுக்கு அன்றே தன்னைப் பிடித்து இருந்ததா... மனதுக்குள் அத்தனை சந்தோசமாய் இருந்தது அவளுக்கு...

"நான் செஞ்சதுக்கு மன்னிச்சிரு யமுனா... அந்த ஸ்வேதா பேச்சு கேட்டு தப்பா நடந்துக்கிட்டேன்..." என்றவனின் வார்த்தை கூட அவளது காதில் ஏறவில்லை... மனம் உற்சாகத்தில் பறக்க சிட்டாக அங்கிருந்து பறந்துவிட்டாள் தன் காதல் கணவனைத் தேடி...

பதில் பேசாது போனவளை கண்டு மனோஜிற்கு வருத்தமாய் இருந்தாலும் அவளிடம் மன்னிப்பு கேட்டது அவனுக்கு நிம்மதியாய் இருந்தது...

வீட்டிற்கு வந்தவள் வேக வேகமாய்ச் சமைத்து விட்டு குளித்து முடித்து அழகான சேலையை அணிந்து கொண்டாள்... அங்கு வந்த பூக்காரியிடம் பூ வாங்கித் தலையில் வைத்து கொண்டவள் புது மணப்பெண்ணாய் கணவனின் வருகைக்காகக் காத்து இருந்தாள் மனதில் எழுந்த எதிர்பார்ப்புடன்...

அவளது காத்திருப்பு எதிர்பார்ப்பு எல்லாம் வீணாய் போகப் போவது தெரிந்து இருந்தால் அதைத் தவிர்த்து இருந்திருப்பாளோ... காலம் செய்யும் கோலம் நம் கையில் இல்லையே...

"ராஜ்... ராஜ்... ராஜ்..." மந்திரம் போல் அவனது பெயரை உச்சரித்துக் கொண்டு அவனுக்காகக் காத்து இருந்தாள் அவள்...

கண்ணாமூச்சி ஆட்டம் தொடரும்...

## களம் : 21

வீட்டிற்குக் களைத்து போய் வந்த யுவாவை அவனது மனைவி ஆச்சிரியத்தில் மூழ்கடித்தாள்... கதவை திறந்தவளின் அலங்காரம் அவனது மூச்சை ஒரு நொடி நிறுத்தி மீண்டும் சுவாசிக்கச் செய்தது...

'யுவா... உன் கற்புக்கு வந்த சத்யசோதனையா இது...? இவ்வளவு அழகா பொண்டாட்டி பக்கத்தில் இருந்தா ஒருத்தன் எத்தனை நாள் தான் கையைக் காலை கண்ட்ரோல் பண்ணிட்டு சாமியார் மாதிரி நடிக்கிறது... கடவுளே உனக்குக் கொஞ்சம் கூட இரக்கம் இல்லையா...' மனதுக்குள் புலம்பியவனை மனைவியின் குரல் நிகழ் உலகத்திற்கு அழைத்து வந்தது...

"ராஜ்... வாசல்ல நின்னுக்கிட்டு என்ன யோசனை உள்ளே வாங்க..." அவளின் குரலில் அசடு வழிந்தவன் உள்ளே நுழைந்தான்...

எப்போதும் அவன் வந்ததும் 'ராஜ்' என்று கத்தி கொண்டு அவனை அணைத்து அன்று கல்லூரியில் நடந்த விசயங்களை ஒன்று விடாமல் கூறும் மனைவியை எதிர்பார்த்து வந்தவனுக்கு அவளின் இந்த அமைதி அதிசயமாக இருந்தது... அதுவே அவனுக்கு உள்ளுக்குள் பயமாகவும் இருந்தது...

அவளைத் திரும்பியும் பார்க்காமல் குளியலறைக்குள் சென்று கதவை சாத்தி கொண்டான் அவன்...

குளித்து முடித்து வந்தவனுக்கு அவள் உணவு பரிமாற அவளின் நடவடிக்கையை அதிசயமாய்ப் பார்த்தவன் ஒன்றும் பேசாது அமர்ந்தான்... அங்கும் அவனை விதி துரத்தியது... புடவையை இழுத்து சொருகி இருந்தவளின் வெண்மையான இடை அவனை வா என்று அழைக்க அவன் கண்களை இறுக மூடி கொண்டான்...

அவளது அழகான வெண்ணிற இடைக்கு அவன் என்றுமே அடிமை... எப்போதும் அவளிடத்தில் அவனை ஈர்க்கும் பகுதி

அது... இன்றும் வஞ்சம் இல்லாமல் அவனை ஈர்த்து அவனது மனதை சலனப்படுத்தியது...

'டேய் அடங்குடா...' என்று மனதை அடக்கியவன் யமுனாவிடம், "நீயும் சாப்பிடு பேபி..." என்றான்...

அவன் சொன்னதும் மறுத்துப் பேசாமல் உணவை எடுத்து வைத்து உண்டவளை அவன் விசித்தரமாய்ப் பார்த்தான்... ஆனால் எதுவும் கேட்கவில்லை...

உணவு உண்டதும் எல்லாவற்றையும் இருவரும் சேர்ந்து ஒதுங்க வைத்தனர்...

அவன் அறைக்குச் செல்லாமல் அங்கிருந்த தொலைக்காட்சியில் மூழ்க... அவளோ அவனை எப்படி அழைப்பது என்று புரியாமல் அவன் அருகில் சென்று அமர்ந்தாள்...

"ராஜ்..."

"என்ன பேபி..." தொலைக்காட்சியில் இருந்து கண்களை எடுக்காமல் கேட்டவனைக் கண்டு அவளுக்கு எரிச்சல் வந்தது...

"தூங்கலையா..."

"இல்லை பேபி... நீ வேணும்னா போய்த் தூங்கு..." என்றவன் மறந்தும் அவள் புறம் திரும்பவில்லை...

"எனக்குத் தூக்கம் வரலை..." என்றவள் அவனுடன் அமர்ந்து தொலைக்காட்சியைப் பார்த்தாள்...

அவளின் நடவடிக்கையை அவன் மனதுக்குள் திகலாய் பார்த்துக் கொண்டு இருந்தான்...

சிறிது நேரத்தில் தனது மடியில் தூங்கி வழிந்தவளை கண்டு அவனது புன்னகை விரிந்தது...

"கொஞ்ச நேரத்தில் மனுசனை கொன்னுட்டடி..." என்று முணுமுணுத்தவன் குனிந்து அவளது நெற்றியில்

முத்தமிட்டான்...

முத்தமிட்டவனின் கழுத்தை வளைத்தது அவளது பூங்கரம்... அவன் திகைப்பாய் அவளைப் பார்க்க அவள் அவனைப் பார்த்துக் கண்ணைச் சிமிட்டினாள்...

"நீ திருடன்னா நான் திருடிடா..." என்றவள், "என்னையே ஏமாத்த பார்க்கிறியா... உன்னை..." என்றவள் அவனது முகத்தைத் தன் முகத்தோடு சேர்த்து வைத்து அழுத்தினாள்...

"வேண்டாம் பேபி சொன்னா கேளு..."என்று திமிறியவனை,

"வாழ்வா சாவான்னு வாழ்ந்து பார்த்திடலாம் ராஜ்..." என்று முணுமுணுத்தவளை அவனது கரங்கள் பூக்குவியலை அள்ளுவது போல் அள்ளி கொண்டது...

"சும்மா கிடந்தவனை உசுப்பேத்தி விட்டுட்ட... இனி சேதாரத்துக்கு நான் பொறுப்பு இல்லை..." என்றபடி அவளைப் படுக்கையில் கிடத்தியவன் அவளது முகம் நோக்கி குனிந்தான்...

அவன் ஒன்றும் முற்றும் துறந்த முனிவன் அல்லவே... அவள் மீது அவனுக்கும் கடலளவு காதல், நேசம் இருந்தது... அதை எல்லாம் அவளிடம் காட்ட விரும்பினான்... தனக்குக் கிடைத்த மனைவி என்னும் பொக்கிசத்தைக் கொண்டாடி கொண்டாடி மகிழ்ந்தான்...

அவளால் தான் அவனின் வேகத்திற்கு ஈடு கொடுக்க முடியவில்லை... அவனுள் மூழ்கவிடாமல் பழைய நினைவுகள் அவளை ஆக்கிரமிக்க அவளுக்கு வியர்த்து வழிய ஆரம்பித்தது... அன்று உணர்ந்த வலியை இன்றும் உணர்ந்தாள்...

ஆனாலும் அவனுக்காகத் தன் மனதை கட்டுப்படுத்திக் கொண்டாலும் அவளது உடல் அவளின் மனதை அவனுக்குத் தெளிவாகக் காட்டி கொடுத்தது... அவளின் நிலையை உணர்ந்தவன் அடுத்த நொடி விலகினான்...

கேள்வியாய் பார்த்தவளிடம், "தலை வலிக்குது பேபி..." என்று அவன் தலையைப் பிடித்துக் கொள்ள...

"நான் வேணா தைலம் தேய்ச்சு விடவா..." என்று பதறி போய்க் கேட்டவளிடம்...

"அதெல்லாம் வேணாம் தூங்கி எழுந்தா சரியா போகும்..." என்றவன், "சாரி பேபி..." என்று மன்னிப்பு வேண்டினான் அவளிடம்...

அவளுக்குப் புரிந்து போனது... தனக்காக அவன் பழியைத் தூக்கி அவன் மீதே போட்டுக் கொள்கிறான் என்று...

அவனது காதல் மனம் புரிந்தது அவளுக்கு... ஆனாலும் அவனுடன் ஒன்ற முடியாமல் தவிக்கும் மனதை அவளால் அடக்க முடியவில்லை... என்னத்தான் இந்த மனம் அவனிடம் எதிர்பார்க்கிறது என்று அவளுக்கே தன் மீது வெறுப்பாய் இருந்தது...

அவளது குழப்ப முகத்தைக் கண்டவன் அவளைத் தன் கையணைவில் கொண்டு வந்து, "எதைப் பத்தியும் யோசிக்காதே பேபி... நமக்கான காலம் நீண்டு இருக்கு..." அவளைச் சமாதானம் செய்ய...

சரி என்பது போல் தலையசைத்தவளை கண்டு நிம்மதியுற்றவனாய் அவன் உறங்க அவளோ விடிய விடிய கண்ணீர் வடித்துக் கொண்டு முழித்துக் கிடந்தாள்...

ஒன்று மட்டும் உறுதியாய் புரிந்து போனது அவளுக்கு... அது தாம்பத்திய வாழ்க்கைக்குத் தான் ஏற்றவள் அல்ல என்று... அவளால் அவனுக்கு எந்தவித சுகத்தையும் கொடுக்க முடியாது என்பதை அக்கணம் உணர்ந்தாள்... அதை விடத் தன்னால் அவனுக்கு என்று ஒரு வாரிசு இல்லாமல் போவதை அவளால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை...

அவன் தவறு செய்தவன் தான்... அந்தத் தவறுக்கு பிராயசித்தமாய் அவனும் இப்போது மன்னிப்பு வேண்டி அவளுக்காக எவ்வளவோ மாறிவிட்டான்...

அப்படிப்பட்டவனைத் தவறு செய்த ஒரே காரணத்துக்காக வாழ்நாள் முழுவதும் தண்டிக்க அவளுக்கு மனம் வரவில்லை...

அவன் வாழ்க்கை நன்றாக இருக்க வேண்டும்... அதுக்குத் தன் காதல் தடையாக இருப்பதை அவள் விரும்பவில்லை...

மறுநாள் யோசனையுடன் எழுந்தவளை கண்டு அவனும் யோசனையாய் பார்த்தான்... ஆனால் ஒன்றும் பேசவில்லை... வழக்கம் போல் இருவரும் கிளம்பினார்கள் அவள் கல்லூரிக்கும், அவன் அலுவலகத்துக்கும்...

இதற்கு இடையில் அவனது பிறந்தநாளும் வரவிருந்தது... அவனுக்கு அந்த நாளை நினைத்து உள்ளுக்குள் சற்று உதறலாகத் தான் இருந்தது... அந்த நாள் என்ன மாதிரியான பாதிப்பை யமுனாவிடத்தில் உண்டு பண்ணும் என்று அவனுக்குப் பயமாக இருந்தது...

அடுத்து வந்த நாட்கள் ஒருவித அமைதியில் கழிந்தது... அவன் எப்போதும் போல் அவளைக் கவனமாய்ப் பார்த்துக் கொண்டான்... ஆனால் அவளால் தான் அவனுடன் ஒன்ற முடியவில்லை... அவனுக்காக ஒப்புக்கு சிரித்தாள்... அவன் உறங்கிய பின் கண்ணீரால் தலையணையை நனைத்தாள்...

கடைசியில் ஒரு முடிவுக்கு வந்தவளாய் தன் கண்ணீரை துடைத்தவள் அந்த முடிவை மறுநாளே செயலாற்ற விரும்பினாள்...

மறுநாள் கல்லூரிக்கு சென்றவள் அங்கு இருந்து ஸ்வேதாவுக்கு அழைத்தாள்...

"உன் கூட எனக்கு என்ன பேச்சு... என் யுவாவை மயக்கி கைக்குள் போட்டுக்கிட்ட உன்னை நான் வெறுக்கிறேன்..." என்று கத்திய ஸ்வேதாவிடம்,

"ஐம் சாரி ஸ்வேதா... உன்னோட யுவாவை உன்கிட்ட இருந்து பறிச்சதுக்கு..." தன் கணவனை அடுத்தவளின் காதலன் என்று சொல்லும் போதே அவளது இதயம்

இரண்டாய் உடைந்தது போல் வலித்தது அவளுக்கு... காலம் முழுவதும் இந்த வலி மட்டுமே தனக்கு நிரந்தரம் என்று உணர்ந்தவள் விரக்தியாய் சிரித்துக் கொண்டாள்...

யமுனா பேசியதை கேட்டு ஸ்வேதா சந்தேகமாய் அலைப்பேசியைப் பார்த்தாள்...

"உண்மையாவா சொல்ற யமுனா..." அவளது குரலில் இருந்த மகிழ்ச்சியைக் கண்டு யமுனாவின் உள்ளம் வேதனை அடைந்தது...

அவளும் தன்னைப் போல் யுவாவை காதலிப்பதை உணர்ந்தாள்... காதலர்களைப் பிரித்த பாவத்தைச் செய்த தனக்கு இந்தத் தண்டனை வேண்டியது தான் என்பதை உணர்ந்தவள்,

"உண்மை தான்... நாளைக்கே நீ வந்து அவன் கிட்ட பேசு... அவன் உன்னை ஏத்துக்குவான்... இன்னும் அவன் மனசில் நீ தான் இருக்க..." யமுனா சொன்னது கேட்டு ஸ்வேதாவுக்குச் சந்தோசமாய் இருந்தது...

"நீ பொய் எதுவும் சொல்லலையே..." என்று சந்தேகமாகக் கேட்க...

"ராஜ் மேல சத்தியமா பொய் சொல்லைல... நீ கிளம்பி வா..." என்றவள் அலைப்பேசியை அணைத்து விட்டாள்...

அன்று முழுவதும் அவளுக்கு அழுகை அழுகையாய் வந்தது... மாலை வீட்டிற்கு வந்த யுவா அவளின் முகம் சிவந்து வீங்கி இருப்பதைக் கண்டு,

"உடம்பு சரியில்லையா பேபி... டாக்டர் கிட்ட போய்ட்டு வரலாமா...?" என்று கேட்க... அவனது கரிசனையில் கண்களைக் கரித்தது அவளுக்கு...

"இல்லை வேணாம்..." என்று மறுத்தவள், "உன் மடியில் படுத்துக்கவா..."

"இதென்ன கேள்வி எல்லாம் கேட்டுட்டு வா பேபி..." அவளை மடியில் படுக்க வைத்தவன் அவளது தலையை

மென்மையாய் வருடி விட... அவளது கண்களில் கண்ணீர் வழிந்தது...

அவளது கண்ணீரை உணர்ந்தவன் கண்களைத் துடைத்து விட்டு, "மனசை போட்டு அலட்டிக்காம தூங்கு பேபி... நான் எப்பவும் உன் கூடவே இருப்பேன்..." என்றவனைக் கண்ணீர் மல்க ஏறிட்டாள்...

"தூங்கு..." என்றவனின் முகத்தை ஆழமாய்த் தனது விழி வழியே இதயத்திற்குள் உள்வாங்கிப் பத்திரமாய்ச் சேமித்துக் கொண்டாள்...

மறுநாள் அவரவர் அலுவலுக்குக் கிளம்பும் நேரம் கணவனின் கையைப் பிடித்துத் தடுத்தாள் யமுனா...

"என்னடா... உடம்பு சரியில்லையா... லீவு போடுறியா...? வேணும்ன்னா நானும் லீவு போட்டு உன் கூட இருக்கவா..."

பதில் பேசாது அவனை இமைக்காமல் பார்த்தவள் அவனது உயரத்திற்கு எம்பி அவனது இதழில் அழுத்தமாய்த் தனது இதழை பொருத்தினாள்...

அவளது மனநிலை புரிந்தவனாய் அவளுக்கு ஏற்றவாறு வளைந்து கொடுத்தவன் எந்த நேரத்திலும் உணர்ச்சிவசப்படவில்லை... ஏனெனில் அவளது மனநிலை அவனுக்கு நன்கு தெரியும்... தான் உணர்ச்சிவசப்பட்டால் காயப்படுவது அவள் மனம் தான்... அவள் மனதின் வலி அவனின் வலி அல்லவா... அதை என்றுமே அவனால் தாங்கி கொள்ள முடியாது... அதனால் அவளின் விருப்பத்திற்கு உடன்பட்டாலும் அமைதியாய் நின்றான்...

அழுத்தமாய் அதே சமயம் நிதானமாய் அவனின் இதழில் இதழ் பதித்தவள் அவனை விடுவிக்கும் போது அவளது கண்களில் கண்ணீர் மழை பொழிந்தது...

"என்னடி இது... புதுசா அழுதுட்டு... ஜான்சிராணி மாதிரி படபடப் பட்டாசு என் யம்மு பேபி எங்கே போனா...?" அவளைச் செல்லமாய்க் கடிந்தவன் அவளது கண்ணீரை துடைத்துவிட்டான்...

"இன்னைக்கு என்னமோ நீ சரியில்லை... அதனால லீவு போட்டுட்டு நாம வெளியில் எங்கேயாவது போய்ட்டு வரலாம்..." பழசை நினைத்து வருந்துகிறாளோ என்று நினைத்து அவன் கேட்டான்... ஏனெனில் நாளை அவனது பிறந்தநாள்...

"அதெல்லாம் ஒண்ணும் இல்லை... இன்னைக்கு முக்கியமான செமினார் இருக்கு..." என்றவள் அவனைக் கிளப்பிக் கொண்டு வெளியில் வந்தாள்...

அவன் செல்வதைப் பார்த்துக் கொண்டு இருந்தவள் கல்லூரிக்குச் செல்லாமல் ஸ்வேதா தங்கி இருந்த விடுதிக்கு சென்றாள்...

அவளிடம் பேசியவள் வெளியில் வந்து தனது தந்தையிடம் பேசினாள்... அவள் பேசியதை கேட்டு அவர் கோபப்பட அவரைச் சமாதானப்படுத்தியவள் தன் நிலையை அவரிடம் எடுத்து கூற அவரும் பேச வார்த்தை இல்லாமல் வாயடைத்துப் போனார்... அதற்கு மேல் செல்ல மகளை வருந்த வைக்க அவருக்குமே விருப்பம் இல்லை... அவளின் விருப்பத்திற்கு உடன்பட்டார் மனப்பாரத்தோடு...

அன்று மாலை வீட்டிற்கு வந்த யுவா அங்கு ஏற்கெனவே வந்து இருந்த ஸ்வேதாவை கண்டு அதிர்ந்தான்... ஆனாலும் தன்னைச் சமாளித்துக் கொண்டு,

"வா..." என்று ஒரு விருந்தினராய் அவளை வரவேற்றவன்,

"யம்மு பேபி..." என்று அழைத்தபடி உள்ளே சென்றான்...

சமையலறையில் மனைவியைத் தேடியவன் பின் படுக்கையறைக்குச் சென்றான்... அங்கும் அவளைக் காணாது குழப்பம் அடைந்தவன் முன் வந்து நின்றாள் ஸ்வேதா...

இப்போது அவனது ஒட்டு மொத்த சந்தேகமும் அவள் பக்கம் திரும்பியது...

"எங்கேடி என் யம்மு பேபி...? அவளை என்னடி பண்ணின...?" ஓங்கி அடித்தான் அவளது கன்னத்தில்...

"யுவா..." கன்னத்தில் கையை வைத்தபடி அதிர்ந்து போய் நின்றாள் ஸ்வேதா...

****************************

நள்ளிரவு மணி பன்னிரெண்டாக ஐந்து நிமிடம் இருந்தது... தன் முன் இருந்த கேக்கை வெறித்துப் பார்த்துக் கொண்டு இருந்தாள் யமுனா...

நான்கு வருடங்களுக்கு முன் நடந்த நிகழ்வு மனதை அழுத்தினாலும் அதன் பாதிப்பை விட இன்று கணவனைப் பிரிந்து துக்கம் தான் அவள் மனதை அழுத்தியது... இனி அவன் அவளுடைய கணவன் இல்லை... வேறு ஒருத்திக்கு சொந்தமானவன்...

அவளது ராஜ் இன்று முதல் அவளுக்கு இல்லை... இனி கனவிலும் அவனை நினைத்து பார்க்க முடியாத அளவிற்கு அவன் அவளை விட்டு விலகி போய்விட்டான்... இல்லை இல்லை விலகி போகச் செய்துவிட்டாள் அவள்... கண்களைக் கண்ணீர் முட்டியது... என்ன முயன்றும் அவளால் கண்ணீரை கட்டுப்படுத்த முடியவில்லை...

கடிகாரத்தில் சரியாகப் பன்னிரெண்டு மணியானதுக்கான ஒலி கேட்க அதில் நிமிர்ந்தவள் கண்ணீரை துடைத்துக் கொண்டு கேக்கின் மீது இருந்த மெழுகுவர்த்தியை ஏற்றி வைத்தாள்...

"ஹேப்பிப் பேர்த்டே ராஜ்..." எதிரில் அவன் இருப்பது போல் கற்பனை செய்து கொண்டு கூறியவள் விழிகளில் மீண்டும் விழிநீர் எட்டிப் பார்த்தது...

அந்நேரம் வீட்டின் அழைப்பு மணி அடிக்கக் கொஞ்சம் பயம் கொஞ்சம் எதிர்பார்ப்பு எல்லாம் சேர்ந்த கலவையான மனநிலையுடன் கதவை திறந்தவளின் எண்ணத்தைப் பொய்யாக்காமல் அவளின் எண்ணத்தின் நாயகன் நின்று இருந்தான்...

இறுக்கமான முகத்துடன் அவளைத் தள்ளி கொண்டு உள்ளே வந்தவன் கதவை தாளிட்டான் முதல் வேலையாக... பின் நிதானமாய் அவள் புறம் திரும்பியவன்,

"மனுசனை கொஞ்சம் நல்லவனா இருக்க விட மாட்டியே..." என்று ஆத்திரத்தில் கர்ஜித்தவனைக் கண்டு சுவரோரமாய் ஒடுங்கினாள் யமுனா அச்சத்தில்...

கண்ணாமூச்சி ஆட்டம் தொடரும்...

களம் : 22

படுக்கையறையிலும் மனைவியைக் காணாது திகைத்த யுவா அவளின் அலைப்பேசிக்கு முயல அதுவோ அணைத்து வைக்கப்பட்டு இருந்தது... என்ன செய்வது என்று தெரியாது திகைத்தவன் முன் வந்து நின்றாள் ஸ்வேதா...

"நீங்க என்ன சத்தம் போட்டுக் கூப்பிட்டாலும் அவ வர மாட்டா யுவா..." உல்லாசமாய்ச் சிரித்தபடி நின்று இருந்தவளை கண்டு அவனது ஒட்டு மொத்த சந்தேகமும் அவள் மேல் குவிந்தது...

மனைவியைக் காணாத ஆத்திரத்தில், "எங்கேடி என் யம்மு...? அவளை என்னடி பண்ணின...?" என்றபடி ஓங்கி அடித்தான்...

"உண்மையைச் சொல்லுடி... அவளை என்ன பண்ணின...? என்ன சொல்லி துரத்தி விட்ட...?" மறுபடியும் ஸ்வேதாவை அடிக்கக் கையை ஓங்கிய யுவா பின் என்ன நினைத்தானோ, "ச்சே..." என்றபடி கையைக் கீழே இறக்கினான்...

"உன்னை எல்லாம் தொட்டு அடிக்கிறதே பாவம்..." என்றான் அருவருப்புடன்...

"ஓ... அந்தளவுக்கு என் மேல் வெறுப்பா இருக்கா உங்களுக்கு..." என்று ஏளனமாய்க் கேட்ட ஸ்வேதா,

"இங்கே பாருங்க மிஸ்டர். யுவராஜ்... உங்க வொய்ப் சொன்னதால தான் நான் இங்கே வந்தேன்... வந்ததுக்கு நல்ல பரிசு கொடுத்துட்டீங்க..." என்றாள் கன்னத்தைப் பிடித்தபடி...

"அவ சொன்னா உனக்கு எங்கே புத்தி போச்சு... நான் தான் அன்னைக்கே சொல்லிட்டேனே... உனக்கும் எனக்கும் ஒத்து வராதுன்னு..." அவளைப் பார்த்து சொன்னவன்,

"ரெண்டு பொம்பளைங்களும் உங்க இஷ்டத்துக்கு ஆடுறீங்களா...?" என்று பல்லை கடித்தான்...

"யமுனா தான் சொன்னா உன் மனசில் இன்னமும் நான் தான் இருக்கேன்... நான் வந்து பேசினா நீ என்னை ஏத்துக்குவேன்னு... ஆனா வந்து பார்த்தா தான் தெரியுது உன்னோட லட்சணம்... புருசன், பொண்டாட்டி ரெண்டு பேரும் என்னை வச்சு விளையாடுறீங்களா...? நீங்க விளையாடுறதுக்கு நான் தான் கிடைச்சேன்னா...?" என்று கத்தியவளை பார்த்து வாயில் பக்கமாய்க் கையை நீட்டினான் அவன்...

"மரியாதையா போயிரு... இதுக்கு மேல உனக்கு இங்கே இடம் கிடையாது... ஒரு காலத்தில் உன்னைக் காதலிச்ச பாவத்துக்கு நின்னு பேசிட்டு இருக்கேன்... என்னைக்கு உன் பிரெண்ட்ஸை வச்சு யம்மு வாழ்க்கையில் விளையாட ஆரம்பிச்சியோ அன்னைக்கே நான் உன்னை ஒரு பொண்ணா கூட மதிக்கிறது இல்லை... பொண்ணுன்னா இரக்கம் இருக்கணும்... அது இல்லாத உன் கிட்ட பேசவே எனக்குப் பிடிக்கலை... முதல்ல வெளியில் போ..."

"இதுக்கு மேல இங்கே நிக்க எனக்கு என்ன பைத்தியமா... நான் போறேன்..." என்றவள் வேகமாய் வெளியேறினாள்...

அவள் ஏன் வந்தாள்... ஏன் செல்கிறாள் என்பது அவளுக்கே தெரியவில்லை... அவள் விரும்பிய யுவா இவனிடத்தில் இல்லாத காரணமா...?

ஸ்வேதா சென்றதும் தனது சக்தி எல்லாம் வடிந்தார் போன்று யுவா அப்படியே அமர்ந்துவிட்டான்...

அவனால் இன்னமும் நம்ப முடியவில்லை... யமுனா தான் ஸ்வேதாவை வரவழைத்தாள் என்று...

'இன்னமும் அவள் என் காதலை நம்பவில்லையா... வார்த்தைக்கு வார்த்தை ஐ லவ் யூன்னு சொல்லிட்டு இருக்கேனே அதில் இருக்கிற காதல் அவளுக்குப் புரியவில்லையா...' தன் காதலை உணர வைக்கத் தான் தவறினோமா இல்லை மனைவி தன்னை உணராமல் போனாளா... எதனால் இந்தப் பிரிவு என்பதை அவனால் கணிக்க முடியவில்லை... என்ன செய்வது என்று தெரியாது அமர்ந்து இருந்தான்...

"அப்பா..." வெகு நாட்களுக்குப் பின் அழைத்த மகளின் குரலை கேட்டதும் பரந்தாமனுக்குச் சந்தோசம் எழுந்த அதே நேரம் துக்கமும் சேர்ந்து எழுந்தது...

"இப்பத்தான் இந்த அப்பா நியாபகம் வந்ததாம்மா..."

"அப்படி எல்லாம் இல்லைப்பா..." என்றவளுக்கு அழுகை அழுகையாய் வந்தது...

"அப்பா... நான் பெரியப்பா வீட்டில் போய் இருக்கவா..." திடுமென அவள் அப்படிக் கேட்டதில் அவர் குழப்பம் அடைந்தார்...

அவரது அண்ணனின் சொத்துக்கள் எல்லாம் யமுனாவின் பேரில் தான் இருக்கிறது... அவர்கள் இருந்த வீட்டை கூட இரு பகுதிகளாகப் பிரித்து வாடகைக்கு விட்டு இருக்கிறார்... அந்த வாடகை கூட யமுனா பேரில் தான் வங்கியில் போடப்பட்டு வருகிறது...

கோயம்புத்தூர் போவதாய்ச் சொன்ன போது அவர் அந்த வீட்டில் அவர்களைத் தங்கி கொள்ளச் சொன்னார்... அதற்கு யமுனா தான் மறுத்துவிட்டாள்... அவளது பணத்தில் வீட்டுக்குத் தேவையான பொருட்களை வாங்க

சொன்னதற்கும் எல்லாவற்றையும் கணவன் பார்த்து கொள்வான் என்று அவள் மறுத்துவிட்டாள்...

"என்னம்மா திடீர்ன்னு..." மகளின் வார்த்தையில் பதறிவிட்டார் அவர்...

"எனக்கு அப்பவே தெரியும்... என்னைக்காவது ஒரு நாள் அவன் உன்னைக் கைவிட்டுருவான்னு... நான் கிளம்பி வந்து அவன் கிட்ட நியாயம் கேட்கிறேன்... நீ கவலைப்படாதே..." என்று கோபத்தில் படபடத்தவரிடம்,

"இல்லைப்பா இது என்னோட தனிப்பட்ட முடிவு... அவருக்கும் இதுக்கும் சம்பந்தம் இல்லை... நான் அவரை விட்ட விலகுறது தான் அவருக்கு நல்லது..." என்றவள் உண்மையைச் சொல்லவில்லை... சொன்னால் எல்லாவற்றையும் சொல்ல நேரிடும்... அதில் கணவனின் நிலை இன்னமும் கீழிறங்கும்... அந்த நிலை அவனுக்கு வரவிட அவளுக்கு விருப்பம் இல்லை...

"இங்கே நம்ம வீட்டுக்கு வா... எதுக்குத் தனியா கிடந்து கஷ்டப்படுற..." அவர் கூறியதற்கு அவளிடத்தில் பதில் இல்லை...

"இல்லைப்பா நான் அங்கே வரலை..." அன்று அவர் கூறிய வார்த்தைகள் அவளது மனதில் ஆழமாய் வேரோடி இருந்தது...

"நான் சொன்னதை நீ மறக்கலை அப்படித்தானே பாப்பா..." அவரின் குரல் கமறியது... மகளின் மௌனமே அதற்குப் பதிலாய் கிடைக்க அதற்கு மேல் அவரும் வற்புறுத்த வில்லை... அவளின் விருப்பத்திற்குச் சம்மதித்தார்...

யமுனாவின் நல்ல நேரம் மாடி வீடு காலியாக இருந்தது... கீழே மட்டுமே ஆட்கள் வாடகைக்கு இருந்தனர்... அவள் வரும் போதே தன்னுடைய உடைமைகளை எடுத்துக் கொண்டு வந்துவிட்டாள்...

கணவனைப் பிரிந்து வந்துவிட்ட போதும் அவளது நினைவுகள் எல்லாம் அவனிடத்தில்...

இன்னும் சில மணித்துளிகளில் அவனது பிறந்தநாள் வந்துவிடும்... தனது பெட்டியில் இருந்து அந்தச் சேலையை எடுத்தாள்... நான்கு வருடங்களுக்கு முன் அவனது பிறந்தநாளின் போது அவன் அவளுக்காக வாங்கிக் கொடுத்த புடவை அது...

ஒவ்வொரு வருடமும் அவனது பிறந்தநாளின் போது மனதில் எழுந்த எதிர்பார்ப்புடன் அவன் வருவான் தன்னை வந்து கூட்டி கொண்டு போவான் என்று நம்பிக்கையுடன் காத்து இருப்பாள்... இந்த நான்கு வருடங்களாக அவன் வரவும் இல்லை... அவளை அழைத்துக் கொண்டு போகவும் இல்லை... இந்த நான்கு வருடங்களில் அவளது நம்பிக்கை பொய்த்து போய் ஏமாற்றம் மட்டுமே அவளுக்கு மிஞ்சியது...

இதோ இந்த வருடம் அவன் வர மாட்டான் என்று அவளுக்கு நன்கு தெரியும்... அதனால் அவனது நியாபகமாய் அந்தப் புடவையை எடுத்து உடுத்தினாள்... ஏனோ அவனே அவளுடன் இருப்பது போல் உணர்ந்தாள்... இன்று அவளிடம் நம்பிக்கையும் இல்லை... ஏமாற்றமும் இல்லை... ஆனால் மனதில் அதே அளவு காதல் மட்டும் அவன் மீது இருந்தது...

கேக்கை எடுத்து வைத்துக் கொண்டு இருந்த போது வீட்டின் அழைப்பு மணி ஒலித்தது... இந்த நேரத்தில் யாரும் வருவதற்கு வாய்ப்பு இல்லை... அவனைத் தவிர... மனதின் ஓரம் எதிர்பார்ப்பு எழுந்தது... அதே சமயம் பயமும் எழுந்தது...

பரபரப்புடன் கதவை திறந்தவள் அவளது எண்ணத்தின் நாயகனை கண்டதும் மகிழ்ச்சியில் உறைந்து போனாள்... இத்தனை நாள் அவளது நம்பிக்கை பொய்த்து போய் ஏமாற்றம் மட்டுமே மிஞ்சி இருக்கும்... ஆனால் இன்று அவளது நம்பிக்கையைக் காப்பாற்றி அவளது காதலையும் உயிர்ப்பித்து இருந்தான் அவளது காதல் கணவன்...

மீண்டும் மனைவியைக் கண்ணில் காணும் வரை யுவாவின் உயிர் அவனிடத்தில் இல்லை... மாமனாரிடத்தில் கெஞ்சி கூத்தாடி அவள் இருக்கும் இடத்தைக் கேட்டு இந்த

நேரத்திலும் அவளைக் காண ஓடி வந்து இருக்கிறான்... அவளைக் காணும் வரை பதறிய நெஞ்சம் அவளைக் கண்டதும் நிம்மதியுற இப்போது அவனின் மனதில் இருந்த கோபம் எல்லாம் அவள் மீது திரும்பியது...

"மனுசனை கொஞ்சம் நல்லவனா இருக்க விட மாட்டியே..." என்று ஆத்திரத்தில் கத்தியவன் அவள் அருகில் ஆவேசமாய் வந்தான்...

அவளது தாடையை இறுக பற்றி முகத்தை நிமிர்த்தியவன், "உன் மனசுல என்னடி நினைச்சிக்கிட்டு இருக்க... பெரிய காதல் தியாகின்னா... என் வாழ்க்கையை உன் கையில் எடுக்கிற உரிமையை உனக்கு யார் கொடுத்தது...? நான் கொடுத்தேனாடி உனக்கு... சொல்லுடி..." சுவரோரமாய் அவளை அழுத்தியவனைக் கண்டு இப்போது அவள் அச்சம் கொள்ளவில்லை...

"ஏண்டி என்னைப் பத்தி நல்லவிதமாவே நினைக்க மாட்டியா... மனசுல அவளை நினைச்சுக்கிட்டு உன் கழுத்துல தாலி கட்டிட்டு வேற ஒருத்தி கூட வாழ நான் என்ன பொம்பளை பொறுக்கியாடி... என்னைப் பார்த்தா உனக்கு அப்படியா தெரியுது... உன் இடத்துல வேற ஒருத்தி இருந்திருந்து என்னை அந்த மாதிரி அவமானப்படுத்தி இருந்திருந்தா அந்த இடத்திலேயே அவளைப் பதிலுக்கு அவமானப்படுத்திட்டுப் போயிருப்பேன்... இந்த மாதிரி பழிவாங்கணும்ன்னு திட்டம் போட்டு லவ் பண்ணி இருக்க மாட்டேன்..."

"அன்னைக்கு என் மனசு புரியாம உன் பின்னாடி சுத்தினேன்... இப்ப என் மனசு புரிஞ்சு தெரிஞ்சு சொல்றேன் நான் உன்னைத்தான் காதலிக்கிறேன்... நான் தொட்ட முதல் பொண்ணும் நீ தான்... கடைசிப் பொண்ணும் நீயா தான் இருப்ப... நான் உனக்குப் பண்ணியது மிகப் பெரிய துரோகம் தான்... அதுக்குப் பதிலுக்கு என்னை அடி, திட்டு... வேணும்ன்னா என் உயிரை கூட எடு... அதை விட்டுட்டு உன்னைக் காதலிக்கிற என்னைப் போய்

அடுத்தவக் கூட இணைச்சு வைக்கிறியே... இது நியாயமாடி..."

"வார்த்தைக்கு வார்த்தை மூச்சுக்கு மூச்சுக்கு 'ஐ லவ் யூ பேபி'ன்னு புலம்புறேனே... அதில் இருக்கிற காதல் உனக்குப் புரியலையா... அதை விடு... உனக்காக இவ்வளவு மாறி இருக்கிறேனே அது உன் கண்ணுக்கு தெரியலையா... நான் நினைவில்லாம கிடந்தப்போ கூட உன் நினைவை மனசில் இருத்தி தான் பிழைச்சு வந்தேன்னு சொன்னா நீ நம்புவியா... ம்ஹூம் நீ எங்கே நம்பப் போற... உனக்குத் தான் என்னை என் மனசை பத்தி கவலை கிடையாதே..."

அவன் சொன்னதைக் கேட்டுப் பிரமித்துப் போய் அவனைப் பார்த்தாள் அவள்... அவன் கூறிய செய்தி அவளின் காதலை உயிர்ப்பித்துக் கொண்டு இருந்தது...

"அன்னைக்கு உணர்ந்தேன்டி நீ இல்லைன்னா நான் இல்லைன்னு... அன்னைக்கு மாற ஆரம்பிச்சேன் அதுவும் உனக்காக... இதோ இப்ப வரைக்கும் உனக்காகத் தான் நான் உயிர் வாழ்ந்துட்டு இருக்கேன்... உனக்கு என்னைப் பிடிக்கலையா செத்து போன்னு சொல்லு... செத்து போறேன்... அதுக்காக எனக்கு வேற பொண்ணைப் பார்த்து சேவை பண்ற வேலை எல்லாம் வச்சுக்காதே... நீ புரிஞ்சாலும் சரி புரிஞ்சிக்கலைன்னாலும் சரி நீ தான் நீ மட்டும் தான் என் காதலி... என் மனைவி... இதுக்கு மேல என் காதலை எப்படிச் சொல்றதுன்னு தெரியலை..." என்றவன் அவளை விட்டு விலகினான்...

"உன்னைக் கொன்னு போடணும்ங்கிற வெறியில் தான் வந்தேன்... ஆனா உன்னைப் பார்த்தா என் கோபம், ஆத்திரம் எல்லாம் என்னை விட்டு எங்கே போகுதுன்னே தெரியலை..." ஆயாசமாய்ச் சொன்னவன்,

"ஆனா ஒண்ணு மட்டும் உறுதி... நான் அன்னைக்குச் சொன்னது தான் இன்னைக்கும்... எப்போ என் கிட்ட வந்தியோ அப்பவே உன் வாழ்க்கை என் கையில்... என்னோடு தான்... நீயே நினைச்சாலும் என்னை விட்டு போக முடியாது..."

அவன் பேசி முடிக்கும் அவனைத் தாவி அணைத்து கொண்டாள் அவன் மனைவி...

"போக மாட்டேன்டா... போக மாட்டேன்டா... ஐம் சாரி... சாரி..." மன்னிப்பு கோரியவள்...

"ஐ லவ் யூ ராஜ்..." என்று கூறியபடி அவன் முகம் முழுவதும் முத்தமிட்டாள்...

கிட்டத்தட்ட நான்கு வருடங்களுக்குப் பின் அவளது வாயில் இருந்து வரும் காதல் வார்த்தைகள் அவனது மனதை சில்லென்று தாக்கியது... அவனையும் அறியாது அவனது கைகள் அவளை அணைத்துக் கொண்டது...

"ஹாஸ்பிட்டல்ல இருந்தப்போ நீ என்னை உணர்ந்தியாடா... ஸ்வேதாவால தான் நீ உயிர் பிழைச்சதா அத்தை சொன்னப்போ அன்னைக்கே நான் செத்து போய்ட்டேன்டா... உன் மனசில் நான் இல்லைன்னு..." அவள் கூறியதை கேட்டு குழப்பமுற்றவன் அவளை விலக்கி அவள் முகம் பார்த்தான்...

"என்னடி சொல்ற...?"

அன்று அவள் அவனை மருத்துவமனையில் பார்த்தது... பேசியது... முத்தமிட்டது எல்லாவற்றையும் சொல்லியவள்,

"அன்னைக்கு உனக்கு ஆக்சிடெண்ட்ன்னு கேள்விப்பட்டதும் மயங்கி விழுந்திட்டேன்... அதுவும் நல்லதுக்குத் தான்... அதனால தான் உன்னை வந்து என்னால பார்க்க முடிஞ்சது..." என்றவளின் காதலில் வாயடைத்து போய் நின்றான்...

"அன்னைக்கு வந்தியாடி... அதெல்லாம் கனவுன்னுல இத்தனை நாள் நினைச்சிட்டு இருந்தேன்... என்னை நீ மறக்கலையா பேபி... நீ மயங்கி விழுற அளவுக்கு உன்னை நான் பாதிச்சு இருக்கேன்னா... ஐம் சாரி பேபி..."

"உன்னை எப்படிடா மறக்க முடியும்... அப்பவே உன்னை மறக்க முடியாமல் தவிச்சவ... இப்போ நீ என்னை

விரும்பறேன்னும் தெரிஞ்சும் உன்னை விட்டுட்டு வந்திருக்கேன்னா... ப்ளீஸ் ராஜ் என்னைப் புரிஞ்சிக்கோ... என்னால உன் கூடத் தாம்பத்திய வாழ்க்கை வாழ முடியலை... எத்தனை நாளைக்கு உனக்கு நான்... எனக்கு நீன்னு சொல்லிக்கிட்டு வாழ்க்கை ஓடும்... எப்பவாவது என்னடா வாழ்க்கை இதுன்னு உனக்கு ஒரு சலிப்பு வரும்... என் மேல் கோபம் வரும்... என்னோட இருக்கிறதே எரிச்சலா இருக்கும்... அதுக்கு அப்புறம் சண்டை, பிரிதல்... அதனால தான் இப்பவே நல்லபடியா பிரிஞ்சிடலாம்ன்னு நினைச்சேன்... நான் செஞ்சது தப்பா ராஜ்..."

"தப்பு இல்லைன்னு சொல்ல மாட்டேன்... தப்பு தான்னு சொல்வேன்... என்னைப் பத்தி நீ நினைச்சது அவ்வளவு தானா... எனக்கு வேண்டியது பெண் தான்னா இந்த இடைப்பட்ட காலங்களில் எத்தனையோ பெண்கள் என்னைக் கிராஸ் பண்ணினாங்க... அவங்கள்ள யாரையாவது பிடிச்சு இருந்துருப்பேனே... ஆனா எனக்கு இந்தப் பெண் வேணும்ன்னு தானே இத்தனை நாளா காத்துட்டு இருந்தேன்..." என்று அவளைப் பிடித்து வளைத்தவன்,

"ஒரு பொண்ணைக் காதலிக்கிறது கூடத் தெரியாம அந்தப் பொண்ணு கூடச் சுத்திக்கிட்டு கால நேரத்தை வேஸ்ட் பண்ணியவன் நானா தான் இருப்பேன்..." அவளது நெற்றியில் முட்டினான்...

"இப்பவும் சொல்றேன்... குழந்தை வாழ்க்கையில் ஒரு அங்கம்... ஆனா அதுவே வாழ்க்கை இல்லை... எத்தனையோ குழந்தைகள் ஆதரவு இல்லாம இருக்கு அதுல ஒரு குழந்தையைத் தத்து எடுத்துக்கலாம்... சரியா... இனி இதுக்காக நீ மனசு கஷ்டப்படக் கூடாது..."

அவனது வார்த்தையில் அவள் மனம் அடைந்த நிம்மதி வார்த்தையில் வடிக்க முடியாது... காதல் கொண்டவன் காமுகனாய் மாறி கற்பை சூறையாடிவிட்டு போய்விட்டானே என்று உள்ளம் குமைந்து இருந்தவளுக்கு அவனது இந்த மாற்றம் எல்லை இல்லா உவகையை

அளித்தது... தன் காதலன் தன் உடலை மட்டும் நேசிக்கவில்லை... தன் உள்ளத்தையும் நேசிக்கிறான் என்பதை உணர்ந்தவளுக்கு அத்தனை நாள் மனதை அழுத்தி கொண்டு இருந்த பாரம் எல்லாம் பனி போல் விலகியது...

இத்தனை நாள் மனதின் ஆழத்தில் புதையுண்டு இருந்த சோகம் நீங்க தன்னவன் தனக்கு மட்டுமே என்ற சொந்தம் மனதில் ஆழமாய்ப் பதிய பழைய துள்ளல் நிறைந்த யமுனா மீண்டும் பிறந்தாள்...

"நீயே சொல்றப்போ எனக்கு என்ன கவலை ராஜ்... நான் கடைசி வரைக்கும் உன் குழந்தையா இருந்து உன்னைப் படுத்தி எடுக்கிறேன்... பட் ஒன் கண்டிசன்..."

"என்னடி..." அவளது இயல்பான பேச்சில் அவனும் இயல்பாய் மாறி இருந்தான்...

"நான் என்ன சேட்டை பண்ணினாலும் நீ என்னை அடிக்கக் கூடாது... என்ன சரியா..." கண்களை உருட்டி கேட்ட மனைவியைக் கண்டு அவனுக்குச் சிரிப்பு வந்தது...

"பிராமிசா அடிக்க மாட்டேன் பேபி... என் பேபியை நான் அடிப்பேனா..." என்று அவளை அணைத்துக் கொண்டான்...

"சரி வா... உன் பேர்த்டேயை செலிபிரேட் பண்ணலாம்..." என்று அவன் கைப்பிடித்து அழைத்துச் சென்றவள் கேக் முன் கொண்டு வந்து நிறுத்தினாள்...

கேக்கை கண்டதும் அவனது முகம் இறுகியது...

அதில் இருந்த எரிந்து போன மெழுகுவர்த்தியை மாற்றி வேறு புதியது ஒன்றை வைத்தவள் அதைப் பற்ற வைத்துவிட்டு அவனை நிமிர்ந்து பார்த்தாள்...

"வா ராஜ்... கேக்கை கட் பண்ணு..."

"நான் பேர்த்டே கொண்டாடுறதை விட்டு நாலு வருசமாச்சு..."

"ராஜ்..." அதிர்ந்து போய் அவனைப் பார்த்தாள்...

"ஆமாம் பேபி... பேர்த்டேயும் கொண்டாடுறது கிடையாது... கேக்கும் சாப்பிடறது கிடையாது... இது இரண்டுமே ஒரு சின்னப் பொண்ணை ஏமாத்தி துரோகம் பண்ணியதை எனக்கு நியாபகப்படுத்திட்டே இருக்கும்... நான் செஞ்ச தவறை குத்தி காண்பிச்சிட்டே இருக்கும்... என்ன தான் இதை நான் அவாய்ட் பண்ணினாலும் உனக்குப் பண்ணிய துரோகத்தை என்னால மறக்க முடியாது பேபி... ஆனா என் ஆண் என்கிற ஈகோ இதை ஒத்துக் கொள்ள மறுத்து தான் உன் கிட்ட சீண்டி விளையாண்டது... ஆனா இப்போ ஒத்துக்கிறேன்... நான் செஞ்சது முழுக்க முழுக்கத் தவறு தான்..." என்று அவளை அணைத்துக் கொண்டு கதறியவனை என்ன சொல்லி ஆறுதல் படுத்துவது என்று அவளுக்குத் தெரியவில்லை...

ஒரு முறை செய்த தவறுக்காகப் பலமுறை தன்னைத் தானே சிலுவையில் அறைந்து கொள்ளும் அவனை அவளது காதல் மனம் மன்னிக்கத் தயாராகவே இருந்தது...

"போனதை விடு ராஜ்... இப்போ பேர்த்டேயை கொண்டாடலாம்..." என்றவள் அவனது முகத்தை நிமிர்த்தி, "உனக்குப் பிடிச்சவிதத்தில்..." கண்சிமிட்டி சொன்னவளை கண்டு அவன் கூனிக்குறுகி போனான்...

"இல்லை பேபி... வேண்டாம்..." என்று மறுத்தவனை வலுக்கட்டாயமாய்க் கைப்பிடித்துக் கேக் வெட்ட செய்தவள் முதல் துண்டை கையில் எடுத்துக் கொண்டு அவனைப் பார்த்தாள்...

அவனோ வாயை திறப்பேன்னா என்பது போல் உதடுகளை இறுக மூடி இருந்தான்...

'உன் வாயை எப்படித் திறக்கணும்ன்னு எனக்குத் தெரியும்...' மனதில் நினைத்தவள் அந்தக் கேக் துண்டை தனது வாயில் போட்டு கொண்டாள்...

அவன் அவளை ஆச்சிரியமாய்ப் பார்க்கும் போது அவனது கழுத்தை வளைத்தவள் அவனது இதழோடு தன் இதழை பொருத்தினாள்...

மீண்டும் அவள் நிமிர்ந்த போது அவளது வாயில் இருந்த கேக் அவனது வாய்க்கு இடம் பெயர்ந்து இருந்தது...

"கேக் டேஸ்ட்டா இருந்ததா..." என்று கண்சிமிட்டி சிரித்தவளை முறைக்க முயன்று தோற்று போனவன் வாய்விட்டுச் சிரித்தான்...

"இப்படித் தான் என் ராஜ் சிரிச்சிக்கிட்டே இருக்கணும்... குட் பாய்..." என்றவள் கேக்கை எடுத்து அவன் முகத்தில் பூச...

"ஹேய்... ரௌடி என்னடி பண்ற..." பதறி போய் அவன் எழ...

"அன்னைக்கு நீ பண்ணியதை தான்டா இன்னைக்கு நான் பண்ண போறேன்... அதான் உன்னை ரே பண்ண போறேன்..." என்றவள் அவன் முகம் நோக்கி குனிய...

"யாரு நீ..." என்றவன் தன் கைகளில் கேக்கை எடுத்து அவள் முகத்தில் பூச வர...

"ராஜ் வேணாம்..." என்று அவள் அங்கிருந்து ஓடினாள்...

"என்னையவாடி ரே பண்ண போற... இருக்குடி உனக்கு..." என்றவன் அவள் பின்னே ஓடினான்...

அதே அறை அதே போல் அவனது பிறந்தநாள்... அவனும் அவளும் தனிமையில்... அறைக்குள் நுழைந்தவன் திகைத்து போய் நின்றுவிட்டான்...

"என்னடா அவ்வளவு தான் உன் தைரியமா..." அவள் அவனை உசுப்பேத்த...

"என் தைரியத்தோட அளவை பார்க்கிறியா..." என்றவன் அவளைப் பிடிக்க வர... அவள் தப்பிக்க நினைத்து தடுமாறி கட்டிலில் விழ... அவளைப் பிடிக்க நினைத்தவன் அவளது இடையைப் பிடித்தபடி அவளோடு படுக்கையில் சரிந்தான்...

அவனின் கைகளில் இருந்த கேக் முழுவதும் அவளது இடையில் பூசியிருந்தது... என்றும் அவனைக் காந்தம் போல் ஈர்க்கும் அவளது இடை இன்றும் அவனை ஈர்க்க தாபத்துடன் குனிந்தான் அவளது இடையை நோக்கி...

அவன் இதழ் செய்த மாயாஜாலத்தில் அவள் உருகி கரைந்து கொண்டு இருந்தாள்... என்னே ஆச்சிரியம் எப்போதும் இறுகும் அவள் மனநிலை இன்று இல்லை... அவளது நம்பிக்கையைக் காப்பாற்றிய காதல் கணவனுக்கு அவள் தன்னை மனமுவந்து தர முன் வந்தாள்... இப்போது அவள் மனதில் எந்தவித குழப்பமும், சலனமும் இல்லை...

அவள் மனதில் இருந்தது எல்லாம் ஒன்றே ஒன்று தான்... அது அவளது காதல் மட்டும் தான்... அந்தக் காதலுக்கு மரியாதை செலுத்த எண்ணியவள் முன்னேறிய அவனது உதட்டுக்கும் கைகளுக்கும் தடா போடாமல், வேண்டும் என்ற சுதந்திரத்தை அளித்தாள்...

அவளது நிலை அவனுக்கு ஆச்சிரியத்தை அளித்த போதும், "சம்மதமா பேபி..." என்று அவளது சம்மதம் வேண்டி நின்றான் அந்தக் காதல் கணவன்...

"டேய் உன்னைக் கொன்னே போடுவேன்... ரொம்ப நல்லவன் மாதிரி ஆக்ட் பண்ணாதேடா... கேட்கிறான் பாரு கேனை மாதிரி... இருக்கிற நிலைமையைப் பார்த்தா எப்படி இருக்கு..."

கோபமாய்ப் பேசுவது போல் தோன்றினாலும் அவளது கண்கள் அவனைப் பார்த்துச் சிரித்தது...

"உன் கிட்ட எல்லாம் பர்மிசன் கேட்க கூடாதுடி..." என்றவன் அதற்கு மேல் தானும் பேசவில்லை... அவளையும் பேச விடவில்லை...

மொட்டவிழ்வது போல் மென்மையாய் இனிமையான தாம்பத்தியம் அங்கே மலர்ந்தது...

அன்று நடந்ததை எண்ணி உள்ளுக்குள் பயந்தவளுக்கு அவனது மென்மையான அணுகுமுறை இதமாய் இருந்தது... அவனது தீண்டலில் இருந்த காதலில் கரைந்தவள் அந்தக் காதலை அவனுக்குத் திருப்பிப் பரிசளித்தாள்...

கூடல் முடிந்து களைப்புடன் விழி மூடியவளின் இமை மீது மென்மையாய் இதழ் பதித்தவன், "வலிக்குதா பேபி..."

அன்று அவன் கேட்ட அதே வார்த்தை... ஆனால் அன்று அவன் கேட்ட த்வனிக்கும் இன்று அவன் கேட்கும் த்வனிக்கும் மலைக்கும் மடுவுக்கும் உள்ள வித்தியாசம் இருப்பதை உணர்ந்தவள் கண்கள் கலங்க,

'இல்லை...' என்பது போல் தலையசைக்க அவளை வாரி அணைத்து தன் நெஞ்சில் சாய்த்துக் கொண்டான் அவன்...

அன்று அவன் செய்த தவறை இன்று ஈடு செய்தான்... இனி வருங்காலத்திலும் ஈடு செய்வான் என்ற நம்பிக்கை இருவரிடத்திலும் இருந்தது... நம்பிக்கை தானே வாழ்க்கை...

ஐந்து ஆண்டுகளுக்குப் பின்...

அந்த அதிகாலை நேரம் சக்ரபாணியின் வீடு அமைதியாய் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தது... பாக்கியம் நிம்மதியாய் நித்திரையில் ஆழ்ந்து இருந்தார்... அவரது அறைக்குச் சத்தம் இல்லாமல் நுழைந்த ஒரு உருவம் அவரது தலைப்பக்கமாய்ச் சரவெடியை வைத்து பற்ற வைத்துவிட்டு வெளியில் ஓடி வந்துவிட்டது...

'படபடப் பட்பட் படபடப் பட்பட்...' அந்த வெடிச்சத்ததில் வீட்டில் இருந்த எல்லோரும் விழித்து விட்டனர்...

"எந்த எடுப்பட்ட நாய் என் ரூமுல வெடி வச்சது... அவன் நாசமா போக... விளங்காம போக... கட்டையில் போக..." பாக்கியம் வசை மாரி பொழிய...

"கிழவி சும்மா கல்லுக்குண்டாட்டம் இருக்கே... இதுக்குச் சரவெடி எல்லாம் பத்தாது... அடுத்தத் தடவை அணுக் குண்டை அது தலையில் போடுறேன்..." முணுமுணுத்த யமுனாவின் வார்த்தைகள் யுவாவின் காதில் விழ அவன் அவளை முறைத்தான்...

"உன் வேலையா இது...?"

"பின்னே என்னடா... காலையில் எண்ணை தேய்ச்சுக் குளிச்சா தான் வீட்டுக்குள்ளேயே வரணும்ன்னு நேத்து எனக்கு ஆர்டர் போடுது அந்தக் கிழவி... அதான் வெடியை வச்சேன்... தலைமாட்டில் வச்சதுக்கு அது வாயில் வச்சு இருக்கணும்..." என்று அவள் பொரிய...

"அடங்கவே மாட்டியாடி..." என்றான் சலிப்பாய்... ஆனால் அதற்கு நேர்மாறாய் அவனது உதடுகள் புன்னகை சிந்தியது...

இந்த முறை தீபாவளி கொண்டாடுவதற்காக இங்கே வந்து இருந்தனர்... இப்போது யுவா வாசுவோடு சேர்ந்து பங்குதாரராய் இணைந்து கம்பெனியை நடத்துகிறான்... யமுனாவும் தனது படிப்பு முடிந்து அவர்கள் கம்பெனியில் வேலைக்குச் சேர்ந்துவிட்டாள்...

வாழ்க்கை தெளிந்த நீரோடை போல் ஓடி கொண்டு இருக்கிறது... யுவா குழந்தை வேண்டும் கேட்க... குழந்தை ஆசை உடையவளோ அதற்கு இவ்வளவு நாளாய் மறுப்பு தெரிவித்து வந்தாள்... வாழ்க்கையில் சிறிது முன்னேறி விட்டு வாரிசை பற்றி யோசிக்கலாம் என்று சொல்லி மறுத்துவிட்டாள்...

இப்போது அடுக்கு மாடி குடியிருப்பில் இரட்டை படுக்கையறை கொண்ட ஒரு வீடு வாங்கி இருந்தனர்... கூடவே சிறிய கார் ஒன்றும்... அதனால் இப்போது தான் தன் கொள்கையை அவள் சற்று தளர்த்தி இருக்கிறாள்...

வாழ்க்கையில் அவனின் முன்னேற்றத்தின் பின்னே அவள் இருந்தாள்... அதே போல் அவளது முன்னேற்றத்தின்

பின்னால் அவன் இருந்தான்...

பெற்றோர் அவர்கள் பங்கு சொத்துக்களைக் கொடுக்க முன் வந்த போது அதை இருவருமே மறுத்துவிட்டனர்... அதனால் அவர்களது வாரிசுகளுக்கு அந்தச் சொத்துக்களை எழுதி வைத்து விட்டனர் பெரியவர்கள்... இரு வீட்டு பெற்றோரும் இருவரின் பொறுப்புணர்ச்சி கண்டு அதிசயித்தனர்...

"இனியும் இங்கே இருந்தா பிரச்சினை தான்... வாடி ரூமுக்கு போவோம்..." அவளை இழுத்துக் கொண்டு தனது அறைக்குச் சென்றான்...

"ப்யூட்டி ரூம்ல வெடி வச்சதுக்கு உனக்கு ஏதாவது பனிஷ்மென்ட் கொடுக்கணுமே..." என்றவன் அவள் கிட்டே வர... அவள் தைரியமாய் அவனைப் பார்த்தாள்...

"என்னடி இது வில்லன் எபெக்ட் கொடுத்தா கொஞ்சமாவது பயப்படு பேபி... மாமன் கஷ்டப்பட்டு ஆக்ட் கொடுக்கிறேன்ல..."

"யாரு நீ வில்லனா... போடா டேய்..." என்றவள் அங்கிருந்து நழுவ பார்க்க...

"எங்கேடி ஓட பார்க்கிற..." என்று அவளைப் பிடித்தவன் அவளைத் தன் கையில் அள்ளி கொண்டான்...

"டேய் விடுடா... தியா, கிருஷ் எல்லோரும் குளிச்சிட்டு வந்திடுவாங்க... நானும் அவங்களும் வெடி வெடிக்கப் போகணும்..." கை கால்களை உதறிக் கொண்டு அவள் திமிறினாள்... கிருஷ் அவளது அக்கா மகன்...

"பேபி பெத்துக்கிற வயசிலே பேபிங்க கூட என்னடி விளையாட்டு... இவ்வளவு நாள் உன்னைச் சும்மா விட்டு வச்சது தப்பா போச்சு... பேபிக்கு பேபி ஏற்பாடு பண்ணிட வேண்டியது தான்..." என்றவன் அவள் முகம் நோக்கி குனிந்தான்...

அன்று மதிய உணவு நேரத்தில் பேரனுக்குப் பாக்கியம் ஊட்டி விட்டுக் கொண்டு இருந்தார்... அங்கு வந்த யமுனாவை கண்டதும் நொடித்துக் கொண்டவர்,

"ஏண்டா ராசா... கல்யாணமாகி வருசம் ஐஞ்சாகுது... இன்னுமா உன் பொண்டாட்டி முழுகாம இருக்கா... பேசாம இவளை பத்திவிட்டுட்டு வேற பொண்ணைக் கட்டிக்கோடா..."

'போச்சுடா... கிழவி சும்மா கிடந்த சங்கை ஊதி கெடுத்திட்டியே... இனி வரும் பின் விளைவுகளுக்கு நான் பொறுப்பு இல்லை...' மானசீகமாய்த் தலையில் கை வைத்தான் அவன்...

"ம்... இன்னமும் உன் தடிமாடு பேரனுக்கு இப்படி ஊட்டி விட்டுட்டு திரி... அப்புறம் அவன் குழந்தை மாதிரி இருக்காம... ஒரு குழந்தைக்கு அப்பாவா ஆக முடியும்... முதல்ல எனக்கும் என் புருசனுக்கும் இடையில் நிக்காம நீ விலகி இரு... அதுக்கு அப்புறம் பாரு... எண்ணி பத்து மாசத்துல புள்ளைய பெத்து உன் கையில் கொடுக்கிறேன்..." பாக்கியத்தை இடித்துக் கொண்டு யுவா அருகில் வந்து நின்றவள் கணவனைக் கண்டு கண் சிமிட்டியபடி அவன் தட்டில் இருந்த கோழி துண்டை எடுத்து கடித்தாள்...

அடுத்த நொடி ஓங்கரித்துக் கொண்டு வர வாஷ்பேசின் நோக்கி ஓடியவள் வாந்தி எடுக்க... நாடி பிடித்துப் பார்த்த பாக்கியத்தின் முகம் மலர்ந்தது...

"ராசாத்தி... என் கண்ணு... என் வம்சத்தைத் தழைக்க வந்த என் செல்லம்..." என்று விதவிதமாய் அவளைக் கொஞ்ச யமுனாவிற்கு விசயம் புரிந்து போனது...

"என்ன கிழவி நான் சொன்ன மாதிரி செஞ்சிட்டேனா..." என்று பாட்டியை பார்த்து அவள் கண்சிமிட்ட...

"ஆங்... அதுக்குள்ளயா..." திகைத்தார் பாக்கியம்...

"நாங்க எல்லாம் ஜெட் வேகம் கிழவி..." என்று அவள் பெருமை பட்டுக் கொள்ள...

"நீ எங்கே... என் பேரன் தான் கெட்டிக்காரன்... வாயாடி உன்னையே அடக்கிட்டான்ல..."

"யாரு உன் பேரனா..." என்றவள் கணவனை நக்கலாய் பார்க்க...

'அம்மா தாயே... ஆளை விடு...' என்று உதட்டை அசைத்தவன் கைகள் இரண்டையும் தூக்கி கும்பிட்டான்...

"ஆனாலும் கிழவி உன் கொட்டத்தை அடக்க ஒரே பிரசவத்தில் பத்து புள்ளையைப் பெத்து கொடுக்கிறேனா இல்லையா பாரு... எல்லாத்தையும் நீ தான் வளர்க்கணும்..."

"அதுக்கென்ன கண்ணு வளர்த்துட்டா போச்சு..." என்று ஆசையுடன் அவள் கன்னம் வழித்த பாக்கியத்தைக் கண்டு,

"போ கிழவி... நீ இப்படிச் சட்டுன்னு அடங்கியது எனக்குப் பிடிக்கலை... இன்னும் கொஞ்சம் அதிகமா உன் கிட்ட எதிர்பார்த்தேன்..." என்றவள் பாக்கியத்தின் கன்னத்தில் முத்தமிட...

"ச்சீ... இது என்ன கன்னத்தை எச்சில் பண்ணிட்டு போ... போ..." என்று அவளை அவர் துரத்த...

"இது இது தான் எங்க வீட்டு கிழவி..." என்று கைக்கொட்டி சிரித்தவள் அங்கிருந்து ஓட...

"டேய் ராசா... அவளை ஓட சொல்லாதேடா... பார்த்து சூதனமா இருக்கச் சொல்லு... போய் அவளைப் பிடி..." பேரனுக்கு வேலை கொடுத்தவர் அக்கடா என்று அமர்ந்தார்...

அவள் கருவுற்ற செய்தி கேள்வியுற்று அவளது பெற்றோர் அவளைப் பார்க்க வந்தனர்... இந்தத் தடவை தான் கணவனுடன் தனது தாய் வீட்டிற்குச் சென்று வந்தாள்... அவள் நினைத்தது போல் வாழ்க்கையில் வெற்றி பெற்ற பின்னரே அன்னை வீட்டிற்குச் சென்றாள்... பார்ப்பதற்கு

விளையாட்டுப் பெண்ணாய்த் தெரிந்தாலும் அவளும் பொறுப்பான, அழுத்தமான, வைராக்கியமான பெண் தான்...

தங்களது அறைக்கு வந்ததும் எதையோ கணக்கிட்டு பார்த்தவள் பின் விசயம் புரிந்தவளாய் கணவனைப் பார்த்தவள் முறைத்தாள்...

"உன் கிட்ட என்னடா சொன்னேன்... இப்போதைக்குக் குழந்தை வேண்டாம்ன்னு சொன்னேன்ல..." அவளது பேச்சின் அர்த்தம் புரிந்தவனின் கண்கள் சிரித்தது...

"ஆமாம் அதுக்கு என்ன...?" அசால்ட்டாய் சொன்னவன் தோளை குலுக்க...

"யூ சீட்... நீ நான் சொன்னதைக் கேட்கவே இல்லை..."

"எத்தனை நாளைக்குத் தான்டி உன் முகத்தையே பார்த்துட்டு இருக்கிறது... ரொம்பப் போரடிக்குது... அதான்..." என்றவனைச் சராமாரியாய் கை கொண்டு தாக்கியவள்,

"ஏண்டா என் முகத்தைப் பார்த்தா சோறு தண்ணி கூடத் தேவை இல்லை... பார்த்துட்டே இருக்கணும் போலிருக்குன்னு உளறிட்டு இப்போ இப்படிப் பேசுற..."

"பார்த்தியா நீயே சொல்லிட்ட அது உளறல்ன்னு... அந்த நேரத்துல எல்லா ஆம்பிளையும் உளர்றது தான்... நானும் அதுக்கு விதிவிலக்கு இல்லை..." என்றவன் சுகமாய் அடிகளைத் தாங்கி கொண்டான்...

"போடா பேசாதேடா..." என்று கோபித்துக் கொண்டு அமர்ந்தவள் அருகில் அமர்ந்தவன் அவளை அணைத்துக் கொண்டு,

"உன்னை மாதிரி ஒரு குட்டி பொண்ணு எனக்கு வேணும்டி யம்மு..." காதில் கெஞ்சலாய் சொன்னவனின் தோளில் சுகமாய்ச் சாய்ந்து கொண்டவள்...

"எனக்கு உன்னை மாதிரி ஒரு பையன் வேணும்டா..."

"சரி... உனக்கும் வேண்டாம் எனக்கும் வேண்டாம்... ரெண்டும்..." ஆசையுடன் கூறியவனின் கூற்றை ஆமோதித்து அவளும் கண்கள் மின்ன தலையசைத்தாள்...

"ராஜ்... எனக்கு ஒரு ஆசை..."

"என்னடி..."

அவன் அருகில் இருந்த சிகரெட் பெட்டியை எடுத்து அவனிடம் நீட்டியவள், "முன்னை தூக்கி போட்டு பிடிப்பியே அது மாதிரி செய்யேன்... ப்ளீஸ்..."

அவளுக்குப் பிடித்த இந்தச் செயலை அவன் விட்டு வெகு காலம் ஆயிற்று... அவளை விட்டு பிரிந்ததில் இருந்து அவளுக்குப் பிடித்த எதையும் அவன் செய்தது கிடையாது...

"வேண்டாம் பேபி... விட்டு ரொம்ப நாளாச்சு..." என்று மறுத்தவனை...

"ப்ளீஸ் ராஜ்..."

அவளுக்காகக் கைகள் நடுங்க சிகரெட்டை எடுத்து தூக்கி மேலே போட்டான்... அன்றைய நாளின் நினைவில் மனம் சிக்குண்டு தவித்தது... ஆனாலும் அடுத்த நொடி சரியாக அதை வாயில் பிடித்தான்...

"ஹே... சூப்பர்..." கைத்தட்டி குதூகலித்தவளை இமைக்காமல் பார்த்தான் அவன்...

அவன் செய்யும் சின்னச் சின்ன விசங்களையும் கண்டு குதூகலிக்கும் அவளது காதல் இருக்கிற வரை அவனால் எதையும் சாதிக்க முடியும்... அந்த நம்பிக்கை தான் அவனை இந்தளவுக்கு முன்னேற்றி இருக்கிறது...

"சிகரெட் பிடிக்கலையா..." அவள் லைட்டரை கொண்டு வந்து சிகரெட்டை பொருத்த வர... அதை ஊதி அணைத்தவன் சிகரெட்டை கசக்கி குப்பை தொட்டியில் போட்டான்...

கேள்வியாய் பார்த்த மனைவியை அணைத்து கொண்டவன், "நான் இப்போ தனியாள் இல்லை... என்னை நம்பி என் மனைவி இருக்கிறாள்..." என்றவன் அடுத்து அவளது வயிற்றில் கை வைத்து, "என் குழந்தை இருக்கு... அவங்களுக்காகவாவது என் ஹெல்த்தை நான் பார்த்துக்க வேண்டாமா..."

என்றும் போல் அவனது அன்பில் கரைந்தவள், "ராஜ்..." ஆசையுடன் அவனது கன்னத்தில் முத்தமிட்டவள்,

"ஐ லவ் யூ ராஜ்..."

"மீ டூ பேபி..." என்றவனின் கைகள் அவளை அணைத்துக் கொண்டது அந்தக் காதலை பறைச்சாற்றும் விதமாக...

காதல் எப்படி வந்தாலும் ஒருவர் மீது ஒருவர் மாசில்லா அன்பு வைத்து இருக்கும் இவர்களின் காதலும் காவிய காதல் தான்... இவர்களின் இந்தக் காதல் நிலைத்து நீடித்து நிற்க வாழ்த்துவோமாக...!!!

கண்ணாமூச்சி ஆட்டம் முடிந்தது... இனி என்றும் காதல் ஆட்டமே...